
# தெளிவத்தை ஜோசப்

## சிறுகதைகள்



பாக்யா
பதிப்பகம்


16/2/2014

# தெளிவத்தை ஜோசப்

## சிறுகதைகள்

வெளியீடு

பாக்யா
பதிப்பகம்

# நூல்தரவு

| | |
|---|---|
| தலைப்பு | : தெளிவத்தை ஜோசப் சிறுகதைகள் |
| விடயம் | : சிறுகதைகள் |
| ஆசிரியர் | : தெளிவத்தை ஜோசப் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| பதிப்பகம் | : பாக்யா பதிப்பகம், 4A, ஸ்டார் சதுக்கம், ஹட்டன் |
| வடிவமைப்பு | : GOD Creative Lab, கொழும்பு |
| பக்கத்தின் அளவு | : 150mm x 210mm |
| பக்கங்கள் | : (24+185) 209 |
| புத்தக நியம எண் | : ISBN978-955-1805-06-7 |
| முதல் பதிப்பு | : 2014, பெப்ரவரி |
| விலை | : ரூ. 400/- |

# BIBLIOGRAPHY

| | |
|---|---|
| Title | : Theliwattai Joseph Sirukadaigal |
| Subject | : Collection of Short Stories |
| Author | : Theliwattai Joseph |
| Published by | : Bakya Pathippagam 4 A, Star Square, Hatton |
| Layout | : GOD Creative Lab, Colombo |
| Page Size | : 150mm x 210 mm |
| No.of Pages | : (24+185) 209 |
| ISBN | : 978-955-1805-06-7 |
| First Edition | : 2014,February |
| Price | : Rs.400/- |

# பதிப்புரை

பதிப்புத்துறை என்பது குறிப்பாக இலங்கையில், நட்டம் தரக் கூடிய நல்லதொரு தொழிற்துறை. அப்படியிருந்தும் அந்தத் துறையில் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பாக்யா பதிப்பகத்தின் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு காரணம் இலக்கியம் மீதான ஆர்வம் மட்டுமே. இந்த முயற்சி பதிப்பு மற்றும் விநியோகம் இரண் டிலும் இடம்பெற்றுவருகின்றது.

மலையக இலக்கியம் சார்ந்த எழுத்துக்களை அந்த எழுத்தா ளர்களே நிதியீட்டம் செய்து தாமாகவே வெளியீடு செய்துகொள்கின்ற துரதிஷ்டவசமான சூழலே நிலவுகின்றது. பதிப்பகம் பற்றிய அவர்க ளது புரிதலும், பதிப் பகங்கள் எழுத்தாளர்கள் மீது கொண்டிருக் கக்கூடிய அபிப்பிராயங்களும் இதில் முக்கியம் பெறுகின்றன. பெரும் பாலும் புத்தகங்களை விநியோகம் செய்வதும் கூட எழுத்தாளர்களே என்கின்ற நிலையில் எழுத்தாளர்களை எழுத்து சார்ந்து மட்டும் நோக்காது அவர்களது இன்னபல செயற்பாடுகளையும் சேர்த்தே அளவீடு செய்யவேண்டியுள்ளது. எழுதியதை நூலாக வெளியீடு செய்துகொள்ள பிரயத்தனம் செய்து கொண்டிருப்போரும், வெளியீடுகளைச் செய்வதற் காகவே எழுதுவதற்கு பிரயத்தனம் செய்துகொண்டிருப்போரும் இதில் அடங்கும். இதற்கு விருது முதலான விடயங்கள் மறைகரமாக தொழிற் படுகின்றன.

இத்தகையதோர் சூழலில் எழுதுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு அதனை ஐம்பது வருடகாலமாக தொடர்ச்சியாக செய்து கொண்டு வருபவர் தெளிவத்தை ஜோசப் அவர்கள். இதுவரை அவரது 'காலங்கள் சாவதில்லை' - நாவல் (வீரகேசரி வெளியீடு-1974), 'நாமி ருக்கும் நாடே' சிறுகதைகள் (வைகறை வெளியீடு-1979), 'பாலாயி'- குறுநாவல் (துரைவி வெளியீடு-1997), 'மலையகச் சிறுகதை வரலாறு'- ஆய்வுக் கட்டுரைகள் (துரைவி வெளியீடு -1999), 'குடைநிழல்'- நாவல் (கொடகே வெளியீடு-2010) ஆகிய படைப்புகள் நூலுருப் பெற்றுள் ளன. ஐம்பது வருடங்கள் எழுதிகொண் டிருப்பவரின் ஐந்து

படைப்புகள் மாத்திரமே தொகுப்பாக வெளிவந்திருக்கின்றன என்பது ஆச்சரியமே. ஏனெனில் எழுதவந்து ஐந்து வருடகாலத்தில் ஐம்பது வெளியீடுகள் வரும் ஆச்சரியங்களும் நடக்கத்தான் செய்கின்றன.

ஒரு நேர்காணலில், உங்களுடைய ஆக்கங்கள் குறிப்பாக சிறுகதைகள் இன்னும் நூலுருப் பெறவில்லையே ஏன்? எனும் வினாவிற்கு தெளிவத்தை ஜோசப் அவர்கள் வழங்கியிருக்கும் பதில், எனது பணி எழுதுவதே தவிர புத்தகம் போடுவதல்ல என்பதாகும். மலையக இலக்கிய பரப்பில் இருந்து எழுந்து ஈழத்து இல்கியபரப்பில் நிலைத்து நிற்கும், தமிழகம் உட்பட பிற நாடுகளிலும் அறியப்பட்ட ஆளுமையான தெளிவத்தை ஜோசப் அவர்கள், பத்திரிகைகள், சிற்றிதழ்களை மாத்திரமே களமாகக் கொண்டு எழுதி வருபவர். இதுவரை காலமும் சில பதிப்பகங்களே முன்வந்து அவரது படைப்புகளை நூலுருவாகியுள்ளன. வீரகேசரி, வைகறை, துரைவி, கொடகே வரிசையில் பாக்யா பதிப்பகமும் தாமாகவே முன்வந்து வெளியீடு செய்யும் சிறுகதை தொகுப்பு இது.

சிறுகதைகளையே தனது பிரதான துறையாகக் கொண்டு ஐம்பது வருடகாலமாக எழுதிவரும் ஒரு மூத்த எழுத்தாளரின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. மலையகத்தின் பதுளையைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனை வசிப்பிடமாக கொண்டவருமான பேராசிரியர் மு.நித்தியானந்தன் அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழத்தில் விரிவுரையாளராக இருந்த காலத்தில் 1979 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டு இயங்கிய வைகறைப் பதிப்பகத்தின் ஊடாக வெளியிட்ட 'நாமிருக்கும் நாடே' தொகுதிக்குப் பின்னர் 35 வருடங்கள் கழித்து பாக்யா பதிப்பகம் 2014 ஆம் ஆண்டு 'தெளிவத்தை ஜோசப் சிறுகதைகள்' எனும் மகுடத்தில் இந்த தொகுதியை வெளியீடு செய்கின்றது. இந்தத் தொகுப்புக்கான முன்னுரையை முதலாவது சிறுகதைத் தொகுதியை வெளியிட்ட மு. நித்தியானந்தன் அவர்களிடமே பெற்றுக்கொண்டுள்ளமை இந்தத் தொகுதியின் சிறப்பு.

சுமார் முப்பது சிறுகதைகளைக் கொண்ட ஒரே தொகுப்பாக வெளியீடு செய்வதற்கான முயற்சியினை நாம் 2012 ஆம் ஆண்டில் இருந்து மேற்கொண்டிருந்த போதும் தேடல் முயற்சிகள் தாமதத்தைத் தந்தன. சிரமத்துக்கு மத்தியில் தேடியெடுத்த கதைகளை முன்னுரைக்காக பேராசியர். நித்தியானந்தனுக்கு அனுப்பியதன் பின்னர், தமிழகத்தின் எழுத்தாளர் ஜெயமோகன் தானே தொகுப்பாசிரியராக

தெளிவத்தையின் ஒன்பது சிறுகதைகளை தொகுத்து 'மீன்கள்' எனும் மகுடத்தில் நற்றிணை பதிப்பாக (2013 டிசம்பர்) வெளியிட்டதன் காரணமாக, இறுதிநேரத்தில் அதில் அடங்கியுள்ள ஒன்பது சிறுகதைகள் நீங்கலாக இந்தத் தொகுப்பினை மீளவடிவமைக்கும் நிலைமை ஏற்பட்டது. இதனால் 'மீன்கள்', 'மனிதர்கள் நல்லவர்கள்', 'கத்தியின்றி ரத்தமின்றி' போன்ற சில பெறுமதியான சிறுகதைகளை இந்த தொகுப்பு இழக்க நேரிட்டது துரதிஷ்டமே.

இது குறித்து விவாதித்தபோது இரண்டு தொகுப்பிலும் அந்தக் கதைகளை உள்ளடக்கும் ஆலோசனைகள் கிடைக்கப்பெற்றன. 'மீன்கள்' தொகுப்பில் அடங்கியுள்ள கதைகள் சரிபாதியளவு ஏற்கனவே 'நாமிருக்கும் நாடே' தொகுதியில் வெளிவந்தவை என்ற நிலையில், மூன்றாவது தடவையாகவும் ஒரு சில கதைகள் தொகுப்பாவதைத் தவிர்த்து, தெளிவத்தை ஜோசப் போன்ற ஆளுமைகளின் படைப்புகள் அனைத்தையும் நூலுருவாக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில், கிடைக்கப் பெறாத அவரின் கதைகளைத் தேடிக் கண்டுபிடித்து இன்னுமொரு தொகுதியை வெளியீடு செய்யும் எண்ணத்தோடு இந்தத் தொகுப்பை பதினேழு சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பாக வெளியீடு செய்கின்றோம். இந்த பதினேழு கதைகளும் 1963 முதல் 2013 வரையான ஐம்பது வருடகாலத்தில் அவர் எழுதிய கால ஒழுங்கிலேயே தொகுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் கதைகள் வெளிவந்த ஆண்டும், இதழும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெளிவத்தை தனியே சிறுகதை எழுத்தாளர் மாத்திரமன்று. நாவல், குறுநாவல், திரைக்கதை, இரசனைக்கட்டுரைகள், ஆய்வுகட்டுரைகள் என பல்துறை சார்ந்து எழுதி வருபவர். எழுத்து என்பதற்கு அப்பால் நல்லதொரு வாசகர். தமிழக, ஈழத்து இலக்கிய பரப்பில் அவர் வாசித்திராத தமிழ் எழுத்தாளர்களே இல்லை எனலாம். அவரது மேடைப் பேச்சுகளிலும், அவர் யாருடைய நூலுக்கும் எழுதும் முன்னுரை, அணிந்துரைகளிலும் இவரது வாசிப்பு அனுபவம் விரவிக்கிடப்பதைப் பார்க்கலாம். அவரது இல்லத்திற்குள் நுழைந்தால் முதலில் வரவேற்பறை இராது. பதிலாக ஒரு நூலகம்தான் இருக்கும். பெரும்பாலும் அதில் அமர்ந்து வாசித்துக்கொண்டிருக்கும் தெளிவத்தையே நம்மை வரவேற்பார்: "வாங்க.." என்ற "தெளிவத்தை பிரான்ட்" சிரிப்புடன்.

மு.சிவலிங்கம் தனது 'வெந்து தணிந்தது காலம்' (பாக்யா 2013) சிறுகதை தொகுப்புக்கான என்னுரையில் "தெளிவத்தை ஒரு இலக்கிய களஞ்சியம்" என குறிப்பிட்டுள்ளார். இந்த களஞ்சியத்திடம் எல்லா நூல்களும் கிடைக்கும். அவரது படைப்புகளைத் தவிர. அவரது

சிறுகதைகளைத் தேடுகின்றபோதுதான் இது தெரியவந்தது. மற்றைய எழுத்தாளர்களின் படைப்புகளை எந்தளவுக்கு பத்திரப்படுத்திக் கொண்டுள்ளாரோ அந்தளவுக்கு தன்னுடைய படைப்புக்களை பத்தி ரப்படுத்தி வைத்திருக்கவில்லை. இதனை அவரது பலவீனமாக அன்போடு சுட்டிக்காட்டியபோது புன்னகையோடு ஏற்றுக்கொண் டார். அதேநேரம் தன்னை வலிந்து முன்னிலைப்படுத்தாத படைப் பாளி தெளிவத்தை என்பதற்கு இதுவொரு சான்றாகவும் அமைகின்றது. இந்த தேடுதல் பற்றி பேராசிரியர். மு. நித்தியானந்தன் அவர்களிடம் உரை யாடியபோது 'நாமிருக்கும் நாடே' தொகுதி வெளியீட்டின் போது தனக்கும் இந்த அனுபவம் ஏற்பட்டதாகக் கூறினார். இன்னும் எங்கு போனாலும் 'உமா'வையும் (தமிழக இதழ்) அதில் வந்த தெளிவத் தையின் முதல் சிறுகதையையும் தேடிக்கொண்டிருக்கிறேன் என்றார். இந்தத் தொகுதியில் வரும் பதினேழு கதைகளைத் தேடிக் கண்டு பிடித்ததிலும் அவற்றை கால ஒழுங்குபடி தொகுத்து ஒளியச்சு செய்த திலும், எமது பதிப்பகத்தில் பணியாற்றும் தம்பி சுப்பையா கமலதா சனின் பங்கு அளப்பரியது. இந்நூலின் பதிப்புப்பணி என்னுடையது என்றால் தொகுப்பாளர் பணி சுப்பையா கமலதாசன் எனும் இளைய எழுத்தாளனுக்குரியது.

பொதுவாக எழுத்தாளர்கள் என்பவர்கள் பொழுது போக்காகவும், பிறரின் பொழுது போக்கிற்காகவும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள் என்பது பலரது எண்ணமாகவுள்ளது. ஆனால் மலையக இலக்கிய சூழலில் 'எழுத்து' என்பது அதுவல்ல. அது ஒரு போராட்டம். ஒடுக் கப்பட்ட மலையக சமூகத்தை இந்த நாட்டில் 'தேசிய இனமாக' நிறுவுவதில் இந்த எழுத்து ஆற்றியிருக்கக்கூடிய பங்கு அளப்பரியது. ஆரம்ப காலங்களில் மலையக அரசியல், தொழிற்சங்க செயற் பாட்டா ளர்களே எழுத்தாளர்களாகவும் இருந்துள்ளமை அவதானிக்கத்தக்கது. கோ. நடேசய்யர் - ஒரு தொழிற்சங்கவாதி ஆனால் அவர் தான் மலையக சிறுகதையின் மூலவர். இவரை ஈழத்து சிறுகதை மூலவர்கள் நால்வரில் ஒருவராகவும் தெளிவத்தை தனது ஆய்வினூடாக முன்னிறுத்தினார். திருமதி. மீனாட்சிம்மாள் நடேசய்யர் ஒரு தொழிற்சங்க செயற்பாட் டாளர். ஆனால் மலையக மண்ணுக்கேயுரிய பாடல்களை முதன் முதலில் பாடிய கவிஞரும் அவரே. இவரையே ஈழத்தின் முதலாவது பெண் கவிஞர் என குறிக்கின்றார் பேராசிரியர் செ.யோகராசா. பேரினவாதத்திற்கு எதிராகக் குரல்கொடுத்த முதல் ஈழத்துக் கவிஞர் என்கின்றார் ஆய்வாளர் லெனின் மதிவானம்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஸ்தாபகர்களில்

ஒருவரான தலாத்து ஓயா கே.கணேஷ் இடதுசாரி அரசியல் சிந்தனை யாளர், செயற்பாட்டாளர். ஆனால் அவர் மலையக இலக்கிய சூழலில் முகிழ்ந்த முக்கியமான மொழிபெயர்ப்பு எழுத்தாளர், கவிஞர். மக்கள் கவிமணி சி.வி.வேலுப்பிள்ளை அவர்கள் ஒரு தொழிற்சங்கவாதி, அரசி யல்வாதி. ஆனால் மலையக மக்கள் குறித்த சாகாவரம் பெற்ற கவிதை கள், கதைகள், நாவல்களை எழுதிய முதுபெரும் இலக்கியவாதி. ஆங்கிலம் தமிழ் என இரண்டு மொழிகளிலும் மலையக மக்களின் வாழ்வியலையும் நாட்டாரியலையும் வெளிக்கொணர்ந்த பெருமைக் குரியவர். அவரின் 'தேயிலைத் தோட்டத்திலே' எனும் நெடுங் கவிதைத் தொகுதிக்கு அண்மித்து வைத்து நோக்கும் கவிதைத் தொகுதியொன்றை இதுவரை மலையகத்தில் அடையாளம் காண்பதற்கு இல்லை எனலாம். 'இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே' நெடுங்க விதையின் தமிழாக் கமும் அதன் மூலமாக அமைந்த 'In Ceylon Tea Garden' என்கின்ற ஆங்கில கவிதைகளின் தொகுப்பும் இணைந்த வெளியீடுதான் பாக்யா பதிப்பகத்தின் முதல் வெளியீடு (2007) என்பது பெருமைக்குரியது.

நடேசய்யர் முதல் சி.வி.வேலுப்பிள்ளை வரையான அரசியல் தொழிற்சங்க செயற்பாட்டுடன் கூடிய எழுத்தாளர்களின் அடுத்த தலை முறையைச் சேர்ந்தவர்களே என்.எஸ்.எம்.இராமையா தெளிவத்தை ஜோசப், சாரல்நாடன், தமிழோவியன், குறிஞ்சித்தென்னவன், மு.சிவ லிங்கம் போன்றவர்கள். இவர்களில் மு.சிவலிங்கம் மாத்திரமே நேரடி தொழிற்சங்க அரசியல் செயற்பாடுகளுடன் எழுத்தையும் முன்னெ டுத்தவர். ஏனையோர் எழுத்தின் ஊடாக அரசியலை முன்னெடுத்த வர்கள். இவர்களது படைப்புகளில் 'சமூக அரசியல்' இழையோட் டத்தை அவதானிக்கலாம். நடேசய்யர் காலத்தில் 'இந்தியத் தமிழர் கள்' என அழைக்கப்பட்ட மக்கள், சி.வி காலத்தில் 'மலைநாட்டு மக்கள்' என்று மாற்றமடைய, தமது முன்னைய தலைமுறையிடம் அதனைப் பெற்றுக்கொண்ட இவர்கள், 'மலையக' என்ற சொல்லா டலை தமது எழுத்தின் மூலம் முன்னெடுத்துள்ளார்கள். 'குறிஞ்சித் தென்னவன்' 'சாரல்நாடன்' என தங்களுக்கு இட்டுக்கொண்ட பெயர் கள் அந்த மண்ணின் மீது அவர்கள் கொண்டிருந்த பற்றுதலையே காட்டிநிற்கின்றது.

அரசியல், தொழிற்சங்க செயற்பாட்டில் இருந்தவர்கள்தான் தர மான இலக்கியமும் படைத்தார்கள் என்ற ஆரம்பகால ஒழுங்கு மாறிப் போய் அரசியலாளர்களையும், தொழிற்சங்கவாதிகளையும் கிண்டல் செய்வதும், கேலி செய்வதும் மலையக இலக்கிய பரப்பில் பரவலாக அவதானிக்க முடிகின்றது. இலக்கிய பரப்பில் அரசியல் தொழிற்சங்க

இயக்கங்களோடு தொடர்புடையவர்கள் செயற்பட்டால் அதனை அவர்களது கட்சி சார்ந்து ஒப்புநோக்குகிற போக்கும் காணப்படுகின்றது. அரசியல்வாதிகளையும் அரசியலையும் விமர்சிப்பது வேறு அது மாத்திரமே படைப்பாகி நிற்பது என்பது வேறு. இந்தச் சூழ்நிலையில் இன்றைய மலையக இலக்கிய வரவுகள் என்பது மண்வாசனையைக் கடந்து பயணிக்கத் தொடங்கிவிட்டதாகவே தெரிகிறது. இன்றைய எழுத்துக்களுக்கு நடேசய்யர் காலம் போன்ற, சி.வி காலம் போன்ற அரசியல் பிரக்ஞை இருக்கின்றதா என்கின்ற கேள்வி எழுகின்றபோது, அரசியல் தொழிற்சங்க செயற்பாட்டாளராக இல்லாத போதும் கூட எழுத்தினூடே 'சமூக அரசியலை' வெளிப்படுத்திய தெளிவத்தை ஜோசப் போன்ற எழுத்தாளர்களின் படைப்புகளை மீளளிக்கை செய்வதன் ஊடாக இன்றைய மலையக இலக்கியம் நிதானம் பெற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் முயற்சியாகவும் இந்தத் தொகுப்பு அமைகிறது எனலாம்.

தோட்டத்தில் இருந்து வருகிறோம் என்று சொல்லவே கூச்சல் பட்டுக் கொண்டும், பல்கலைக்கழகம் சென்றதும் வடகிழக்கு பூர்வீக தமிழர்கள் போன்று பாவனை செய்துகொண்டு அங்கேயே காதல் திருமணம் புரிந்து தங்களை மலையகத்தவர்களில் இருந்து மறைத்துக் கொண்டவர்கள், கொள்கிறவர்கள் மத்தியில் ஜோசப் எனும் தனது பெயரின் முன்னே 'தெளிவத்தை' எனும் தோட்டத்துப் பெயரை அடைமொழியிட்டு தனது மலையக அடையாளத்தை ஆழமாக வெளிப்படுத்தியவர் தெளிவத்தை ஜோசப் அவர்கள். தனது சிறுகதைகள் ஊடாக மலையக மக்களின் அவல வாழ்வை மாத்திரமே அன்றி அவர்களின் துணிச்சலையும் வாழ்வியலையும் வெளிப்படுத்தியவர். 'பாட்டி சொன்ன கதை' எனும் அவரது சிறுகதை இன்றும் கூட விதந்து பேசப்படும் முக்கியமான சிறுகதை. கதை எழுதப்பட்டு ஐம்பது ஆண்டுகளின் பின்னரும் ஒரு நாடகப்பிரதியாகி 'நேத்ரா' தொலைக்காட்சியில் தொடர் நாடகமாக ஒளிபரப்புப் பெறும் (2014) வலிமையைக் கொண்ட கதை அது.

"துரை.. உன் மகளை வரச்சொன்னார் ..சோப்பும் கொடுத்தனுப்பினார் குளித்துவிட்டு போகச் சொல்" என்று கங்காணி சொல்வதாக புதுமைப்பித்தன் காட்டிய மலையகம் மாறிவிட்டது. இன்று அப்படி எவனாவது சொல்லியனுப்பினால் "ஏய் எவன் ஓய் அப்படிச் சொல்லியனுப்பியது" என்று "அப்பன் போவான் கத்தியோடு" என மலையக மக்களுக்கு துணிச்சலூட்டியவர் தெளிவத்தை.

தெளிவத்தை ஜோசப் அவர்கள் தனது எண்பது வருட வாழ்வில்

ஐம்பது வருடங்களை இலக்கியத்திற்குள்ளாகவே செலவிட்டிருக்கிறார். எனவே அவரை அடியொட்டியதாகவே ஒரு வரலாறும் வந்து கொண் டிருக்கிறது. தெளிவத்தையின் முன்னுரைகள், அணிந்துரைகள் ஒரு மலையகம் சார்ந்த படைப்பாகவோ, அல்லது படைப்பாளியினு டையதாகவோ அமைகின்றபோது அது மலையக மக்கள் பற்றிய ஒரு ஆய்வு கட்டுரையாகவே அமைந்திருப்பதனை அவதானிக்கலாம். அந்தப் படைப்பினை அல்லது படைபாளியை மலையக வரலாற் றோடு இணைத்துப்பார்க்கின்ற ஒரு பண்பு தெளிவத்தையிடத்தில் வெளிப்பட்டு நிற்கும். மலையக வரலாற்றை வலியுறுத்திக் கொண்டி ருப்பவர்களில் தெளிவத்தைக்கு முக்கியமான இடமுண்டு. எனவே தான் 'தெளிவத்தை மலையகத்தின் அடையாளமாகவும்' பார்க்கப் படுகின்றார்.

தனது 'பாலாயி' குறுநாவலுக்கு தெளிவத்தை ஜோசப் அவர்கள் எழுதியுள்ள முன்னுரையின் ஒரு பகுதி இது:

"இப்படைப்புகளில் வரும் கதை மாந்தர்கள் வானத்தில் இருந்து இறங்கி வந்தவர்கள் அல்ல. இந்த மண்ணில் அழமாக ஊன்றி நிற்கத் துடிக்கும் வேர்கள். இவர்கள் இந்த மண்ணில் ஆழமாக வேர் ஊன்றி அகலமாக கிளைபரப்பி உயர்ந்து நின்றால்தான் இந்த மண் செழிக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

உங்களுடைய சக ஜீவன்களான இம்மக்களின் கதைகளைக் கட்டாயமாக வாசியுங்கள். இம்மண்ணுடன் இணைந்த மக்களின் கதைகளை வாசிக்கப் பழகிக்கொள்ளுங்கள். கதை என்பது வெறு மனே சொல்லப்படும் கற்பனை அல்ல, மக்களின் ஜீவிதம் அது என் பதை உணர்வீர்கள். மக்கள் செழித்தால்தான் மண் செழிக்கும் என்ப தன் சத்தியத்தை உணர்வீர்கள்"

இந்த வேண்டுகோளையே எமது பதிப்பகத்தின் வேண்டு கோளாகவும் முன்வைக்க விரும்புகின்றோம்.

தெளிவத்தையின் 75வது அகவையில் 'ஞானம்' இதழ் வெளியிட்ட பவளவிழா சிறப்பு மலரில் "அன்புள்ள ஜோ" எனும் தலைப்பில் தெளிவத்தையுடனான தனது நட்பு பற்றி எழுத்தாளர் சாரல்நாடன் ஒரு குறிப்பினை பதிவு செய்துள்ளார். அதில் இறுதிப் பந்தி இவ்வாறு அமைகிறது: "தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளை விமர்சனம் செய்யவும், கூட்டங்களுக்கு அழைத்து அவருக்கு பொன்னாடைகள் அணிவிக்கும் சடங்குகளும் அவருக்கு உதவப்போவதில்லை. அவரது புத்தகங்கள் வெளிவர உதவுவதே காலத்தால் செய்யும் உதவியாகும்".

தெளிவத்தையின் சகாவான எழுத்தாளர் சாரல்நாடனின் அவா மாத்திரமல்லாது அவரது இலக்கிய ஆளுமையில் அக்கறைகொண்ட அனைவரதும் அவாவின் ஒரு பகுதி இந்த தொகுதியினூடாக நிறைவு பெறுகிறது என நம்புகிறோம்.

எமது முயற்சிக்கு ஒத்துழைத்த தெளிவத்தை ஜோசப், அவரது குடும்பத்தினர், வடிவமைப்பில் அர்ப்பணிப்புடன் உதவிய நண்பர் சுரேஷ், அச்சுப்பதிப்பில் உதவிய கமல், யோகா, மனோ மற்றும் சீலன் ஆகியோருக்கு நன்றிகள்.

***மல்லியப்புசந்தி திலகர்***


பாக்யா பதிப்பகம்.
4A, ஸ்டார் சதுக்கம்,
ஹட்டன்

Web : www.malliyappusanthi.info
E-mail : thilagar@malliyappusanthi.info


***02.02.2014***

# முன்னுரை

பதுளையிலிருந்து தென்கிழக்கே பசறைக்குச் செல்லும் பாதையில் இரண்டோ, மூன்றோ மைல் தொலைவில் அமைந்திருக்கும், நிலவரைபடத்துக்கும் கண்ணாமூச்சிக் காட்டும் 'தெளிவத்தை'என்ற தோட்டத்துப் பெயரை, நவீன தமிழ் இலக்கியத்தின் 'Sign Post'ஆக பொறித்து வைத்த இலக்கிய பெருமகன் தெளிவத்தை ஜோசப்.

ஐம்பது ஆண்டுகால இலக்கியப்பணியில், தனது எழுத்தின் வலிமையால் மலையக இலக்கியத்தின் செழுமையை கடல் கடந்தும் நிறுவிய ஆளுமை அவருடையது.

மலையக இலக்கியம் என்ற பச்சை மண்ணில் தெளிவத்தை ஜோசப்பின் தசைநார்கள் நெய்யப்பட்டிருக்கின்றன என்றால், அது சரியாய்ச் சொன்னதாகவே அமையும். 'தெளிவத்தை' என்ற பதுளையின் புவியியல் பிராந்திய அலகினைத் தனது பெயரோடு இணைத்து, தமிழ் இலக்கிய உலகில் ஜோசப் நிகழ்த்தியிருப்பது சாதனை.

மனித ஜீவிகளாகவே கருதப்படாத ஒரு சனக் கூட்டத்தின் தீனக் குரலை தீவிர மூர்ச்சனையோடு எழுத்தியக்கத்தில் பதிவு செய்த பெரும் வியக்தி அவர். "தோட்டக்காட்டுக் கதையா? தூக்கிப்போடு குப்பையில்" என்ற பிறத்தியான் மனோபாவம் மேலோங்குகின்ற சூழலில், தனது சூழலின் நிதர்சனத்தை, அதன் வெம்மையின் தவிப்பை, சிறுமையின் இழிவை, மனிதாயத்தின் மென்னுணர்வை, சுரண்டலின் சூக்குமத்தை, இனவாதத்தின் நச்சுக்கொடுக்குகளை, இருண்மையின் வியாபகத்தை, அநாதரவின் பச்சாதாபத்தை, உணர்வுகளின் இடத்தை தந்திரமும் வக்கிரமும் அபகரித்துவிட்ட அவலத்தை தெளிவத்தை ஜோசப் தனது கதைகளிலே மீட்டியிருக்கிறார்.

மலையக மக்களின் பேச்சுவழக்கை, கவித்துவவீச்சோடு, உரைநடையில் வளர்த்த மேன்மை அவருடையது. ஈழத்துத் தமிழ் இலக்கிய

உலகு அதுவரை பரிச்சயப்பட்டிராத புதிய மொழியாளுகையை ஜோசப் கதைகள் அறிமுகம் செய்தன.

மலையக சமூக மாந்தரின் ஆத்திரங்கள், ஆற்றாமைகள், ஏக்கங் கள், ஆவேசங்களைஅவரது சிறுகதைகள் ஜீவத்துடிப்புடன் இலக்கி யார்த்தமாக வெளிப்படுத்தியுள்ளன. லயக்கூச்சலை, பீலிக்கரை சண் டையை, மனிதார்த்தமான பரிவுடன் பார்க்கும் அவரது பார்வைக் கோணம் வித்தியாசமானது. லயக் காம்பராவில், பெரட்டுக்களத்தில், சம்பளவாசலில், இஞ்சின் காம்பிராவில், கவ்வாத்துமலையில், துரை ஆபீசில் என்று மலையகத்தின் பல்வேறு களங்களில் விரியும் வாழ்க் கைக் கோலங்களில் தோய்ந்த தன் அனுப வங்களைச் சிறுகதைகளில் வெளிப்படுத்துவதில் அவரது சிருஷ்டி கரம் பூரணத்துவம் கொண்டி ருக்கிறது.

இலங்கை இந்திய அரசுகளின் பேச்சுவார்த்தைகளில், இலங்கை அரசின் அக்கறைகளில் வெறும் எண்ணிக்கை மூடைகளாகவே தெரிந்த இந்த சமூகக் கூட்டத்தில் தனி மனித உணர்வுகள் எவ்வளவு உக்கிரங் கொண்டு காணப்படுகின்றன என்பதை ஜோசப்பின் கதைகள் வெளி உலகிற்கு வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றன.

பந்தபாசங்கள் என்பனவெல்லாம் வெளிறிப்போய், அற்பப் பொரு ளாயநலன்களுக்குமேல் சிந்திக்கமுடியாத மௌடீகத்தில் மாய்ந்து போன அவலம் நம் நெஞ்சைச் சுடுகிறது. உழைப்பு என்பதன் மகத்துவம் அழிந்து போய், அது சிறைவாழ்வின், நரக இருப்பின் பிசின் போலா கிவிட்டது.

இந்த மலையகத் தமிழர்களின் நாளாந்த வாழ்வின் சகல கூறுக ளையும் துல்லியமாகத் தெரிந்த மகத்தான கலைஞனின் படைப்பு களாக ஜோசப்பின் சிறுகதைகள் திகழ்கின்றன. அவருக்குச் சொல்வ தற்கு நிறைய கதைகள் இருக்கின்றன. அவரது அனுபவங்கள் அவரைப் புடம் போட்டிருக்கின்றன. தோட்டத்துப் பெரியதுரை, சின்னதுரை, கண்டாக்கையா, கணக்கப்பிள்ளை, சின்னவர், கங்காணி, தொழிலாளி, கிளார்க்குகள், ஆசிரியர்கள், டிரைவர்மார், மெக்கானிக்குகள், சிறுவி யாபாரிகள் என்று மலையகத்து மாந்தர் அனைவரதும் பிரத்தியட்ச நிலைகளை ஜோசப் நேராக எதிர்கொள்கிறார். அவர் சுவாசித்த மலை யகக் காற்று, அவர் நடந்த லயத்துப்பாதை, அவர் திரிந்த லயங்கள், அவர் அனுபவித்த ஊவாக்கட்டவளை பஸ்சேவை, எல்லாமே மூக்கும் முழியுமாய் அசலான கதைகளாக நமக்குக் கிடைத்திருக் கின்றன.

மனித ஜீவன்களின் மீதான கனிந்த பார்வையும், மனிதாபிமான

கசிவும் மிகுந்த பல கதைகள் அவரது முப்பது வயது காலப்பகுதியி லேயே எழுதப்பட்டுவிட்ட கதைகளாகும்.

தெளிவத்தை ஜோசப் விலங்குகள் மீது கொண்டிருக்கும் நேசம் ஈழத்து எழுத்துக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் அபூர்வமான அம்சமாகும். "அது" என்ற கதையில் சேனையை நாசமாக்கும் குரங்குக் கூட்டத்தை அழிக்க எண்ணி, நிறைமாதச் சினைக் குரங்கை, பாய்ந் தோட முடியாமல் "இரு கைகளையும் ஒன்றாய் குவித்து கும்பிட்ட" தாய்க்குரங்கை தடியால் பிளக்கும் கொடூரம் நம் நெஞ்சை உறையப் பண்ணிவிடும். நாய்கள், பசுமாடுகள், குரங்குகள் ஆகிய விலங்கு களை மையமாகக் கொண்டு ஜோசப் எழுதியுள்ள கதைகள் தமிழ்ச் சிறுகதைப் பரப்பில் முன்னுதாரணமாய் அமையத்தக்க தனித்துவம் கொண்டவை.

'இறுமாப்பு' என்ற கதையில் வேப்பமரத்தின் உச்சிக்கிளையில் வெட்டி, பூஞ்செடிகளை நாசஞ்செய்யும் இடத்தில் ஜோசப்பின் எழுத்து மனிதன் இயற்கையின் மீது மேற்கொள்ளும் அராஜகத்தின் மீது தார்க்கோல் சூடு போடுகிறது.

பல இடங்களில் உயிரினங்கள், மரஞ்செடிகள், இயற்கை மீதான ஜோசப்பின் கனிவான பார்வை இந்தியாவின் தலைசிறந்த உயிரியல் விஞ்ஞானி மா.கிருஷ்ணனை நினைவிற்கு கொண்டுவருகிறது.

மலையக மக்களின் வாழ்க்கையை அற்புதமாகச் சித்திரித்த ஜோசப், தலைநகர் கொழும்புக்கு தொழில் நிமித்தம் குடிபெயர்ந்த பின்னரான அவரது தலைநகர் வாழ்வு அரை நூற்றாண்டை எட்டிப் பிடிக்கப் பார்க்கிறது.

கொழும்பு நகர் 500 ஆண்டுகால போர்த்துக்கேய, டச்சு, பிரிட்டிஸ் காலனித்துவத்தின் சிருஷ்டி. அது காலாகாலமாக பல்லின மக்களின் வாழ்விடமாகவே வளர்ந்து வந்திருக்கிறது.

1880களிலேயே யாழ்ப்பாணத் தமிழர்கள் செறிந்து வாழும் புற நகர்ப் பகுதியாக வெள்ளவத்தை தோற்றம் காண ஆரம்பித்து விட்டது. 1905 இல் யாழ் - கொழும்பு புகையிரத சேவையின் பின் யாழ் மக்கள் கொழும்பை நோக்கிப் பெயர்வது வேகம்பெறத் தொடங்கியது. Pettah என்பது பேட்டை என்பதன் திரிபாகும். 1820களில் கொழும்பில் மாத்திரம் 2450 நாட்டுக்கோட்டைச் செட்டிமார் வர்த்தக, வங்கி நடவடிக் கைகளில் ஈடுபட்டிருந்தனர். சிற்றூழியர்களாக வேலை பார்த்த இந்தி யர்கள் கிட்டங்கிகளில் தங்கி வேலை பார்ப்பவர்களாக இருந்தனர். பெருந்தொகை நகரசுத்தித் தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்து

இறக்குமதி செய்யப்பட்டு, ஒதுக்குப்புறச் சேரிகளில் விடப் பட்டனர்.

இலங்கையின் அதி உன்னதக் கட்டிடக் கலைஞன் ஜெவ்ப்ரி பாவாவின் சிருஷ்டித் திறனில் கொழும்பின் கட்டிடக்கலை புதிய உச்சத்தைத் தொட்டதாயினும், தலைநகரின் சிறுபான்மை இனத்தவர் மீதான அச்சுறுத்தலும் இந்தியர்களுக்குக் குறிப்பாக மலையாளிக ளுக்கு, முஸ்லிம்களுக்கு, தமிழர்களுக்கு எதிரான வன்முறை தலை நகரில் வரலாறு முழுவதும் தொடர்ந்திருக்கிறது. 1983இல் கொழும் பில் வெடித்த இன வன்முறை நாகரீக சமூகம் வெட்கித் தலைகுனிய வேண்டியநிலைக்கு வீழ்ச்சியுற்றமைக்கு சாட்சியாகும்.

அண்மைக்காலத்தில் இடம்பெற்ற கொடூர யுத்த காலகட்டத்தில் கொழும்பில் தமிழர்கள் அடைய நேர்ந்த அச்சம், பீதி, அவலம், துன்பம் என்பனவற்றை ஜோசப் மிகக் கூர்மையாகத் தனது சிறுகதை களில் பதிவு செய்திருக்கிறார். நள்ளிரவுத் தேடல்கள், சுற்றிவளைப் புகள், வீதிகள் முழுவதும் உருவாகியிருந்த செக்பொய்ண்டுகள், வாக னங்களில் வழிமறித்து எந்த இடத்திலும் ஆயுதப்படையினர் மேற் கொள்ளும் சோதனைகள், விசாரணைகள், பொலீஸ் நிலையங் களில் தமிழர்கள் தம்மைப் பதிவுசெய்து காட்டவேண்டிய பத்திரங்கள், அடையாளஅட்டை சோதனைகள் என்று தமிழர்கள் தலைநகரில் பீதியில் உறைந்து போயிருந்த காலத்தை ஜோசப்பின் கதைகள் அசலாக சித்திரித்திருக்கின்றன.

சிங்களம் தெரியாத யாழ்ப்பாணத்து இளைஞர்கள் இந்த இரா ணுவ, பொலீஸ் விசாரணைகளின்போது சிக்கிக்கொண்டுவிட்டால், அவர்கள் கிரிமினல் குற்றம் இளைத்தவர்களைப் போல நடத்தப்படும் கொடூரத்தை சிலகதைகள் வெளிப்படுத்துகின்றன.

தமிழ் மக்கள் மனதில் தோன்றும் அச்சமும், பீதியும் தெருவில், இராணுவச் சோதனைச் சாவடிகளில், பஸ் பயணத்தில் ரயிலில் மட்டுமல்ல, அவர்களின் வீட்டுவாசல்வரை வந்து விரவுவதை ஜோசப் கதைகள் பேசுகின்றன.

மனைவி பொட்டு வைத்துக் கொண்டு போகலாமா, தாலிக் கொடி யைப் போட்டுக் கொள்ளலாமா என்று கண்ணுக்குப் புலப்படாத கண்காணிப்பின் வலியகரங்கள் தமிழர்களின் படுக்கையறை வரை வந்து விட்ட நிலை, தமிழர்கள் பிரத்தியேகமாக எதிர்நோக்கும் பீதி நிறைந்தவாழ் நிலையாகும்.

புதிதாக முகவரி தேடும் வெளியாட்கள் தமிழர்களாக இருந்து விட்டால் அதுவும் சிங்களம் தெரியாதவர்களாக இருந்தால்

படும்பாடுகள் ஜோசப்பின் கதைகளில் நுட்பமாக சித்திரிக்கப்பட்டுள்ளன.

அதேசமயத்தில், மனிதாபிமானமிக்க சாதாரணமான சிங்களக் கதாபாத்திரங்களின் ஊடாட்டமும் தலைநகர் வாழ்வில் வெவ்வேறு பரிமாணங்களாகும்.

யுத்தகாலத் தலைநகர் வாழ்வில் தமிழர்கள் அனுபவித்த அச்சங் கலந்த வாழ்வை ஜோசப் நிரந்தர இலக்கிய ஆவணமாகப் பதிவு செய்திருக்கின்றார்.

ஏங்கே அடக்கு முறையும் பாரபட்சமும், ஒதுக்குமனோபாவமும் அராஜகமும் கட்டவிழ்த்து விடப்படுகிறதோ, அங்கே ஒரு மனிதாபிமானம் மிகுந்த கலைஞனின் இதயம் தோய்ந்து போவதில் வியப்பேதுமில்லை.

தங்களின் வாழ்விடங்களைத் தொலைத்து, நீங்கி, இழந்து அவற்றை மீண்டும் நினைவூட்டும் பதிவுகளை வரைபடமாக, ஓவியமாக இழப்பினை நினைவு கூரும் ஆவணமாக T.சணாதனன் வெளியிட்டிருக்கும் The Incomplete Thombu வடபுலத்தில் வாழ்வைத் தொலைத்த 80 பேரின் கதைகளை யுத்த சாட்சியமாக்கியுள்ளது. அதற்கு நிகராக, தலைநகர்த் தமிழர்களின் யுத்தகால நெருக்கடியின் அவலத்தை தெளிவத்தை ஜோசப் மகத்தான எழுத்தோவியமாகத் தந்துள்ளார்.

சுய கௌரவத்தோடு, சமத்துவ உரிமையோடு, அச்சமின்றி ஒரு சிறுபான்மை இனம் வாழும் நிலைதான் ஒரு சமூகத்தின் அதியுயர் நாகரீக செழுமைக்கு எடுத்துக்காட்டாகும். அது விண்ணைத் தொட முயலும் கோபுரங்களாலும் வழுக்கிக்கொண்டு போகும் சாலை அமைப்புக்களாலும், பிரமாண்ட கட்டடங்களாலும் உருவாவதில்லை.

தெளிவத்தை ஜோசப்பின் தலைநகர் சிறுகதைகள், தமிழர் தம் வாழ்வியலின் நெருக்கடிமிக்க காலப்பகுதிகளை இலக்கிய எடுத்துரைப்பிலே கோர்த்திருக்கிறது.

தெளிவத்தை ஜோசப்பின் எழுத்துநடை வசீகரமானது, கவித்துவ வேகம் கொண்டது, மின்னலாய் வெட்டிச் செல்லும் துரிதம், சிக்கனமான சொற் பிரயோகம் காட்சியைக் கண்முன்னால் பரப்பும் லாவகம், இறுக்கமான வர்ணனை, துல்லியமான விபரிப்பு அனைத்துமே ஈழத்தின் முதன்மையான சிறுகதை எழுத்தாளராக அவரை நிலை நிறுத்த உதவுகின்றன. ஈழத்தின் நவீன இலக்கிய உரைநடை தெளிவத்தை ஜோசப்பின் எழுத்தால் புதுமெருகு பெற்றிருக்கிறது.

அறுபத்தைந்து கதைகளுக்குமேல் எழுதியிருக்கும் ஜோசப்பின் பதினொரு சிறுகதைகள் 'நாமிருக்கும் நாடே' என்ற தலைப்பில் 1979 இல் பிரசுரமாகி இன்று 34 ஆண்டுகள் கடந்து தான் அவரது 'மீன்கள்' 'தெளிவத்தை ஜோசப் சிறுகதைகள்' என்ற இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் வெளியாவது என்பது ஈழத்து பிரசுர உலகின் தாமத குணத்தைச் சுட்டுவதாகும்.

ஜோசப்பின் சிறுகதைத் தொகுப்பினை வெளியிடும் இந்தத் தீவிர முயற்சியில் பாக்யா பதிப்பகத்தின் 'மல்லியப்புசந்தி' திலகர் மேற்கொண்டிருக்கும் அயராத உழைப்பிற்கு மலையகம் நன்றிக்கடன் பட்டிருக்கிறது.

எண்பதாண்டுகளின் வாயிலில் நிற்கும் தெளிவத்தை ஜோசப் சகலரது அபிமானத்திற்கும், பாராட்டுக்கும், மதிப்பிற்கும் உரியவராகத் திகழ்வது அவரது உயர்ந்த பண்பாட்டிற்கும், விசால மனதிற்கும் சாட்சி சொல்வதாகும்.

மெல்லிய துடிதுடிப்பான ஜோசப்பின் தோற்றத்தில் எண்பது வயதின் முத்திரை பதியவேயில்லை. பதுளையில், யாழ்ப்பாணத்தில், கொழும்பில், லண்டனில் நான் சந்தித்த ஜோசப்பின் வாழ்வில் இந்த ஆண்டுகளின் எண்ணிக்கை என்பது பொருட்டல்ல.

ஜோசப்பின் கலாபூர்வமான எழுத்திற்கு தமிழ் கூறும் நல்லுலகு செங்கம்பளம் விரித்து பாராட்டுப் பண்பாடுகிறது.

"எங்கே தேயிலை விளைகிறதோ, அதுமலை முகடாக இருந்தால் என்ன, சமவெளியாக இருந்தாலென்ன அந்த இடம் புனிதம் பெறுகிறது" என்று 12ஆம் நூற்றாண்டு ஜப்பானிய வாசகம் கூறுகிறது!

ஜோ! உங்கள் எழுத்தால் மலையக இலக்கியமும் புனிதம் பெறுகிறது!

*மு. நித்தியானந்தன்*
லண்டன்
*10.02.2014*

***Email: nithimeena@hotmail.com***

# என்னுரை

இது என்னுடைய இரண்டாவது சிறுகதைத் தொகுதி.

முதல் தொகுதியான 'நாமிருக்கும்நாடே' 1979 ல் வெளிவந்தது. மு. நித்தியானந்தன் அவர்கள் நிறுவிய 'வைக்றை' பதிப்பகம் தனது கன்னி வெளியீடாகக் கொண்டு வந்த நூல் 'நாமிருக்கும்நாடே'. 1979 ஆம் ஆண்டுக்கான சிறந்த சிறுகதைக் நூலுக்கான அரச சாகித்திய விருது அந்த நூலுக்குக் கிடைத்தது.

மலையகத்துக்கு ஒரு அரச சாகித்திய விருதினை முதன்முதல் பெற்றுக் கொடுத்த நூல் 'நாமிருக்கும்நாடே'

ஒரு மலையக நூலின் வெளியீட்டு விழா யாழ்ப்பாணத்தில் நடந்தேறிய வரலாற்று நிகழ்வு அது.

நித்தி அப்போது யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் விரிவுரையாளர்...

யாழ் 'ரிம்மர்' மண்டபத்தில் கவிஞர். இ.முருகையனின் தலைமையில் விரிவுரையாளர் மு.நித்தியானந்தன் வெளியீட்டுரை நிகழ்த்த பேராசிரியர் கைலாசபதி நூலாய்வு செய்ய டொமினிக் ஜீவா உரையாற்றவென்று ஒரு கலகலப்புடன் நடந்த வெளியீட்டு விழா அது.

பதுளையில் ஊவா கல்லூரியில், ஒன்பதாம், பத்தாம் வகுப்பு மாணவனாக இருந்த காலத்தில் என்னைத் தனது ஆதர்ஷ எழுத்தாளராக கூறியவர் நித்தியானந்தன். ஐந்தாறு வருடங்களின் பின் பட்டதாரியாக பல்கலைக்கழகத்திலிருந்து திரும்பியபின் தெளிவத்தையும் என். எஸ். எம். ராமையாவும் என்ன எழுதுகின்றார்கள்? ஏன் எழுதுகின்றார்கள்? என்று கேட்கத் தொடங்கியிருந்தார்.

அறுபது - எழுபதுகளில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஆளும் அரசியலார் பலத்துடன் உச்சத்தில் இருந்த காலம். கொடி உயர்த்தி நின்ற காலம். அவர்கள் ஆம் என்றால் அது இலக்கியம்.

இல்லை என்றால் அது பூஜ்யம் என்ற நிலைக்குள் ஈழத்து இலக்கியம் தள்ளப்பட்டிருந்த காலம். நான் கூடுதலாக சிறுகதைகள் எழுதிய காலம் அது.

பிந்திய அறுபதுகளில் சிந்தாமணியில் 'லில்லி' என்று ஒரு கதை வந்தது. வீரகேசரியில் 'கடைசி வேளை' யும், கலைமகளில் 'அது' வும் வந்திருந்தன. 'அது' ஒரு குரங்கைப்பற்றிய கதை. 'லில்லி' ஒரு பசுமாட்டைப் பற்றிய கதை.

இங்கே மனிதர்கள் சாகின்றார்கள். இவர் மாட்டைப் பற்றியும் குரங்கைப் பற்றியும் எழுதிக் கொண்டிருக்கின்றார் என்று என்னைப் பிய்த்து உதறினார்கள். நான் கூடுதலாக எழுதிய காலம் அது என்பதால் கூடுதலாகவும் ஏச்சுப்பட்டேன்.

ஏதாவதொரு நேர்காணலுக்காக என்னிடம் கேள்வி கேட்ப வர்கள் ஒரு பத்து வருடம்போல் எழுத்தே வேண்டாம் என்று இருந்தீர்களாமே அது ஏன் என்னும் கேள்வியைத் தவறாமல் கேட்பார்கள். கோவையிலும் கேட்டார்கள். ஏச்சு வாங்க விருப்பப்படாததால் தான் எழுதுவதை நிறுத்திக் கொண்டேன்.

பிந்திய எழுபதுகளில் யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து கொழும்புக்கு என்னைத் தேடி வந்த நித்தியானந்தன் அவர்கள், தான் ஒரு பதிப்பகம் தொடங்கப் போவதாகவும் என்னுடைய சிறுகதைத் தொகுதியையே அதன் முதல் நூலாக வெளியிடத் தீர்மானித்திருப்பதாகவும் கூறினார்.

"நான் என்ன செய்ய வேண்டும்?"என்று கேட்டேன்.

"ஒன்றும் செய்ய வேண்டாம், சரி போடுங்கள் என்னும் அனுமதி போதும்" என்றார்.

"சரி போட்டுக் கொள்ளுங்கள்! ஆனால் கதைகள் என்னிடம் இருக்காதே!" என்றேன்.

அந்தக் கவலை எல்லாம் உங்களுக்கு வேண்டாம். கதைகள் என்னிடம் இருக்கின்றன என்றார்.

"பிறகென்ன கரும்பு தின்னக் கூலியா போடுங்கள்" என்றேன்.

"பெயர்!?" என்றார்.

"உங்கள் விருப்பப்படியே வைத்துக் கொள்ளுங்கள். கூனல் உங்களுக்கு நன்றாகப் பிடிக்குமே!. அதையே வைத்துக் கொள்ளுங்களேன்" என்றேன்.

"கூனல் அல்லது 'பாட்டி சொன்ன கதை' இரண்டில் ஒரு பெயர் ஓ.கே.தானே" என்றார்.

இது நடந்தது 1979 செப்டம்பர் அல்லது ஒக்டோபராக இருக்க லாம். டிசம்பர் முதல் வாரம் போல் மீண்டும் என்னைக் காண வந்தார். 'நாமிருக்கும்நாடே' இரண்டு புத்தகங்களை ஒரு பவ்வியத்துடன் நீட்டி னார்.

வியந்து போனேன். அழகான அட்டைப் படம். ஓவியர் கே. கே. ராஜாவின் நவீன வகை அட்டை ஓவியம். அருமையான முன்னுரை. மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ஒரு அம்மாவைப் போல் என்னு டைய முதல் சிறுகதைத் தொகுதியை கையில் பிடித்தபடி லயித்து நின்றிருந்தேன்.

"எங்கள் குழுவின் பெரும்பான்மையினரின் தெரிவு இந்தப் பெயர்தான் ஓவியர் உட்பட" என்று ஒரு தயக்கத்துடன் கூறினார்.

"பெயரில் என்ன இருக்கிறது?. யூ ஆர் கிறேட் நித்தி" என்று கைகளைப் பற்றிக் குலுக்கினேன். வெளியீட்டு விழா அழைப்பிதழை கொடுத்தார்.

வெளியீட்டு விழா யாழ்ப்பாணத்தில். நான் வந்ததில்லையே என்றேன்.

கொழும்பில் கோச்சேறி யாழ்ப்பாணத்தில் இறங்குங்கள். எங்கள் பையன்கள் உங்களைத் தூக்கிக் கொண்டு வந்து மண்டபத்தில் போட்டு விடுவார்கள். என்று சிரித்தார்.

அந்தச் சிரிப்பும் அதன் அகத் தூய்மையும் காலம் கடந்தும், தேசம் கடந்தும் இன்றும் அப்படியேஇ அதே அழகுடனும் ஆகிருதி யுடனும்'. நித்தி, லண்டனில் பேராசிரியராக உயர்ந்து நிற்கின்ற போதும்.

இந்த மண்ணின் உணர்வு தரும் லாவண்யம் அது.

இப்படித்தான் என்னுடைய, எதுவிதமான சிரமங்களோ பரப ரப்போ அல்லல் அலைச்சல்களோ இல்லாமல் வெளிவந்து பரப ரப்பை ஏற்படுத்தியது என்னுடைய முதல் சிறுகதைத் தொகுதி நாமிரு க்கும் நாடே.

எனது சிறுகதைகள் என்னிடமே இல்லாத சூழலில்.

என்னுடைய 15 வருடக் கதைகளில் 11 சிறுகதைகளை தேடும்

சிரமத்தைக்கூட எனக்குத் தரவில்லை நித்தி.

ஆனால் இந்தத் தொகுதிக்காக நான் படாத அத்தனை பாடுகளையும் சிரமங்களையும், சுமைகளையும் புறத்திலும், அகத்திலுமாக சுமந்தவர் என்னுடைய அன்புக்கும், மதிப்புக்கும் என்றுமுரியவரான மு. நித்தியானந்தன் அவர்கள்.

ஒரு 200 ஆண்டுகளுக்கு முன் கூட்டி வந்து இந்த மலையக மக்களை நட்டாற்றில் விட்டு விட்டு ஓடிப்போன வெள்ளைக்காரர்களின் தேசத்தில், இந்த மண்ணையும் அதன் மக்களையும், அவர்களது வாழ்வைப் பேசும் இலக்கியத்தையும் அறிமுகப் படுத்திய, பிரபல்யப்படுத்திய பெருமைக்குரியவர் நித்தி.

35 நீண்ட வருடங்களின் பின் வருகின்ற இந்த இரண்டாவது தொகுதியும் எனக்குள் நித்தியை நினைவு படுத்திக் கொண்டேதான் வருகிறது.

பாக்யா பதிப்பகத்தின் மல்லியப்புசந்தி திலகர் அவர்கள் "ஐயா உங்களுடைய அனைத்துச் சிறுகதைகளையும் ஒரு தொகுதியாகக் கொண்டு வரலாம் என்று நினைக்கின்றேன் தொடங்கவா?" என்று கேட்டார்.

சரி முடிந்தால் செய்யுங்கள் என்றேன். நித்தி தொடங்கிய 79ல் என்னுடைய 15 வருட கதைகள். திலகர் தொடங்கிய 2013 என்னுடைய 50 வருடக் கதைகள்! லேசுப்பட்ட காரியமா. நாமிருக்கும் நாடே தொகுதியில் வராத கதைகளாக 22 கதைக்களைத் தேடி எடுத்து அதை ஒரு தொகுதியாக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. இந்த தேடுதலில் திலகர் அவர்களுக்கு வலது கரமாக இருந்தவர் சுப்பையா கமலதாசன்.

அப்போதுதான் திடீரென விஷ்ணுபுரம் விருது விழாவின்போது ஜெயமோகன் அவர்கள் தொகுத்த 'மீன்கள்' என்னும் எனது தொகுதி வெளியிடப்பட்டது.

இவர்கள் சிரமப்பட்டு தேடி எடுத்த கதைகளில் ஐந்து அதில் வெளிவந்து விட்டது.

அந்தக் கதைகளைக் குறைத்துக் கொண்டு தேடிக் கிடைத்த மீதி 17 சிறுகதைகளைக் கொண்ட தொகுதியாக இதை வெளியிடுகின்றார் மல்லியப்பு சந்தி திலகர்.

*1971ல் கதைக்கனிகள் என்னும் வீரகேசரியின் மலையகப் பரிசுக் கதைகளைத் தொகுத்து வீரகேசரியூடாக வெளியிட்ட அமரர் கார்மேகம், "திருவாளர்கள் கே.கோவிந்தராஜும், விக்ரமசிங்கவும் இல்லா விட்டால் இந்தத் தொகுதி வந்திருக்காது" என்று பதிப்புரை யில் கூறியுள்ளார்.*

இன்றும்கூட 'கமலதாசனின்' உழைப்பு இல்லை என்றால் இந்தத் தொகுதி வந்திருக்க வாய்ப்பில்லை என்று பாக்யா பதிப்பக உரிமையாளர் திலகரும், இவர்கள் இருவரும் இல்லை என்றால் இந்த நூலுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு நடத்தப்பட்டி ருக்காது என்று நானும் மனம் திறந்துக் கூறிக் கொள்ளலாம்.

*35* வருடங்களுக்கு முன் நித்தி கூறியது போலவே "நீங்கள் ஒன்றுமே செய்ய வேண்டாம் நான் போட்டுத் தருகின்றேன்" என்று உற்சாகத்துடன் கூறிய இன்றைய திலகரும் என்னால் மறக்க முடியாத இலக்கிய மனிதர்கள்.

இங்கிவர்களை நான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன் என்று நினைத்துக் கொள்ளுகின்றேன்.

இது என்னுடைய ஏழாவது நூல்

1. காலங்கள் சாவதில்லை - நாவல் (வீரகேசரி வெளியீடு - *1974*)
2. நாமிருக்கும் நாடே - சிறுகதைத் தொகுதி - *1979*
3. பாலாயி - *3* குறுநாவல்கள் (துரைவி வெளியீடு - *1997*)
4. மலையக சிறுகதை வரலாறு (துரைவி வெளியீடு - *2000*)
5. குடைநிழல் - நாவல் ( கொடகே வெளியீடு - *2010*)
   (மறுபதிப்பு 'எழுத்து' -தமிழகம்- *2013* )
6. மீன்கள் - சிறுகதை தொகுப்பு ( நற்றினை வெளியீடு - *2013*)

இவைகளில் எதையுமே நான் சிரமப்பட்டும் பணம் செலவிட்டும் வெளியிட்டுக்கொள்ளவில்லை என்பது முக்கியமானது.

துரைவி பதிப்பக உரிமையாளர் அமரர் துரை விஸ்வநாதன் அவர்க ளுடன் நான் இணைந்து செயலாற்றத் தொடங்கிய *1996* ல் இருந்து *1998* டிசம்பரில் அவர் அமரர் ஆனது வரையும் அதன் பிறகு அவரு டைய மகன் துரைவி ராஜ்பிரசாத் அவர்கள் துரைவியின் பணிகளை தொடங்கிய காலங்களிலும் துரைவி வெளியிட்ட *13*ற்கும் மேற்பட்ட நூல்களில் என்னுடைய இரண்டு நூல்களை துரைவி வெளியிட்டுக் கொடுத்துள்ளமை நினைவு கூர்தலுக்குரியது.

இந்த நூலுக்கான முன்னுரையையும் பேராசிரியர் மு. நித்தியானந்தன் அவர்களிடமிருந்தே பெற்றுக்கொண்டுள்ள மல்லியப்புசந்தி திலகர் அவர்களுக்கு எனது பிரத்தியேகமான நன்றிகள் உரித்தாகுகின்றன.

எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தருபவை இவை.

இந்த நூலின் வருகைக்காக சிலுவை சுமந்த அனைத்து இலக்கிய நண்பர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.

என்றும் அன்புடன்...

*தெளிவத்தை ஜோசப்*


291 / 12A, நீர்கொழும்பு வீதி
வத்தளை.

*10.02.2014*

**theliwathaijoseph@gmail.com**
**theliwathaijosep.blogspot.com**

# உள்ளடக்கம்


1. ஊன்றுகோல்
2. பழம் விழுந்தது
3. பீலி மேலே போகிறது
4. எக்சீமா
5. ஒரு புதிய உயிர்
6. பொட்டு
7. உயிர்ப்பு
8. இன்னுமொரு
9. பந்து
10. சுவர்
11. எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்
12. உயிர்
13. செத்துப் போகும் தெய்வங்கள்
14. இறுமாப்பு
15. சாம்பல்
16. மந்திரகோல்
17. வேடிக்கை மனிதர்கள் அல்லர்

என்

கதைமாந்தர்களுக்கு...



# 1 ஊன்றுகோல்

**வா**னத்துச் சரிவில் நிற்கும் கதிரவன் வளர்த்துவிடும் நிழலாய் நீண்டது அம்மாவின் நினைவு.

நினைவை நீட்டிவிட்ட குரல் கதவடியில் பலமாகக் கேட்டு, தேய்ந்து தெருவோடு போயிற்று. "அம்மோவ்" என்னும் அவனுடைய குரல் அச்சாக அவருடைய குரலே போன்ற அந்தக் குரல். எத்தனையோ தடவை அம்மாவே ஏமாந்திருக்கிறார்கள்.

அவர்தான் கூப்பிடுகிறாரோ என்று கை வேலையையும் போட்டு விட்டு ஓடிவந்து பார்த்தால் அவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பார். நெகிழ்ந்து கிடக்கும் போர்வையைச் சரிசெய்துவிட்டு வெளியே மெதுவாக எட்டிப் பார்த்தால்... பிதுங்கி வழியும் கீரைக்கூடையைத் தலையுடன் சேர்த்து இடக் கரம் அணைந்திருக்க, வலக்கரத்தில் தளதளக்கும் கீரைக்கட்டுடன் அவன் தான் நிற்பான்.

கைக்கடங்காத கட்டுக்கீரை அவன் பிடியில் ஒரு விநாடி மொறு மொறுத்து அம்மாவின் முந்தானையில் விழும். அவன் கீரைக் கட்டை உதறிக்காட்டிய வேகத்தில் நுணுங்கி விழுந்த இரண்டோர் இலைத் துகள்களையும், சிதறி விழுந்த நீர்த்துளிகளையும் காலால் தேய்த்து வாசல் கல்லில் தள்ளிவிட்டு அம்மா உள்ளே போவதற்குள் அவன் அடுத்த வீட்டுப்படியில் "அம்மோவ்" என்று நிற்பான்.

"அசல் அவர் மாதிரியே" என்று முனகிய வண்ணம் அவர் சாய்ந்து கிடக்கும் கட்டி லையும் எட்டிப் பார்த்துக் கொண்டு உள்ளே நடக்கும்போது அம்மா வின் உயிர்கூடச் சிரித்துக் கொள்ளும். அவன் அடுத்த வீட்டிலும் "அம்மோவ்" என்பதைக் கேட்பதற்காக நிற்கும் இடைநேரத்தில்தான் அந்தத் தண்ணீர்த் தேய்ப்பும் தள்ளலும்.

அடுப்படியை அடையுமுன்னமே "அம்மா" என்று குரல் வரும் உள்ளறையிலிருந்து. அம்மிக் கல்லின் மேல் கீரையை வீசிவிட்டு உள்ளே ஓடினால்...

வலது முழங்கையைக் கட்டில் சட்டத்தில் தேய்த்துக் கொண்டி

ருப்பார். அம்மாவுக்குத் தெரியும் அதன் சூட்சுமம்.

அவருடைய கையைப் பற்றித் திருப்பிய வண்ணம் மெதுவாகக் கட்டிலடியில் அமர்ந்து முழங்கையைச் சொறிந்து கொடுப்பார்கள். அரித்த இடத்திற்கு அந்தச் சொறிவு தரும் இதம் அவரைவிட அம்மா வுக்கே அதிகம். முதிர்ந்த அந்த முகத்தில் விரிந்து கிடக்கும் மந்த காசம், அவருக்குப் பணிவிடை செய்வதில் கிடைக்கும் மனமகிழ் வுக்கு ஓர் எடுத்துக் காட்டு.

அவருடைய வாயில் வார்த்தைகள் குழறும். அவருக்குச் சொல் தெரியும்... சொல்லவும் தெரியும்... ஆனால் சொல்லத்தான் முடியாது. சொல்ல வேண்டியதற்குச் சரியான உருவம் தரச் சக்தியற்ற வாய். “வாடா கண்ணே” என்று கூற நினைப்பதை “வாழா கழ்ழே” என்றே ஒலி செய்கிறது அவருடைய வாய்... சக்தியிழந்த வாய்.

இழுத்துக் கட்டிய மத்தளத் தோலில் கத்தி முனையால் ஒரு கொத் துப் போட்டது போல, வலப் பக்கம் மட்டுமே வாய் சிறிது பிளந்தி ருக்கும். இடப்புறம் பசைப்போட்டு ஒட்டியது போல் ஒட்டிக் கொண் டிருக்கவில்லை என்றாலும் திறக்க முடியாத ஒரு நிபாத நிலை.

ஒரு நாள் ஊன்றி நின்ற கால்தான். தனியாக அல்ல... அம்மா வையும் தாங்கிக் கொண்டு. அதில் ஒன்று, இன்று சூம்பிக் கிடந்தது. அடித்து, அணைத்து, ஆதரித்த கைகள்தான். அவற்றில் ஒன்று, அசை வற்றுக் கிடந்தது ... அடித்துப் போட்ட பாம்பாய்.

இடக்கை, இடக்கால் எல்லாமாய்... முழு இடப்பக்கமுமே இரத் தமின்றிச் செத்துப்போய், வேரிலே பூச்சி விழுந்த மரமாய் வெம்பிக் கிடந்தது. இருப்பது, எழும்புவது, உண்பது, உடுப்பது, ஒன்றுக்கு இரண்டுக்குப் போவது எல்லாமே துணையுடன் தான்.

தம்மையே துணை என்று வந்து தமக்கே துணையாகிவிட்ட தம் துணைவியை அவர் பார்த்தார். அந்தப் பார்வையிலே பாறையாகிக் கிடந்தது கணவன் மனைவியைப் பார்க்கும் பாசமா, நம்பிக்கையா எது என்பது?

ஊதிவிட்ட பஞ்சுத் திவலைகளாய் நுரைத்துக் கிடக்கும் அம்மா வின் நரைத்த தலையை அவருடைய வலக்கரம் நீவித் தருகிறது. தலை நடுவே ஓடித் தலைமயிரை இருபாதியாகப் பிரிக்கும் அந்தச் சுண்டு விரலளவு கோட்டில் நெற்றித்தொட்டு உச்சிவரை ஊர்கிறது அவரு டைய விரல். அவருடைய விரல் நடை தந்த கிளர்வு அம்மாவை எங்கோ இட்டுச் செல்கிறது.

என்றோ காலியாகிவிட்ட பெருங்காயச் செப்பாக அம்மாவின்

காலியாகிவிட்ட வாழ்வின் ஆதி நாளைய மணம் குப்பென்று மணத்தது. அவருடைய விரல் தந்த உணர்வில். கண்கள் மூடிக்கொள்கின்றன. மனம் பார்க்கத் தொடங்கிவிட்டால் கண்ணுக்கு வேலை ஏது?

கண்கள் மூடிக்கிடக்க, கை மாத்திரம் அவருடைய முழங்கையைச் சொறிந்துகொண்டே இருக்கும். அவரும் கையை வளைத்தும் திருப் பியும் கொள்வார். சொறிவு தரும் உணர்வுக் கேற்ப, அம்மாவின் தலை யில் ஓடும் விரல் நடை பிறழாமல்.

"எனக்கு முந்தி நீ போயிட்டீன்னா? என் பாடு நடுவீதி நாய்தான்!" தமக்கே சொல்லிக் கொள்கிறார். அம்மா நடந்ததை நினைக்கையில் அவர் நடக்கப் போவதை நினைக்கிறார்.

அம்மா திடுக்கிட்டு விழிக்கிறார்கள், அவர் குழறுவது நமக்குத் தான் புரியாது. அம்மாவுக்கு நன்றாகப் புரியும். அவருடைய ஒரு பக்கத்து உதடுகள் கோணல் மாணலாக நெளிந்தன. இதயத்தின் வேதனை. துடிப்பு, பிழவு அதில் எழுதி ஒட்டியிருக்கிறது.

துடிக்கும் அவருடைய உதட்டை அழுத்திமூடி, சொறிந்து விட்டுக் கொண்டிருந்த கையைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு அம்மா குமுறுகிறார்கள். அந்த நெஞ்சின் துடிப்பை, அந்தக் கை உணர்ந்திருக்கும். "இல்லை... இல்லை" என்பதுடன் நிறுத்திக் கொண்டு வெகு சிரமத்துடன் நெஞ்சுவரை வந்துவிட்ட வார்த்தைகளை விழுங்கி விட்டு வேறு புறம் முகத்தைத்திருப்பிக் கொள்ளுகிறார்கள். தம் கண்ணீரை மறைக்க அல்ல, அவர் கண்ணீரைக் காண சகியாமல்.

"உங்களை விட்டுவிட்டு நான் சாகமாட்டேன்" அப்படி என்றால் உங்களைக் கொன்றுவிட்டுத்தான் நான் சாவேன் என்பது போலத் தானே? எந்தத் தமிழ்ப் பெண்ணாவது தன் கணவனிடம் இதைக் கூறு வாளா? மஞ்சளுடன் போவதில்தானே மகிமை, மகிழ்வு எல்லாம்?

நெஞ்சுவரை வந்துவிட்ட வார்த்தைகள் உள்ளிறங்கையில்கூட அம்மாவுக்கு எத்தனை அருவருப்பு. குமட்டிய வாந்தியைத் துப்ப வழி யின்றி விழுங்குவதைப்போல் அம்மா அவருக்கு முன் இறப்பாள் என்று எண்ணுவதே பாவமாயிற்றே. அம்மா இறந்துவிட்டால் அவர் கதி?

"அம்மா, அம்மா" என்று நொடிக்கு நூறு தரம் அந்த உள்ளறையி லிருந்து குரல் வந்து கொண்டே இருக்குமே, அதற்கு யார் பதில் கூறுவது?

அம்மாவும் அலுக்காமல் சளைக்காமல் நடந்து கொண்டே இருப் பார்கள். இருக்க நடக்கக் கணக்குப் பார்த்தால் நடக்குமா? உள்ள றைக்கும் சமையலறைக்குமாக அம்மா போடும் நடைகளை நீட்டிப்

போட்டால் நாளுக்கு நாற்பது மைல் குறையாது... அத்தனை நடை!

இடுப்பு வேட்டி நழுவித் தொடையில் கிடக்கும், அதற்கு ஒரு தரம் அம்மா... எழுந்து சற்று உட்கார வேண்டும், அதற்கும் அம்மா... ஒன்றுக்குப் போக, அம்மா... ஊட்டிவிட, அம்மா... ஆக வேண்டிய அத்தனை மனிதத் தேவைகளுக்கும் அம்மா... அம்மா... அம்மா... தான். அந்த அம்மா இல்லாவிட்டால் இத்தனை தேவைகளையும் யார் கவனிப்பார்கள்? யாரால் கவனிக்க முடியும், மனம் சளைக்காமல்? அம்மா ஆணாய் நின்று சமாளிக்கக் குடும்ப பாரம் ஒன்றும் பெரிதல்ல என்றாலும் தூணாய் நின்று சுமக்க வேண்டி இருக்கிறதே அவரை.

- ● -

என்றுமே அவர் இப்படி இருந்ததில்லை. அன்றெல்லாம் ஆலமர மாகத்தான் நின்றார். ஆயிரம் பேருக்கு நிழல் கொடுத்துக்கொண்டு. மோதிரத்தில் பதித்த இரத்தினமாய் ஈழத்தின் மத்தியில் பதிந்துவிட்ட மலை நாட்டில் அவரும் மலையாக நின்றார். பட்டணத்தில் இருப்ப வர்களுக்குப் போலப் பச்சைக் கண்ணாடி தேவையில்லை, பச்சை யைப் பார்ப்பதற்கு. அண்ணாந்து பார்த்தால் பரந்த நீலம். குனிந்து பார்த்தால் பரந்த பச்சை.

மலையோடு மலை இணையும் பள்ளங்களில் நெகிழ விட்ட துகிலாய்ச் சலசலத்தோடும் அருவிகள். கடலிலே காற்று நீல அலை எழுப்புவது போலத் தேயிலை மலையிலே காற்று, பச்சை அலை எழுப்பும். பார்வைபட்ட இடமெல்லாம் பசுமை என்றால் செழிப்பு என்பது தானே பொருள்?

அவரும் செழிப்புடன்தான் இருந்தார். பச்சைப் பசேல் என்று. வெயில் மழை பாராமல் உழைத்தார். தனக்காக உழைப்பவர்களை தாழ்த்தியே வைப்பதுதான் தேயிலையில் குணமோ என்னவோ உயர்ந்து நின்ற அவரும் குனிந்தார்.

ஆலமரத்தின் அடியிலேயே வெயில். பால்வனமாய் இருந்த வாழ்வு பாலைவனமாயிற்று. கால் ஊன்ற முடியாத கனல். அதில், பெண் நிழலில் அவர் நிற்க வேண்டிய நிர்பந்தம்.

இந்த வியாதி தனக்கு எப்படி வந்தது என்பதே அவருக்குத் தெரி யாது. நோய் எமனைப்போலத் திடுதிப்பென்று வருவதில்லை! அறிகுறி களுடன்தான் வரும். நமக்கு ஏன் இந்த வியாதி வரப்போகிறது என்ற அசட்டையில் நாம் தாம் ஆரம்பத்திலேயே கவனியாமல் வளர்ந்து முற்றியபிறகு வருந்துகின்றோம். அவரும் அப்படித்தான். நாற்பது வயசு நாற்பத்திரண்டாகும் இரண்டு வருட இடைக்காலத்தில் என்ன

என்னவோ நடந்துவிட்டது. இரண்டாக இருந்தவை எல்லாம் அவர் வரையில் ஒன்றாகி, ஒன்றாக இருந்ததெல்லாம் பாதியாகி...

நினைக்கச் சுடும் நரக வேதனை! அனுபவிப்பவருக்கு எத்தனை எத்தனையோ வைத்திய நிபுணர்கள், எத்தனை எத்தனையோ புதுமுறை வைத்தியர்கள், மருந்து மாத்திரைகள் என்று நிமிடத்துக்கு நிமிடம், மணிக்கு மணி கண்டு பிடித்துக் கொண்டே இருந்தாலும் அத்தனை மருந்து மாயங்களாலும் அத்தனை நோய்களுமா தீர்ந்துவிடுகின்றன? ஐம்பது புது முறைகள் என்றால் நூறு புது வியாதிகள்!

முடமாகி... முடங்கி... மூலையில் விழுந்த பின்னும், பங்களாக் கொடுத்து, சம்பளம் கொடுத்து வைத்திருக்கத் தோட்டத்தாருக்கு என்ன பைத்தியமா? அனுப்பிவிட்டார்கள்.

அதன் பிறகு...

அவருடைய உடலில் பாதி அம்மாதான். செத்துப்போன பாதி உடலை இட்டு நிரப்பும் பொறுப்பு அம்மாவினுடையதாகி விட்டது.

மனைவி என்ற பதமே மறந்து, அம்மா என்ற சொல்லுக்கு ஆதரவு என்பதே பொருளாகிவிட்டது. நெய்யே தொன்னைக்கு ஆதரவாகி விட்ட ஓர் நிர்பாக்கிய நிலை.

மலைநாட்டின் குளிர்காற்றோ கீரிமலையின் கடற்காற்றோ அவருடைய பாரிச வாதத்திற்கு பலன் அளிக்கவில்லை. வைத்தியர்கள் இரு கையை விரித்தது போல இயற்கையும் தன் பெருங்கையை விரித்து விட்டது. விளைவு? ஒருவரே மற்றவருக்கு அனைத்துமாகி அன்றாடம் நாம் மேலே கண்ட அதே காட்சிதான்.

பால் இருந்த பாத்திரத்திலே இன்று பாஷாணம் இருக்கிறது. பாத்திரம் ஒன்றுதான் என்றாலும் பாஷாணம் தனித்துத்தான் இருக்க வேண்டும் என்பது பெரியவருடைய கட்சி. ஆகவே மக்களாலும் அவரைத் தம்முடன் இருத்திக் கொள்ள முடியவில்லை. இந்த வண்டியையும் நூல் கட்டி இழுப்பவர்கள் அவர்கள் தாம். 'எலெக்ட்ரிக் பில்'லிலிருந்து எல்லாமே நாளை என்று இல்லாமல் நடக்கிறது. அலுங்காமல் நலுங்காமல்.

தந்தையால் அம்மா படும் அவஸ்தை மக்களின் மனத்தை வெகுவாகப் பாதித்தது. ஆகவே அடிக்கடி "அந்தக் கண்ராவியை பார்க்க இயலாது" என்று வருவதில்லை. அவர் இறந்துவிட்டால் என்ன என்று கூடச் சிற்சில வேளை எண்ணுவார்கள். ஏன் எண்ண மாட்டார்கள்?

அவரைக் கட்டிக் கொண்டு அம்மா அழுவது. எந்த நேரமும் அறைக் குள்ளேயே பூட்டிக் கிடப்பது. எல்லாம் "பேன் கட்டிக் கல் இழுப்பது"

போன்ற பேதமை என்பது அவர்களுடைய கருத்து. அவர்களுடையது மட்டுமல்ல! பொதுவாக அண்டை அயலர்வாசிகள் அத்தனை பேரு டைய கருத்தும் அதேதான்.

அன்று, மூத்தவனுடைய கல்யாணத்தின் போது கல்யாணம் பெண் வீட்டில் நடந்தது. அவரைக் காரில் ஏற்றிக் கொண்டு போய் கல்யாண வீட்டில் போட அம்மா பட்ட பாடு...

எத்தனைபேர் நினைத்திருப்பார்கள்... சொல்லாவிட்டாலும், "ஏன் இந்த மனிதன் செத்துத் தொலையக் கூடாது?" என்று!

தானும் வாழாமல் பிறரையும் வருத்திக் கொண்டு இருப்பதை விடச் சாவது நல்லதுதான். ஆனால் 'சாவே வா' என்றதும் வந்து விடுமா என்ன?

தூக்குவது, எடுப்பது, பிடிப்பது, காரிலிருந்து இறக்குவது எல்லாம் சுற்றந்தான் என்றாலும் துடிதுடிக்கும் இதயம் அம்மாவுடையதுதானே "எங்கே மோதிவிடுவார்களோ? எங்கே போட்டுவிடுவார்களோ?" என்று கவலை.

உடையவனுக்குத்தானே உடைமை பெரிது? ஊரானுக்கு என்ன? "கை வலித்தது விட்டு விட்டேன்" என்பான்.

"சடங்குகளில் கலந்து கொள்ளும் உடல் நிலையா அவருடையது? சொன்னால் கேட்கிறார்களா?"

அவரைச் சாய விட்டிருந்த சோபாவினருகில் அமர்ந்திருந்ததுதான் அம்மாவின் வேலை. அத்துடன் அங்கே எழுந்த மொழிப் பிரச்சி னையைத் தீர்த்து வைப்பது. அவர் பேசுவது அம்மாவுக்கு மட்டுந் தானே புரியும்?

மகனையும் மருமகளையும் ஆசீர்வதிக்கையில் அவர் பட்ட பாடு... எடுபடாத அவருடைய இடக்கை அவருள்ளத்தில் எரி மூட்டித்தகித்தது.

சுற்றி நின்ற இரண்டொருவர் கையால் வாயைப் பொத்திக் கொண் டார்கள். எங்கே பலமாகச் சிரித்துவிடுவோமோ என்ற பயம். நேரடி யாகத் தாமே சம்பந்தப்படாதவரையில் மற்றவர்களுடைய துயரம் நகைச்சுவை தானே?

அம்மா அழவில்லை. துயரத்தைத் தேக்கி வைத்தே பழகிவிட்ட அனுபவம் துணை நின்றது. வாழப்போகும் இரண்டு இளசுகளை வாழ்த்தும் நேரம் அழுது வைக்கலாமா, அபசகுணம் மாதிரி?

"அந்த மனிதன் இப்படிக் கிடப்பதிலும் இறந்து விடுவது எத்தனை நல்லது!"

"ஆமாம் அந்த அம்மாதான் எத்தனை பாடு படுறா? வெளியே

தெருவில் போறதுக்குக்கூட அவுங்கதானாமே கூட்டிக்கிட்டு போவணும்? சேசே..."

திருமண வீட்டு ஆர்ப்பாட்டம் அடங்கி, அவரும் கண்ணயர்ந்த பின்பு ஒரு நிமிஷம் வெளியே நகர்ந்த அம்மாவின் காதில் பழுத்த ஈயக்கோலைப் பாய்ச்சியது, யாரோ இருவருடைய பேச்சு...

இவர்கள் மட்டுந்தானா, எத்தனையோ பேர் எத்தனையோ விதத்தில் கூறிய அதேதான். ஒருவராவது அம்மாவின் முகம் பார்த்துக் கூறியதில்லை. முகத்துக்கு முகம் கூறப்படாதவை நம் செவிக்கு எட்டுவதில்லையா என்ன?

அப்போதெல்லாம் அம்மாவின் உடல் ஒரு கணம் சில்லிட்டாலும் உடனே சுதாகரித்துக் கொள்ளும். அவர்கள் சொல்லுவதிலும் உண்மை இருக்கிறது என்பது நீர்பட்ட கண்ணாடி காட்டும் மங்கல் உருவமாகத் தெரிந்தாலும், உண்மைதான் என்று ஏற்றுக் கொள்ளும் பலம் மனதிற்கு இல்லை.

"இப்படி நடந்துவிட்டால் எப்படித் தாங்குவேன்?" என்னும் விஷயங்களும் நடக்காமல் இருப்பதில்லை! அவை நடந்துவிட்ட பிறகு தாங்கிக் கொள்ளாமல் இருப்பதும் இல்லை. இருப்பினும் "அதைத் தாங்கிக் கொள்ளும் பலம் என் மனதிற்கு இல்லை" என்ற ஒரு பலவீனம் எல்லா மனிதர்களிடமுமே உண்டு. அம்மாவுக்கும் அதே பலவீனந்தான்.

அண்டை அயலார் பார்வைக்கும் அம்மாவின் பார்வைக்கும் நிறைய வேறுபாடு உண்டு. அம்மாவின் கஷ்டம், அவரால் அம்மா படும் வேதனை, அவஸ்த்தை இத்தியாதிகளைக் கண்டே அவர்கள் அங்கலாய்த்தார்கள்! "இத்தனை பெரிய உலகை இரண்டே அறையுள் சுருக்கிக் கொண்டாளே பாவி "என்று.

அம்மாவுக்குத் தம் அவஸ்தை ஒரு பொருட்டே அல்ல. அது அவஸ்தை என்றுகூட அவர்கள் கருதியல்லை. நோயின் நோவில் அவர் துடிக்கையில், அதைப் பார்த்துக் கொண்டு, வேதனையைப் பகிர்ந்துக் கொள்ள முடியாத பாவியாக நிற்கிறேனே என்பதுதான் அம்மாவின் துடிப்பு.

இல்லாதவனுடைய கவலை வேறு. இருந்து பின் இல்லையானவனுடைய கவலை, முதலிலும் பார்க்கக் மூர்க்கமானது.

கீரைக்காரனின் குரல் கிண்டிவிட்ட தீயின் ஜ்வாலை அம்மாவின் மனதை எங்கெங்கோ விரட்டிக் கால்களைக் உள்ளறைக்கு விரட்டியது.

அவர் போய்விட்டார்.

ஆம் அம்மாவின் எத்தனையோ நாள் சுமையை ஒரே நாளில் ஊர் சுமந்துகொண்டு போய்விட்டது... கழுவி குளிப்பாட்டி!

தெருவே, ஏன், ஊரே திரண்டிருந்தது என்பதற்கு, அந்தக் கைய டக்க இல்லத்தில் நேற்று கழுவி விடப்பட்டு இன்று காய்ந்து கிடக்கும் 'சிமின்ட' தரை காட்டும் 'நசநச' வென்ற அடிச்சுவடுகளே ஓர் எடுத் துக் காட்டு! சிறிதும் பெரிதும் கோணலும் மாணலுமாக.

அத்தனை கூட்டத்திலும், பிதுங்கிய திரட்சியிலும் அவர் மறைவு குறித்து மனம் கசிந்த ஜீவன் ஒன்று. ஆம், அம்மா மட்டுந்தான். மற்ற வர்களுக்கு அது மரண வீடாகப் படவே இல்லை. ஓடுவதும் ஓடிவ ருவதும், பூவைக் கொண்டா, பெட்டியை நகர்த்து என்னும் ஆர்ப் பார்ட்டம் அனைத்திலும் இழையோடியது. மணவீட்டு மணமே ஒழிய, மரண வீட்டு மயக்கமல்ல... சடங்கு வேறுபாட்டைத் தவிர.

சிரித்த முகத்துடன் தூங்குபவரைப் போலத்தான் அவர் கிடந்தார். பெட்டி நிறைந்த பூவில் அவர் பிணமாகத் தோற்றவில்லை. சாகப் போகிறோம் என்று தெரிந்தவுடன் சிரித்திருக்கிறார். உள்ளம் வெடிக் கும் புன்னகை. அதே அழகுடன் கிடக்கிறார்.

சாவுக்கு அஞ்சி, அரண்டு உயிர் விட்டவர்கள் தான். பிணமான பின்பு, கோரமாகக் கிடப்பார்கள் போலும், கண்டவர்கள் கதிகலங் கும் வண்ணம்

அத்தனை பேர் மத்தியில் அழும் திராணி அம்மாவுக்கு இல்லை. பல்லி விழுங்கிய ஈ பல்லியின் அடிவயிற்றில் தெரிவது போல், உள்ளே போட்டு அமுக்கி வைத்திருந்த உள்ளக் கொதிப்பு, இதயக் குமுறல், அத்தனையும் உலர்ந்துவிட்ட உடலில் தெரிந்தன.

"அம்மாவுக்கு இனி விடுதலை."

"அவ்வளவு அவஸ்தைகளும் மடிந்து விட்டன."

"இனி வெளியே போகலாம், வரலாம்."

மரண வீட்டில் அடிப்பட்ட அனுதாபக் குரல்கள். அம்மாவால் காதைப் பொத்திக் கொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

இத்தனை நாளாக இறைவனுக்கும் மேலாக இயமனைத்தான் வேண்டிக்கொண்டார்கள்... "அவருக்கு முன்பு என்னிடம் வந்து விடாதே" என்று. இனி என்ன இருக்கிறது?

"என்னைத் தனியாக விட்டுப் போய் விட்டீர்களே!" பிரிந்து கிடக் கும் தலையுடன், கட்டிலில் மோதியழும் அம்மாவைப் பார்த்தால்!

அவர் இல்லாத அம்மாவா, அம்மா இல்லாத அவரா அனாதை என்பது புரியும்.

அவர் உயிருடன் இருந்துகொண்டு அம்மாவை அழ வைக்கிறார் என்று சொன்ன ஊரும் மக்களும் அம்மாவின் இன்றைய நிலையைப் பார்த்தால்?

அவர் இல்லாத உலகமே அம்மாவுக்குக் காலியாகத் தெரிகிறது: அவர் கிடந்த கட்டிலைப் போல. தேவன் இல்லாத கோயிலில் வலம் வர அம்மா விரும்பவில்லை.

"தருமராஜா, எத்தனையோ பேர் உன்னைக் கொடியவன் என்கிறார்கள். என் வரை நீ உத்தமன். என் பிரார்த்தனைப்படியே எனக்கு முன் அவரைக் கொண்டுபோய் விட்டாய். என்னையும்... என்னையும்..." அம்மாவின் கண்கள் மூடிக்கொண்டன.

நொண்டியின் கையில் இருக்கும் வரையில் தானே ஊன்று கோலுக்கு மதிப்பு?

நொண்டியே போய்விட்ட பிறகு?

- ● -

கலைமகள் - 1963



# பழம் விழுந்தது

## 2

வீரன் விக்கித்து நின்றான்.

தானும் அப்பவே கிழவிக்குப் பெயர் கொடுத்திருக்க வேண்டும். சரி... சரி... இனி யோசித்துப் பயனில்லை.

தொண்டைக்கும் நெஞ்சுக்குமாக இழுத்துக் கொண்டு கிடக்கும் அந்தக் கிழவியின் உயிரை இன்னும் இரண்டு நாள். இரண்டே இரண்டு நாள் நிறுத்தி வைத்திருக்க அவனால் முடியுமென்றால்...

அவனால் அது முடியாது!

கிழவியின் உயிரைத் தன்னால் இழுத்துப் பிடித்து நிறுத்தி வைக்க முடியாது என்பதையும் அவன் உணராமலில்லை.

மனிதனின் பலவீனத்தை சக்தியின்மையை சந்தர்ப்பங்கள் தான் எத்தனை நாசூக்காக அவனுக்கு உணர்த்துகின்றன. அவ்வப்போது சமயம் வாய்க்கையில் எல்லாம்...

"இந்தாம்மா நிலா, தண்ணிச் சுட்டா அப்பாயிக்கு ஒரு கிளாஸ் ஓர்லிக்ஸ் அடித்துக்கொடு. நீயும் ஒரு கரண்டி அள்ளிக் கொட்டிக் கிறாதே..! இன்னும் நாலைஞ்சு நாளைக்கு வேணும்."

தன்னுடைய ஒன்பது வயது சிறுமியிடம் கூறினான்.

இன்னொரு போத்தல் ஓர்லிக்ஸ் வாங்கப் பணம் கிடைக்க இன்னும் நாலைந்து நாளாகுமா? அல்லது அவளுடைய ஆயுசே இன்னும் நாலைந்து நாள் என்பதுதான் அவனுடைய கணிப்பா?

"டேய் சீராளை..! இங்கே வா, அந்தப் போத்தலைக் குட்டிச் சாக் கோடு கொண்டுபோய், தண்ணி கலக்காமல் நல்லதா ஒன்று நான் கேட்டேன்னு வாங்கிட்டு வா. அப்பாயிக்கு கொடுப்போம்! எனக் குன்னு கேளு, தெரியுதா? ஓடு...ஓடு...."

தாய் மேல் தனக்குள்ள பாசத்தை காட்டிக் கொள்ளும் இறுதிக் கட்டம்.

பாளை சீவும் பண்டா வீட்டை நோக்கி நடந்தான் மகன்...

ஆவி பறக்கும் கிண்ணத்துடன் அப்பாயியை நோக்கி நடந்தாள் மகள்...

ஆபீஸை நோக்கி நடந்தான் வீரன்...

கிழவியின் கருவிழிகள் கண்களின் ஒரு மூலைக்கும் மறுமூலைக் குமாக ஆட்டம் காட்டிக் கொண்டிருந்தன. கிழவிக்குத் தெரியும் மகனின் பற்று, பாசம், எல்லாம்...

அவனுடைய பதைப்பு, துடிப்பு, வருத்தம் யாவற்றிற்கும் அடித் தளம் எது என்பது அவள் அறியாததல்ல!

உதட்டைப் பிளந்து கரண்டிக் குழியால் உள்ளே ஊற்றப்படுவது கூட உள்ளிறங்காமல் கடைவாய் வழியாக வடிந்துவிடும் இந்த இறுதி வேளையில் 'ஓர்லிக்ஸ்' என்றும்... 'ஓவல்'என்றும்... பிஸ்கோத் தென்றும்... ஆரெஞ்சென்றும்... அவளைச் சுற்றி வட்டமாக மாலை கோர்த்து கிடக்கின்றனவே..... பிரயோஜனம்?"

செத்த பின் 'சீத்தை' போடும் பித்துக்குளித்தனம் தானே! அத்த னையும் தின்று தீர்க்க கிழவிக்கும் ஆசைதான் என்றாலும் முடிய வில்லையே! ஊறும் உமிழ் நீரைக்கூட உள் விழுங்கத் திராணி யில்லை. வாயால் தின்று வயிற்றை நிரப்ப இயலாவிட்டாலும் கண் களால் தின்று மனதை நிரப்பிக் கொண்டாள். இப்போதாவது கண்படும் இடத்தில் அவைகளை வைத்திருக்கிறானே மகன்!

சாகப் போகும் சந்தோஷத்தில் கிழவி சிரித்துக் கொண்டாள். உதடு பிரியாவிட்டாலும் உள்மனதில் ஒரு விரிசல்! இரவின் கருமை யிலே நெளிந்தோடும் மின்னற் கொடிபோல.

கூழாங்கல் குவியலாய் பட்டர் பிஸ்கோத்துக்கள், ஓட்டுத் துண்டங்களாய் 'றோஸ்டு ரஸ்க்' இன்னும் கிழவி பார்த்தே கேட்டே யிராத என்னென்னவெல்லாமோ!

அத்தனை மேலும் ஒரு கணம் பார்வையை மேயவிட்ட கிழவி கண்களை இறுக மூடிக்கொள்கின்றாள். அன்றெல்லாம் தன்னால் தின்று தீர்க்க முடிந்த அந்தக் காலத்தில் ஒரு அரை வயிற்றுக் கஞ்சி யாவது ஊற்றினார்களா?

கணவன் கண்ணை மூடிய காலம் தொட்டு இன்றுவரை அதே இடம்தான் அவளுக்கு. அப்பனுக்குச் செய்ய வேண்டியது எல்லாம் செய்து முடித்து தாயையும் தன்னுடன் கூட்டி வந்து விட்டான் வீரன். பத்து மாதம் சுமந்து பெற்ற மகன்தான் என்றாலும் அவனுக்கென் றொரு மனைவி, ஆறேழு பிள்ளைகள் என்று ஆகிவிட்ட பிறகு அவனிமிருந்து பெற்றவள் பெரிதாக எதை எதிர்பார்க்க முடியும்?

ஏதோ காமா சோமா வென்று காலம் தள்ளி... நெஞ்சில் விழுந்த அடி படிப்படியாக மாற, மீண்டும் தோட்டத்தில் ஒருத்தியாகி காலை யில் மலைக்கும், மாலையில் லயத்திற்கும் என்று சுற்றி வந்தாள் செக்கில் கட்டிய மாடாய்.

வேலைக்குப் போகாமல் வீட்டிலிருக்க வேண்டும் என்ற எண்ணம் கிழவிக்கு எப்போதுமே எழுந்ததில்லை. அவளைப் பொறுத்தவரை வீடு, மலை, ஓய்வு எல்லாம் ஒன்றுதான். அவளாலேயே நடக்க முடி யாத பட்சத்தில் என்றாவது ஒருநாள் இருந்து விட்டாளென்றால் அன்றைக்கு வீட்டில் அமளிதான்!

"கிழவி, இன்னைக்கு வேலைக்குப் போகலியா?" என்பதில் தொடங்கி எனக்கிருப்பது போதாதென்று இதுவேறு வந்து கழுத்தை அறுக்கிறது சனியன் என்று தொடர்ந்து கிழடை கொளுத்திய அன்று தான் தனக்கு நிம்மதி என்று முடிப்பான் வீரன்!

அத்தனையும் தனக்கே உரித்தான தடிக்குரலில், தனக்கே உரித் தான தனித்துவ பாஷையில்.

அப்போதெல்லாம் கிழவி "ஏம்பா அப்படிச் சொல்றே இந்த மாசத்திலேயே இன்னைக்கு மட்டும் தானே வீட்டுலே நின்னேன்" என்று நினைத்துக் கொள்வாள். ஆனால் சொல்ல மாட்டாள்.

நியாயமானவைதான் என்றாலும் நினைப்பதை எல்லாம் வாய் விட்டுச் சொல்லிவிட முடியுமா என்ன? அதுவும் இளைத்தவர்கள்... வலுத்தவர்களிடம்!

கிழவி மௌனமாக கண்ணீர் வடிப்பாள். அடுத்த நாள் மழையோ... பனியோ நடந்து விடுவாள், மலையை நோக்கி தலையில் கூடையுடன்.

மகன் வீட்டு அடுப்பில் விறகு எரிகிறதா இல்லையா என்பது கூடக் கிழவிக்குத் தெரியாது. அவள் ஆட்சிக்குட்பட்டதெல்லாம் இஸ்தோப்பின் இடதுமூலை இருட்டு. அவளது சாம்ராஜ்யமே அது

தான். அதட்டுவதற்கு ஒரு நாய். அணைத்துக் கொள்ளவும் அதுதான்!

சுருட்டிக் கொள்ள அந்த இருண்ட மூலை... விரித்துக் கொள்ள ஒரு சாக்கு... போர்த்திக் கொள்ள ஒரு சீலை.... தலைக்கு அணைவு மூலையில் புதைக்கப்பட்டுள்ள திருகை...

இரவில் குளிர்ந்துவிட்ட கிழவியின் உடலுக்குச் சூடேற்றுவது 'நச்நச்' என்று அவள் மெல்லும் வெற்றிலை. மனதிற்குக்கூட அதுதான். காலையில் வீடு கூட்டும்போது அந்தப் பெண் நிலா வெளியே கொண்டு போய் போட்ட கிழவியின் எச்சில் சுண்டை எடுத்து வர ஒரு ஆயிரம் சத்தம் போட்டுப் பார்த்துவிட்டு, "நாமலே போய் எடுத் தாந் துறுவோம்" என்று எழுந்து தட்டுத் தடுமாறி நடந்து சென்று கோழிக் கூடையில் மோத, அது 'கறே புறே' என்று கத்த, மகன் உள்ளேயிருந்து கத்துவான்.

"இந்தாம்மா நெலா, அந்த எச்சில் கொத்தை போய் எடுத்துக் கொடு. அந்தச் சனியன் விழுந்து சாகுது, வாயைத் திறந்து கேட்டா என்னவாம்..? அவ்வளவு ராங்கி" என்று.

கூடக் கொழுந்து எடுக்கும் வலுவோ, ஓடி ஆடி வேலை செய்யும் உடலுரமோ கிழவியிடம் கிடையாது. எதிர்பார்க்கவும் முடியாது. அந்த வயதில் அவள் வேலை செய்வதே அதிசயம். சம்பளம் முப்பதோ, நாற்பதோ எடுத்து வந்து மகனிடம் கொடுத்து விடுவாள் சதம் குறை யாமல். வருசத்திற்கு ஒரு சேலை என்றாலும் வாங்கிக் கொடுப்பது அவன். அரை வயிற்றுக்கஞ்சி என்றாலும் ஆக்கிக் கொடுப்பது அவன் மனைவி. சுருட்டிக்கொள்வது இஸ்தோப்பு மூலை என்றாலும் இடம் கொடுப்பது அவன் வீடு என்ற நன்றியுணர்வுடன்.

துரை கொடுக்கும் சில்லறையில் சம்பளத்து வாசல் வியாபாரி யிடம் ஒரு இருபத்தைந்து சதத்திற்கு பிஸ்கோத்து வாங்குவாள். சம்பளத்து வாசலுக்கும் லயத்திற்கும் உள்ள இடைத்தூரத்தில் அவள் கடித்துக் குதப்பிய ஒன்று போக மீதி இருபத்துநாலையும் கடதாசியில் சுற்றிய சடம்பு அவிழாமல் அடிமடியிலிருந்து எடுத்துப் பேத்தியிடம் கொடுத்து விட்டு, மீதி சில்லறைகளை நோட்டுகளுடன் சுற்றி மகனிடம் நீட்டி விடுவாள்.

கிழவியிடம் சம்பளத்தைப் பெறும் ஒவ்வொரு மாதமும் "இந்த மாதம் கிழவிக்கு ஒரு சீலை வாங்கிக் கொடுத்துவிட வேண்டும்" என்று தான் வீரன் நினைப்பான்.

ஆனால் குடும்பம் என்பதே ஒரு பெரிய கடல்... கூலிக்காரனின் குடும்பமும் கடல் தான்! அதில் எத்தனையோ அலைகள்! ஒன்றில்லா விட்டால் ஒன்று வந்து கொண்டே இருக்கும்.

"பாவம் கிழவி! சரி அடுத்த மாசம் பார்ப்போம்" என்று சமா தானம் அடைந்து அதுவும் தொடர்ந்து கொண்டே போய் தீபாவ ளியோ, பொங்கலோ, பல்லைக் கடித்துக் கொண்டு, கிழவிக்கு ஒரு சீலை வாங்கிக் கொடுத்து விடுவான். அதுவும் "இது பெருநாள் மாத மாயிற்றே" என்ற கட்டாயத்தில் "போன மாதமே வாங்கியிருக் கலாம்" என்ற முனகலுடன்!

சம்பளம் போட்ட மறுநாள் துரையில்லாத நேரம் பார்த்து மெதுவாக ஆபீசை அடைவான் வீரன். தலையைச் சொறிந்த வண்ணம் "எங்க கிழவிக்கு எவ்வளவுங்க இருந்திச்சு" என்று கேட்டுக் கொள்வான். ஒன்றோ, அரையோ கிழவி பதுக்கிக் கொண்டாளா என்று பார்க் கத்தான்! கிழவி சரியாகத்தான் கொடுத்திருப்பாள். றொட்டி வாங் கியது போக!

அந்தி சாயுமுன்னமே அடிவானம் இருண்டு விட்டது. கொழுந்து நிறுத்து முடிந்து அமைதியான பெறட்டுக்களத்தின் அகன்ற பரப்பில், அங்கொன்று இங்கொன்றாக இறைந்து கிடக்கும் கொழுந்திலைத் துகல்கள்போல நீலம் பூத்துக் கிடந்த வானத்தில் நட்சத்திரங்கள் ஒன்றிரண்டு மின்னின.

மலைநாட்டிற்கே உரித்தான குளிரில், பல்லோடு பல்லடிபடும் அந்த அந்திநேரப் பனியில் குளிரோ, நடுக்கமோ இல்லாது அதோ போகிறாள் கிழவி... ஆற்று நீரில் குளித்து விட்டு!

மெதுவாக ஆற்றுப்படி இறங்கி, சில்லிட்டோடும் அச்சிற்றோடை யில் குளித்து முடித்து, ஈரசீலையைச் சுற்றிக் கொண்டு எண்ணி அடி வைத்து ஏறி வர அவளுக்கு இத்தனை நேரம் பிடித்திருக்கிறது. பச்சைத் தண்ணீர் குளிரும் என்றால், அவளுக்கு யார் சுடு தண்ணீர் வைத்துக் கொடுக்கப் போகிறார்கள்?

நனைத்து விடப்பட்ட அடைக்கோழியாய் உள்ளெலும்பு வெளியே தெரிய, முழங்காலுடன் முழங்கால் மோத, முழுப்பாதமும் தரையில் பட அழுத்தி ஊன்றி அவள் நடக்கும் விதத்தைப் பார்த்தால், இப் போதோ இன்னும் கொஞ்ச நேரத்திலேயோ என்றுதான் படும். ஆனால் அடுத்த நாள் காலையில் மலையில் நிற்பாள்!

அன்று கழுத்திருந்த இடத்தில் இன்று தலையிருக்கிறது. வளர்ச்சிக் குப்பின் தேய்வுதானே!

கிழவிக்கு சின்னதுரை வேலையை நிறுத்தி விட்டார். காரணம், பின்னிக்கிடக்கும் தேயிலையில் விரைவாக நீந்திவர கிழவியால் முடியாது. மலைகளில் ஏறவோ, பள்ளங்களில் இறங்கவோ முடியாது. ஊடே ஊடேயுள்ள கான்களைத் தாண்ட முடியாது. வேலை செய்யும் இடத்தில் எங்கேயாவது விழுந்து கிழவி செத்து தொலைந்து விட்டால்..!

பெரியதுரை முன் கைக்கட்டி நிற்க வேண்டும். வேலை செய்ய முடியாத கிழவிக்கு சம்பளம் அழுவது போதாதென்று வீண் தொல்லைகளை ஏன் விலை கொடுத்து வாங்க வேண்டும்? அப்படி ஏதாவது நடந்து விட்டால் பெரியவரிடம் இவர் தப்பிக்க முடியுமா? ஆகவே கிழவிக்கு வேலை கொடுக்க மறுத்து விட்டார்.

அடுத்த நாள் வீரன் ஆபீசை இரண்டாக மட்டுமல்ல மூன்றாகவும் ஆக்கிவிட்டான்

"கிழவிக்கு யார் சோறு போடுகிறது?"

அவன் துரையிடம் கேட்ட முதல் கேள்வி. "இப்ப கிழவிக்கு வேலை செய்ய முடியாதுதான். அதுக்காக வேலை இல்லேன்னுடுறதா? இத்தினி வருசமா எந்தத் தோட்டத்துக்காகப் பாடுபட்டிச்சி... இந்த தோட்டத்துக்கு ஒழைச்ச கிழவி தானே... நான் என்ன கண்டாக்கா? இல்லை கணக்குப்பிள்ளையா? வீட்டுல வைச்சு சோறு கொடுக்க... அதெல்லாம் சரிவராது துரைகளே! வேலை கொடுங்க இல்லேன்னா சுட்டுத் தள்ளிப் புடுங்க..!

மாதுளை மொட்டாய்ச் சிவந்து கிடக்கும் அவன் கண்களையும், ஆளையும் பார்க்கையில்... "இவனிடம் பேசிப் பயனில்லை" என்று ணர்ந்த துரை "நீ போ" என்று அவனை அனுப்பிவிட்டு கண்டக்டரிடம் கூறினார், மேடு பள்ளமில்லாத ரோட்டோர மலைகளாகப் பார்த்துக் கிழவிக்குப் போடும்படி!

இதுபோன்ற சின்ன விசயங்களையும் பெரியவரிடம் அனுப்பி, தன்னுடைய நிர்வாகத் திறமையை அவர் குறைத்து மதிப்பிட சிறியவர் விரும்பவில்லை. தனது முன்னேற்றத்தை அது பாதிக்குமென்ற நோக்கில் தாமே விஷயங்களைச் சமாளிக்கும் எண்ணமே தவிர, கிழவி மேலுள்ள பச்சாத்தாபமோ பரிவோ அல்ல அது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு பென்ஷன், மாதத்திற்கு பதினாறு

அல்லது இருபது ரூபாய் என்பதும், அரிசிக்குப் போக மிகுதி எவ்வளவு இருக்கும் என்பதும் வீரனுக்குத் தெரியும். ஆகவேதான் "சுட்டுத் தள்ளுங்கள்" என்றவன், பென்ஷன் கொடுங்கள் என்று கேட்கவில்லை. பலவந்தமாக ஒரு தொழிலாளிக்கு பென்ஷன் கொடுக்கத் தோட் டத்துக்கு முடியாது.

தனி மலை கொடுத்து கிழவி வேலை செய்யத் தொடங்கிய காலகட்டத்தில்தான் ஒரு புது நடைமுறை வந்தது. இனிமேல் யாருக்கும் மாதப் பென்ஷன் கிடையாது. 'ஓய்வுச் சம்பளம்' என்று மொத்தமாக அறு நூறோ... எழுநூறோ... கொடுக்கப்படும். வேலை செய்துள்ள விகிதப்படி என்பதுதான் அப்புதுச் சட்டம்.

ஓய்வுக்குப் பெயர் கொடுத்தவர்கள் யாரும் வேலைக்குப் போக இயலாது என்றவுடன் வீரன் தயங்கினான். இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்று.

பெயர் கொடுத்த விபரம் எல்லாம் கம்பெனிக்குப் போய், "சரி" என்று வர குறைந்தது நாலு மாதமாகலாம். பெயர் கொடுத்து விட்டு வேலையில்லாமல் சம்பளம் இல்லாது திரிந்தவர்களிடம் வீரன் சொன்னான். "பாத்தியா ஏமாத்திப்புட்டானுக, நம்மகிட்ட நடக்காது" என்று பெருமையாக.

ஆனால் பெயர் கொடுத்த நாலாவது மாதத்திலேயே இஸ்டோர் லயத்து இருசனுக்கு, எண்ணூறு ரூபாய் கிடைத்தவுடன் வீரன் விக்கித்துத்தான் நின்று விட்டான்.

கவ்வாத்து மலையாய்க் காய்ந்து கிடந்த இருசனுடைய நடையிலே கூட ஒரு மிடுக்கு.

எண்ணூறு ரூபாய் ஆயிரத்துக்குக் கொஞ்சந்தான் குறைவு. இரு கைகள் கொள்ளாத நோட்டுக் கட்டுகள்.

"சம்பளம் போடையில் துரை மேசையில் அடுக்கி வைத்திருப்பாரே அந்த மாதிரி" என்று எண்ணிய வீரன்... "சரி சரி, இனி யோசித்து என்ன பயன்" என்று அன்றே கிழவியை இழுத்துக் கொண்டு ஓடினான் ஆபீசுக்கு.

"எந்த வருடம் பேர் பதிந்தாய்?"

"எத்தனை தடவை ஊருக்குப் போயிருக்கிறாய்?"

"வேறு எந்தெந்தத் தோட்டத்தில் வேலை செய்தாய்?"

"தோட்டச் சம்பளத்தைத் தவிர வேறு வருமானம் உண்டா?" என்பது போன்ற கேள்விகளுக்குப் பதில் கூறிவிட்டு, "எப்பங்க பென்ஷன் கிடைக்கும்?" என்று கேட்டு வைத்தான்.

"பென்ஷன் இல்லே வீரா, ஓய்வு உபகாரச் சம்பளம்!" திருத்தினார் துரை.

எந்த மண்ணோ! காசு எப்ப கிடைக்கும் என்பதுதான் அவனுடைய அவா.

"போன தடவையே எழுதியிருந்தீன்னா இந்த மாசம் கெடைக்கும் இப்ப இன்னும் ஆறு மாசமாகும்" என்று ஐயா கூறியதும் 'அதுவரை' என்ற கேள்வியே பேயாய் பெரிதாய் எழுந்து நின்றது. ஆறு மாதமென்றாலும் சுமை சுமைதானே.

"கிழவி பேருக்கு ரெண்டேக்கர் கொந்தரப்புக் கொடுங்க" என்றான்.

"ஏலாது! ஓய்வு பெறப் பேரெழுதிய யாருக்கும் செக்றோலில் பேர் இருக்கக் கூடாது!" என்றார் அய்யா.

"சரி!, என் பேருக்குக் கொடுங்க" என்று அப்போதே கிழவிக்கு ஒரு வழி பார்த்துக் கொண்டுதான் வந்தான்.

அடுத்த நாளிலிருந்து வெய்யிலோ மழையோ கிழவி புல் வெட்ட வேண்டியது. சம்பளம் வீரன் பெயரில்.

வீரன் ஆபீசுக்கு போய் "இன்னும் வரல்லையா" என்று ஆர்ப்பாட்டம் செய்யாத நாள் அந்த ஞாயிறு ஒன்றுதான்.

அப்பேர்ப்பட்ட தன் மகன் இன்று துடிக்கிறான்? துவள்கிறான் என்றால்..! "ஓர்லிக்சா... ஓவலா..." என்கின்றான் என்றால்..! கிழவிக்குத் தெரியாதா? அகிலத்தையே ஆட்டி வைக்கும் மூவாசைகளுள் கடைசி ஆசைதான் தன் மகனையும் துடிக்க வைக்கிறதென்று. மகன் இப்போதும் எங்கே போகின்றான் என்பது கிழவிக்குத் தெரியும், ஆபீசுக்குத்தான்!

கட்டை விரல் நுனியில் ஏதோ சில்லிட்டது. காலை ஒருமுறை மடக்கி நீட்டினாள். நீட்டிய காலை மறுபடியும் மடக்கினாள். நினைவில் கால் மடங்கியதேயொழிய செயல்படவில்லை "ஒரு நிகாத் தெரியாத நிபாத நிலை" பரக்க பரக்க ஒரு தடவை விழித்துப் பார்த்தாள். சுற்றியுள்ள எதுவுமே பார்வையில் பிடிபடாமல் நழுவிச் சென்று கொண்டிருந்தன. மேலிமையில் நூல் சேர்த்து கீழிமையுடன்

இழுத்து ஒட்ட வைப்பது போலிருந்தது. கிழவி கண்களை மூடிக் கொண்டாள்.

"எல்லாம் பாசாகி விட்டது. இன்னும் இரண்டு நாளில் பணம் கிழவியின் கைக்கு வந்து விடும்"

நேற்றுக் கிளாக்கரய்யா சொன்ன செய்தியின் இனிமையை நுகர்ந் தவாறு ஆபீசை நோக்கி விரைவாக நடைபோட்டான் வீரன். நிலைமை எப்படியிருக்கிறது என்பதை மேலும் தெளிவாக அறிந்து கொள்ளும் நோக்கம் தான்.

இந்தப் பண விஷயமே இப்படித்தான் நம் கையில் வந்து விழும் வரை எதையுமே நம்ப இயலாது.

தலையிலே கிடந்த கொழுந்து நிறைந்த கூடையைத் தரையில் இறக்கி வைத்த பெண் போல் ஒரு திருப்திப் பெருமூச்சு விட்டான் வீரன்.

"நாளைக்குக் கிழவியைக் கூட்டிவா. நான் சொல்லுற நாலைந்து இடத்துல கையெழுத்துப் போட்டுட்டு காசை வாங்கிட்டுப் போக லாம்" என்ற செய்தியைக் கேட்டதும்...

கூரை இரும்பின் இடுக்கில் குளவி கூடு கட்டிக்கொண்டிருந்தது. தற்செயலாக மோட்டு வளையைப் பார்த்த வீரன் குளவி கூடு கட்டு வதைக் கண்டான். "மனைவி ஒரு மாதிரி இருக்காளோ" என்று மனதில் எழுந்த சோம்பல் நினைவைக் கலைத்து விரட்டிக் கொண்டு வந்தது "மாமோவ்" என்ற குரல்.

வீரன் வெளியே வந்தான். லயத்துக் கோடியில் நின்று கொண்டு கத்துபவன் ஸ்டோர் லயத்து இருசனின் பேரன்."கங்காணியூட்டுக் 'கறுப்பனு'க்குப் பயந்துதான் பயல் அங்கேயே நின்றுவிட்டான்" என்று யூகித்த வீரன், "அது கடிக்காதுடா வா" என்றவாறு பையனிடம் வந்தான்.

"அப்பா உங்களைக் கையோட கூட்டியாரச் சொல்லிச்சு" என்ற படி சிறுவன் முன் நடக்க, வீரன் பின் நடந்தான்.

இருசக் கிழவன் எண்ணூறு ரூபாவை வாங்கி மகனிடம் கொடுத்து இன்னும் தொன்நூறு நாள் ஆகவில்லை. கிழவனுக்கு "அந்தா இந்தா" என்றிருக்கிறது இழுத்துக் கொண்டு. நாளைக்கு நாலுதரம் கழுவி, துணி மாற்றி, இடம் மாற்றி, கிடந்த இடத்தைக் கூட்டி மெழுகிப் போடுவதென்றால் யார்தான் முகம் சுழிக்க மாட்டார்கள். "செத்துத் தொலையுதில்லையே!" என்று கறுவிக்கொட்ட மாட்டார்கள்?

ஊறி நொதிந்த இடத்தில் கிடந்தான் கிழவன். எத்தனை தடவை தான் இடம் மாற்றுவது?

"கொர், முர்ர்" என்று உள்ளுக்கும் வெளிக்குமாக மூச்சுத் திண றியது.

"மூணு நாளா இதேகதிதான்!, இப்போ முடிஞ்சிடும் போலி ருக்கே..! என்று கேட்ட வீரனுக்கு இருசனின் மகன் கொடுத்த பதில்.

"விளக்கெண்ணெய் இருக்கா?" என்று கேட்ட வீரன் இட துகைக் குழியில் எண்ணெயை வாங்கிக் கொண்டு கிழவனிடம் நெருங்கி உட்கார்ந்து கண்ணைக் காட்டினான். இருசனின் மகன் மற்றவர் களைக் கூட்டிக் கொண்டு வெளியே வந்து விட்டான்.

வலது கைவிரலால் எண்ணெயைத் தொட்டுக் கிழவனின் முகத் தில் தடவினான் வீரன்.

புருவமேட்டில் தடவி நாசித் தண்டை நெருடியவாறு விரல் களைக் கீழிறக்கி நாசித் துவாரத்திடம் வந்ததும் ஒரு முறை தொட்டுக் கொண்டான். கொழகொழத்த விரல் இடுக்குகளில் இப்போது இறுகப் பிடிபட்டிருந்தது நாசித் துவாரம். கிழவனின் மூக்குப் புடைத்து விம்மியது. உடல் இலேசாகத் துடித்தது. மூச்சுத் திணறியது.

வேட்டைக்காரனின் வெளிச்சைத்தையே உற்றுப் பார்க்கும் காட்டு முயற்கண்கள் போலக் கிழவனின் கண்கள் வீரனுடைய கண் களை நேர்பாய்ச்சி ஒரு கணம் பார்த்தன. மறுகணம் மேல் இமை க்குள் சொருகச் சேர்ந்தன. தலை கவிழ்ந்து விட்டது.

வீரன் தலையைப் பலமாக உதறிக் கொண்டு கால்களை எட்டிப் போட்டான். இந்த நேரத்தில் தனக்கேன் அந்தப் பழைய நினைவு வர வேண்டும். மீண்டும் தலையை உதறிக் கொண்டான்.

ஒரு காரைப் பிடிச்சாவது கிழவியைத் தூக்கிப் போட்டுக் கிட்டுப் போய்க் கையெழுத்துப் போட்டுட்டா நிம்மதியா மூச்சுவிடலாம்.

"இரண்டு நாள் கழித்துப் போகிற உயிரை அப்போதே நிறுத்திக் காட்டினாயே, இந்தக் கிழவியின் உயிரை இரண்டு நாள் நிறுத்தி வைக்க உன்னால் முடியுமா? என்று மனம் கேட்கிறதோ?

உள் மனதின் பயங்கர ஓலம்.

சந்தில் தெரிகிறது அவனுடைய லயம். அது என்ன அங்கே கூட் டம்...

"அப்பாயி செத்துப் போச்சுப்பா" என்று அலறியபடியே ஓடி வந்தாள் மகள்.

ஓட்டம் நடையாகி, நடையும் மெலிந்து, உலகமே சுற்றியது அவனுக்கு.

பழம் விழுந்துவிட்டது.

வீரன் விக்கித்து நின்றான்.

- ● -

1964 வீரகேசரியின் மலையகச் சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்றது.
மலையகச் சிறுகதைகள் (துரைவி வெளியீடு)

# பீலி மேலே போகிறது



3

வெற்றுக்கூடையில் திணிக்கப்பட்டிருந்த காய்ந்த தேயிலைமாற்றுடன் காலை எடுத்துப் படிக்கட்டில் வைத்தவள் ஒரு கணம் நின்று உற்றுக் கேட்டாள்.

பீலிக்கரையில் ஒரே கூட்டம்...

லயத்தில் ஒரே கூச்சல்...

“அந்தியானா இதே எளவுதான்” என்று முனகியபடி கூடைக்கு வெளியே நீட்டிக் கொண்டிருந்த காய்ந்த மிளாறு, பிடரியைப் பிராண்டாத வகையில் பவ்வியமாகக் கூடையை இறக்கிப் பாதையில் வைத்து விட்டு, பாதை ஓரத்தில் கிடந்த காய்ந்த சவுக்கு இலைகளைப் பொறுக்கி கூடைக்குள் திணித்துக் கொண்டாள்.

சவுக்குச் சருகு அடுப்பைப் பற்ற வைக்க... தேயிலை மிளாறு அடுப்பை எரிய வைக்க...

இறங்கும் சூரியன் சற்றே மலையடிவாரங்களை மஞ்சளாக்கி விட்டு மறைகின்றான்.

இவளுடன் கொழுந்து நிறுத்த பக்கத்து காம்பிராப் பெண் அதோ ஏறிவருகின்றாள், இன்ஜின் ரூமிலிருந்து.

துவட்டியும் துவட்டாமலும் ஈரம் சொட்டச் சொட்ட இடுப்பளவு தொங்கும் கூந்தல்.

குடம் வைக்கச் சற்றே இடம் கொடுத்து மறுபக்கம் நொடித்து நிற்கும் இடை...

சற்றே ஓடி அடி வைக்கும் அழகு நடை....

தோளில் தொங்கும் துவைத்துப் பிழிந்த ரவிக்கை... உடலில் ஒட்டிக்கிடக்கும் ஈரச் சேலை.

இறங்கிய கதிரவன் ஒரு வினாடி ஏறி அவளைப் பார்த்துச் சிரித்து விட்டு மீண்டும் இறங்கிக் கொண்டான்.

காலடிச் சப்தம் கேட்டு கிழவி திரும்பினாள்.

"என்ன பெரியாயி, இன்னம் லயத்துக்கே போவலியா? நானு கூடையை வச்சிட்டு இஞ்சினீரு காம்புராவுக்குப் போயி குளிச்சிட்டு ஒரு கொடம் தண்ணீயும் கொண்டாந்துட்டேன்."

"ஒனக்கென்னாடி ஆயா. ஓடுர பாம்பை மிதிக்கிற வயசு. குளுருமா ஒன்னா? அம்மாதொலை போய்... பச்சைத் தண்ணீலே தலையை நீட்ட என்னால ஆவுதா? அதான் ஒரு கூடை மிளாறு பொறுக் குனேன். கொழுந்து நிறுத்ததும், இதோ கொஞ்சம் சவுக்குத் தழையும் பொறுக் கிக்கிட்டேன். போயி ஒரு வாளி தண்ணி காயவச்சி தலையில ஊத்துனாத்தான் சரிவரும். என்னமோ ஆயா! ரெண்டு நாளு குளிக்காட்டி எலும்பெல்லாம் முறியுது!" என்றபடி, கிழவி முன் நடக்க மற்றவள் தொடருகின்றாள்.

தண்ணீர் தளும்பி தளும்பி, உலரும் அவளது சேலையை ஈரமாக் கிக் கொண்டிருக்கிறது.

பீலிச் சண்டை இன்னும் ஓய்ந்தபாடில்லை. கீழே லயத்திலிருந்து ஒவ்வொருவராக பெண்கள் மேலே ஏறி வருகின்றனர்... இடையில் குடமும் கையில் வாளியுமாக!

"ஏண்டி மேலே போறே, நம்ம பீலியில தண்ணி வல்லியா?"

"வருது இத்தினியூண்டா!. ஒரு கொடம் நெறைய நாலு நாள் செல்லும். அதுல தொண்ணாந்துகிட்டு நிக்கங்காட்டியும் இஞ்சினீர் காம்புராவுக்கே நடந்துறலாம்டி..." கூறியபடி அவள் மேலே நடக்கின் றாள்.

"இவ வூட்டுக்கு நேரே பீலி இருக்குறதுனாலே இவளுக்கு மட்டுந் தான் சொந்தமுன்னு நெனச்சிக்கிட்டா! செய்யிறேன் இவளுக்கு நல்ல வேல..." கத்திக் கொண்டே படியேறுகின்றாள் இன்னொருத்தி.

"நீ எப்படி பெரியாயி வென்னி வைக்கப்போறே? அந்தியானா இந்தப் பீலீச் சண்டையே பெரிய சண்டையின்னு தெரியுந்தானே!"

"அந்தக் குட்டிகிட்ட சொல்லிட்டுத்தான் வந்தேன் வாளியை நெறச்சி வை. அந்திக்கு வந்து குளிக்கணும்னு!"

"ஆனானப்பட்டவங்களே அவகிட்ட இந்தபாடு படயில, பச்சப் புள்ளை என்ன செய்யும். புடிச்சிவச்சிருந்தா குளி. இல்லாட்டி

கப்சிப்னு கிடந்திடு. பீலிக்கரை பேச்சே பேசாதே. மொய் மொய்னு புடிச்சுக்குவா!"

இருவரும் லயத்தை நெருங்குகின்றனர். "அலுத்துக்களைச்சு மனுசா வந்தா ஒரு கொடம் தண்ணி வுடுறாளுகளா? கழுவி கட்டையில வைக்க. இப்பவே புடிச்சி றொப்பிக்கிறாளுக... த்தூ..!"

கோபமாகப் பொரிந்து தள்ளியவள் நங்கென்று குடத்தை வைத்து விட்டு சேலையை இழுத்துச் செருகிக் கொண்டாள்.

நங்கென்று அவள் வைத்த குடம் அடுத்ததில் மோத, அது ஆடி மற்றதைத் தட்டிவிட, உருண்ட குடம் மற்றுமொன்றை உருட்டிவிட, நாலைந்து குடங்கள் கணகணவென்று உருண்டு கானில் விழுந்தன.

வெண்கல ஓசை நாராசமாய் காதுள் ப்பாய இரண்டாவது காம்பிரா வில் இருந்து ஓடிவந்தவள் காளியாய் நின்றாள்.

"அடியேய்..! உன்னைய தண்ணி புடிக்க வுடாட்டி அவளுகளைக் கேளு! அவளுக மேல்ல போய்ப் பாயி! எதுலையோ உள்ளதைப் போயி எதுலையோ காட்டுற மாதிரி ஏவூட்டு கொடத்தை உருட்டி வுட்டாக்கா! ஒம்புருசனா வாங்கித் தருவான்?"

அவளுடைய குடமும் ஐந்து மணியில் இருந்துதான் கியூவில் இன்னமும் இடம் கிடைக்கவில்லை. அந்தக் கோபம் தான் அவளுக்கு.

சமயம் பார்த்துக் கொண்டிருந்தாள் சண்டை பிடிக்க.

"எம்புருசன் ஏண்டி ஒனக்குக் கொடம் வாங்கிக் குடுக்கப் போவுது! என் வீடுதான் பீலிக்கு நேரா இருக்குன்னு கொடம், குண்டான், சட்டி, பானை, சப்புச் சவுருன்னு கொண்டாந்து குமிச்சிக்கிட்டாக்க!. கொடம் வைக்க சொட்டு எடம் இருக்கா..?"

"ஏவூட்டு வீடாடி பீலிக்கு நேரே இருக்கு? வந்துட்டா நீட்டி மொழக்க!"

"நாங்க நீட்டவும் இல்லே மொழக்கவும் இல்லேடி, ஆயா! நீ தான் நீட்டுறே இப்போ..! ஒன் வீடு பீலிக்கு நேரே இல்லாட்டி கெடயேன் செத்த நாயாட்டம்!"

பைப்பிற்கு நேரே உள்ள வீட்டுக்காரியின் கைவாளிதான் இப்போது பைப்பில் தொங்குகிறது. மெல்லியதாக வழியும் நீர் வாளியில் நிரம்பி யதும் கீழே உள்ள குடத்தில் விழும். குடமும் அவளுடையதேதான்..!

அவள் வீட்டுக் கதவும் பைப்பும் நேருக்கு நேராக இருப்பதால் வீட்டு

வேலைகளை செய்து கொண்டே பீலிக்கரையில் ஒரு கண் வைத்துக் கொள்வாள்.

பீலியண்டை யாரும் நிற்காத நேரம் பார்த்து வாளியைத் தூக்கிக் கொண்டு உள்ளே மறைந்து விடுவாள். தண்ணீர் குடத்தில் விழும்.

முக்கால் குடம் நிறையும் போதே வேறு ஒரு பாத்திரத்தை வைத்து வாளியை மாட்டி விட்டு உள்ளே போய் விடுவாள்.

மற்ற வீட்டுக்காரிகள் "சரி, குடம் இருக்கட்டும், நாம் ஏதாவது வீட்டு வேலை செய்து விட்டு வருவோம்" என்ற நினைப்பில் போய் விட்டு கொஞ்சம் நேரம் கழித்து வந்து பார்த்தால், அதே குடத்தில் முன்பிருந்த அதே அளவுக்கும் குறைவாக தண்ணீர் நிறைந்து கொண் டிருக்கும்.

பிறகு இதே கூச்சல்தான்!

சண்டை போடத் தெரியாதவர்கள் அல்லது சண்டை போடத் தைரியம் இல்லாதவர்கள் தமக்குள் தாமே முனகிக் கொண்டு மேலே ஏறிப் போய்விடுவார்கள்.

இடுப்பும் குடமுமாக மேலே போகிறவர்கள் ஒவ்வொருவராக இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்தான்!

"பைப்புக்கும் நேரே உள்ள வீடு" என்ற பேச்சு காதில் விழுந்ததும் பாய்ந்து வந்து நிற்கின்றாள் வீட்டுக்காரி.

"ஏண்டி சும்மா கெடக்குற கோடாலியை எடுத்து கால்ல போட் டுக்குறே. நான் பாட்டுக்குத்தானே உள்ளே கெடக்குறேன். என்னைய எதுக்கு இழுக்குறே..! யாரு கூட மல்லுக்கு நிக்கலாம்னு வந்தியோ?"

"ஐயோ, என் பத்தினித் தங்கம் உள்ளேயே இருக்காளாம் உள்ளே..! நீ மட்டும் உள்ளேயே அமுங்கிட்டாப் போதுமாடி. உன்னூட்டு குடம், குண்டான், கும்பா சருவச் சட்டிகளையும் உள்ளேயே வச்சுக்க. சோத்துப் பானையில இருந்து எச்சிக் கொத்தருதி உன்னோட அத்தனை சாமானும் பீலில தானே இருக்கு!"

"ஏய் நல்லா பார்த்துப் பேசு. ஏவுட்டாடி இங்கே கெடக்குற அத்த னையும்!. பீலில இருக்குற கொடம் மட்டுந்தான் என்னுது! அது ரொம்புனதும் நீ புடிச்சுக்கயேன்..."

"அடடா ஒண்ணும் தெரியாத பாப்பா..! ஊருக்கோ போட்டாளாம் தாப்பா..! கொடம் மாத்தி வாளி, வாளி மாத்தி கொடம்னு நீயே

ரொப்பிக்கிட்டாக்க மத்தவங்க ஆக்குறது அரிக்குறது இல்லே!. இன்னொருக்கா மட்டும் வை, ஓ வூட்டு கொடத்தே தூக்கிக் குப்பை மேட்டுல வீசுறேனா இல்லியா பாரு!"

"வீசுடி பார்ப்போம..! போனா போவுதுன்னு பாத்தா மேலே மேலே போறே!"

"நீ வைடி வீசுறேனா இல்லியான்னு பார்ப்போம்..!"

"இதோ வச்சேன்..!"

"இதோ வீசுனேன்..!"

பலம் கொண்ட மட்டும் காலை ஓங்கி ஒரு உதை விட்டாள். 'டமடம' வென்று உருண்டு ஓடி ஒரு கல்லில் மோதி நின்றது குடம்.

குடத்திலிருந்த நீர் காய்ந்து கிடந்த இடத்தை ஈரமாக்கிக் கொண்டு ஓடுகிறது.

தனது குடம் உருண்ட கோபம் முகத்தில் கொள்ளாய் வெடிக்க உதைத்து விட்டவளை ஒன்றும் செய்யமுடியாத ஆத்திரத்தில் அவள் உடல் ஆடியது.

பீறிட்டு எழுந்த ஆத்திரத்தை அடக்க முடியாத வண்ணம் கோபத்தால் கொதித்தாள்.

அரசனுக்குக் கோபம் வந்தால் நாடழியும்...

புருசனுக்குக் கோபம் வந்தால் வீடழியும்...

இவளுக்கு வந்த கோபத்தால் கேவலம் ஒரு பீலி கூடவா அழியக் கூடாது.

"இந்த நாசமாய்ப்போன பீலி இங்கே இருக்கிறதுனாலே தானே இத்தனை வம்பும்" என்றபடி பைப்பை ஒரே இழுப்பில் இழுத்து வைத்து நெளித்தாள்.

சொட்டு சொட்டாய் விழுந்து கொண்டிருந்த தண்ணீரும் பொட்டென்று நின்றுவிட்டது.

எப்போதாவது ஒரு குடம் கிடைக்காமலா போகும் என்ற நம்பிக்கையில் சோம்பல்தனமாகப் பீலியைக் காத்துக்கிடந்தவர்கள் வாய்க்கொன்றாக முனகிக் கொண்டு இடுப்பில் இடுக்கிய குடத்துடன் படியேறி மேலே நடக்கின்றனர்.

- ● -

மேல் மூச்சு வாங்க படியேறி மேலே வந்தால் ஒரு மண் றோட்டு. மண்றோட்டு வழியே இரண்டு மொடக்கு தள்ளி உள்ள காட்டில்தான் பெரிய தண்ணீர் 'டங்கி' இருக்கிறது. அங்கே நீரூற்று இருப்பதால் மரம் மட்டைகளை வெட்டாமல் விட்டுவிட அது கட்டுக்கு மீறி வளர்ந்து காடாகி பட்டப்பகலிலேயே இருண்டு கிடக்கிறது.

இருட்டி விட்டால் அந்தப் பக்கம் யாரும் போகமாட்டார்கள். ஜன நடமாட்டம் இல்லாத ஒதுக்குப்புறமான இடம் அது என்பதாலும் விரைவாக நீர் ஊறும் ஊற்றுக்கண்கள் நிறைய இருக்கின்றன என்ப தாலும் பெரிய நீர்த்தேக்கம் இரண்டை நிர்மாணித்து யந்திரம் போட்டு அங்கிருந்து நீரை இழுத்தெடுக்கிறது தோட்ட நிர்வாகம். மலை உச்சி யில் இருக்கும் துரை பங்களாவுக்கு.

ஏதாவது காரணத்தால் தேக்கங்களில் தண்ணீர் வற்றி விட்டால் சேற்றையும் உறிஞ்சி எடுத்து மேலே அனுப்பி விடும் எந்திரம்.

ஆகவே நீர்நிலை பார்த்து இஞ்சினை ஓட்டவும் நிறுத்தி வைக் கவும் ஒரு ஆளை நியமித்துள்ளார் துரை.

ஐந்து ஐந்தரை மணி ஆகிவிட்டதென்றால் 'தண்ணிக்கார' கிழவ னைத் தவிர இஞ்சின் காம்பிராக் காட்டுப் பக்கம் ஒரு ஈ காக்கை நட மாடாது.

காலை ஆறுமணிவரை தண்ணீர் பிடிக்க முடியும்.

நீர்த்தேக்கம் இரண்டும் நிரம்பியபின் வழிந்தோடும் நீர் திடுதிடு வென்று இரவு பகலாக ஊற்றிக் கொண்டே இருக்கிறது. என்றாலும் கீழே உள்ள இந்த நாலு லயத்து ஆட்களும் தண்ணீருக்கு சண்டை போடாத நாளே கிடையாது.

இங்கிருந்து லயத்துக்குத் தண்ணீர் எடுக்க எந்த விதத்திலும் முடி யாது என்பது ஒருபுறமிருக்க, எந்த விதத்திலாவது முடியுமா என்று அக்கறைப்பட யாரும் இல்லை, யாருக்கும் தோன்றவில்லை.

லயத்துக்கு பீலி வராத நாட்களில் யாரும் தண்ணீருக்காக பீலிக் கரையில் காத்துக்கிடப்பதில்லை, இப்போது போல்.

வீட்டருகே பஸ் ஸ்டாண்ட் இருந்துவிட்டால் இதோ வரும் அதோ வரும் என்று காத்துக்கிடந்தே காலத்தைப் போக்குவோம் அல்லவா? அதைப் போலத்தான்.

வேலை முடிந்து வந்ததும் அடுத்த வேலையாக ஒவ்வொருவராக நடப்பார்கள் இடுப்பும் குடமுமாய்!

சில வீடுகளில் பெயர் பதியாத சிறிசுகள் காலையில் இருந்தே தண்ணீரில்தான் கிடக்குங்கள். என்றாலும் வேலை முடிந்து வந்த கையோடு பெரியவர்கள்தான் வீட்டுப் பாவனைக்கு தண்ணீர் தூக்கி வருவார்கள்.

நாலைந்து பெண்கள் உள்ள வீடென்றால் எல்லாருமாக ஒரு நடை போய் கைகால் முகம் கழுவிக் கொண்டு தலைக்கொரு குடத் துடன் வந்து விடுவார்கள். பிறகு இரண்டு பெண்கள் மூன்று நாலு நடை என்று தண்ணீர் தூக்க மற்றவர்கள் சமையல் இத்தியாதிகளைக் கவனிப்பார்கள்.

தானே தண்ணீரும் தூக்கிக் கொள்ளவும் வேண்டும்... சமைக் கவும் வேண்டும் என்று ஆகிவிட்ட ஒற்றைக் கட்டைகளுக்குத்தான் சிரமம்.

சும்மா கிடைக்கும் தண்ணீருக்காக இத்தனை சிரமம்படுகின் றோமே என்பது கூடத் தெரியாமல் எதேச்சையாகத் தண்ணீர் தூக்கிக் கொண்டிருந்த நாலு லயத்துப் பெண்களுக்கும் ஒரு இடிவிழுந்தது.

ஒரு நாள் மாலை. மணி ஏழு ஏழரை இருக்கலாம்.

விரியும் போர்வையாய் இருள் இறங்கிக் கொண்டிருக்கிறது. பட்டப் பகலிலேயே இருட்டிக் கொண்டிருக்கும் இஞ்சின் காம்பிராக் காட் டைப் பற்றிக் கூறவே தேவையில்லை.

நேராகவும் கோணலாகவும் நெட்டையாகவும் குட்டையாகவும் வளர்ந்து நிற்கும் மரங்கள்.

மரங்களின் மேல் கன்னங்கரேல் என்று கூட்டம் போட்டுக் கொண்டுக் கிடக்கும் இலைக் கற்றைகள்.

இலைக் கற்றைகளுடன் பின்னிப் பிணைந்து பாம்பு பாம்பாய் தொங்கிக் கொண்டும் நீட்டிக் கொண்டும் நெளியும் காட்டுக் கொடிகள்.

'ஓஸ்ஸ்' என்ற இரைச்சலுடன் இருட்டுக்குள் ஊற்றிக் கொண்டி ருக்கும் எஞ்சின் காம்பிரா நீர்.

மரங்களில் தொங்கும் வௌவால்கள் சப்பித் துப்பும் பழக் கொட் டைகள் இஞ்சின் காம்பிராத் தகரக் கூரையில் விழுவதால் ஏற்படும் 'டங் டங்' ஒலி.

எல்லாமாகச் சேர்ந்து அந்த இடத்தை ஒரு அசாதாரண அமைதி யுடன் கூடிய பயங்கர இடமாக ஆக்கி வைத்திருக்கிறது.

மிகவும் தாமதித்து மலையில் இருந்து வந்த ஒரு பெண் அந்த இருண்ட நேரத்தில் எப்போதும் போல் எதேச்சையாக இஞ்சின் காம் பிராவை நோக்கி நடந்தாள்... தண்ணீர் பிடிக்க.

செவ்வரளி மரத்தைத் தாண்டியபடி இறங்கியவள் தூக்கிய காலை கீழே வைக்க மறந்து நின்றாள்.

"ஆ..." என்று பலம் கொண்ட மட்டும் கத்தினாள் என்றாலும் வாய் பிளந்து நின்றதே தவிர சத்தம் வரவில்லை.

பயங்கரத்தைப் பலப்படுத்தும் வகையில் தவளைகள் கிறீச்சிடு கின்றன.

வியர்த்துக் கொட்ட ஒரு வினாடி விதிர்விதிர்த்து நின்று விட்டவள் ஓடி வந்து லயத்துக் கோடியில் விழுந்தாள் பேச்சு மூச்சற்று!

குடம் உருண்டோடிய சத்தம் கேட்டு ஓடி வந்தவர்கள் அவளை சூழ்ந்துக் கொண்டனர்.

அட்டைக் கரியாய் அப்பிக் கிடந்த மரங்களிடையே வட்டமாக ஒரு கரிய முகம் தெரிந்ததாம்... பேய் முகம்... அசிங்கமாக சிரித்துக் கொண்டு. நீளமாக கை நீட்டி இவளைப் பிடிக்க முயன்று மரத்துக்கு மரம் குதித்துத் தாவி இவளை நெருங்கியதாம்.

அருகே வந்ததும் பயங்கரமாகச் சிரித்துக் கொண்டு வானத் துக்கும் பூமிக்கும் ஒரே கறுப்பாய் நின்றதாம்!

பிறகு தனக்கு ஒன்றுமே தெரியாது ஓடி வந்து விழுந்தது உட்பட என்று ஒரு வாரத்துக்குப் பின் மற்றவர்களிடம் கூறினாளாம்.

அதிலிருந்து காலை ஆறுக்கு முன்பும் மாலை ஆறுக்குப் பின்பும் அந்தப் பக்கம் யாரும் இறங்குவதில்லை.

மினுக் மினுக்கென்று எரியும் லாந்தருடன் கூனிக் கூனி இறங்கும் தண்ணிக்காரக் கிழவனைத் தவிர

ஆறரைக்கு பிறகு பெரட்டுக்கு வருகிறவர்களை "வேலை கிடை யாது போ" என்று விரட்டி விடுகின்றார் கண்டாக்கையா.

அந்த நாலு லயத்து ஆட்களும் ஏழு ஏழரைக்குத்தான் பெரட்டுக்கு வருகின்றார்கள் என்றால் யார் வேலை கொடுக்கப் போகிறார்கள்.

தொடர்ந்து இரண்டு மூன்று நாள் விரட்டப்பட்ட நாலு லயத்துப் பெண்களும் ஒருசேரத் தலைவரிடம் போனார்கள்.

தலைவர் துரையிடம் போனார்.

துரை இஞ்சின் காம்பிராவுக்குப் போனார்.

இஞ்சின் ரூமில் இருந்து தண்ணீர் எடுத்துத்தர இயலுமா என்று ஆராயும் அக்கறை துரைக்கு வருவதற்கு நாலு லயத்துப் பெண்களும் வேலைக்கு நேரம் கழித்துப் போக வேண்டியிருந்திருக்கிறது..!

நாலு லயத்துப் பெண்களும் நேரம் கழித்து வேலைக்குப் போக பேய் பயங்காட்ட வேண்டியிருந்திருக்கிறது..!

வாழ்க அந்த பேய்

திரும்பி வந்த துரை உதட்டைப் பிதுக்கிக் கொண்டார். 'டாங்க்' நிரம்பி வழிந்தோடும் நீர் இந்த லயங்களின் பக்கம் வர வழியே இல்லை.

"லயத்துக்கு துரை பைப் போட்டுத் தரும்வரை எட்டு மணிக்கு பெரட்டுக்கு வரட்டும்" என்னும் உத்தரவாதத்துடன் ஆபீசிலிருந்து திரும்பினார் தலைவர்.

இஞ்சின் ரூமைத் தவிர்த்து வேறு எங்காவது ஊற்றுக்கண் இருக் கிறதா என்று தேடி, லயத்திலிருந்து படியேறியதும் வரும் மண் பாதைக்கும் மேல் தேயிலை பயிரிடப்படாத ... பயிரிட முடியாத... ஒரு பள்ளத்தாக்கில் காட்டுக் கொடிகள் மண்டிக்கிடக்கும் அந்த இடத்தில் லேசாக நீர் ஊறுகிறது என்பதைக் கண்டு பிடித்து அவ்விடத்தை தோண்டி ஒரு சிறிய 'டாங்க்' கட்டி அதிலிருந்து பைப்பை இழுத்து இந்த நாலு லயத்துக்கும் மத்தியில் பூட்டி விட்டார் துரை!

'புதுசா டங்கி கட்டி...
புருபுருன்னு பைப்பிழுத்து...
நாலு லயத்தாளுக்கும்...
நல்ல தண்ணி வந்திருச்சி..!'

என்று கும்மியடித்து மகிழ்ந்தார்கள் லயத்துப் பெண்கள்.

லயத்துக்கு பைப் வந்த சுருக்கைப் பார்த்தால் 'சுவிட்ச்' எங்கே இருக்கிறது என்கின்ற உண்மை எல்லோருக்குமே தெரிகிறது!

தெரிந்து என்ன பயன்

லயத்தடிக்குப் பீலி வந்துவிட்டது!

ஒன்றுக்குக் கீழ் ஒன்றாக உள்ள அந்த நாலு லயத்துக்கும் மத்தியில்

உள்ள இரண்டாவது லயத்தின் முதல் காம்பிராவண்டை பீலி நின்றது.

முதல் வீட்டுக்காரிக்கு உண்டான மகிழ்ச்சி நாலு லயத்துப் பெண் களுக்கு உண்டான மகிழ்ச்சியிலும் பார்க்கக் கூடியது.

தண்ணீர் ஒழுங்காக வந்து கொண்டிருக்கும் வரை சரி. வெயில் காலங்களில் தண்ணீர் குறைந்து இதோ இன்று போல் வருகிறது என்றால் இதே சண்டைதான்... இதே கூச்சல்தான்...

பீலி யாருடைய வீட்டுக்கு நேராக இருக்கிறதோ அவளுடன் மற்ற வீட்டுக்காரிகள் சண்டை!

பீலி எந்த லயத்தில் இருக்கிறதோ அந்த லயத்துப் பெண்களுடன் மற்ற லயத்துப் பெண்கள் சண்டை!

இப்படி ஒரே பீலிச் சண்டைதான்! லயத்துக்குப் பீலி வந்து ஒரு வருடமாகிவிட்ட பிறகு ஒரு நாள். முதன்முறையாக ஒரு பெண்ணின் கோபத்துக்கு அந்தப் பீலி ஆளானது.

துரையும் தலைவரும் ஒரு தீர்மானத்துக்கு வந்தார்கள். முதல் காம்பிராவுக்கு நேராக நின்ற பைப் இப்போது ஆறாவது காம்பிரா வுக்கு நேராக நின்றது.

ஆறாவது காம்பிராவண்டையும் ஒருநாள் இதே கலவரம் வந்தது. பைப் உடைந்தது.

துரை ஒரே பிடியாக நின்றார், "இந்தப் பைப்பை இனி சரிக்கட்டிக் கொடுக்க மாட்டேன்" என்று.

"நீங்கள் பைப்பை ரிப்பேர் செய்து கொடுக்காவிட்டால் ஆட்கள் மீண்டும் இஞ்சின் காம்பிராவுக்குத்தான் தண்ணீர் பிடிக்கப் போயா கணும்..! ஒரு சமயம் போல் இருக்குங்குளா? புலியே அடிக்காவிட் டாலும் கிலி அடித்து விடுமே! யாருக்காவது ஏதாவது நடந்து விட்டால்!. நடப்பது பிறகு இருக்கட்டும். வேலை விட்ட பிறகு தண்ணீருக்குப் போக இயலாது என்பதால் ஆட்கள் காலையிலேயே தண்ணீர் பிடித்து வைத்து விட்டுத்தான் பெரட்டுக்கு வரப் பார்ப்பார்கள்!. அதற்காகவாவது துரையவர்கள் தயவு பண்ணனும்!"

"சரி" என்று எழுந்த துரை பைப்பைத் திருத்தித் தருவதாகக் கூறினார், ஒரு நிபந்தனையுடன்...

அதாவது இனிமேல் உடைந்தால் திருத்தித்தர மாட்டேன் என்பதே அந்த நிபந்தனை.

இரண்டாவது லயத்தில் இருந்த பைப் ஒரு படி இறங்கி மூன்றாவது லயத்துக்கு வந்தது.

இதெல்லாம் பழைய கதை.

இன்றும் அதே பழைய கதைதான் புதிதாக நடந்திருக்கிறது. பைப் உடைந்து ஒரு வாரம் ஆகவிட்டது.

பைப் உடைந்த கதை தலைவருக்குப் போனதும் தலைவர் ஆபீசுக்குப் போனார்.

ஆபிசீல் இருந்த துரை கோபித்துக் கொண்டு பங்களாவுக்குப் போனார்.

சென்ற முறை தலைவர் எழுதி கையெழுத்திட்டுக் கொடுத்திருந்த அறிக்கையை கிளார்க் வாசித்துக் காட்டினார், துரை வாசித்துக் காட்டச் சொன்னதாகக் கூறி.

பீலி விசயமாக மீண்டும் துரையைக் காணச் சென்ற தலைவர் புதிய திட்டத்துடன் போனார்.

"பைப் ரிப்பேர் செய்ய ஏற்படும் செலவை அந்த நாலு லயத்து ஆட்களிடமும் பிடித்துக் கொள்ளுங்கள்" என்பது தான் அந்தப் புதுத் திட்டம்.

தனது செவ்விளநீர். முகத்தை சிறுத்துக் கொண்ட துரை "நொன் சென்ஸ்" என்றபடி பக்கவாட்டில் தலையை ஆட்டினார்.

"முடியாது தலைவரே..! இன்னைக்கு நான் ரிப்பேர் செலவை வாங்கிட்டா நாளைக்கு ஒரு தடவை உடையும்போது அதிகாரம் பண்ண ஏலுமா? சத்தம் போட ஏலுமா? நாங்கள்ல சல்லி போட்டோம்.. அப்படீம்பானுகள்!"

"இவனுகளைப் பத்தி உனக்கு சரியா தெரியாது தலைவர், நான் தான் கொடுக்கணுமே தவிர ஒரு சதம் வாங்க மாட்டேன். அது எனக்குப் புடிக்காது."

"அப்படீன்னா இப்ப நீங்க பீலியை சரிக்கட்டுறீங்க. இன்னொருக்கா ஒடையுமுன்னும் எதிர்பார்க்கறீங்க இல்லீங்களா" தலைவர் துரையை மடக்கினார்.

"அதுதான் இல்லே! தலைவர் சொல்லுறதுல பாதி சரி. அதாவது பீலியை சரி கட்டுவேன். அதோட, இனி இப்படி சண்டையில உடையாமலும் பாத்துக்குறுவேன்!"

"எப்படீங்க..! காவல் போடப் போறீங்களா?"

"ம்.. வேற வேலை கெடையாது. பீலிக்கெல்லாம் காவல் போட்டால் தோட்டம் என்னாத்துக்காகும்!. இஞ்சின் காம்பிராவுக்குப் போய் தண்ணி புடிக்க ஆளுகள் பயப்புடுது அவ்வளவு தானே. லயத்துல இருந்து படியேறி மேலே வந்ததும் ஒரு மண்றோட்டு இருக்குல்லியா?'. அந்த எடத்துல பைப்பை நிப்பாட்டிட்டா? ஒரு காம்பிரா ஆளோட மத்த காம்பிரா ஆள் சண்டை போடாது. ஏன்னா எந்த ஒரு லயத்துக்கிட்டயோ. காம்பிராக்கிட்டயோ பீலி நிக்கப் போறதில்லே" துரை சிரித்துக் கொண்டார்.

பெருமாள் மாடாய் தலையை ஆட்டிவிட்டு ஆபீஸ் படியிறங்கி தலைவர் கீழே போகின்றார்.

பீலி மேலே போகிறது.

- ● -

சிந்தாமணி 1965
இன்டியா டு டே இலக்கிய ஆண்டு மலர் 1994

# எக்சீமா



4

கறுப்பில் சிவப்புக்கரை போட்ட கம்பளியின் கதகதப்பு அதி காலைக் குளிருக்கு இதமாக இருக்கிறது. இருந்தும் பல்லைக் கடித்துக் கொண்டு கம்பளியை உதறிவிட்டு சின்னவர் எழுந்துவிட்டார்.

சின்னவர் என்றால் சின்னக்கணக்குப்பிள்ளை. கண்ணைக் கசக்கி விட்டுக் கொண்டார். கருமை இன்னும் விலகவில்லை... நிலம் தெளிய வில்லை... காலைத் தடவிப் பார்த்துக் கொண்டார். 'சொறசொற' வென்றிருந்தது , கல்லைப்போல.

கணுக்காலுக்குக் கீழே அடியில் கால்வாசிப் பாதம் கன்னங்கரேல் என்று.

கட்டிலை விட்டிறங்கியவர் காலை ஒருக்களித்து ஊன்றி மெது வாக நடந்து கோடிப் பக்கம் போய் அமர்கின்றார்.

அவர் அமர்வதற்கும் 'தடால்' என்று கூரைத் தகரத்தின் மேல் ஏதோ கனமான ஒன்று விழுவதற்கும் சரியாக இருக்கிறது. "அறைய வேண்டும் ராஸ்கல்களை" என்று முனகிய வண்ணம் நடந்தவர் அண் ணாந்து 'கம்பளிமாசி' மரத்தைப் பார்க்கின்றார்.

கானோரம் வளர்ந்து தகரக்கூரைக்கு மேலாகக் கிளை படர்ந்து நின்ற மரத்தில் கறுப்பும் சிவப்புமாய் கம்பளிப் பூச்சிகள் போலவே பழங்கள்... சடைசடையாய்!

பள்ளிக்கூடம் போகும் பையன்கள் பழம் பறிக்க வீசி எறியும் கம்பு கள், கற்கள் சடைத்து நிற்கும் மரக்கிளைகளில் தொக்கி நிற்கின்றன.

அப்படித் தொக்கி நின்ற கம்போ, கல்லோ தான் சின்னவர் உட் கார்ந்த நேரம் பார்த்து 'டமார்' என்று விழுந்திருக்கிறது. கூரைத் தக ரத்தில்.

மரத்தை அண்ணார்ந்து பார்த்தபடி நடந்தவர் கானோரக் கல்லில் காலை உரசிக் கொண்டார்.

சுரீரென்றது.

வலது காலைத் தூக்கி இடது கையால் இலேசாகத் தடவிக் கொண்டார்.

மாடு புண்ணாக்குத் தின்பது போல 'மொச் மொச்'சென்று விரல் கள் அந்தக் கறுப்பின் மேல் மேய்ந்தன. தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாமல் வாசல்கல்லில் அமர்ந்து காலைத் தூக்கி இடதுத் தொடை மேல் வைத்துக் கொண்டு 'பறக் பறக்'கென்று சொறிந்தார்.

அரிப்பு அடங்குவதாக இல்லை!

விரலைத் திருப்பிப் பார்த்தார். நகத்திற்கு மேலாக ஒரு கால் அங்குல உயர்த்துக்கு சதையே மேவி நிற்கிறது.

நகம் கடிக்கும் பழக்கம் பொல்லாதது என்பதை உணர்கின்றார்.

வெடித்துக் கிளம்பும் பேய் அரிப்பிற்கு போதுமான நகம் இல்லை.

காலை விந்தி விந்தி நடந்தவர் ஜன்னல் விளிம்பைத் தடவி சீப்பு டன் மீண்டும் அமர்ந்தார்.

அரிப்பு அடங்கியதும் லேசாக எரிச்சல் தொடங்கியது. பொட்டுப் பொட்டாய் நீர் துளிர்த்து நின்றது. சாரத்தை இழுத்து ஒத்திக் கொண் டார்.

பையன் தேநீர் விளாவிக் கொண்டிருந்தான். பலகைக் கட்டையை இழுத்துப் போட்டு அடுப்பின் முன் அமர்ந்தவர் காலைத்தூக்கி அடுப்பு மேடையில் வைத்துக் கொண்டார்.

அடுப்பு மேடையின் மண்சூடு நீர் கசியும் அந்த இடத்திற்கு மிகவும் இதமாக இருந்தது.

பட்சிகள் ஓசை எழுப்பத் தொடங்கின. கணுக்கால் மறையக் கட்டிய வேஷ்டியுடன் நொண்டுவது தெரியாமல் நொண்டி நொண்டி பிரட்டுக் களத்தை அடைந்தார்.

வெற்றிலை வாயும் வெறுங்காலுமாய் பெரிய கணக்கர் நின்று கொண்டிருந்தார்.

கைப்பிரம்பைத் தரையில் ஊன்றி அதன் மேல் வளைவில் லாவக மாய்ச் சாய்ந்து கொண்டிருந்தவரின் வேஷ்டி முழங்காலுக்கு மேல் மடிந்து முன்னிடைக்குள் செருகி நின்றது.

கைச்செக்ரோலில் லயித்துக் கிடந்த பெரியவர் முதலில் பார்த்தது சின்னவரின் கணுக்கால் மறைக்கும் வேஷ்டிக்கட்டை. பிறகு பார்த் தது அவருடைய முகத்தை.

"றோட்டுக் கூட்டுறாப்புல வேஷ்டி கட்டிக்கிட்டா மலையேறி வேலை பார்க்க முடியுமான்னு படியளக்குற தொரை எங்கிட்ட கேக்குறான்" என்று சின்னவருக்கும் தனக்கும் மட்டுமே கேட்கக் கூடியதாக முனகிக் கொள்ளுகின்றார்.

சின்னவரின் பாதத்தில் ஒரு சத அகலத்தில் பொட்டுப் போல லேசாக அரிக்கத் தொடங்கியபோது சொறிந்து கொள்வதுடன் நிறுத்திக் கொண்டார்.

அதுவே பிறகு ஐம்பது சத அகலமாகி ஒரு ரூபாய் அகலத்துக்குப் படரத் தொடங்கியதும் இது என்னவாக இருக்கும் என்னும் ஆராய்ச்சியில் இறங்கினார்.

பூச்சிக்கடியா.. படையா.. சொறியா..., சிரங்கா.. என்று நிர்ணயித்துக் கொள்ள முடியாத ஒரு மாத காலத்துக்குள் அது வளர்ந்து கால்வாசிப் பாதத்தை ஆக்ரமித்துக் கொண்டது.

லயம் பார்க்க வந்த தோட்டத்து டிஸ்பென்சர் கொழுந்து லொறியில் ஏறிப்போய்விடும் உத்தேசத்துடன் கொழுந்து நிறுக்கும் இடத்துக்கு வந்து லொறி இன்னும் வராததால் சின்னவருடன் பேசிக் கொண்டிருந்தார்.

சந்தர்ப்பம் அப்படி அமைந்திராவிட்டால் சின்னவரை எல்லாம் மதித்து டாக்டரய்யா பேச்சுக்கு வந்திருக்கமாட்டார்.

அவர்கள் எல்லாம் பரம்பரை பரம்பரையாகவே கால்சட்டை தொப்பிக்காரர்கள்.

சின்னவரோ..!

வாசல் கூட்டி வைரவனின் வயிற்றில் பிறந்து ஏதோ அரைகுறையாகப் படித்து எப்படியோ சின்னக் கணக்கப்பிள்ளையாகி லயத்தில் இருந்து வெளியேறி இன்று ஸ்டாப் குவாட்டஸ்ஸுக்குள் குடி நுழைந்தவர்.

அவருக்கும் இவருக்கும் எட்டுமா..?

சின்னவரின் காலைப் பார்த்த அய்யா "திஸ் இஸ் எக்சிமா நோ!" என்றார்.

சின்னவர் மௌனமாகத் தலையை ஆட்டிக் கொண்டார்.

"காலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அதெல்லாம் கவனிக்காததால் தான் இது போன்ற தோல் வியாதிகள் 'உங்களுக்கு' வருகின்றன"

அய்யா 'உங்களுக்கு' என்றது சின்னவருக்குத் தனியாக உபயோகித்த மரியாதைப் பதம் அல்ல. எந்தச் சமூகத்தை நம்பி வயிறு வளர்க்கின்றாரோ அந்தச் சமூகத்தையே அப்படிக் கிண்டலாகக் குறிக்கின்றார் என்பது, 'உங்களுக்கு' என்ற அந்தச் சொல்லுக்கு அவர் கொடுத்த அழுத்தத்தில் புலனாகின்றது.

"ஐயான்னா சப்பாத்து மேசுல காலை வைச்சிருப்பீங்க!. பங்களாவுக்குப் போனப்புறமும் சிலிப்பர்லே வைச்சிருப்பீங்க!. என்னால ஆவுமாங்க? அதோ பாருங்க எட்டேக்கர் உச்சி! அதுல ஏறி பத்தேக்கர் வறக்கட்டு வழியா எறங்குனேன்னா... காலா, கையா...! எதைப் பாக்குறது!"

"அது கெடக்கட்டுங்க அய்யா இதுக்கு மருந்து தருவிங்களா? நானும் ஏதேதோ போட்டுப் பாத்துட்டேன். ஒன்னுக்கும் மசியுதில்லே!"

"இது சிம்பிள் கணக்குப்பிள்ளே! சின்னப் போத்தல் அனுப்பினா ஒரு மருந்து அனுப்புறேன்! கர்பாலிக் சோப் தெரியுமா? செவப்பு கலர்லே இருக்குமே? சுடுதண்ணி போட்டுக் கழுவிட்டு நல்லா ஒத்திட்டுக் கோழி மயிரிலே தொட்டுத் தொட்டுப் போடணும்... சரியா ரெண்டே கெளமியில கால் சுகமாயிறும்!"

சின்னவருக்குத் திருப்தியுடன் கூடிய மகிழ்ச்சி. கால் ஒன்றுக்குமே ஆகாது போய்விடுமோ என்று பயந்து போயிருந்த அவருக்கு டாக்டரய்யாவின் பேச்சு வரப்பிரசாதம் போல் இருந்தது.

"ஆறிப் போயிறும் தானுங்களே!?" என்று மறுபடியும் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுகின்றார்.

"ஆறாமே சின்னக் கிளாக்கரய்யா தங்கச்சிக்கு இதைவிட மோசமா இருந்துச்சே..! நானே தான் கழுவி மருந்து போட்டேன்..! ஒரே மாசத்துல தழும்பு கூட இல்லாமப் போச்சு!"

"அவுங்களும் கால் கை கழுவாமல், குளிக்காமல் இருந்தாங்களோ?" என்று சின்னவர் நினைத்துக் கொண்டார். ஆனால் கேட்கவில்லை.

"அந்தத் தங்கச்சிக்கும் இதே எடத்துலயாங்க?" என்று கேட்டவர் ஐயா ஒரு வினாடி தயங்கியதைக் கண்டதும் "ஏன் கேட்டோம்' நமக்கேன் வீண் வம்பு" என்று எண்ணிக் கொண்டார்.

ஒரு வினாடி தயங்கிய ஐயா... "மொளங்காலுக்கு கொஞ்சம் மேலே" என்றபடி லொறியில் ஏறிப் போய்விட்டார்.

"நானே கழுவி நானே மருந்து போட்டேன்" என்று அவர் கூறியதி லிருந்து மொளங்காலுக்கு கொஞ்சம் மேலேயா இருக்காது! கூடவே மேலேயாத்தான் இருக்கும்" என்று எண்ணிக் கொண்டவர் "எந்த எடமா இருந்தா நமக்கென்ன இது ஆறுனா சரி" என்றவாறு காலைப் பார்த்தார்.

தோல் வெடிப்புற்று நீர் கசிந்து காய்ந்து கோரமாய்க் கிடக்கிறது அந்த இடம்.

- ● -

கார்பாலிக் சோப் போட்டுக் கழுவிவிட்டு மிகவும் நம்பிக்கை யுடன் அய்யா அனுப்பியிருந்த மருந்தைப் பூசத் தொடங்கினார் சின்னவர்.

ஆனால் கால் அரையாகி முக்கால்வாசிப் பாதமுமே கன்னங் கறேல் என்று சொறிக் கல்லாய் மாற மாற அவருடைய நம்பிக்கையும் மாறிவிட்டது.

அந்தம்மாவுக்குப் பூசக்கொடுத்த அதே மருந்தைத்தான் தனக்கும் கொடுத்திருப்பார் என்று அவரால் நம்ப முடியவில்லை.

மருந்து வியாதிக்கு ஏற்றவாறு வித்தியாசப்படாமல் ஆளுக்கு ஏற்ற வாறு வித்தியாசப்படுவது என்ன விந்தை!

அய்யாவின் மருந்துதான் காலை ரொம்பவும் மோசமாக்கிவிட்டது என்றாலும் தப்பில்லை.

அவர் கொடுத்தனுப்பிய மருந்துப் போத்தலைத் தூக்கித் 'தலை யைச் சுற்றி' வீசிவிட்டு ஒரு சில நண்பர்கள் கூறியபடி ஒரு நிக்சோடம் (NIXODERM) டின்னை வாங்கிக் கொண்டார்.

அடுப்புக்கு மேல் இருக்கும் கறுத்தச் சுவருக்கு சுண்ணாம்பு அடிப் பதுபோல் ஆள்காட்டி விரலால் நிக்சோடம்மைத் தொட்டு அள்ளிப் பாதத்தின் கறுப்பில் பூசிக் கொண்டு விந்தி விந்தி நடந்துவரும் சின்ன வரைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும்.

'மட்டக் கொழுந்து மலையை'ப் பார்வையிட்டு விட்டு இறங்கிக் கொண்டிருந்தவர் கானைத் தாண்டுவதற்காக கானொட்டில் கிடந்த கல்லில் இடது காலை ஊன்றினார்.

கல் ஆடி உருளவும் தடுமாறிப் போனவர், சமாளித்து ஒரு எட்டில் கானைத்தாவி வலது காலை ஊன்றி நின்றார்.

நீட்டிக் கொண்டிருந்த ஒரு தேயிலைக் கம்பு தாண்டும்போது எக்சீமாவில் கீறிவிட்டது.

சுரீர் என்றது சின்னவருக்கு.

உயிர் நிலையில் அடி விழுந்ததுபோல் வயிற்றுக்குள்ளே ஒரு சுழற்சி.

கண்கள் கலங்கிவிட்டன.

காலை இறுகப் பற்றிப் பிடித்தபடி தேயிலைக்குள் அமர்ந்து கொண்டார்.

வெள்ளையாகப் பூசப்பட்டிருந்த நிக்சோடத்துக்கும் மேலாக தண்ணீரும் இரத்தமும் கசிந்து இழைந்து கொண்டிருந்தன.

மௌனமாகச் சிறிது நேரம் அழுது ஆற்றிக் கொண்டவர் மண்ணை அள்ளி லேசாகத் தெள்ளி கசியும் இரத்தத்துக்கு மேல் தூவி விட்டுக் கொண்டார்.

இதுபோல் எத்தனையோ தடவைகள் கம்பும், கல்லும், குச்சியும், கோலும் கீறிப் பிளந்திருக்கின்றன.

அப்பொழுதெல்லாம் அவர் இரத்தம் வடியும் காலுடன் நேராகப் பெரியவரிடம் வந்து முறையிடுவார்.

"பாத்தீங்களா..! இந்த எளவுக்காகத்தான் ஒரு சப்பாத்தை மாட்டிக்கிறேன்னு உங்ககிட்ட கேட்டுக்கிட்டே இருக்கேன்!" என்பார் அழாத குறையாக.

பெரியவரா அசைந்து கொடுப்பார்!

"என் காலைப் பாருங்க... எத்தனை காயம்... எத்தனை கீறல்..! எனக்கு சப்பாத்து போட்டுக்குற தெரியாதா? தொரை ஒரு மாதிரியா பாப்பானே..! 'என்ன இன்னைக்கு சப்பாத்தோட வர்றாரு! நாளைக்கு கார்ல வருவாரோ'ன்னு கருவிப்புட்டான்னா... நாம அவ்வளவுதான்!"

அதற்கு மேல் பெரியவரிடம் கெஞ்சியும் பலனில்லை வாதாடியும் பலனில்லை என்பது சின்னவருக்குத் தெரியும்.

நேராகத் துரையிடம் போய்க் கேட்டுவிடவும் முடியாது. "இவனும் திங்க மாட்டான் திங்கிறவனையும் விடமாட்டான். "வைக்கப் போருல படுத்துக்கிட்ட நாய் மாதிரி!" என்று முனகியபடி நடந்து விடுவார்.

காட்டோரத் தேயிலையடியில் பாசி மண்டுவது போல் காலில் கறுப்பு மண்டிக்கொண்டே இருந்தது.

இதுக்கெல்லாம் இங்கிலீஸ் மருந்து ஒத்துவராது என்று பலரும் கூறக்கேட்ட சின்னவர், பதுளை டவுனில் உள்ள ஒரு மலையாள வைத்தியரிடம் போய் காலைக் காட்டினார்.

"கேஸ் முத்திப்போச்சு" என்று தொடங்கிய வைத்தியர் காலை நன்றாக உற்றுப் பார்த்தார். "நான் மருந்து தாறன். மறு கெழமவர ணும்!. தோலுக்குப் பூசி ஆவப்போதில்லை!. உள்ளுக்குக் குடிக்க ணும்!." என் றார்.

"மொதல்ல வயத்தைக் கழுவணும் பெறகு பத்தியம் இருக்கணும்..! இறைச்சி, கருவாடு நாடப்படாது..! வாரக் கெழம வரட்டும்... நான் ரெடி பண்ணித் தாறன்" என்று அனுப்பி விட்டார்.

அவர் சொன்ன அடுத்த வாரம் சின்னவர் போய் நின்றார்.

ஒரு சிறிய 'ஹோர்லிக்ஸ்' போத்தல் நிறைய லேகியமும் வயிற் றோட்டத்துக் குடிக்க ஒரு பொட்டலமும் கொடுத்த வைத்தியர் "முப்பது ரூபாய் முடியுது" என்று முடித்தார்.

காசைப் பார்த்தால் காலைப் பார்க்க முடியாதே. சின்னவர் தன்னை ஆறுதல் படுத்திக் கொண்டார்.

காசை வாங்கி மேசையில் போட்டுக் கொண்டே வைத்தியர் கூறுகின்றார் "புண்ணுல ரத்தம் கசியக்கூடாது... நகம் படக் கூடாது... நல்லா அரிக்கும் ஆனா சொறியக்கூடாது... சொறிஞ்சி ரத்தம் வந்ததோ..! இந்த ஜென்மத்துல ஆறாது... கணுக்காலுக்கு மேலே ஏறிச்சோ அவ்வ ளவுதான்! கால் முழுக்கப் படர்ந்துரும்... ஒரு கால் ஊனமானாலும் ஆச்சரி யப்படுறதுக்கில்லே!"

சின்னவர் பயந்து போனார்.

"நான் தோட்டத்துல சின்னக்கணக்கப்பிள்ளை வைத்தியரே!. தேயிலைக்குள்ளாற ஏறணும் எறங்கணும! குச்சி கிச்சி ஒரசாமலா இருக்கும்..? ரத்தம் வராமலா இருக்கும் ..?"

வைத்தியருக்குக் கோபம் வந்துவிட்டது. டிராயருக்குள் கையை விட்டு முப்பது ரூபாயைத் தூக்கி மேசை மேல் போட்டுவிட்டு மேசை மேல் எடுத்து வைத்திருந்த மருந்துப் போத்தலை விருட்டென்று இழுத்து அலமாரியில் மற்ற போத்தல்களுடன் வைத்து விட்டார்.

"நான் மருந்து கொடுத்தா சொகமாகணும். காசுக்கு மட்டும் நான் வைத்தியம் பாக்குறதில்லே!. புண்ணுல ரத்தம் வரப்படாதுன்னா வராமப் பாத்துகுறணும்!" என்றவாறு ஒரு மலையாளப் பத்திரிகைக்குள் புதைந்து கொண்டார்.

அவரை சமாதானப்படுத்தி மருந்தை வாங்கிக் கொள்ள சின்னவர் பட்ட பாடு பெரும்பாடு!

கடைசி முறையாகவும் பெரிய கணக்கரிடம் கேட்டு மனமொடிந்து போன சின்னவரால் ஒரேயொரு முடிவுக்குத்தான் வரமுடிந்தது.

- ● -

வெற்றிலை வாயும் வெறுங்காலுமாய் பெரட்டுக் களத்தில் நின்றுக் கொண்டிருந்த பெரியவர் புதுச்சின்னவருக்காகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

புதுச் சின்னவரை இன்னும் காணவில்லை.

'டக்... டக்...' கென்ற சப்தம் சின்னக் கணக்கப்பிள்ளை வீட்டுப் படிகளில் கேட்கிறது.

முழங்காலுக்கு மேல் மடிக்கப்பட்டு முன்னிடைக்குள் செருகிய வேஷ்டியும் வெறுங்காலுமாய் கைச்செக்றோலுக்குள் லயித்துக்கிடந்த பெரியவர் கண்களை உயர்த்திப் பார்த்தார்.

பகீரென்றிருந்தது.

அரைக்கால் சட்டை சப்பாத்து மேல்சோடு சகிதம் தோட்டத்துச் சின்னத்துரை போல் வந்து கொண்டிருந்தார் புதிய சின்னவர்.

- ● -

தமிழமுது - 1968
மல்லிகை



# ஒரு புதிய உயிர்

5

வெட்டி இழுத்த தேயிலை வாது கையில் இருக்கவே கீழே பார்த் தான், மூக்கையா.

வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது. தலையை நிமிர்த்தி சூரிய னைப் பார்த்தான். ஒரு வினாடி வானவில்லாய் வர்ணம் காட்டிய சூரிய கதிர்களிடமிருந்து பார்வையை ஒதுக்கிக் கொண் டான்.

மணி பதினொன்றுக்கு கொஞ்சம் கூடக்குறைய இருக்கலாம்.

ஏறுவெயில்..! வெட்டுவது கவ்வாத்து... வியர்த்துக் கொட்டியது.

கறுந்தேகத்தின் வியர்வை பிசுக்கில் பட்டுத் தெரிப்பது போலவே வலதுகை பிடித்திருந்த கத்தியின் கூர்மையிலும் பட்டு தெரிக்கிறது சூரியக்கதிர். இரண்டுமே இரும்புதான்.

முட்டையுடன் ஊரும் சிற்றெறும்பு கூட்டம்போல் தண்ணீர்ப் பையுடன் ஏறிக் கொண்டிருந்தனர் சிறுவர்கள்.

மூக்கையாவின் மூத்தவன் சிங்காரமும் அவர்களுடன் ஏறிக்கொண் டிருப்பான்... போத்தலில் தேத்தண்ணீருடன்.

தேனீர் தேவையில்லை. வெறும் பச்சைத் தண்ணீர் கிடைத்தாலே போதும். அந்த நேரத்துக்கு சுவர்க்கம் போலிருக்கும்.

மலைமேல் நிற்பதால் சூரியனுக்கு அருகில் வந்துவிட்டதைப் போல் சுட்டுப் பொசுக்குகிறது வெயில்.

நாவின் வரட்சியும், வேலையின் களைப்பும் அவனை மாறி மாறி சோர்வடையச் செய்தாலும், "சிங்காரம் தண்ணீருடன் வருவான்" என்னும் நினைவின் துணிவில் இன்னும் நாலு மரம் வெட்டி விட்டான்.

"இன்னுமா ஏறி வார்றான்..." என்னும் சந்தேகத்துடன் மீண்டும் ஒரு முறை கீழே பார்த்தான்.

மலைக்கு தண்ணீர் கொண்டு வந்த பையன்கள் திரும்பிப் போய்க் கொண்டிருந்தனர். ஒரு சிலர் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

"என்ன ஆச்சு இவனுக்கு..!" என்னும் நினைவுடன் கவ்வாத்துக் கத்தியை கக்கத்துள் இடுக்கிக் கொண்டவன் தலைத் துணியை உதறி கழுத்து... நெஞ்சு... முகம்... முதுகு... என்று அழுத்தித் துடைத்த வண்ணம் வெட்டுப்படாத தேயிலையை இழுத்து நெறித்துக் கொண்டு மேலே ஏறினான்.

ஆறேழு தேயிலை ஏறினால் மேலே றோட்டு! றோட்டு வளைவில் ஊற்றுக்கான்.

இது அவனுக்கும் தெரியும். தண்ணீர் குடிப்பவர்களைப் பார்த்ததும் இவனுடைய தாகம் இவனை தள்ளிக் கொண்டு போகிறது.

பாதையில் சிறிது நடக்கும்போதே 'சொர்ரென்று' ஊற்றும் தண்ணீரின் ஓசை குளிர்ச்சியுடன் ஓடி வந்து காதில் பாய்கிறது.

வாங்கியில் குத்தி வைத்திருந்த இரண்டு பெரிய தேயிலை இலை! இலைநுனியில் 'சர்ரென்று' ஊற்றிய நீர் பளிங்கு போல் மின்னியது நாலு கை நிரப்பிக் குடித்தவன். இரண்டு கை நிரப்பி தோளுக்கு மேலாக முதுகில் விசிறிக் கொண்டான்... பிறகும் குடித்தான்.

நீரொழுகும் முகத்துடன் நிரையில் வந்து நின்றவனுக்கு புதிதாக ஒரு தெம்பு வந்திருந்தது.

'மட மட'வென்று வெட்டத் தொடங்கினாலும் "சிங்காரம் ஏன் தண்ணி கொண்டாறலை" என்ற நினைவு மறுபடியும் எழுந்து கொண்டே இருந்தது.

- ● -

ஆளுயரம் வளர்ந்து அழகாக வெட்டப்பட்டு வேலியாய் நிற்கும் சப்பாத்துச் செடிகள் தேயிலை மலையையும் ஆஸ்பத்திரியையும் பிரித்து வைத்துக் கொண்டாலும், மருத்துவசாலைக்கேயுரிய அந்த மணம் பலதரப்பட்ட மருந்துகளின் அந்தக் கலவை நெடி ஆஸ்பத் திரியை சுற்றியுள்ள தேயிலை நுனிகளில் இழைவதை தடுத்துக் கொள்ள முடியவில்லை.

எட்ட நடக்கும்போதே ஆஸ்பத்திரி கிட்ட இருக்கிறது என்பதை அந்த மணம் காட்டி விடுகிறது.

கத்திரிக்கு அகப்படாத ஒரு சில மொட்டுக்கள் சிவப்பாய் பூத்துச் சிரிக்கின்றன... வேலியில்.

வந்து போகும் நோயாளிகளைத் தவிர்த்து ஒரு அறுபதுக்கும் மேற்பட்ட நோயாளிகள் தங்கி இருக்க வசதி பெற்றது அந்த ஆஸ்ப த்திரி. எத்தனையோ வைத்தியர்கள் வந்து போய்விட்டனர். சிங்களவர்... தமிழ்... முஸ்லீம்... என்று.

ஐந்து பேர் தங்கியிருந்து மருத்துவம் பெறப் போதுமானதாக, ஒரு சிறு மருத்துவமனையாக இருந்தது. இன்று இத்தனை பெரியதாக ஆகியுள்ளமைக்கு இங்கு பணியாற்றிய ஒவ்வொருவருமே காரண மாகின்றனர்.

"கல்வி கொடுத்தோன், கண் கொடுத்தோன்" என்பது போல் இது உயிர் கொடுக்கும் பணி.

இப்போது இருப்பவர் ஒரு யாழ்ப்பாணத்தவர். வேலி இடுக்கால் பார்க்கும்போது தனது சின்னஞ்சிறிய அறையில் அமர்ந்து நோயா ளிகளை பரிசோதித்துக் கொண்டிருக்கின்றாரே அவர் தான் பெரிய டொக்டர்.

ஆஸ்பத்திரி பெரிதென்றாலும் அவருடைய அறை சிறியது தான்.

அவருடைய அறை இன்னும் பெரியதாக அமைந்துவிட்டால் தங்கி மருத்துவம் பெறவேண்டிய ஒரு நோயாளியை குறைத்துக் கொள்ள வேண்டிய சங்கடம் ஏற்படும் என்பதை அவர் அறிவார்.

பிரசவத்துக்காகப் பத்துப்பேரை தங்க வைக்குமளவிற்கு அறைக ளையும், பிரசவ அறையின் தரைக்கு 'மார்பல்' போட்டுக் கொண்ட பெருமையும் இவருடைய சேவையுள் அடங்குகின்றன.

காசு கொடுப்பது தோட்டம் தான் என்றாலும் எதற்குக் கேட்க வேண்டும் என்பது தானே நிர்வாகத்தின் விவஸ்த்தை.

ஆஸ்பத்திரியின் பின்புறத்தே ஒரு இருபது முப்பது யார் தொலை வில் நின்ற பலா மரம் இப்போது ஆஸ்பத்திரி பின் சுவரின் அருகே நிற்கிறது.

பலாமரத்தின் அடியில் பெரிது பெரியதாய் மூன்று அடுப்புக் கல்லும் கற்களின் மேல் ஓர் கரி பிடித்த அரை 'ட்றம்'மும் இருக்கின்றன.

பாவம் இந்தப் பலாமரம்... முன்பெல்லாம், "தேயிலையை நிழ லாக்குகிறது... பழுத்த இலைகள் விழுந்து விழுந்து கொழுந்து அமுங்கி விடுகின்றது..." என்று காரணம் கூறி தேயிலைகளுக்கு மேலாக விரிந்து நின்ற கிளைகளை பால் வடிய பால் வடிய வெட்டி மொட்டை யாக்கிவிடுவார்கள்.

ஆஸ்பத்திரிக் கூரைக்கு மேலாக விரியும் கிளைகள் 'சர் சர்' என்று இலைகளும் கொப்புகளுமாக கூரைத் தகரத்தை வருட படர்ந்தி ருந்தன.

ஆஸ்பத்திரிக் கட்டிடம் விரிய விரிய கூரைக்கு மேல் லாவகமாக ஆடி அசைந்த கிளைகளுக்கும் ஆபத்து வந்தது.

மரத்திலிருந்து கிளை பிரியும் இடத்தில் வைத்து ஒட்ட வெட்டிவிட் டார்கள்.

கிளை பரப்பி நின்ற பலா மரத்தை மொட்டைப் பலா மரமாக் கிவிட்டான் மனிதன்.

அடி மரமும் இப்போது சூடுபட்டு சூடுபட்டு பொந்தாகி விட்டது. கூரையிலிருந்து குதித்து வரும் அணில்கள் இந்தப் பொந்துக்குள் புகுந்து தேயிலைக்குள் ஓடி மறைகின்றன.

பலா மரப் பொந்துக்குள் கையை விட்டு மரத்தைக் கெட்டியாகப் பிடித்து ஒரு உந்து உந்தி தாவி ஏறினான் 'ஜினதாச'.

ஆசுபத்திரிக்கு மருந்து வாங்க வருவதற்கு இது வழி இல்லை என்றாலும் இந்தப் பக்கமிருந்து வருகின்றவர்கள் இப்படித்தான் ஏறிக் குதிப்பதுண்டு. பெரியவர் கண்டுவிட்டால் 'சள்'ளென்று விழுவதுடன் மருந்து தர மறுத்து விரட்டியும் விடுவதுண்டு.

பன்சலயிலிருந்து வந்த ஜினதாச அய்யாவுக்குத் தெரியாமல் குனிந்து வந்து ஆட்களுடன் நின்று விட்டான். பிறகு முண்டியடித்து முன்னேறி அய்யாவின் முன் நின்று கையிலிருந்த கடிதத்தை நீட்டினான்.

"எப்படி ஜினதாச... தங்குவதற்குத் தயாராக வந்ததா..." என்ற படி கடிதத்தைப் பிரித்துப் படிக்கின்றார்.

நேற்று அவன் வயிற்றுவலி என்று வந்திருந்தபோது சோதித்துப் பார்த்தவர் "ஆஸ்பத்திரியில் தங்கியிருக்க வேண்டும். வலியை நிப்பாட்ட இப்ப மாத்திரை ரெண்டு தர்றேன்... உன்னை சோதித்துப் பார்க்க வேண்டும்... நீ போய் தங்குவதற்கு தயாராய் வா..." என்று கூறி அனுப்பினார். அவன் இப்போது வந்து இந்தக் கடிதத்தை நீட்டுகிறான்.

பன்சலையிலிருந்து பௌத்த குருவானவர் கொடுத்தனுப்பிய கடிதம் அது.

...ஜினதாசவைத் தவிர வேறு யாராலும் அந்தப் பசுவில் பால் கறக்க இயலாதாம். ஆகவே காலை மாலை பால் கறக்க அவன் இருந்ததாக வேண்டும்... என்பதே கடிதம்.

டக்டரய்யாவுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. "பசு மாட்டிடம் பால் கறப்பதும் கறக்காமல் விடுவதும் எனக்குத் தேவையில்லை. வியாதி யஸ்த்தனின் வியாதியைக் கண்டுபிடித்துக் குணமாக்குவதே ஒரு வைத்தியனின் வேலை. இஷ்டமென்றால் இரு இல்லாவிட்டால் போ..."

என்று கூறிவிட்டு எழுந்துவிட்டார். முன்னே நின்றுகொண் டிருந் தவர்கள் ஒதுங்கி வழி விட வாங்குகளில் குந்தியிருந்தவர்கள் எழுந்து வணக்கம் கூற அய்யா வாட்டுகளைப் பார்க்க நடந்துவிட்டார்.

பிரசவத்துக்காக வந்திருப்பவர்களைப் பார்க்கும் நேரம் இது. கதவைத் திறந்து மூடிவிட்டு உள்ளே நுழைந்தார்.

சுற்றியுள்ள சேலையையும் மேவி, நெஞ்சுவரை நிறைந்து விட்ட வயிற்றுடன் முக்கி முனகி எழுந்திருக்க முயன்றவளை... "ம்ம்... எழும்ப வேண்டாம்... அப்படியே இரு..." என்று கையமர்த்தியவர்

"என்ன பேரு?" என்றார்.

"மூக்காயிங்க..."

"இப்ப எப்படி இருக்கு... மயக்கம் வருதா....?"

"இல்லீங்க.... நேத்து சின்னய்யா ஏதோ ஒரு புது மருந்து குடுத் தாரு... அதுலேயிருந்து மசக்கை இல்லீங்க... ஆனால் நிக்க முடியலே... கால்ல 'வெட வெட'ன்னு வருது..." இந்தக் கொஞ்சம் பேசியதற்கே பெரிதாக மூச்சு விட்டாள்.

"புருசன் பேரு என்ன சொன்னே....?"

"மூக்கையாங்க..."

"அய்யா மூக்கையா... அம்மா மூக்காயி... ரொம்பப் பொருத்தமா இருக்கு அது தான் வருசா வருசம் வந்துறே..."

மூக்காயி சிரிக்க முயன்று முடியாமல் வயிற்றைப் பிடித்துக் கொள்ளுகின்றாள், முனகலுடன்.

"சிரிக்கையில வயிறு வலிக்குதா...?"

"ஆமாங்க அய்யா... இனி சிரிப்பு காட்டாதீங்க..."

அதைப் பரிசோதிக்கத்தான் அப்படிச் சொன்னேன். உன்னைக் கேலி செய்ய இல்லே... என்றவர் அவளுடைய இமையைப் பிரித்து விழிகளையும் நாவையும் பார்த்துவிட்டு...

"எத்தனையாவது?" என்றார்.

"நாலுங்க..."

"வைத்தியர் கிட்ட பொய் சொல்லக்கூடாது. இது எத்தனை யாவது...?"

"ஆண் ரெண்டு பொண் ரெண்டுங்க..."

"ஆக மொத்தம் நாலுங்கிறே... நான் லயத்துல இருக்கிறதைப் பத்தி கேக்கலே... வயத்தில இருக்கிறதைக் கேட்டேன்."

"இது அஞ்சாவதுங்க. மத்த நாலும் சின்னஞ் சிறுசுக... அதான்..."

அவள் முடிக்குமுன் அய்யா வெடுக்கென்று கூறினார்... "உனக்கு வேண்ணா வீட்டுல இருக்கிற புள்ளைகளைப்பத்திய நெனைவு இருக்கலாம். என்னோட கவலை எல்லாம் உன் வயத்துல இருக்கிற புள்ளையைப் பத்தித்தான்....

"அய்யா கிட்ட ஒரு உதவி கேக்கணும்க..."

"கேளு..."

நானு வீட்டுக்குப் போகணும்க... சாமி, தொரை தான் மனசு வைக்கணும்... சுடு தண்ணி காய வச்சி குளிக்கணுங்க..."

"ஓஹோ... பழைய பல்லவி தானே... உனக்கு குளிக்கணும். அதுவும் சுடுதண்ணி வச்சுக் குளிக்கணும்... அதுக்கு நான் ஏற்பாடு செய்யிறேன். இங்கேயே பின்னுக்குக் குளிக்கலாம். நிக்க முடியலே நடக்க முடியலேங்குறது..." என்றபடி அடுத்த கட்டிலைப் பார்க்கப் போய்விட்டார் அய்யா.

- ● -

"சிங்காரம்... ஏய் சிங்காரம்... என்று கூப்பிட்டபடியே லயத்தை அடைந்தான் மூக்கையா. அலுத்துக் களைத்து வந்தவனுக்கு வீடு வெறிச் சோடிக் கிடந்ததில் ஆத்திரம் வேறு.

கவ்வாத்து கத்தியையும் குட்டிச் சாக்கையும் அரைச் சுவற்றில வைத்து விட்டு இஸ்தோப்பில் நின்று கண்களால் பிள்ளைகளைத் தேடினான்.

லயத்துத் தொங்கலில் கொஞ்சம் சிறிசுகள் நொண்டிக் கோடு ஆடிக் கொண்டிருந்தனர். அந்தக் கூட்டத்தில் இவனுடைய சின்னதுகளும் இருக்கலாம் என்ற எண்ணத்தில் மறுபடியும் கூப்பிடப் போனவன், கோடி பக்கமிருந்து ஓடி வந்த சிங்காரத்தைக் கண்டதும்

“எங்கேடா கோடிப் பக்கமிருந்து ஓடியாரே” என்று கோபமாகக் கேட்டான்.

களைத்திருந்த நேரத்தில் மலைக்கு தண்ணீர் கொண்டுவராத கோபம். மூக்காயி இன்றைக்கும் வரவில்லை என்னும் ஏமாற்றம் எல்லாமாகச் சேர்ந்து அவனைச் சீண்டி விட்டன.

”கோழிக் குடாப்பை மூடப் போனேம்பா... கூப்பிட்டியோ...” என்ற வாறு அவனிடம் வந்து நின்று கைகளைப் பிசைந்தான் சிங்காரம்.

“கூப்பிடலே வெளக்குமாத்தக்குப் பட்டுக் குஞ்சம் கட்டுன மாதிரி பேர் வச்சிருக்காள்ல ஒங்க ஆயா... அதை வாய் நெறைய சொல்லி மகிழ்ந்துகிட்டேன்... ஏண்டா மலைக்குத் தண்ணி கொண்டாறலை...”

விருட்டென்று அவனைக் கடந்து உள்ளே ஓடிய சிங்காரம் “இந்தா பாருப்பா... தேத்தண்ணியைப் போத்தல்லே ஊத்தி குட்டிச் சாக்குல எல்லாம் போட்டு வச்சிருக்கேன்... ஆனா... ஆனா...”

பதறிப் போனான் மூக்கையா. “ஆனா என்னடா... என்ன நடந் துச்சு... எங்கே ஒங்கக்கா எங்கே... சந்திரபோசு....” என்று அவசரமாகக் கேட்டான்.

“தண்ணியெல்லாம் ரெடி பண்ணிகிட்டு தம்பி வரக்காட்டியும் இருந்தேம்பா... பள்ளிக்கொடத்துல இருந்து வரயில சந்திர போசு கால்ல போத்தல் ஓடு வெட்டி... ஒழுகிற ரத்தத்தோட ஓடியாந்தான்...”

“அடப்பாவி அவனுக்கென்ன கண்ணு பொட்டையா இல்லே பொரடில இருக்கா... பார்த்து வரக்கூடாது... இப்ப எங்கடா...”

“நான் சீலைத் துணியால சுத்திப் பார்த்தேன் நிக்கலே ரத்தம்... பக்கத்து வீட்டு மாமா ஓடியாந்து பாத்துட்டு அடப்பாவி இப்படிப் பொளந் திருக்கு இதுக்கு நீ கட்டுப் போடுறியோன்னு அவனைத் தூக்கிக்கிட்டு ஆசுப்பத்திக்கு போயிறிச்சி. ஆசுப்திரிலேருந்து வந்த தும் ஒனக்கு தண்ணி கொண்டாறுவோம்னு இருந்தேன்... இன்னும் காணலை...”

பன்னிரண்டு வயதுகூட நிறையாத சிறுவன் சிங்காரம் பரிதாபமாக நின்றான். அவன் கண்களில் ஒரு பயம்... அப்பாவிடம் இருந்து எதையோ மறைக்கும் பயம் படர்ந்திருந்தது.

இந்த அடுப்பு மொடையெல்லாம் கூட்டிப்போடு... ஒரே சாம் பலா கெடக்கு... என்ன இது இப்படி அடுப்பெல்லாம் தண்ணி ஊத்திக் கெடக்கு...” என்றபடி தொட்டிலைத் திருப்பி விட்டான். இவ்வளவு நேரமாக ஈரத்தில் கிடந்தது தொட்டில் திரும்பியதால் வில்லாய் வளைந்து சிலிர்த்தது.

தொட்டிலுக்கு வெளியே நீண்ட கால்களை உள்ளே தள்ளி துணியை இழுத்துவிட்டவன் "ஆட்டிவிடு" என்று கூறிவிட்டு வெளியே வந்தான்.

மனைவி இல்லாத வீடு இப்படித்தான் அலங்கோலமாய் இருக்கும்.

கை கால் அலம்பிக் கொண்டு அவன் வருவதற்குள் சிங்காரம் சாப் பாட்டை எடுத்து வைத்தான். "நீங்கள்ளாம் சாப்பிட்டாச்சா..."

சாப்பிடத் தொடங்கும் முன் கேட்டுக் கொண்டான் மூக்கையா.

ஆம் என்பதற்கடையாளமாகத் தலையை ஆட்டினான் மகன் அத்துடன் "சந்திரபோசு இன்னும் சாப்பிடலையப்பா" என்றும் கூறி வைத்தான்.

அவனால் சாப்பிட முடியவில்லை. இருந்தாலும் பசித்த வயிறு, களைத்த உடல்... சாப்பிடத் தூண்டியது. "நான் போயி பேரு போட் டுட்டு அப்படியே ஆயாவைப் பாத்துட்டுத்தான் வருவேன்... தம்பி வந்ததும் சாப்பாடு கொடுத்து படுக்கவை.. உங்கக்கா, தங்கச்சிக்கு விஸ்கோத்து எதும் ஊட்டுச்சா... எங்கேடா அந்தச் சனியன் கூப்பிடு அதை" என்று கத்தினான்.

"ஊட்டிச்சுப்பா... ஊட்டிப் படுக்கப் போட்டுட்டுத்தான் வெளை யாடப் போச்சு... எத்து மாங்கொட்டைப் பாயுதுப்பா... இப்போதிக்கு வராது... இன்னும் மூணு நாலுகோடு இருக்காம்" என்று அப்பாவி டமிருந்து எதையோ மறைக்கும் பயத்துடன் கூறினான் மகன்.

"சரி சரி வெளையாடட்டும் இதுக்குள்ளே வந்து நொளைஞ்சி கிட்டுத்தான் என்னத்தைப் பண்ண" என்றவாறு சாப்பிடத் தொடங்கி னான்.

மூக்கையா ஆஸ்பத்திரியை அடைந்தபோது பெரியவர் பிரசவ வார்ட்டின் உள்ளே இருந்து வெளியே வந்தார்.

இந்த நேரத்தில் அவன் அவரை அங்கு எதிர்பாக்கவில்லை.

"யாரு... மூக்காயி புருசனா? சம்சாரத்தைப் பார்க்க வந்தியா... சரிசரிபாத்துட்டுப்போ..." அய்யா வெளியே நடக்க அவன் உள்ளே நுழைந்தான்.

முனகியபடி கட்டிலில் படுத்திருந்த மூக்காயி கணவனைக் கண்ட தும் எழுந்து அமர்ந்தாள். "என்ன புள்ளே என்ன பண்ணுது... இன்னிக்கும் கௌம்பலியா..."

"அய்யா போயிட்டாரா...?" ரகசியமாகக் கேட்டாள்.

“போயிட்டாரு... என்ன சொல்றாரு...”

“லயத்துக்கு அனுப்ப மாட்டேங்குறாரு...”

“அவரு பாட்டுக்கு ஒன்னை ஆசுபத்திரிலே உக்கார்த்தி வச்சிக் கிறுவாரு... அவருக்கென்ன... எனக்குல்ல தெரியும் நான் படுற பாடு...”

“ஏன் எனக்குத் தெரியாதா வேலைக்கும் போய்க்கிட்டு அந்த நாலோடையும் நீ கயிஷ்டப்படுவேன்னு... அதுக்காகத்தானே எப்புடி யாச்சும் கேட்டுக்கிட்டு வந்துடலாம்னு நெனைக்கிறேன். லயத்துக்குப் போயி சுடுதண்ணி வச்சிக் குளிக்கணுமுங்கன்னு கொட கேட்டுப் பாத்தேன். இங்கேயே வச்சித் தர்றேன்ங் குறாரு...”

“அதெல்லாம் நமக்குத் தெரியாது. நீ சொகுசா இங்கேயே குந்திக் கிரு... புதுசா வர்ற இதைப் பெத்துக்கிட்டு நீ அங்கே வர்றதுக்குள்ளே அங்கே இருக்குற நாலுல ரெண்டொன்னு போயிறும்...”

“அப்படி எல்லாம் சொல்லாதே...” அவள் உடலில் ஒரு புதுப் பலம். எப்படித்தான் வந்ததோ தெரியாது விருட்டென்று எழுந்து அவன் வாயைப் பொத்தினாள்... அவன் தொடர்ந்தான்.

ராசாமணி.., ஓம் மக.., அடுப்புலேருந்து கேத்தலைத் தூக்கு றேன்னு கொதிக்கிற தண்ணியை காலுல ஊத்திக்கிட்டிருக்கு... காலெல்லாம் கொப்பளிச்சுப்போயி... இந்தச் சிங்காரம் பய என்ன டான்னா அதுக்கு வாழைப் பட்டையை புளிஞ்சி தேய்ச்சி கோழிக் குடாப்புக்கு பின்னால குந்த வச்சிட்டு எத்து மாங்கொட்டை வெளியாடுதுப்பான்னு என்கிட்டயே சமாளிக்கிறான். சந்திரபோசு..! கால்ல போத்தலோடால பொளந்துகிட்டு...”

“அய்யோ... போதும்... வேற ஒன்னும் சொல்லாதே... நானு ஐயாகிட்ட கெஞ்சிக் கெளரி கெளம்பிடுறேன்... நீ போயி அய்யா கிட்ட சொல்லு. இப்ப ஆபீசுலதான் இருப்பாரு...” என்றபடி தன்னு டைய உடுப்பு இத்தியாதிகளை சேகரிக்கத் தொடங்கினாள்.

மூக்கையா மெதுவாக டாக்டரய்யாவின் ஆபீஸ் அறையை நோக்கி நடக்கிறான்.

நோயாளியைப் பார்க்க வந்தவர்கள் ஆஸ்பத்திரி வராந்தையில் நடந்து கொண்டிருக்கின்றனர். இரண்டொருவர் மாத்திரமே டாக்ட ரய்யாவின் அறையில் நிற்கின்றனர்.

மூக்கையாவும் வந்து அய்யா முன் நின்றான்.

“செலாங்கையா”

"யாரு மூக்கையாவா... என்ன வேணும்..." எழுதிக் கொண்டிருந்த பேனையை புத்தகத்தின் மேல் வைத்துவிட்டு கதிரையில் சாய்ந்து அமர்ந்தபடி சாவகாசமாகக் கேட்டார் அய்யா.

மொட்டைப் பலா மரத்தின் பக்கமிருந்து தோட்டத்து லொறியின் ராட்சச முனகல் சப்தம் கேட்டது.

"கொஞ்சம் நின்னுக்கிறு மூக்கையா" என்று எழுந்தவர் அறையின் வாசலில் நின்று "வாட்லி..." என்று பலமாகக் கூப்பிட்டார்.

மருந்தறைக்குள் கைவேலையாக இருந்த பையன் ஓடி வந்து அய்யா முன் நிற்க "ஆறாவது கட்டில் நாகம்மாவை றெடி பண்ணு... பெரியாஸ்பத்திரிக்கு அனுப்ப... லொறி வந்தாச்சு... நீயும் லொறிலே போகணும்... என்றவர் திரும்பி வந்து அமர்ந்தபடி "இப்பச் சொல்லு மூக்கையா..." என்றார்.

"சம்சாரத்தைக் கூட்டிக்கிட்டுப் போகணும்க... வீட்டுல சின்னஞ் சிறுகளை வச்சிகிட்டு ஒரே கரைச்சல். அய்யாவுக்கே தெரியும்! பகல் சந்திரபோசு காலைப் பொளந்துகிட்டு வந்திருந்தான் மருந்துகட்ட..."

"அதுக்காக..? இதெல்லாம் நீ சமாளிச்சுக்கிறணும். என்னாலே ஒன் னும் செய்யேலாது. வாயும் வயிறுமா இருக்கிறவளை தாயும் பிள்ளை யுமா ஒங்கிட்ட சேர்க்கிறது என்வேலை. அதுக்கு ஏதாவது எடை ஞ்சல் வர்றதை நான் அனுமதிக்க ஏலாது..."

கல்லைப் போன்ற முகத்திலிருந்து திடமான வார்த்தைகள் வெளி வந்தன.

"இந்தப் புள்ளையப் பெத்துகிட்டு இவ வரக் காட்டியும் அங்க இருக்கிறதுல ஒன்னு ரெண்டுக்கு என்னமாச்சும் ஆயிடுங்க. அதுதான் பயப்படுறேன்..."

கன்னத்தை உப்பி முகத்தைப் பலூன் மாதிரி வைத்துக் கொண் டிருந்த டாக்டரய்யா டக்கென்று கேட்டார். "நீ கூட்டிக் கிட்டுப் போற துனால தாய்க்கே என்னமாச்சும் ஆயிட்டா... இப்பவே மூக்காயிக்கு உடல் ரொம்ப பாதிப்படைஞ்சு இருக்கு... ரெத்தசோகை வேறெ..."

"கடைசிக் கொழந்தை தொட்டில கெடக்குங்க... அதைப் பாத்துக் கிறதுக்கே ஒரு ஆளு தனியா வேணும்... நான் வேலைக்குப் போக ணும்... இல்லாட்டி பேர் இல்லே..."

தன்னுடைய கடைசி அஸ்திரத்தைப் பாவிக்கிறான் மூக்கையா.

அய்யா மேசையில் இருந்த நீண்ட குச்சியை கையில் எடுத்து,

கதிரையின் பின்னால் கவற்றில் தொங்கும் படத்தை குச்சியால் எட்டித் தொட்டு "இது என்ன தெரியுமா உனக்கு..." என்று கேட் கின்றார்.

சுவரில் தொங்கும் படம் ஒரு கர்பிணிப் பெண்ணின் வயிற்றின் உள்பாகம்.

ஒரு புதிய உயிர் எப்படி உண்டாகிறது என்பதை விளக்கும் படம்.

இடைவெளி இன்றி குழந்தை பெறுவதால் தாயக்கும் சேய்க்கும் உண்டாகும் பாதிப்புக்கள் பற்றிய குறிப்புகள் சிவப்பில் தடித்த எழுத்தில் இருந்தன.

"இரு பிள்ளைகளுக்கான கால இடைவெளி குறைந்த அளவு ஐந்து வருடங்கள் இருப்பது சிறப்பு" என்னும் வரிகளில் அய்யா நீட்டிய குச்சியின் நுனி நிற்கின்றது.

"இதெல்லாம் பத்தி நாங்க சொல்லிக்குடுக்கையில ஒருத்தரும் கவனிக்கிறது இல்லே..." என்று இன்னும் ஏதேதோ கூறிக் கொண்டி ருந்தார் அய்யா.

இதொன்றும் மூக்கையாவின் செவியில் நுழைவதாக இல்லை.

மனைவியை எப்படியாவது கூட்டிப் போய்விட வேண்டும் என்பது மட்டுமே மனதில் இருந்தது.

அய்யா தொடர்ந்தார். "இதோ பாரு, ஒன் சம்சாரத்தையும் நாகம் மாளோட சேர்த்தே பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பத்தான் நெனைச் சிருந்தேன். பெறகுதான் இன்னொரு கெழமை இங்கேயே வச்சி சோதிக்கலாம்னு முடிவு செய்திருக்கேன். நீ என்னடான்னா...?"

"இது என்னங்கய்யா மொதப் பிரசவமா? இல்லே புதுப் பிரச வமா... அவளும் நாலைப்பெத்திருக்காள்ல... அந்த நாலும் சின்னஞ் சிறிசு அதனால் தான்..."

"இந்தா பாரு மூக்கையா மடத்தனமா பேசாதே! பத்தைப் பெத்தவ பதினொன்னாவதைப் பாதையிலயா பெப்பா! அதையும் ஆஸ்பத்தி ரியிலதான் பெக்கணும். பிரசவம்ங்கிறது ஒரு ஜீவ மரணப் போராட் டம்... உனக்கெல்லாம் அதை வெளங்கப் படுத்த என்னால முடியாது" அய்யாவின் குரலில் எரிச்சல் தெரிந்தது.

"ஐயா கொஞ்சம் கருணை வைக்கணும் வீட்டுல பிரச்சினை கூடங்க... அதால சமாளிக்க ஏலாதுங்க..."

குறுக்கே புகுந்தவள் மூக்காயி. "ஓஹோ... அய்யாவூட்டு தாளத்துக்கு அம்மா ஒத்தூதுறீங்களோ... சரி, சரி யாரையும் கட்டாயப் படுத்தி வாட்டுல நிப்பாட்டிக்கிற என்னால ஏலாது. இவ்வளவும் சொன்னேன். பிறகு உங்க இஸ்டம்..." என்று கூறியவர் ஒரு நீளமான ரெஜிஸ்டரை இழுத்தெடுத்தார்.

"பேஸண்ட் ரெடி சர்" என்று வாட்லி வந்து நின்றான்.

"இந்தா மூக்கையா இந்த எடத்துல கையெழுத்துப் போடணும்... நீயும் போடணும்..." என்று மூக்காயை ஏறிட்டுப் பார்த்தவர்

"இந்தா மூக்கையா.., கடைசியா சொல்றேன்... வயித்திலே இருக் கிறதும் லயத்திலே இருக்கிறதும் ஒண்ணில்லே. அதை யாரு வேணு மின்னூாலும் பார்த்துக்கிறலாம்... இதைப் பார்க்கிறது அப்படி யில்லே...." என்றவர் திடுக்கிட்டு எழுந்தார்.

பேய் பிடித்தவன்போல் அலங்கோலமாக ஓடி வந்த ஓட்டு லயத்து மாரிமுத்து அவர் சற்றும் எதிர்பாராத விதத்தில் அவர் காலடியில் விழுந்து கதறினான்.

ஒரு மாசத்துக்கு முன் இதே போல் அய்யாவிடம் சண்டை பிடித் தது மட்டுமல்லாமல், "நீ ஏன் என் பொண்டாட்டியை வீட்டுக்கு அனுப்ப மாட்டேங்கிறது எனக்குத் தெரியும்..." என்று போதையுடன் கத்திவிட்டுப் போனவன் இந்த மாரிமுத்து.

"அய்யா என்னை மன்னிச்சிருங்க. என் பெஞ்சாதியைக் காப் பாத்துங்க... ஏவூட்டு சின்னஞ்சிறுசுகளை அனாதையாக் கிட்டுப் போயிறுவா போல இருக்குதுங்க..." என்று மன்றாடினான் மாரி.

கைவாளியில் தண்ணீர் தூக்கி வந்தவள் கால் தடுமாறி விழுந்தி ருக்கிறாள். வயிற்றில் அடிப்பட்டுவிட்டது. பிரசவத்துக்கு இந்தா அந்தா என்றிருந்தவள். பிறகு கேட்பானேன். பேச்சு மூச்சு இல்லை வயிறு தனியாகக் கிடப்பதுபோல் சுருண்டு கிடந்திருக்காள். நெஞ்சு ஏறி இறங் குவதில் இருந்துதான் இன்னும் உயிர் இருக்கிறதை உணர முடிந் திருக்கிறது கருவிழிகள் மேலிமைக்குள் செருகி செருகி வருகின்றன. கூடி இருந்தவர்களும், சின்னஞ் சிறுசுகளும் குய்யோ முறையோ என்று கதற இவன் பதறிப்போய் ஆஸ்பத்திரிக்கு ஓடி வந்து அய்யா காலடியில் சரணடைந்துவிட்டான்.

"நான் என்னமாச்சும் தவறு செஞ்சிருந்தா அய்யா பெரிய மன சோட என்னை மன்னிசிடுங்க... இப்ப உங்களைத்தான் கடவுளா

நெனச்சி ஓடி வந்திருக்கேன் என் புள்ளைகுட்டிகளை அனாதை ஆக்கிடாதிங்க..."

நெருப்பில் நிற்பவன் போல் துடித்துக் கொண்டிருந்தான் அவன். ஓடும் ஒவ்வொரு வினாடியும் அவனை விழுங்கி விழுங்கி வெளி விட்டன.

"பேஷண்ட் ரெடி சர்" என்று வந்து நின்ற 'வாட்லி'யை பார்த்து அய்யா சொன்னார் "நாகம்மா அப்படியே இருக்கட்டும் ரெடியாக்கி வை..."

லொறி டிரைவர் வந்து எட்டிப் பார்த்துத் தன்னை ஆஜர் படுத்திக் கொண்டான்.

"இதோ பாரு நீங்க ரெண்டு பேரும் இந்த ரெஜிஸ்டர்லே கை எழுத்துப் போட்டுட்டுப் போகலாம்... பெறகு ஓடிவந்து சாமி கடவு ளேன்னு காலைப் புடிச்சாலும் பாரம் எடுக்கமாட்டேன். வாட்லி சின்னவரை வரச்சொல்லி கை எழுத்தை வாங்கச் சொல்லு" என்றவர் மாரிமுத்துவை ஏறிட்டு நோக்கினார்.

அடாவடிக்காரன்கூட ஆபத்து என்றதும் பரிதாபத்துக்குரியவனாகி விடுவதை உணர்ந்தார்.

மாரிமுத்து தலைகவிழ்ந்து நின்றான். "சரி... சரி... போய் லொறில ஏறு. நான் வந்து பாக்குறேன்..!" என்று அவர் சொன் னதும் சிலிர்த்துப் போனான். இவ்வளவு நேரம் சமாளித்துவிட்ட கண்கள் பொல பொல வென்று கொட்டத் தொடங்கின தடுமாறிப் போனவன் கண்ணீர் தெரி யாமல் மறைத்தபடி தழு தழுத்த குரலில் "அய்யா நல்லாருக்கணும்" என்றபடி நடந்தான்.

தான் அன்றைக்கு அய்யாவை அவமரியாதையாகப் பேசியதற்காக அவர் இன்று தன்னை ஆஸ்பத்திரியில் இருந்து விரட்டுவார் என்ற பயத்துடன்தான் வந்தான்.

டக்டரய்யா லொறியை நோக்கி நடந்தார்.

மூக்கையா மனைவியைப் பார்த்தான்..! முட்டிக் கொண்டிருக்கும் அவள் வயிற்றைப் பார்த்தான்..! லொறியில் ஏறி உட்காரும் அய்யாவை பார்த்தான்.

நிற்க சங்கடப்பட்ட அவள் வாங்கில் உட்கார்ந்துவிட்டாள்.

மொட்டைப் பலாவைத் தாண்டி தேயிலைக்குள் ஓடி மறைந்தது தோட்டத்து லொறி.

ஜன்னல் வழியே சீறிக்கொண்டு வந்த காற்று அய்யாவின் மேசை மேல் விரிந்து கிடந்த ரெஜிஸ்டர் தாளுடன் படபடத்து மறைந்தது. புத்தகத்தை மூடி வைத்த வாட்லி, மூக்கையாவைப் பார்த்தான். பிறகு வெளியே வந்தான்.

"சின்ன டக்டரய்யாவை வரச் சொல்றேன்" என்றது பார்வை. "அதற்காகத்தான் போகிறேன்" என்றது நடை.

"சின்னவரை வரச் சொல்லாதேப்பா பெரியய்யா வரக் காட்டியும் நாங்க இருக்கோம்" என்றவன் மனைவியின் அருகே வாங்கில் உட் கார்ந்து கொண்டான்.

தூரத்தே மலைகளுக்கடியில் விழுவதும் சற்று மேலெழு வதுமாக ஜாலம் காட்டிக் கொண்டிருந்தான் கதிரவன்.

*அந்த ஜாலம்... அந்த ரம்யம்... வார்த்தைகளுள் கட்டுப்படாத அதன் கம்பீரம்..! அந்தியில் விழுந்தாலும் அடுத்த நாள் அதே தேஜசுடன்... அதே ரம்யத்துடன்... அதே கம்பீரத்துடன்... ஒரு புதிய உயிராய் எழலாம் என்பதை அடையாளமாக்கிக் கொண்டிருந்தது...!*

- ● -

சௌமியம் இதழ் 1984



# பொட்டு

6

"பொட்டு வச்சிக்கிடட்டுமாங்க...?"

ஷேவ் செய்து கொண்டிருக்கின்றேன்.

குரலுடன் வந்த காற்று ஒரு காதுக்குள் நுழைந்து மறுகாதால் வெளியேறியது.

"பொட்டு வச்சிக்கிடட்டுமா வேண்டாமா..?"

இரண்டாவது தடவை வேகமாக வந்து... வேகமாக நுழைந்து... வேகமாக வெளியேறியது...

ஷேவ் செய்யும் உத்தியில் கன்னத்துத் தோலை மேலேயும் கீழேயுமாக இழுத்துக் கொண்டிருந்தால் காதின் துவாரம் சற்றே பெரிதாகி, குரலுடன் வந்த காற்றை விரைவாக உள்ளிழுத்து விரைவாக வெளியேற்றிவிட்டதாக நினைப்பது தவறு.

காற்று வெளியேறி விட்டாலும் காற்றுடன் நுழைந்த மனைவியின் குரல் உள்ளே ஒரு பிரளயத்தையே உண்டுப்பண்ணிக் கொண்டிருந்தது.

ஒரு தமிழ்ப் பெண் அதுவும் திருமணமானவள் எப்போது பொட்டு வைக்க மாட்டாள்?

புருஷன் செத்த பிறகு!

புருஷன் தான் இதோ இருக்கிறேன் கல்லுப் பிள்ளையார் மாதிரி பிறகேன் "பொட்டு வைக்கட்டுமா என்னும் கேள்வி?"

பொட்டு வைத்துக் கொண்டு புருஷனுடன் போவது ஒரு சராசரி மனித உரிமை.

சூழ்நிலை அதைக்கூட மறுத்துள்ளது.

நெற்றி நிறைந்த பொட்டுடன் நடக்கும்போது நான் தமிழச்சி என்பது பறைச்சாற்றப்படும். பஸ்ஸிலோ பாதையிலோ போகும்

போது குறு குறு பார்வைகள் வரும். குத்தல் பேச்சுக்கள் கேட்கும் கூட வரும் ஆண் தலையிட்டால், முதலில் வாய்த்தர்க்கம் பிறகு அடிதடி, பிறகு எங்கே போய் முடியுமோ தெரியாது.

அதுவே இன்னுமொரு இனக்கலவரத்துக்கும் பொட்டு வைத்து விட லாம்.

தாவாயை நிமிர்த்தி கழுத்தடியில் ரேசரை வைத்து மேல் நோக்கி அழுத்தி இழுக்கின்றேன். தாவாயடியில் ஷேவ் செய்வதற்காக முகம் உயர்ந்ததும் பார்வை மேலே போய் விடுகிறது. இருந்தும் கழுத்தடியில் ஓடும் ரேசரை முன்னே தொங்கும் கண்ணாடியில் கவனித்துக் கொள்ளும் திறமை இருக்கிறதே!

எந்த மனிதனிடம் தான் திறமை இல்லை. வெற்றியும் தோல்வியும் அதைப் பயன்படுத்தும் விதத்தில் இருக்கிறது.

"கொடியையாவது போட்டுக்கிறவாங்க...?"

முதற் கேள்விக்குப் பதில் கிடைக்காத ஏமாற்றத்தின் இறுக்கம் இந்த இரண்டாவது கேள்வியில் ஆக்ரோஷமாக எதிரொலித்தது.

"நான் மட்டும் தனியாகப் போயிருக்கலாம்" என்று நினைத்துக் கொண்டேன். இருந்தாலும் இதுபோன்ற இடங்களுக்கு மனைவி யுடன் சென்று ஜோடியாய் அமர்ந்தெழுந்து வருவதில் இருக்கும் மரியாதையும் தனிதான்... மகிழ்ச்சியும் தனி தான்..!

கடைக்கு வந்து அழைப்பிதழைக் கையில் கொடுத்துக் கூப்பிட் டார்கள்.

புதிதாக வந்திருக்கும் ஒரு சிறுகதைப் புத்தகத்துக்கு வெளியீட்டு விழா நடத்துகின்றார்களாம். பேப்பர்களில் அடிக்கடி வரும் பெயருக் குரிய கவிஞர்கள் சிலர், எழுத்தாளர்கள் சிலர் என்று கூட்டமாக வந்து என்னைத் திணரடித்து விட்டார்கள்.

புத்தகத்துக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது. இருந்தும் என்னைத் தேடி அத்தனை பேர் வந்து நின்றதில் எனக்குப் பெருமை தான். அந்தப் பெருமையில் இவளும் பங்கு கொள்ளட்டும் என்றுதான் கிளம்பச் சொன்னேன்!

கதை அது இது என்று என்னைவிடக் கூடுதலாக வாசிப்பதும் இவள்தான். நேரம் இருக்கிறதல்லவா எனக்கெங்கே அவைகளுக்கெல் லாம் நேரம்... எழுதுகிறவர்கள் பெயரெல்லாம் கூடத் தெரியும் இவ

ளுக்கு. இதோ இவர்தான்... அதோ அவர்தான் என்று ஆட்களையே காட்டலாம், அதிசயப்பட்டுப் போவாள். அதற்காகத்தான் கிளம்பச் சொன்னேன்.

அமைச்சர்தான் புத்தகத்தை வெளியிடுவாராம். அவரிடம் இருந்து முதல் புத்தகத்தை நான் வாங்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய வேண்டுகோள். மந்திரி வருகின்றார் என்றால் பேப்பரில் இருந்தெல்லாம் வந்து படம் பிடிப்பார்கள் எப்படியும் படம் பேப்பர்களில் வரும். படத்தில் பார்ப்பதைவிட, நேரில் பார்ப்பது ஒரு 'த்ரில்' அல்லவா! எத்தனை பெருமைப்படுவாள். அதற்காகத்தான் கிளம்பச் சொன்னேன்.

இவள் என்னடாவென்றால் பொட்டு வைக்கட்டுமா? தாலிக் கொடியைப் போடட்டுமா? என்று'.

படபடவென்று தண்ணீரை அள்ளி முகத்தில் அறைந்து, இரண்டு விரலை தொண்டைவரை செலுத்தி, நாலு தேய் தேய்த்து ஓங்கரித்துத் துப்பிவிட்டு மீண்டும் நீரை அள்ளி கழுத்து தோள் முதுகென்று விசிரித் தேய்த்துக் கொண்டேன்.

ஷேவ் எடுத்த முகம் லேசாக எரிந்தாலும் குளிர் நீர் படப்பட இதமாக இருக்கிறது.

முகத்தைத் துடைத்துக் கொண்டு நான் உள்ளே வரும்போது உடுத்து முடித்த மனைவி உட்கார்ந்திருந்தாள்.

நெற்றியைப் பார்த்தேன். காலியாக இருந்தது. கழுத்தைப் பார்த்தேன் காலியாக இருந்தது. ஆனாலும் "நான் ரெடி" என்னும் தோரணையில் அமர்ந்திருந்தாள்.

அவளுடைய கேள்விகளை நான் அசட்டை செய்துவிட்ட பொருமல் அந்த அமரலில் தெரிந்தது.

"நாலு மணிக்குக் கூட்டம்னீங்க.., மந்திரி வர்றாருன்னீங்க.., இப்பவே மூணு ஆவுது. சுருக்கா கௌம்புங்க, நான் ரெடி..." என்றாள்.

"நான் ரெடி.." என்னும் அந்த சொல்லின் அழுத்தம் கழுத்தைச் சுற்றி வந்து நெற்றியில் நின்றது.

"சரி சரி வாங்க..! அழகான முகத்தை ஏன் இப்படி உம்முன்னு வைச்சிருக்கீங்க" என்று மனைவியின் கன்னத்தை ஈர விரலால் தட்டி, சமாதானம் செய்து உள்ளே அழைத்துப் போனேன்.

மனைவி என்பதால் மட்டுமே அவளை, "நீ... வா... போ..." என்று

ஒருமையில் விளிக்கும் வழக்கம் எனக்கு உடன்பாடல்ல. மனைவி என்னை "நீங்கள்" என்று கூறும்போது நான் மட்டும் ஏன் "நீ" என்று அவளைக் கூற வேண்டும்.

உரிமையுடன் பழகும் நண்பர்களை, உடன் தொழில் புரிபவர்களை, பாதையில் சந்திக்கும் புதியவர்களை, பக்கத்து வீட்டுக்காரர்களை "நீ" என்றா கூறுகின்றோம். நீங்கள் என்று குறிப்பிட, அவர்களைவிட மனைவியாகப்பட்டவள் எதில் குறைந்தவளாகின்றாள்.

கட்டிலில் போடப்பட்டிருந்த மெத்தைக்கடியில் மறைத்து வைக்கப் பட்டிருந்த தாலிக் கொடியை எடுத்து அவள் கழுத்தில் அணிவித்து "இப்போது திருப்திதானே..! ம்..! ம்..! நெத்தி நெறையப் பொட்டையும் வச்சிக்கிட்டு மனைக்கு 'வி' தரும் மனைவியாய் கௌம்பணும்" என்றேன்.

அவளுடைய கோபம்... ம்ஹ்ம்... அது கோபமல்ல, ஒரு ஆற்றாமை... தாழ்வுணர்வு மறைந்து முகத்தில் ஒரு மகிழ்ச்சி தெரிந்தது.

கண்ணாடி முன் குனிந்து நெற்றிப் பொட்டை நெறிப்படுத்திக் கொண்டே கேட்டாள், "மனை என்றால் 'வீடு'ன்னு தெரியும்... 'வி' மாதி ரின்னீங்களே அது என்ன விக்டரியா?"

எனக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. 'வி'ஃபோர் விக்டரியா? அந்த அர்த்தமும் சரிதான். ஆனாலும் தமிழ் மனைக்கு இங்கிலிஸ் விக்டரி வேண்டாமுன்னு நினைக்கிறேன். தமிழ்லேயே மனையோட பொருந் துற மாதிரி 'வி'க்கு நெறைய அர்த்தம் இருக்கு. அழகு, காற்று, விசை, பறவை இப்படிப் பல அர்த்தம் இருக்கு. அத்தனையும் என் மனை வியின் 'வி'க்கு பொருந்தும்.

மனைவி அழகாகச் சிரித்தாள். கண்ணாடியும் எங்களை அழகாகக் காட்டி மறைந்தது ... கழுத்துக்குக் கீழே..!

வெளியே வந்து விட்டோம்.

- ● -

பஸ்ஸுக்குள் நிற்கும்போது மனைவியின் முகம் ஏதோபோல் நெளிந்தது.

பெண்களுடன் பஸ்ஸில் பிரயாணம் செய்வதன் சிரமம் எனக்கும் தெரியும் ஏதோ தகறாறு தான் என்று யூகித்த வண்ணம் "என்ன" என்று கண்ணால் கேட்டபடி மனைவியிடம் வந்தேன்.

"அங்கே பாருங்கள்" என்று கண்ணால் காட்டினாள். கண்கள் காட்டிய பக்கம் திரும்பினேன்.

இரண்டு பெண் முகங்கள், சீட்டின் சாய்வில் முகங்கள் மட்டுமே கூட்டத்துக்குள் தெரிந்தன. இரண்டு முகங்களிலும் நெற்றி நிறைந்த பொட்டு.

வேறொன்றும் இல்லை என்ற திருப்தியுடன் மனைவியை ஒரு கேலிப் பார்வை பார்த்தேன். அர்த்தம் புரிந்திருக்க வேண்டும்.

என் முகத்திடம் நெருங்கி காதுக்குள் கிசுகிசுத்தாள். "தமிழ் பெண் கள் இல்லைங்க..! சிங்களம். இன்னார்தான் பொட்டு வைக்கிறதுன்னு ஒரு விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது"

தங்களுக்கே சொந்தமான ஏதோ ஒன்று பறிபோகும் ஆத்திரம் முகத்தில் படபடத்தது.

எனக்கு ஒரு ஞாபகம் வந்தது சத்தியஜித்ராயின் 'மாநகர்' படத்தில் கதாநாயகியிடம்... அவள் புதிதாக உத்தியோகம் பார்க்கத் தொடங் கியவள், ஒரு பறங்கிப் பெண் தானும் உதட்டுச் சாயம் பூசிக் கொண்டு இந்தா நீயும் பூசிக் கொள் என்று லிப்ஸ்டிக்கை நீட்டுகிறாள்.

ஏதோ பாம்பைக் கண்டவள் போல் நடுங்கிச் சிலிர்த்துப் போகி றாள் கதாநாயகி. பறங்கிப் பெண் அவளருகே வந்து முகத்தை உற்றுப் பார்க்கின்றாள்.

நெற்றியில் கும்குமப்பொட்டு, நெற்றிக்கு மேல் கூந்தலை இரண் டாகப் பிரிக்கும் 'வாகின்' முனையில் கும்குமப் பூச்சு.

உச்சியைத் தொட்டுக் காட்டிக் கூறுகின்றாள். "யூ புட் ரெட் ஹியர்" நெற்றியைத் தொட்டுக் கூறுகின்றாள். "யூ புட் ரெட் ஹியர்..." பிறகு உதட்டைத் தொட்டுக் காட்டியபடி "வொய் காண்ட் யூ புட் ரெட் ஹியர்" என்று கேட்டுச் சிரிக்கின்றாள்.

உதட்டுச்சாயம் பூசிக் கொள்ளும்படி கூறிவிட்ட அசூயையிலிருந்து அந்தக் கதாநாயகி விடுபடவில்லை. கூனிப்போய் நிற்கின் றாள்.

பரம்பரை பரம்பரையாகத் தங்களுக்கு ஒத்துவராதவைகளை வெறுத்து ஒதுக்கிவிடும் மனப்பாங்கிற்கு உதாரணமாக அந்த கதாநாயகி திகழ்ந் ததைப் போலவே பரம்பரை பரம்பரையாகத் தனித்துவமானவை களை மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்காத மனப்பான்மைக்கு உதார ணமாக எனது மனைவி திகழ்வதாகப்பட்டது.

சிரித்துக் கொண்டேன்.

"என்ன கூட்டத்துக்கா...? மனைவி சகிதம்?" என்ற குரல் பின்னால் கேட்டது, எனது நண்பர் பின்னால் அமர்ந்திருந்தார்.

"ஆமாம்" என்ற பாவனையில் முகம் புன்னகைத்துக் கொண்டது கை மெதுவாக சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டது.

நண்பர் எழுந்து மனைவிக்கு இடம் கொடுத்தார்.

உட்கார இடம் கிடைத்த திருப்தியைக்கூட மனைவியின் முகம் காட்டவில்லை.

மனைவிக்குப் புதிதாக இருக்கலாம்! அடிக்கடி பஸ்ஸில் பயணம் செய்யும் எனக்கு இது அத்தனை புதியதல்ல. அண்மைக்காலமாக சிங்களப் பெண்கள் நெற்றியில் பொட்டுடன் வலம் வருவதை நான் அடிக்கடி பார்த்திருக்கின்றேன். என்னைப் பொறுத்தவரையில் நெற்றியில் இடும் இந்தச் சின்னப் புள்ளிக்கு ஒரு மகத்தான சக்தி இருக்கிறது. முகங்கள்தான் எத்தனை பிரகாசமாய் இருக்கின்றன. பளீரென்று, கண்ணைக் குத்துவதுபோல்.

நண்பர் இப்போது என்னருகே வந்து நின்றார். "அங்கே தானே" என்றேன்.

அங்கேதான் ஆனால், இப்போதே அல்ல..! வெளியில் ஒரு வேலை இருக்கிறது. அதை முடித்துக் கொண்டு வருவேன். நீங்கள் நேரத்துடன் போய்விடுங்கள். உங்கள் வருகைக்காகவும் கூட்டம் தாமதப்படும் என்று சிரித்தபடியே இறங்குவதற்காக முன்னோக்கி நகரத் தொடங்கினார் நண்பர்.

இவர்கள் வந்து முதன் முதலாக என்னைக் கூப்பிட்டுவிட்டுப் போனதுமே இவரிடம்தான் ஓடிச் சொன்னேன். "இப்படி வந்து அழைத்தார்கள்" என்று.

இது போன்ற விஷயங்களில் நண்பர் நல்ல அனுபவசாலி.

"வெரிகுட் சரியான ஆளிடம் இப்போதுதான் வந்திருக்கிறார்கள்" என்றவர் மெதுவாகச் சொன்னார், "முதற் பிரதி வாங்கும்போது ஏதாவது பணம் கொடுக்க வேண்டும்..." என்று.

"எவ்வளவு கொடுக்கலாம்?"

"அது உங்களைப் பொறுத்தது!"

"அப்படியா..! பரவாயில்லை. சிங்கள நாடகம் போடுகிறோம் அது இது என்று எத்தனைபேர் வரவில்லை. விழா மலருக்கு விளம்பரம்,

டிக்கட் புத்தகம், டொனேஷன் என்று எதையாவது தூக்கிக் கொண்டு, ஐநூறு, ஆயிரம் என்று கொடுத்திருக்கின்றேன். இவர்கள் தமிழ்ப் பையன்கள். கொஞ்சம் கூடுதலாகவே கொடுப்பேன்.

நண்பரின் முகம் சுருங்கியது.

"கலை இலக்கியத்திற்கு ஏதப்பா இனம்..! சிங்களவர்களுக்குக் கொடுத் தேன் என்று ஏன் பிரிக்கின்றீர்கள" என்றார்.

"சரி சரி அதை விடுவோம். உங்களுக்குப் பிடிக்காதுதான். ஆனாலும் 83க்குப் பிறகு நிறைய தமிழ்ப் பணக்காரர்கள் சிங்கள நாடகத்துக்கும், சிங்கள விளம்பரங்களுக்கும் தண்ணீராய்ப் பணம் கொடுக்கிறார்களே அது ஏன்? கலைக்கு இனமோ மொழியோ கிடையாது என்பதாலா? அது எதுவாக இருந்தாலும் என்னைப் பொறுத்தவரை அவர்களுக்கும் கொடுப்பேன்.... எங்கே இன்னொருதரம் அடிப்பார்களோ என்ற பயத் தில். இவர்களுக்கும் கொடுப்பேன் நம் பையன்களாயிற்றே என்ற பற்றுதலில்" என்று கூறிவிட்டு வந்தேன்.

அதுதான் நண்பரின் குரல் கேட்டதும் கை சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டது. வெள்ளை என்விலப்புக்குள் இரண் டாயிரம் ரூபாய்க்கான 'செக்' பத்திரமாக இருக்கிறது, பாக்கெட்டுக்குள்.

வாசலிலேயே பன்னீர் தெளிந்து, சந்தனப் பொட்டு வைத்து உள்ளே அழைத்துப் போனார்கள்.

நான் தான் முதல் முதலாக வந்துள்ளது தெரிந்ததும் சங்கோஜமாக இருந்தது.

கூட்டம் தொடங்க ஐந்துக்கு மேல் ஆகிவிட்டது. நண்பர் நல்ல அனுபவசாலி என்று எண்ணிக் கொண்டேன்.

அமைச்சர் வந்ததும் கூட்டத்தில் சலசலப்பு அடங்கி எழுந்தது. ஆசிரியர் வகுப்புக்குள் நுழைந்தது போன்ற உணர்வு ஏனோ எழுகிறது.

விழா ஏற்பாட்டளர்களால் மலர்மாலை அணிவித்து அமைச்சர் கௌரவிக்கப்பட்ட பின் வரவேற்புரை சொன்னார் ஒருவர்.

என் பெயரையும் சொன்னார் அவர். பிறகு நூல் வெளியீடு.

அமைச்சரிடம் இருந்து முதற் பிரதியை நான் வாங்கிக் கொள் வேன் என்று மைக்கில் கூறினார்கள்.

மனைவியைப் பெருமையுடன் நோக்கிவிட்டு முன்னால் நடந் தேன். அவள் முகத்திலும் ஒரு பெருமிதம்!

கேமரா லைட்டுக்கள் பளபளத்தன.

மேடையில் இருந்து இறங்கிய என்னை மறுபடியும் கூப்பிட்டு, அமைச்சரிடமிருந்து நூலை மறுபடியும் வாங்கச் சொல்லி மறுபடியும் படம் எடுத்துக் கொண்டார்கள்.

திரும்பி வந்து உட்காரும் போது மனைவியும் அருகே இருந்த பெண்ணும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். பேச்சு அவரவர்களு டைய கால் சங்கிலி பற்றியதாக இருந்தது.

என்னைப் பற்றித்தான் ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பாள் என்று எதிர்பார்த்து கொண்டு வந்த எனக்கு ஏமாற்றமாக இருந்தது.

மேடையில் ஏறியதுமே, மற்றவர்கள் தன்னைப் பற்றிப் பேச வேண்டும் என்ற எண்ணம் வந்துவிடுகிறது!

வாங்கிய புத்தகத்தைப் புரட்டி புது மணத்தை நுகர்ந்து கொண்டி ருக்கையில் கை தட்டல் கேட்டது. பிரபலம் வாய்ந்த எழுத்தாளர் ஒருவர் நூலைப் பற்றிப் பேச வந்திருந்தார்.

டி.வியில், ரேடியோவில், பேப்பர்களில் எல்லாம் அவரைப் பார்த்திருப்பதாக, கேட்டிருப்பதாக, படித்திருப்பதாக மனைவி காதுக்குள் கிசு கிசுக்கிறாள். கைதட்டலும் அவருடைய பிரபல்யத்தை ஊர்ஜிப்படுத்தியது.

"இந்தப் புத்தகத்தை நேற்றுத்தான் என்னிடம் கொண்டு வந்து கொடுத்தார்கள். முழுதாக இதை வாசித்து அதைப் பற்றி உங்களுக்குக் கூற முடியாதவனாக இருக்கின்றேன்" என்று ஆரம்பித்தவர், நீண்ட நேரம் பேசினார். இடையிடையே கூட்டத்தினரிடையே இருந்து சிரிப் பும், கை தட்டலும் கேட்கின்றன.

புத்தகத்தையே இன்னும் படிக்கவில்லை என்றவர், இவ்வளவு நேரம் பேசுவதும், கேட்போர் கைதட்டி ஆரவாரிப்பதும் எனக்கு வினோதமாக இருந்தது.

தான் எழுதத் தொடங்கிய காலத்தில் போராட்டங்கள், இத்தியா திகள் பற்றி எல்லாம் தூள் பறக்கப் பேசினார்.

"இதுபோன்ற நூல்கள் வந்து நமது இலக்கியத்தை வளர்க்க வேண் டும்" என்றவர் என் பெயரையும் கூறி, இந்நூலின் முதற் பிரதியை வாங்கியதற்கு அவரையும் பாராட்டி நன்றி கூறுகின்றேன். என்று முடித்தார்.

வெகு நீண்ட நேரம் பேசியதால் எப்போது முடிப்பார் என்று எரிச் சல்பட்டுக் கொண்டிருந்த எனக்கேகூட என் பெயரை அவர் கூறியதும்

மற்றவைகள் மறைந்து ஜில்லென்றிருந்தது.

அடுத்து ஒரு அம்மையார் வந்து பேசினார்கள். பேப்பர் ஆபீசில் வேலை பார்க்கிறார் என்பதைத் தலைவர் சொல்லத் தெரிந்து கொண்டேன்.

இவருக்கும் நேற்றுத்தான் புத்தகம் கொடுத்திருப்பார்கள் என்று நான் நினைக்கையில் அவர் வணக்கம் தெரிவித்துக் கொண்டார்.

அவர் பேசத் தொடங்கியதே அந்தப் புத்தகத்தைப் பற்றித்தான். அதில் உள்ள கதைகளை ஒன்று ஒன்றாய் விவரித்தார். அந்தக் கதைகள் ஏன் மற்றவர்களுக்கு அதைச் சொல்ல வந்தார். அவைகளின் சமூகப் பின்னணி என்ன என்றெல்லாம் சுட்டிக்காட்டினார்.

ஒரு சில இடங்களை புத்தகத்தில் இருந்து வாசித்துக் காட்டினார். நானும் அவ்வப்போது அவர் பேச்சுக்கேற்ப புத்தகத்தைப் புரட்டிக் கொண்டேன்.

அம்மையாரின் பேச்சு முடிந்து வணக்கம் கூறி மேடையைவிட்டு இறங்கியதும் அடுத்தொருவர் பேச அழைக்கப்பட்டபோது அமைச்சர் எழுந்து வணக்கம் கூறிவிட்டு இறங்கினார்.

அவசர ஜோலிகள் எத்தனை இருக்கும் அவருக்கு!

அமைச்சர் வெளியேறியதுமே அங்கொன்று இங்கொன்று என்று சிலர் வெளியேறினர்.

புத்தகத்துக்காக வராமல் அமைச்சருக்காக வந்தவர்கள்.

அடுத்தடுத்து இருவர் பேசி முடித்தனர். நேரம் போய்க் கொண்டிருக்கிறது. வெளியுலகின் இருட்டு உள்ளே தெரியவில்லை.

மணியைப் பார்க்கின்றேன். எட்டுப் பிந்திவிட்டது.

"நேரமாச்சே... போவோங்க..." என்ற அடிக்கடி முனகலுடன் புத்தகத்தில் அரைவாசிக்கு மேல் படித்து முடித்து விட்டாள் மனைவி.

நான் அழைப்பிதழை பார்க்கிறேன். இன்னும் நாலு பேர் பேச இருக்கிறது "அடேயப்பா" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டேன்.

ர்க்கிறேன். இன்னும் நாலு பேர் பேச இருக்கிறது "அடேயப்பா" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டேன்.

ரொம்பவும் பிந்திவிட்டால் போவது கொஞ்சம் சிரமம் தான். முன்பெல்லாம் மாதிரி பாதைகளில் நடமாட்டம் இருப்பதில்லை. வெறிச்சோடிக் கிடக்கும் இருட்டில் நடக்க நேர்ந்தால் போதும், இருப்பதைத்

தட்டிப் பறிக்க ஒரு கூட்டமே இருக்கிறது.

"அங்கே தமிழர்கள் அடிக்கிறார்கள்... இங்கே நாங்கள் அடிக்கக் கூடாதா?" என்னும் நியாயங்கள் வேறு.

"தாலிக் கொடியைப் போட்டுக் கொள்ளாமல் கூட்டி வந்திருக் கலாம்" என்று மனம் அலைகிறது.

இரவு நேரம் பாதையில் ஒரு தமிழ்ப்பெண் என்றால் முதலில் கழுத்தைத்தான் தடவுவார்கள்.

நேரம் போய்கொண்டிருக்கிறது. பேச வருபவர்கள் தங்களது பேச்சை சற்று சுருக்கிக் கொள்ளுமாறு தலைவர் அடிக்கடி கூறுகின்றார்.

இப்போது பேசி கொண்டிருப்பவர் ஏதோ கோபமாக... சண்டை பிடிப்பவர் போல் ஆக்ரோஷமாகப் பேசுகிறார். போய்க் கொண்டி ருக்கும் வேகத்தைப் பார்த்தால் இப்போதைக்கு முடிக்கமாட்டார் போலிருக்கிறது.

"தயவு செய்து சீக்கிரம் முடிக்கவும்" தலைவர் ஒரு துண்டை அவரிடம் நீட்டுகிறார்.

"பேசக்கிடைத்ததால் மேடையை விடமாட்டார் இவர்! இவரை எல்லாம் பேசப் போட்டுக் கொண்டு" பின்னால் ஒருவர் சற்றுப் பலமாகவே முணுமுணுக்கிறார்.

தலைவரின் துண்டுக்குப் பிறகும் நீளமாகப் பேசி முடிக்க மனமில் லாமல் முடிக்கிறார் அவர்.

மணி ஒன்பதை நெருங்கிக் கொண்டிருக்கிறது. மண்டபம் ஜெக ஜோதியாய் இருக்கிறது. கடிகாரத்தைப் பார்க்காவிட்டால் இவ்வளவு நேரமாகிவிட்ட விஷயமே தெரியவராது.

மனைவியின் நச்சரிப்பும் தாளவில்லை. எனக்கும் பொறுமை தவறுகிறது. அமைப்பாளர் ஒருவரிடம் கூறிவிட்டு மனைவியுடன் வெளியேறினேன்.

நண்பர் எங்காவது இருக்கிறாரா என்று ஒரு நோட்டம் விட்டேன். அவர் மகா அனுபவசாலி! எப்போதோ போய்விட்டிருந்தார்.

பஸ் ஸ்டாண்டில் நிற்கும்போது மாநகரின் அந்தகாரத்துக்குள் நானும் மனைவியும் அந்தரத்தில் இருப்பதாக உணர்ந்தோம்.

தனியாக நிற்பதற்கு அச்சமாக இருந்தது. இன்னொருவர் வந்து உடன் நிற்கும்போது அதைவிடவும் அச்சமாக இருந்தது. மனைவியும்

மிக உஷாராகவே இருக்கின்றாள். கழுத்தையே காணவில்லை.

"ஏதாவது வர்ற பஸ்ஸில் ஏறுவோம்" மனைவியிடம் மெதுவாகக் கூறினேன். வீட்டை நோக்கிக் கொஞ்சம் கொஞ்சமாகவேனும் முன்னேறிவிடும் நினைவு.

விடுமுறை தினங்களில்... பிந்திவிட்ட இது போன்ற இரவு வேளைகளில் பஸ் அதிகமாக இராது. நேரம் செல்லச் செல்ல மனதில் ஒரு அச்சம் அரிக்கிறது.

"கூட்டத்துக்கு வராமல் இருந்திருக்கலாமோ? சேச்சே எவ்வளவு விரும்பி அழைத்தார்கள்."

"பெண்களுடன் தான் பிரச்சினையே! தனியாக வந்திருக்கலாம்" மனம் அலைகிறது.

தூரத்திலே நட்சத்திரம் போல் இரண்டு புள்ளிகள் மின்னுகின்றன.

லொட லொட என்ற சப்தத்துடன் தூங்கி வழிந்து கொண்டு வருகிறது ஒரு பஸ்.

அப்பாடா வந்த பிறகும் கூட போர்டும் தெரியவில்லை. நம்பரும் தெரியவில்லை. இருந்தும் ஏறிக் கொண்டோம்.

உட்காந்திருக்கும் நாலைந்து பேரில் யார் கண்டக்டர் என்பது தெரியவில்லை.

நாங்கள் அமர்ந்ததும் எழுந்து எங்களிடம் வந்தவரிடம் எந்த பஸ் என்று கேட்டுத் தெரிந்துக் கொண்டேன். எங்களுக்கு வசதியான பஸ் இல்லை. இறங்கிய பிறகு ஒரு பத்து நிமிட நடை போட வேண்டியிருக்கும். அவ்வளவுதான்!

"நடந்து போயிடலாமாங்க?" மனைவியின் பயம் வினாவாய் வெளிவந்தது.

"போய்த்தானே ஆகவேண்டும்" என்றபடி இறங்க வேண்டிய இடத்தைக் கண்டக்டரிடம் கூறினேன்.

டிக்கட் வாங்கிய அதே துணிச்சலுடன் இடம் வந்ததும் இறங்கியாகிவிட்டது. அன்றாடம் நடக்கும் அதே பாதைதான் என்றாலும் இப்போது கண்ணைக் கட்டி காட்டில் விட்டாற்போல் இருக்கிறது.

தூரத் தூர நிற்கும் மின்கம்பி லைட்டுக்கள் மெல்லியதாக ஒளி பரப்பிக் கொண்டிருந்தன. வேகமாக என்று நினைத்துக் கொண்டாலும் மெதுவாகவே நடக்கின்றோம். தன்னையறியாமலேயே

மனைவி எனது அணைப்பிற்குள் வந்து விட்டாள். கால்கள் இடரிக் கொள்வதால் வேகம் தடைப்படுகிறது.

இந்தப் பத்து நிமிட நடையின் பாதித் தொலைவில் ஒரு பாலம் இருக்கிறது. வளர்ந்து வளைந்துள்ள பாதையோர மரங்கள் பாலத்தை எப்போதும் இருட்டாகவே வைத்திருக்கும். பாலத்தில் அடிக்கடி நடக்கும் திருட்டுக்கள், வழிப்பறிகள் பற்றி நிறையவே கதைகள் கேள்விப் பட்டிருக்கின்றோம்.

"இன்றுதான் அனுபவிக்கப் போகின்றோமோ" என்ற நினைவு வந்ததும் மனைவியை இறுக அணைத்துக் கொண்டேன்.

"என்னங்க...?" என்றாள் திடுக்கிட்டு.

"ஒன்றுமில்லை..." என்று வாய் முனகியது... பார்வை கூர்மையாகிறது.

அதோ தெரிகிறது பாலம். பால முனையில், லைட் கம்பத்தின் அருகே உருவங்கள் நிழலாடின. இரண்டு உருவங்கள் ஒளிவது போல் தெரிகிறது.

பிரமையாக இருக்குமோ என்று நான் நினைத்து, பிரமையாகவே இருக்கட்டும் என்று விரும்பிக் கொண்டாலும் பிரமை இல்லை உண்மை தான் என்று நிரூபணம் செய்கிறது. மறுபடியும் ஆடிய நிழருவம்.

இப்பொழுது நாங்கள் சரியாக ஒரு லைட் கம்பத்தினடியில் நடக்கிறோம். அடுத்த லைட் கம்பம் பாலத்தின் முனையில் இருக்கிறது.

வருபவர்கள் அருகே வரட்டும் என்று ஒளிந்து கொள்ளுகின்றனர் போலிருக்கிறது. வெறுமனே கேள்விப்பட்டவைகள் அனுபவிக்கப்படும் அவஸ்த்தை எப்படி இருக்கும்..? இப்படித்தான்...

மனம் பிசைபடுகிறது. உதடுகள் வரண்டு ஒட்டிக் கொள்ளுகின்றன. பேசுவதற்காக வாயைத் திறப்பதே சிரமமாக இருக்கிறது. கீழுதட்டைக் கடித்து ஈரமாக்கிக் கொள்ளுகின்றேன்.

"பாலத்தடியில் யாரோ பதுங்குவது போல் தெரிகிறது. ஆனாலும் பயப்படக்கூடாது. இரண்டில் ஒன்று பார்த்து விடுவோம்!"

நிலைமையை மனைவிக்கு அறிவித்து தைரியமும் கூறிக் கொண்டேன்.

இடுப்பைத் தடவும்போது தான். காற்சட்டை போட்டுக் கொண்டு வந்திருக்கலாம் என்ற நினைவு எழுந்தது.

வேஷ்டியை இறுக்கிக் கட்டி அரைஞான் கொடியை இழுத்து வேஷ்டிக்கு மேலாகப் போட்டுக் கொண்டு, பெல்ட்டை உருவிக் கையில் எடுத்துக் கொண்டேன். பெல்ட்டின் ஒரு முனையில் தடித்த பித்தளைப் பூண்.

மறுமுனையைக் கையில் பிடித்துக் கொண்டால் ஆளை நெருங்க விடாமல் விசிறியடிக்கலாம். திருடன் தான்... கொள்ளைக்காரன் தான்... என்றாலும் மனிதன்தானே! பெல்ட்டின் இருக்கும் முனையால் அடிப் பட்டால் வலிக்காதா என்ன? வலித்தால் ஓட மாட்டா்னா என்ன?

மனதில் வரவழைத்துக் கொண்ட தைரியத்துடனும், கையில் உருவிக் கழற்றிய பெல்டுடனும் முன்னேறினோம்.

- ● -

"ஹரியட்ட பலாகத்தாத! ஈய வாகே குட்டிகண்ட பே!"

பாலத்தடியில் பதுங்கிய இருவர் சிங்களத்தில் கிசுகிசுத்துக் கொண் டனர்.

"சரியாகப் பார்த்துக் கொண்டாயா. நேற்று போல் உதைவாங்கிக் கட்டிக் கொள்ள இயலாது" என்கின்றான் ஒருவன்.

"பார்த்தேன்..! ஆனாலும் சரியாகத் தெரியவில்லை. மனிதன் என்றால் காற்சட்டை இல்லை"

"அது நிச்சயம் மனுஷி. சேலைதான். ஆனால் நெற்றியில் பெரிய பொட்டு"

"பொட்டா! என்றவன் மற்றவனையும் இழுத்துக் கொண்டு பாலத் தடி நிழலுக்குள் மறைந்து விட்டான்.

நேற்றைய நினைவுகள் ஒட்டிக் கொண்ட நெருப்பாய் இன்னும் அவனைச் சுட்டுக் கொண்டிருந்தன.

நேற்று இதே நேரம் இருக்கும். இதேபோல் தான் இருவர். நடை யைப் பார்த்தால் பயந்து பயந்து வருவது போல்தான் இருந்தது.

ஆகாயத்தில் மிதக்கும் முழு நிலவுபோல் மனுஷியின் முகத்தில் அழகான பெரிய பொட்டு. வட்டமாக மனிதன் வேஷ்டியும் சட்டை யுமாக வந்து கொண்டிருக்கிறான்.

"சரியோ சரி" தமிழ் ஜோடிதான். எப்படியும் ஒரு தாலிக் கொடி

தேறும் என்ற நினைவுடன் இருளில் பதுங்கிக் கொண்டவர்கள், பாலத்து முனையில் அவர்கள் கால் வைத்ததும் "ஹேய்" என்ற கூச்சலுடன் அவர்கள் முன் பாய்ந்தார்கள். ஒருவன் மனுஷியை எட்டிப் பிடித்துக் கொள்ள மற்றவன் மனிதனைத் தாக்கினான்.

வந்தவர் ஒரு மீன் முதலாளி. எப்படியோ மனைவியுடன் இந்த நேரத்தில் இந்த இடத்தில் நடக்க வேண்டியதாகிவிட்டது. வந்துவிட்டார். ஒரு வினாடி அசந்தவர் மறுவினாடி சுதாகரித்துக் கொண்டார்.

இதுபோல் எத்தனை கூச்சல்காரர்களைப் பார்த்திருப்பார். தன் மேல் பாய்ந்தவனை எட்டிப் பிடித்துக் கொண்டு, மனைவியுடன் மல்லுக் கட்டியவனை எட்டி உதைத்துத் தள்ளினார். இடுப்புப் பட்டியை உருவி எடுத்து விளாசத் தொடங்கி விட்டார்.

கையில் பிடிபட்டவனுக்கு பிய்த்துக் கொண்டால் போதும் என்றாகிவிட்டது. இருவரும் ஓடியே போய்விட்டார்கள்.

அரைக்கால் சட்டையுடன் நின்றவர் வெள்ளைச் சாரத்தைத் தேடி எடுத்துச் சுற்றிக் கொண்டபடி....

"தெமலு கிலா இத்துவாத!. வேசிக்கப் புத்தாளா" என்று முனகியபடி மனைவியைத் தோளில் தட்டி இழுத்துக் கொண்டு நடந்தார்.

பாலத்தடியில் பாய்ந்து மறைந்தே இருவரும் ஓடிக்கொண்டே பேசிக் கொண்டனர்.

"சிங்ஹள மினுசுனே" என்றான் ஒருவன்.

"ஏனாம் மொட்டு" என்றான் மற்றவன்.

"தெங் தியனவானே! அப்பேகேனித்" என்றபடி இருவரும் கண் மண் தெரியாமல் ஓடினர்.

பயந்தவர்களிடம் பிடுங்கிக் கொள்வதுதான் இவர்களுடைய வழி. இந்த மனிதன் என்னடாவென்றால்?

நேற்றைய நிகழ்ச்சி இன்று இருவரையும் உஷாராக்கியது.

பாலத்துக்கு முந்திய லைட் கம்பத்தடியில் வரும்போது ஆட்களை நோட்டம் விட்டுக் கொள்வார்கள்.

ஆள் யார்..? ஆண் மட்டுமா..? பெண்ணுமா..? தெரிந்தவரா..? அல்லது புதியவரா..? தமிழா..? சிங்களமா..?

யூகித்துக் கொண்டு பறித்துக் கொள்ள ஏதாவது இருக்குமா என்றும் கவனிப்பார்கள்.

அப்படிக் கவனித்ததில்தான் ஆணும் பெண்ணுமாக ஒரு ஜோடி... ஆண் கால்சட்டை இல்லை... பெண்ணின் நெற்றியில் பொட்டு... இத்தியாதிகளை ஒருவன் கவனித்துக் கூறினான்.

பொட்டை வைத்து எதையும் நிர்ணயிக்க முடியவில்லை மனிதனோ, கால்சட்டை போடவில்லை. ஒருவேளை என்று அவர்கள் நிச்சயமின்மையால் தடுமாறிக் கொண்டிருக்கையில் மனிதன் இடுப்புப் பட்டியை உருவிக் கையில் எடுத்துக் கொண்டதை மற்றவன் கவனித்து விட்டான்.

நேற்றைய நினைவிலிருந்து அவர்கள் மீளவே இல்லை.

- ● -

பாலத்தை நெருங்கியதும் மனைவியின் நடுக்கம் அவளது அணைப் பின் இறுக்கத்தில் தெரிந்தது.

"பயப்படக் கூடாது" என்று மனைவியின் காதுக்குள் முனகிவிட்டு, பெல்டைப் பற்றி இருந்த கையை ஒரு நடிப்புடன் வீசி வீசி நடந்தேன்.

ஆடிய நிழலுக்குரியவன் எந்த வினாடியும் எம் பின்னால் இருந்து என் தோளைப் பிடிக்கலாம் என்னும் முன் ஜாக்கிரதையுடன் நடந் தேன்.

பாலத்தைத் தாண்டியுமாகிவிட்டது..! இன்னும் நாலெட்டு வைத் தால் வீடு வந்துவிடும்.

ஒன்றையுமே காணவில்லை!

என்ன ஆனார்கள்?

"பிரமையாகத் தாங்க இருக்கணும்" வீட்டை அடைந்து விட்ட தைரி யத்தில் மனைவி கூறினாள்.

"எதுநான் பார்த்ததா..? இருந்துட்டுப் போகட்டுமே" என்றேன்.

"நல்லாவே பயந்துட்டேங்க" இது வேற கையில! இது வேற நெத்தி யில" என்றபடி வெளியீட்டு விழாவில் வாங்கிய புத்தகத்தை மேசை மேல் போட்டு விட்டு பொட்டைக் கழற்றப் போனாள்.

வேணாம், வேணாம் பொட்டு அப்படியே இருக்கட்டும். நெற்றி நிறைய பொட்டும்... நீண்ட கூர்நாசியும்" என்று மனைவியின் பயம் தெளிய சற்று வர்ணித்து விட்டு....

"இது கையிலும், இது நெற்றியிலும் இருந்ததால் தான் இன்று தப்பித் தேன் என்று கூறும் நாட்கள் வந்து கொண்டிருக்கின்றன என்பதற்கு கண்ணால் நான் கண்டதே பிரமையாகிவிட்ட இன்றைய நிகழ்வே சாட்சி" என்றேன் சிரித்தபடி...

- ● -

மல்லிகை 1989



# உயிர்ப்பு

7

வேர் செத்த பிறகும் விழ மனம் இல்லை. எகிறின் பிடிப்பில் அழுந்தி நின்று கொண்டு அடம்பிடிக்கிறது எனது முன்கடைவாய்ப் பல்.

நாக்கால் தொட்டால் சோளக்கொட்டை போல் நாலாப்புறமும் உலாப் போகிறது! ஆனால் விழமாட்டேன் என்கிறது.

அதுதரும் நோவும் அடம் பிடித்து ஏற்படுத்தும் அசௌகரியங் களும்... அப்பாடா பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை.

வயிற்றிலே பசியா...? அல்லது வலியா...? அல்லது வேறு எங்கா வது நோகிறதா...? என்று சொல்லத் தெரியாமல் சதா 'நை நை' என்று கத்தித் தீர்க்கும் குழந்தை போல். என்ன செய்வதென்றே தெரியாமல் எகிறில் வீக்கம் கண்டு..!

கேவலம் ஒரு பல், அதுவும் என் பல்... வாயில் ஒன்றும் வைத்து விட முடியாது... நீர் பட்டால் இழுக்கிறது சாப்பிடும் போது ஏதாவது தப்பித் தவறி பட்டுவிட்டால் உயிர் நிலையில் அடிப்பட்ட மாதிரி...

அப்படியே கன்னத்தை அழுத்திப்பிடித்துக் கொண்டு கண்ணீர் சிந்துவேன்.

கையைக் கழுவிக் கொண்டு எழுந்து விடுவேன்.

பல்லின் அடம் வயிற்றுக்குத் தெரிகிறதா?

"என்னங்க இப்பவும் சாப்பிடாமல் எழுந்திறிச்சிட்டீங்க... அந்தப் பக்கம் போகாம பாத்து மெது மெதுவா மென்று முழுங்கிடுங்க. இப்படி பட்டினி கெடந்தா எப்படி? வயித்துக்கு எதையாவது போட்டாகணுமே..."

"ஒங்களுக்கும்... ஒங்க பல்லுக்காகவும் தான் சோத்தையும் கொஞ் சம் கொழைய விட்டு, ரசமும் வச்சிருக்கேன்... நல்லா பெனைஞ்சி நைசா முழுங்கிடுங்க.

"பட்டினியோட போறிங்க மயக்கம் போட்டு எங்கயாச்சும் ரோட்டுல

விழுந்துட்டிங்கன்னா... குடிச்சிட்டு விழுந்து கெடக்குறதா நாலுபேர் நெனைப்பானுக!

மனைவி சொல்லுவதில் உள்ள நியாயம் எனக்கு தெரிகின்றது.

ஆனாலும் அவளை முறைக்கின்றேன்.

"எனக்கல்லவா தெரியும் என் வேதனை உனக்கெப்படித் தெரியும்" என்னும் அந்த முறைப்பின் எரிச்சல் ஏவுகணை போல் அவளது கண் வழி நுழைந்து உடலுக்குள் 'சர் சர்' ரென்று ஊடுறுவி இதயத்தைத் தேடித் தாக்குகின்றது.

காலங்காலமாய் எனக்குச் சகலமுமாகி எனது சகலவற்றையும் பகிர்ந்து கொண்டு எனக்காகவே வாழும் அவள் இப்போது அயலவளாய்த் தோன்றுகின்றாள்... தெரிகின்றாள்..!

"என்னுடைய வேதனை உனக்கெப்படி தெரியும்" என்கிறேன்.

காரணம் இந்தப் பல்லும் அதன் பயங்கரவாதமும்.

தாகத்திற்கு தண்ணீரைத் தவிர வேறு எதையுமே வாயில் வைத்தறியாத என்னை நாலுபேர் குடிகாரன் என்றும், குடித்துவிட்டு றோட்டில் விழுந்து கிடக்கிறவன் என்றும் குறை பேச வைக்குமா இந்தப் பல்.

இத்திணையூண்டான இந்தப் பல்லின் சில்லறை விளையாட்டுக்கள் என் கௌரவத்திற்கு இழுக்கைத் தேடித்தரும் ஒருதிட்டமிட்ட செயலாகத்தான் இருக்க வேண்டும்.

கோபத்தால் பல்லைக் கடித்தேன்.

"அம்மோவ்..." தொலைந்தேன்!

கீழ்ப்பல்லின் அழுத்தத்தால் சற்றே ஒருக்கழித்து வரிசையை விட்டு விலகி கன்னத்தின் மென்மையைக் கீறிக் கொண்டு..!

ஒரு கணம் உயிர் போய்த் திரும்புகிறது.

எகிறில் இரத்தம் ஊர்வது போன்ற ஒரு இழைதல். எச்சிலை உரிஞ்சிச் சுவைக்கின்றேன் ரத்த வாடை இல்லை...

இருக்கும் இடம் விலகியதால் ஏற்பட்ட இடைஞ்சல் என்னை சித்தரவதைப்படுத்துகின்றது.

பல்லுக்கு மேலாக நாவைச் சுழற்றித் தடவிப் பார்க்கின்றேன்.

நிற்கவும் முடியாமல் விழவும் மனமில்லாமல் மண்ணின் பிடிப்பில் வேரூன்றி சரிந்து நிற்கும் மரம் போல் அடிப்பல் எகிறின் உள்ளும் நுனிப்பல் கன்னத்தைத் தொட்டுக் கொண்டும்...

பல்லின் மேல் நாக்குப் பட்டதுதான் தாமதம்.

கோபித்துக் கொண்டு வாசல் கல்லில் போய் அமர்ந்து கொண்ட கிழம், யாராவது கூப்பிட மாட்டார்களா என்பதற்காகக் காத்திருந்து "உள்ள வாயேன் காத்தடிக்குதில்லே" என்ற குரல் கேட்டதும் ஓடி வந்து நுழைந்து கொள்ளுவதைப்போல... 'டடக்'கென்று மீண்டு வந்து வரிசையில் நின்று கொண்டது.

பல்லை மெதுவாக மீண்டும் மீண்டும் நாக்கு தடவுகிறது.

அடிப்பல்லின் ஓரம் நாவைக் கீறினாலும் தடவல் இதமாக இருக்கிறது.

விலகி வெளியே வந்த அளவு உள்ளே போகுமா என்னும் பரிசோதனையில் நாவால் மெதுவாக உந்துகிறேன்.

வரிசை விட்டு விலகி வெளியே வந்தது போலவே உள்ளேயும் போகிறது.

பற்களை மெதுவாகக் கடித்து ஆடும் பல்லை உட்பக்கமாக அழுத்தினேன். பிறகு மீண்டும் கடித்து வெளிப்பக்கமாக அழுத்தினேன்.

தள்ளு ஊஞ்சல் மாதிரி உள்ளேயும் போகிறது வெளியேயும் போகிறது.

ஆனால் கழன்ற பாடில்லை.

கண்ணாடி முன் நின்று வாயை அகலத் திறந்து பார்க்கின்றேன்.

வலிக்குப் பயந்து அந்தப் பக்கம் பிரஷ் போடுவதே இல்லை.

லேசாக மஞ்சள் பூத்துப் போய் வழ வழத்துக் கொண்டு!

எழும்பவும் ஜீவனற்று புரட்டிப் போடவும் நாதியில்லாமல் ஈரமும் பிசு பிசுப்புமாய் கட்டிலில் கிடக்கும் கிழம் போல!

அசூயை என்னை அரிக்கின்றது!

"இந்த இளவையெல்லாம் வாய்க்குள் வைத்துக் கொண்டு"

எரிச்சல்... எரிச்சலாக... வருகின்றது!

விரலால் அழுத்தமாகப் பிடித்துக் கொண்டு மெதுவாகச் சுழற்றிப் பார்க்கின்றேன்.

உதட்டை நீவிக் கொண்டு விரல் உள்ளே நுழைந்ததும் கோணல் முகமும் விரலும் மட்டுமே கண்ணாடியில் பெரிதாய் தெரிகின்றன. பல்லும் பல்லின் நடமாட்டமும் தெரியவில்லை.

கண்கள் கலங்கிச் சிவந்ததுதான் கண்ட பலன்! பல் கையில் வரவில்லை.

எனது மெது மெதுவான பலாத்காரப் பிரயோகங்களுக்கெல்லாம் பல் மசிந்து கொடுப்பதாகத் தெரியவில்லை.

நான் எத்தனை பெரியவன்! எத்தனை எத்தனை பிரமாண்டங்களை எல்லாம் செய்து காட்டியவன்!எனக்குத் தெரிய முளைத்தது இந்தப் பல். எனது சுண்டு விரல் நகம் அளவு இருந்துக் கொண்டு!

பல் எல்லாம் மனிதனுக்கு அவசியமா என்ன? என்னும் நினைவு எழுகிறது.

நெருக்கடிகள் தான் ஒரு வரலாற்றுத் தேடலுக்கான நெருக்குதலை உயிர்ப்பிக்கின்றனவோ

பொக்கை வாயாக இருந்து மண்ணைக் கீறிக் கொண்டு மேலெழும் விதை முளை போல் சின்னதாக வெள்ளையாக எகிறை முட்டிக் கொண்டு ஒன்று எட்டிப் பார்க்கையில் எத்தனை குதூகலம் கொண்டிருப்பார்கள் பெற்றவர்கள். விரலால் தடவிப் பார்த்து பல்தான் என்று உறுதிப் படுத்திக் கொண்டதும் அவசர அவசரமாக அரிசி இடித்து பல் கொழுக்கட்டை பிடித்து!

எத்தனை வரவேற்பு!

பிறகு ஒவ்வொன்றாய் முளைத்து வளர்ந்து வாய் நிறைந்து கீறிப் போட்ட தேங்காய்க் கீற்றுப் போல் வரிசையாக

முகத்துக்கே ஒரு தேஜசாய்

எத்தனைப் பேர் என் பற்களைப் பார்த்து பொறாமைபடவில்லை முன்னிரு பற்களும் அதனை ஒட்டி வளர்ந்த மற்ற பற்களும் - ஒரே சீரான அளவுடன் வரிசை மாறாமல் - வெளியே தெத்தித் துருத்தாமல்!

எகிறின் சிவப்பும் அதில் பளிங்கு பதித்தாற்போன்ற பல் வரிசையும்'

எனது சிரிப்பின் மோகனம் எத்தனை பேரை வசீகரித்திருக்கின்றது! என்மேல் மோகம் கொள்ளச் செய்திருக்கிறது.

இந்தப் பற்களால் முகத்துக்கொரு களையும் எனக்கொரு கௌரவமும் கிடைத்ததே!

அதே பற்களில் ஒன்று இன்று என் கௌரவத்திற்கே இழுக்குச் செய்யத் துணிந்திருக்குமா?

நம்ப முடியவில்லை!

என்னால் அதற்கு ஏதாவது இடைஞ்சல்கள் அநீதி அக்கிரமங்கள் எப்போதாவது ஏற்பட்டிருக்குமா? தெரிந்தோ தெரியாமலோ!

இல்லை என்றால் இது ஏன் என்னை இப்படி இம்சிக்கிறது துன்புறுத்துகிறது எதற்காகவோ பழி வாங்குவது போல்.

"Every Action has a Reaction" என்பது எத்தனை சத்தியமானது

ஆலும், வேலும்... என்பதற்கிசைய ஆலங்குச்சியை மென்று பல் தேய்க்கவில்லை தான் நான். இன்றைய விஞ்ஞான வேகத்தில் இதெல்லாம் சாத்தியப்படுவதில்லை. குச்சியையும் கொம்பையும் எங்கே போய்த் தேடுவது!

இருக்கவே இருக்கின்றன றெடிமெட் குச்சிகள். விதவிதமான வண்ணங்கள் வளைவுகளுடன்.

பல் வரிசையில் உள்ளும் வெளியுமாகக் கையை ஓட்டி ஓட்டி இடைஞ்சலின்றி லாவகமாக பிரஷ் செய்வதற்கான விஞ்ஞான கண்டுபிடிப்புத்தான் இந்த வளைவுகள் என்னும், விளம்பரங்களுடன்.

பல்லின் மேல் உள்ள பற்றுதல் பாசத்தில் அக்கறையில் அழகழகான அதிக விலையான பிரஷ்களையே பாவிப்பேன். அடிக்கடி பிரஷ் வாங்கி வாங்கியே அம்மாவிடம் ஏச்சுப் பட்டிருக்கின்றேன். குப்பையாகச் சேர்ந்துவிடுவதால் எங்கே கொட்டுவது என்பதும் பிரச்சினை தான்.

தங்கள் தங்கள் மேம்பாட்டுக்காகவன்றி பற்களின் மேம்பாட்டுக்காகவே நலன்களுக்காகவே தயாரிப்பதாக தம்பட்டம் அடித்துக் கொள்ளும் பற்பசைகளில் பெரிதாகத் தம்பட்டம் அடிக்கும் பற்பசையைத்தான் தேர்ந்தெடுத்துப் பாவித்தேன்... பாவிக்கிறேன்..!

பொங்கும் பால் போல நுரை நுரையாகக் கிளம்பி வாய் எது பல் எது என்று தெரியாமல் பொங்கிப் பூரித்து துப்பும் போதும் துப்பிய பின்பும் அது மணக்கும் மணம். கொப்பளித்து துப்பிய பின்பும் பல்லைச் சுற்றிச் சுற்றி ஓடி வரும் அந்த சில்லென்றச் சுகந்தம்.

எத்தனை செய்திருக்கிறேன்... இதற்காக.

பிள்ளைக்கு நல்லதே என்று தினமும் காலைக் கருக்கலில் நாலு மைல் தூரம் நடந்து போய் ஆட்டுப்பால் வாங்கி வந்து காய்த்து சீனி போட்டு கையில் எடுத்துக் கொண்ட பிறகுதான் எழுப்புவேன் இவனை... இப்போது எவளோ ஒருத்தியின் பின்னால் ஓடிக் கொண்டு நீ யார் என்று என்னையே கேட்கின்றானே என்று குமுறிப் புலம்பும் அப்பா போல்...

நானும்..!

"அது ஒரு தகப்பனாகப்பட்டவனின் கடமை" என்று அந்த மகன் சொல்லியிருப்பான்...

இந்த பல்லும்...

நானும் தான் உனக்கு எத்தனை எத்தனையோ செய்திருக்கின்றேன். என்னைப் பத்திரமாக... சுகதேகியாக... மரியாதையாக... வைத்திருக்க வேண்டியது உனது கடமை என்று கூறுமோ..?

இறைச்சியா எலும்பா? சோறா சோளமா? சகலமும் இதற்கு யானை வாய்க் கரும்புதான்!

கரும்பை மட்டும் விட்டா வைத்தேன்.

முன் கடைவாய் பல்லால் ஓரத்தை ஒரு கடி கடித்து இழுத்தேன் என்றால் 'டர் டர்'ரென்று உரிந்து வரும் பட்டை.

உதடு லேசாக நசிந்து எரியும். 'நற நற' வென்று கடித்து மெல்கையில் 'சர சர'வென்று கருப்பஞ்சாறு தொண்டைக்குள் இறங்கும். வெளியேயும் வீசித் தெறிக்கும்.

பல்லிடுக்கில் சிக்கி நிற்கும் சின்னச் சின்ன சக்கை வலி கொடுக்கும்.

பல்லைக் கடித்து வாயைச் சுழித்து 'ஸ்ஷ்ஸ்' என்று பலமாகக் காற்றை உள்ளிழுத்தால் சிக்கிக் கொண்டிருந்த கரும்புச் செதில் 'கப்' பென்று தொண்டைக்குள் போய்விழும்.

காறி உமிழ்ந்து விட்டு மீண்டும் நற நறவென்று கடித்து மென்று... இனிக்க இனிக்க சாறு விழுங்கி.

கருப்பஞ்சாற்றைப் போலவே அந்த நாட்களும் மிக இனிமையானவை.

இப்போது கரும்பென்று நினைக்கையிலேயே குலை நடுங்குகிறது. கடிக்கவா... இழுக்கவா.... மெல்லவா..?

உறைக்க உறைக்க ஆஸ் ஊஸ் சென்று இறைச்சியும் சோறும் மென்று முடித்து கை வாய் கழுவியதும் அம்மாவிடம் 'பின்'கேட்பேன்.

ஆறேழு இடங்களில் குத்தி எடுத்தால் தான் விடுதலை கிடைக்கும். இறைச்சித் துரும்புகளை குத்தி எடுக்கும்வரை பற்களுக்கு சிலுவையில் தொங்கும் ஒரு வேதனை.

பல்லை எல்லாம் 'பின்'னால் குத்தக் கூடாது என்பார்கள் அம்மா ரவிக்கையில் கழற்றிய பின்னை நீட்டிக் கொண்டே!

பல்லிடுக்குகளை மெது மெதுவாகக் குத்தி சுத்தம் செய்து கொப்ப ளித்துத் துப்புகையில் தண்ணீர் லேசான சிவப்பாய்த் தெறிக்கும், மெலி தான இரத்த வாடையுடன்.

ஒட்டி நிற்கும் பற்களுக்குள் ஓட்டை போட்டு பிரித்து விடும் சூழ்ச்சி எதையும் நான் தெரிந்து செய்யவில்லை. என்றாலும் எகிறருகில் ஊசியை நுழைத்து பல் நுனி வரை இழுத்துப் பார்த்திருக்கின்றேன்.

ஏறக்குறைய ஒட்டியிருக்கும் இரண்டை வெவ்வேறாகப் பிரிப்பதற்கொப்பானதுதான் இது!

ஆபீசில் வேலை பார்க்கும் ஆறேழு பெண்கள் ஒரு நாள் வீட்டுக்கு வந்திருந்தனர். பேசிச் சிரித்து நாலைந்து குளிர் பானப்போத்தல்கள் வாங்கி...

இதெல்லாம் வழமைகள் தானே!

பெண்கள் என்றதும் மனம் சிலிர்த்துக் கொள்ளும் வயது அது!

மேசை மீது போத்தல்களை வைத்து விட்டு "அம்மா கிளாஸ்" என்றேன்.

கிளாஸ்கள் மட்டுமே வந்தன. ஒப்பனர் வரவில்லை. கேட்டேன். அம்மா மறுபடியும் குசினிப் பக்கம் நடந்தார்கள்.

அதற்குள்

கூடியிருந்து கும்மாளமிடும் "யாரோ" இந்த பெண்களிடம் என்னு டைய கெட்டிக்காரத்தனத்தைக் காட்ட பலியாவது எனது பல்!

கடை வாய்ப் பல் இடுக்கில் போத்தலை வைத்துக் கடித்து 'கடக்' கென்னும் ஓசையுடன் ஒன்றைத் திறந்து காட்டினேன்!

"அம்மாடியோவ்..." என்று ஒருத்தி குதூகலித்தாள். ஒப்பனருடன் அம்மா வருவதற்குள் நாலைந்து "அம்மாடியோக்கள்..."

டஸ்ஸென்று நுரை வழிய வழிய கிளாஸ்கள் நிறைந்தன.

அம்மா திகைத்து நின்று விட்டார்கள். பிறகு ஏசினார்கள்.

ஆனாலும் எனது பற்கள் மீதான என்னுடைய ஆதிக்கம்... சர்வாதி காரம்..!

எனது பல்தானே என்னும் எதேச்சதிகார அசட்டை..!

தங்கள் தங்கள் குஷிகள் கொண்டாட்டங்களுக்காக அடிமைகளை துன்புறுத்தி இன்பம் காணும் எஜமானர்கள் போல்...

அம்மாவின் இடத்தை மனைவி பிடித்துக் கொண்ட பிறகும் 'பின்'னால் பல்லுக் குத்தாதீங்க என்றபடி ரவிக்கையில் இருந்து 'பின்' கழற்றிக் கொடுப்பது நடந்து கொண்டே இருந்தது.

நாசூக்கான இந்தப் பிளவு படுத்தும் வேலையை தனியாக மட்டு மின்றி கூட்டாகவும் செய்திருக்கின்றேன்.

இது நாசகார வேலையல்ல நமது பாரம்பரியம் என்னும் போலிப் பூச்சுடன்.

எங்கள் வீட்டில் ஒரு விருந்து!

பொரித்தாக்கிய கத்திரிக்காய் கூட்டும் உருளைக்கிழங்கை பிசைந்து மாவாக்கிய உருளைக் கிழங்கு உப்புமாவையும் தவிர்ந்த மற்றதெல் லாமே பல்லுடன் மல்லுக்கு நிற்கும் அயிட்டங்கள்.

இறால் வறுவல், மாட்டிறைச்சிப் பிரட்டல், கால் முள்ளும் சதையு மாக கோழி இறைச்சிக் கறி!

மாட்டிறைச்சி வேண்டாம் என்பவர்க ளுக்காக குண்டு குண்டாய் எலும்புகளுடன் ஆட்டிறைச்சிப் பிரட்டல்..!

கடிக்க முடியாதவைகளை வீசித் தொலைக்கின்றார்களா? இல்லை சப்புகின்றார்கள், உறிஞ்சுகின்றார்கள்... திருப்பித் திருப்பிப் பார்த்து இடம் தேடிக் கண்டு பல்லை நுழைத்து...

ஒரே போர்க்களம்!

கை கழுவித் துடைத்து பழம் தின்னும் முன் ஒவ்வொருவரும் பல் குச்சியும் தானுமாய்...

முன் கையால் வாயை மூடிக்கொண்டு முகங்களைக் கோணிக் கோணி...

பூச்சாடியின் பூக்களென ஊசி ஊசியாய் நீட்டிக் கொண்டு பற் குச்சிகள் பக்கற்றுடன் வீற்றிருக்கிறது மேசையில்.

தலையைப் பலமாக உதறிக் கொண்டேன். சும்மாவே 'நொய் நொய்' என்று பிய்க்கும் பல்லுக்கு தலையின் பலமான உதறல் வெறும் வாய்க்கு அவல் போட்டது போல்...

விரலால் மெதுவாகத் தடவுகின்றேன். பல்லின் வழுவழுப்பு விரலில் அசூயையை ஏற்படுத்துகின்றது.

நகத்தால் மெதுவாகச் சுரண்டியவாறே விரலிடுக்கில் பல்லை வைத்து பிடியைச் சற்று அழுத்தி...

ஒரு திருகு..!

பல் கையுடன் வந்து விட்டது போன்ற உணர்வு ஆனால் விரல் மட்டுமே வெளியே வந்தது. எச்சில் ஒழுகிக் கொண்டு.

இடுப்பில் குந்தியிருக்கும் குழந்தையைப் போல் எகிறுக்கு வெளியே குந்தியிருக்கிறது பல்!

எகிறைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு

நாவால் இழுத்துப் பார்க்கிறேன்.

வரிசைக்கு வர மறுத்து அடம்பிடிக்கிறது.

என்னுடைய பலாத்காரப் பிரயோகங்களுக்கான ஒரு எதிர்ப்புக் குரல் கொடுத்துக் கொண்டு!

கண்ணாடி முன் நின்று பல்லுடன் மல்லாடிக் கொண்டிருக்கும் என்னை வருவோர் போவோர் எல்லாம் ஏளனமாகப் பார்ப்பதும் நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொள்வதுமாய்...

அவர்களுக்கு இப்படி ஏதும் இன்னும் வரவில்லையா அல்லது தங்களுடையவைகளை மறைத்துக் கொண்டு அயலவனை கேலி செய்யும் வேஷமா?

ஒரு விதமாகப் பல்லை சமாதானப்படுத்தி வரிசைக்கு கொண்டு வந்து விட்டேன்.

மெதுவாக தொட்டுப் பார்க்கிறேன். விரல் நுனிபடும் போதே விலகிச் செல்கின்றது!

எச்சில் சிவப்பாய் ஊறி ஊறி வாய் ரொம்புகிறது.

"தண்ணி... கொஞ்சம்..." என்று குழறியபடி வெளியே ஓடுகின் றேன்.

டம்ளரில் தண்ணீருடன் மனைவி வந்தாள்.

வழவழப்பும் சிவப்புமாய் எச்சிலைத் துப்பி விட்டு.

துப்புவது எங்கே வாயைத் திறந்து குனிந்து வடித்து விட்டு நிமிர்ந் தேன்.

கிளாசை வாங்கி தண்ணீரை வாயில் ஊற்றியது தான் தாமதம்

இழுத்ததே ஒரு இழுப்பு! கையில் இருந்த கிளாசை வீசி எறிந்தேன்.

எரி கொள்ளியை தண்ணீருக்குள் விட்டு இழுத்தது போல் புகையும் கொதிப்புமாய் ஏதோ ஒன்று சர் சர் ரென்று பல்லுக்குள் நுழைந்து

எகிறுக்குள் ஏறி கன்னத்தில் வியாபித்து கண் நெற்றி என்று ஏறி ஏறி மண்டைக்குள் பிரவேசித்து மூளையைத் தேடி...

என்னால் நிற்க முடியவில்லை. நின்றால் சாய்ந்து விடுவேன் என்பது திண்ணம்.

ஓடுகின்றேன்... வீட்டை சுற்றி... கேட்டைத் தள்ளிக் கொண்டு றோட்டு வழியே...

சைக்கிள்... கார்... பஸ்... என்று தாண்டி ஓடுகின்றேன்.

சிலர் நின்று திரும்பி என்னைப் பார்க்கின்றனர். பிறகு நடக்கின்றனர்.

நான் ஓடுகின்றேன்... பின்னால் மனைவி ஓடி வருகின்றாள்...

நீண்டு நீண்டு வரும் அவளது கரம் எட்டி எட்டி என்னைப் பிடிக்க முயன்று முதுகில் பட்டு பட்டு விலகி...

எட்டிப் பிடித்து வேகத்தைக் குறைத்து ஓட்டத்தை நிறுத்தி உள்ளே கூட்டி வருகிறாள்.

எனக்கு சுயம் திரும்புகின்றது. வெட்கமாக இருக்கின்றது அடங்கிப் போய் கதிரையில் அமர்கின்றேன்.

"இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி இம்சைப்படப் போறீங்க. டாக்டர்கிட்ட போங்கன்னு நானும் எத்தனையோ தடவை சொல்லி விட்டேன்... நேரமில்லைம்பீங்க ஆடுற பல் தானே விழுந்துடும்பீங்க... அது உங்களை வீழ்த்திடும் போலிருக்கே..."

கலங்குகின்றாள் மனைவி

ஆம் அதுதான் சரியான வழி! நானும் தீர்மானித்துக் கொண்டேன்.

என்னுடைய எந்தவிதமான சமரசங்களுடனும் அது ஒத்து போக வில்லை!

இதமான எனது தடவல்கள் அதைத் திருப்திப் படுத்தவில்லை.

எனது சின்ன சின்ன பலாத்காரங்களுக்கு அது மசியவில்லை.

இனி ஆயுதப் பிரயோகம் தான்

ஊசி போட்டு உணர்வழித்து உயர்ந்த கதிரையில் உட்கார்த்தி தலையை அழுத்தி வைத்து கிடுக்கி போட்டு இறுக்கி கத்தியால் கீறி குரடால் அழுத் திப் பிடித்து நெம்பி....

"Every action has a reaction" என்பதன் இருப்பை நானும் நிலை நாட்ட வேண்டும்!

கன்னத்தில் கை பதித்து ஆயுத உதவி நாடி டாக்டரை அடைந்த போது எனக்கு பகீர் என்றது.

என்ன இத்தனை கூட்டம்!

கன்னத்திலும் தாவாயிலும் முன் வாயிலும் கை பதித்தவர்களாய் அத்தனை பேரும்!

முகத்தைக் கோணி கோணி அழுதபடி அம்மாவை அரவணைத்துக் கொண்டு அந்தச் சிறுவன்...

பள்ளிக்கூடக் கவுனும் தானுமாய் அப்பாவின் பிடிக்குள் நெளியும் அந்தச் சிறுமி...

பூவும்... பிஞ்சும்... காயும்... பழமுமாய்...

இத்தனை பேருக்குமே பல்வலியா!

டாக்டரிடம் நானோ என்னிடம் டாக்டரோ எப்போது நெருங்குவது....

உலகம் அவசர அவசரமாகக் கிழண்டுப் போய்க் கொண்டிருக்கிறதோ!

டாக்டரே டாக்டர்களாகிப் பல்கிப் பெருகி...

கத்திகளும்... இடுக்கிகளும்... ஒன்றுடன் ஒன்று மோதும் கடமுடா வென்னும் ஆயுத ஒலிகள் இரைச்சலாகி.... காது செவிடுபடும் படி...

ஆட்டம் போடும் இந்த பல்லை ஆயுதம் போட்டு அகற்றி அழித்து விட்டு...

நுனி நாவால் தடவிப் பார்க்கின்றேன். பல்லிருந்த இருந்த இடம் பள்ளமாக இருக்கிறது.

ஆனால்... ஆனால்..!

பக்கத்துப் பல் ஏன் லேசாக வலிக்கிறது!

- ● -

சரிநிகர் 1997
தினக்குரல் 2012



# இன்னுமொரு

# 8

பாதையில் ஏதோ சத்தம் கேட்கிறது. எழுதிக் கொண்டிருந்த நான் வந்து திரையை விலக்கி ஜன்னலூடாகப் பார்க்கின்றேன்.

சரியாக எங்கள் வீட்டுக்கு முன்னால்தான் ஏதோ கூட்டம்.

தெருச்சுற்றிகள் ஏழெட்டுப்பேர் கும்பலாகக் கூடி நிற்கின்றனர். மத்தியில் யாரோ மாட்டிக் கொண்டனர் என்பது உச்சஸ்தாயில் கேட்கும் சில சிங்களக் குரல்களில் இருந்து தெரிகிறது.

"யாரைத் தேடுகிறீர?" ஒரு குரல்.

"எங்கிருந்து வருகின்றீர்?" இன்னொரு குரல்.

"யாழ்ப்பாணமா?" மற்றொரு குரல்.

"கொட்டித?" மற்றுமொரு குரல்.

"ஐடெண்டி கார்ட் இருக்கா... எடு..?"

வீட்டில் இருந்து வெளியே வந்து கேட்டடியில் நின்றேன்.

இப்போது சூழ்நிலை துல்லியமாகத் தெரிகிறது.

கையில் ஏதோ ஒரு விலாசத்தை வைத்துக் கொண்டு இரண்டு தமிழ் வாலிபர்கள் வீடு தேடி வந்துள்ளனர்.

"சந்தேகத்துகிடமான விதத்தில் புதியவர்கள் யாராவது நடமாடினால் உடனே எங்களுக்கு அறிவியுங்கள்" என்னும் பொலிஸ் அறிவித்தல் இவர்களுடைய அழுக்கடைந்த மனதை உசுப்பிவிட, விலாசம் தேடி வந்தவர்கள் வசமாக மாட்டிக் கொண்டனர்.

எதிர் வீடுகள், பக்கத்து வீடுகள் ஆகியவற்றின் சாளரங்களில் சில புதிய, பழைய தாமரைகள் பூத்தன.... பின் மறைந்தன.

வாசற் கதவடியில் சில ஆண்முகங்கள் எட்டிப் பார்த்தன. சற்று நின்றன... பின் உள்ளே சென்றன.

இவர்களுக்கெல்லாம் இல்லாத ஒரு அக்கறை எங்கிருந்தோ, யாரோ புதியவர்கள் வந்து கொழும்பைத் தூக்கிக் கொண்டு போய் விடாமல் தடுத்து நிறுத்திவிடும் முன் ஜாக்கிறதை... இந்தத் தெருப் பொறுக்கிகளுக்கு வந்து விடுகிறது!

நம்மவர்களின் தேசப்பற்று வினோதமே இதுதான். காக்கைக்கு மூக்கில் வியர்ப்பதுபோல் புதியவர்கள் யாராவது வந்தால் உடனே இவர் களுக்குத்தான் வியர்த்து விடுகின்றது.

ஏதாவது கையில் மடியில் இருப்பதை அப்பிக் கொண்டு அனுப்பி விடும் வித்தைகள்தான்!

விலாசம் தேடி வந்தவர்களை நடுவில் விட்டு இவர்கள் வியூகம் அமைத்துக் கொண்டனர்.

கேட்டைத் திறந்தேன்.

றோட்டுக்கும் வீட்டுக்கும் நடுவில் நிற்கும் அரைச்சுவற்றில் இருக் கும் இந்த இடுப்பளவு இரும்பு கேட் திறக்கும்போது இசையு டன்கூடிய ஒரு நீண்ட ஒலி எழுப்பும். கேட் மாட்டப்பட்டிருக்கும் கொக்கிக்கு எண்ணெய் போட்டால் இந்த சப்தம் எழாது என்பதை மழை நாட்களில் கேட் திறக்கப்படும்போது நாங்கள் அறிந்து கொண் டோம் என்றாலும் எண்ணெய் போடுவதில்லை.

வீட்டுக்குள் இருக்கும் எங்களுக்கு இந்த கேட்டொலிதான் கூப்பிடு மணி.

உள்ளே இருப்பவர்களுக்கு மட்டுமல்ல, இப்போது வெளியே இருக்கின்றவர்களுக்கும் இது ஒரு கூப்பிடு மணியாகிவிட்டது!

நான் கேட்டைத் திறந்ததும் சுற்றி நின்ற கும்பல் முகங்களில் அதி ருப்தி தென்பட என் பக்கம் திரும்பியது.

நான் கேட்டை திறந்து கொண்டு வெளியே வந்தது அவர்களுக்கு பிடிக்கவில்லை.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வீட்டில் இருந்து எட்டிப்பார்ப்ப வர்கள் எட்டிப்பார்ப்பதுடன் உள்ளே போய்விட வேண்டும். அதா வது இவர்களுடைய தெருத் தர்பாருக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது.

நான் அவர்களை நோக்கி நடந்தது அவர்களுக்குப் பிடித்திருக்க முடியாதுதான்

"என்னைசே இந்தப் பக்கம்! என்ன இப்படிக் கூட்டமாக!" என்றேன்.

உண்மையிலேயே இவர்கள் மத்தியில் மாட்டிக் கொண்டவர் எனக்குத் தெரிந்தவராகத்தான் இருந்தார். கொஞ்சம் இலக்கிய ஈடுபாடு கொண்டவர். சிங்களச் சிறுகதைகள் சிலவற்றை... கவிதைகள் சிலவற்றை... தமிழில் அவ்வப்போது மொழிப்பெயர்த்து வருபவர். சுயமாகவும் ஒரு சில கவிதைகள்... கதைகள் எழுதுவார். கொழும்பின் வேறொரு பகுதியில் வசிப்பவர்.

"வணக்கம் சார்! இவரோட சொந்தக்காரர்கள் இந்தப்பக்கம் இருக்கின்றார்களாம். அதுதான் வீட்டைத் தேடிக் கொண்டு வந்தோம். இவர்கள் என்னடாவென்றால்..!

பயந்துபோய் மான்போல் மருட்சியுடன் பேசினார் அவர். நண்பருடன் இருந்த மற்றவரைப் பார்த்தேன். பழகிய முகம் என்பது தெரிகிறது. ஆனாலும் ஆளை மட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

"உங்களுக்குத் தெரிந்தவர்களா?" கூட்டத்தில் உள்ள ஒருவன் சிங்களத்தில் கேட்டான்.

"ஆமாம்... ஆமாம்" என்றபடி அவரைப் பெயர் சொல்லி அழைத்து "வாருங்கள் உள்ளேபோய் பேசுவோம்" என்று திரும்பினேன்.

"மாத்தயாத் கொட்டித தன்னெ நே" என்ற குரல் கேட்டு நின்று திரும்பிப் பார்ப்பேன் என்பது அவர்களுக்கும் தெரியும். ஆகவே என் பக்கம் திரும்பி முகத்தை அடையாளம் பண்ணிக் கொள்ளாமல் கலைந்து விட்டனர்.

கோவில் திருவிழா என்றால் "தெருவைச் சோடனை செய்கின்றோம்" என்று லிஸ்ட்டுடன் வருவார்கள்.

வெசாக் என்றால் "தண்ணீர்ப் பந்தல் போடுகின்றோம்" என்று லிஸ்ட்டைத் தூக்கிக் கொண்டு வருவார்கள்.

இப்படி எதையாவது கூறிக் கொண்டு லிஸ்ட்டையும் தூக்கிக் கொண்டு பணம் வசூலிக்க வரவேண்டும் என்பது அவர்களுக்கும் தெரியும். ஆகவே வாயில் வந்த பயிற்றப்பட்டுவிட்ட வார்த்தை காற்றுடன் கலைந்துவிட அவர்களும் கலைகின்றனர்.

இன்றைய சூழ்நிலையில் இன்னொரு தடவை எங்களை வீடு

புகுந்து அடிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கப்போவதில்லை என்பதுவும், ஏற்கனவே அடித்ததில் அடிப்பட்டவர்களைவிடக் கூடுதலான இழப்பு அடிகத் தூண்டியவர்களுக்கும் அடித்தவர்களுக்கும்தான் என் பது சகல மட்டத்திலும் உணரப்பட்டதால், இனிமேலும் மந்திரக் கோலைத் தூக்கிக் காட்ட மந்திரவாதிகள் இல்லை என்பதும் இவர்க ளுக்கு மட்டும் புரியாதா என்ன?

ஆகவே திரும்பிப் பார்த்து முகத்தைக் காட்டி அடையாளம் பண் ணிக் கொள்ளாமல் கலைகின்றனர்.

"பார்த்தீர்களா... பறங்கிக்காய் கொட ஐநூறு பன்னெண்டு ரூபா யாம்! உருளைக்கிழங்கு ஐநூறு, இருபத்தெட்டு ரூபாயாம்! வெங் காயம் இருபத்தைந்து ரூபாயாம்! இந்தா இவ்வளவுதான் தேங்காய் எட்டு ரூபாய் சொல்றான்! என்னத்தை வாங்குகிறது என்னத்தை ஆக்குகிறது!" குமுறிக் கொண்டே வெளியே வந்த என் மனைவி, என்னுடன் யாரோ புதியவர்கள் இரண்டு பேர் நிற்பதைக் கண்டதும் நாக்கைக் கடித்தபடி உள்ளே போய்விட்டாள்.

"குடிக்க ஏதாவது குடுத்தனுப்புங்க" என்று மனைவிக்குக் குரல் கொடுத்துவிட்டு "இருங்க... இருங்க... பயலுகள் என்ன சொல்றா ணுகள்" என்றேன்.

"அதை ஏன் கேக்குறீங்க? நீங்க வெளியே வந்தது நல்லதாப் போச்சு. இல்லாட்டி அவனுகளே எங்க சட்டைப் பைக்குள்ள கையை விட்டு அடையாள அட்டையைத் தேடி இருப்பானுக!" என்று கூறிய படி முகம்... கழுத்து... நெஞ்சு... இத்தியாதிகளைக் கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டார்.

"பயல்கள் நன்றாகவே பயமுறுத்தி இருக்கிறார்கள்" என்று எண்ணி யபடி மற்றவரைப் பார்த்தேன்.

எங்கேயோ பார்த்த மாதிரி என்று நான் தடுமாறிக் கொண்டிருக்கும் போதே நண்பர் கூறத் தொடங்கினார்.

"இவர் எனது நண்பர். சென்ட்றல் பஸ் ஸ்டாண்ட் அருகில் மில்க் பாருக்குப் பக்கத்தில் இருக்கும் பெரிய கடை! தெரியுமா உங்களுக்கு. அதில் சேல்ஸ்மனாக நிற்கின்றார்"

எனக்கு இப்போது பளீரென்று மின்னலடித்தாற்போல் விளங் கியது.

அங்கேதான் இவரைப் பார்த்திருக்கின்றேன். அது ஒரு பெரிய

சில்லறைக் கடை. எல்லாச் சாமான்களும் இருக்கும். கூட்டமும் அப்படித்தான் இருக்கும். சாமான்களை வாங்கிய கையுடன் பஸ்ஸில் ஏறிக் கொள்ளலாம் என்பது மட்டுமல்ல... இடம்பிடித்தும் அமர்ந்து கொள்ளலாம் என்னும் வசதிக்காகத்தான் இத்தனை கூட்டமும்.

கூட்டத்துடன் நெருங்கி நின்று உள்ளே இருக்கும் யாராவது ஒருவரின் கருணைக்காகக் காத்து நின்று காசைக் கொடுத்து சாமான் வாங்கி இருக்கின்றேன்.

உள்ளே நிற்கும் சிலரில் இவரும் ஒருவராக நிற்பதைக் கண்ட நினைவுதான். எங்கேயோ பார்த்திருக்கின்றேனே என்று சற்றுமுன் அலைக்கழித்தது.

ஒரு தடவை யாரோ இன்னொருவருக்கு இவர் லிஸ்டின்படி சாமான் போட்டுக் கொண்டிருந்திருக்கின்றார். அவசரத்தில் நானும் என்னுடைய சாமான் துண்டை அவரிடம் நீட்ட அதை லாவகமாக ஒரு கையால் ஒதுக்கித் தள்ளிய இவர் "வேலை செய்து கொண்டல்லவா இருக்கிறேன்... தெரியவில்லை... பொறுங்கோ!" என்று கூறியதுடன் சாமான் சுற்றிக் கொண்டே "பார்த்தா பெரிய மனிதர்போல் கிடக்கு. மூளையைப் பாவிக்கிறதில்லை... கடைக்கு வந்தவுடன் சாமான் கெடைச்சிடணும்..." என்று எனக்கும் கேட்கும்படி முனகிக் கொண்டார்.

அந்த நேரத்தில் அது எனக்குச் சுருக்கென்றுதான் இருந்தது. என்றாலும் அவர்மேல் எனக்கு எதுவிதமான கோபமோ ஆத்திரமோ ஏற்படவில்லை.

அவர் கூறியது நியாயமானதுதான்..!

கடையில் நிற்பவர்களின் சிரமங்களை சாமான் வாங்க வருபவர்களும் உணர வேண்டும்தானே!

அப்போதே நான் மறந்து விட்டாலும் இப்போது நினைவிலோடுகிறது.

அவரையே நான் பார்த்துக் கொண்டிருந்ததால் நண்பர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை தொடர்ந்து கூறினார்.

"கடையில் நிற்கும் இவருடன் எப்படி நான் வர நேர்ந்தது என்று நினைக்கின்றீர்களா?" என்று "இல்லை இல்லை" என்று அவர் பேச்சை கவ்வாத்திட்டு மறுத்த எனக்கு நண்பர் என்ன கூறுகின்றார் என்று புரியவில்லை.

ஒரு சில்லறைக் கடையில் வேலைக்கு நிற்பதால் இவர் எப்படி நண்பரைவிட ஒருபடி தாழ்ந்து போனார் என்பதும்... கதைகள் சில எழுதுவதால் பேப்பர்களில் பெயர் வருவதால் நண்பர் எப்படி இவரை விட உயர்ந்தவராகிவிட்டார் என்பதும் என்னால் விளங்கிக் கொள்ள முடியாத ஒன்றாக இருந்தது.

"ஒரு சக மனிதனை தன்னுடன் சமதையாக வைத்து எண்ணத் திரா ணியற்ற இவரெல்லாம் எழுதி..." என்று நான் எண்ணிக் கொண்டி ருக்கும்போது,

"தன்னுடைய ஓய்வு நேரங்களில் இவர் வானொலி நாடகங்களில் பங்குபற்றுகிறார்... நான் தயாரிக்கும் வானொலி நிகழ்ச்சிகளில் வரும் குட்டி நாடகங்களில் எல்லாம் இவருக்கு இடம் தருகின்றேன்... நல்ல நடிகர். எதிர்காலத்தில் பிரகாசிப்பார்..! என்று நண்பர் அவரை எனக்கு அறிமுகப்படுத்தினார். மற்றவர் லேசாகச் சிவக்கும் முகத்துடன் குனிந்தபடி மௌனமாக சிரித்துக் கொண்டார்.

"அந்த எதிர்காலப் பிரகாசத்தை நம்பித்தானோ..?" என்று எண் ணியபடி, "இவர் ஒரு வானொலிக் கலைஞராக, கலை இலக்கியத் துடன் ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தப்பட்டவராக இல்லாதிருந்தால் இவரைக் கூட்டிக் கொண்டு இந்த விலாசம் தேடி வந்திருக்க மாட் டீர்கள்! இப்படி மாட்டிக் கொண்டு அவஸ்த்தைப்பட்டிருக்கவும் மாட்டீர்கள் இல்லையா..?" என்றேன்.

"இல்லை... இல்லை..." என்று என் கூற்றை மறுத்துச் சமாளித்தவர் மற்றவரைப் பார்த்து "ஐயாவைத் தெரியுமா உங்களுக்கு" என்று அவரிடம் பேச ஆரம்பித்த அதேவேளை உள்ளே இருந்து மனைவி யின் குரல் கேட்டது.

இருக்கையை விட்டு நான் எழுந்தபோதே மற்றவரும் திடீரென்று எழுந்து நின்றார்.

இருகரம் கூப்பி "வணக்கம் ஐயா" என்றவாறு எனது கைகளை இறுகப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டார்.

"என்ன இதெல்லாம்..! உட்காருங்கள்..!" என்று கூறிவிட்டு உள்ளே சென்று தேநீருடன் திரும்பினேன்.

அவர் இன்னும் நின்று கொண்டே இருந்தார். பலவந்தப்படுத்தி அவரை நான் உட்காரச் செய்ய வேண்டி இருந்தது.

"ஐயாவை உங்களுக்கு நன்றாகப் பழக்கமா? இங்கேதான் ஐயா

வின் வீடு இருக்கிறது என்பது முன்பே தெரியுமா?" என்று நண்பரிடம் ஏதேதோ கேட்கின்றார்.

"சாரைத் தெரியும். ஆனால் இங்கேதான் வீடுன்னு தெரியாது. தெரிஞ்சிருந்தாத்தான் நேரா இங்கே வந்திருப்பேனே! றோட்டுல அவனுக்கிட்ட மாட்டிருக்காம!" என்றவர் என்னைப் பார்த்துக் கூறுகின்றார்,

"பாருங்க எவ்வளவோ பழகி இருக்கோம். ஆனா வீடு தெரியலே. விலாசம் தெரியலே, றோட்டுல பாக்றோம் கூட்டங்கள்ல பாக்குறோம் அவ்வளவோட சரி. இப்பக்கூட றோட்டுல ஒரு தகறாறு நடந்தில்லாட்டி... நல்ல மனசு பண்ணி நீங்களும் வெளியே வந்தில் லாட்டி நாங்கபாட்டுக்குப் போயிருப்போம்..." என்று மூச்சுவிடாமல் பொரிந்தவர்... "இப்படியாவது சந்திச்சிக்கிட்டமே அதே ஒரு பாக்கியம்தான்! அந்த றவுடிப் பயலுககிட்ட மாட்டிக்கிட்டதே மறந்து போச்சு" என்று முடித்தார்.

அவரிடமிருந்து அந்த விலாசத்தை வாங்கிப் பார்த்தேன்.

பாதையில் இருந்து பிரியும் ஒரு சந்துக்குள் நுழைந்து போக வேண்டும். சந்துக்குள் நுழைந்த பின்பும் வீட்டைக் கண்டுபிடிப்பது சிரமம் தான்.

அந்த சந்துக்குள் இவர்களை தனியே அனுப்பக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டு உள்ளே சென்றேன் மனைவியிடம் கூறிவிட்டு வர, "இந்த தேங்காயைப் பாருங்க. தேங்காத்திருகிகொட நொழைய மாட்டேங்குது. இதுக்குப் போய் எட்டு ரூபாயா எடுத்திருக்கான்"

ஆத்திரத்தைக் கொட்டித்தீர்க்க குரலை உயர்த்தி சத்தமிட முடியாத பரிதாபம் கழுத்தில் உப்பித் தணிந்தது. வேற்றாள் இருவர் வெளியே அமர்ந்திருக்கின்றார்களே!

"சரி... சரி.. என்ன செய்யலாம்..!" என்று மனைவியை சமாதானம் செய்துவிட்டு அவர்கள் இருவருடனும் வெளியே நடந்தேன்.

- ● -

கையில் சாமான் துண்டுடன் கூட்டத்தில் நெருங்கி நின்று கொண்டிருக்கின்றேன்.

அதே கடைதான்!

கடைக்குள் நின்று கொண்டிருந்த அந்த நண்பர் விலாசம் தேடிக் கொண்டு வந்தவர்... என்னைக் கண்டுவிட்டார்.

“ஐயா வாருங்கள்...” என்றபடி என்னுடைய நீட்டிய கையிலிருந்து சாமான் துண்டை எட்டி எடுத்துக் கொண்டார்.

“சற்றுப் பொறுங்களேன்... வேலை செய்து கொண்டல்லவா இருக் கின்றேன்” என்று துண்டுடன் நீண்ட என் கையை ஒதுக்கிவிட்ட அந்த சுயத்தைக் காணாத எனக்குச் சற்று சங்கடமாக இருந்தது.

தான் செய்து கொண்டிருந்த வேலையைத் தொடரும்படி இன் னொரு சிப்பந்தியிடம் கூறி அவர் முகம் சுழித்து ஏதோ முனகிய தையும் என் பொருட்டு மகிழ்வுடன் ஏற்று, என்னுடைய பொருட் களை விரைவாகக் கட்டத் தொடங்கிய அவருடைய செயல் என்னை மிகவும் சங்கடப்படுத்துகிறது.

“என்னைப் பார்த்து அவர் பயப்படுகின்றாரோ? இல்லையென் றால் ஏன் இப்படிப் பதறுகின்றார்..!”

“இது பயமில்லை ஒரு மரியாதை! என் மேல் அவர் கொண்டுள்ள மதிப்பு..!

என் மனதுக்குள் ஒரு கேள்வி... பதில்!

சாமான் கட்டியாகிவிட்டது. கட்டிய பொருட்களை ஒரு பெரிய பேக்குக்குள் போட்டு வாயைக் கட்டி ஒரு மூலையில் வைத்துவிட்டு என்னிடம் தொகையைக் கூறுகின்றார்.

துண்டைப் போட்டவுடனேயே நானும் மனைவியும் குத்துமதிப் பாக விலையையும் போட்டுப் பார்த்துக் கொள்வோம். எங்கள் தொகை யைவிடக் கூடுதலாகத்தான் வரும் என்பது எங்களுக்கே தெரியும் என்பதால் ஒரு இருபது முப்பது ரூபாய் கூடுதலாகவே வைத்தி ருப்பேன்.

அவர் கூறிய தொகையைக் கேட்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நானும் மனைவியுமாகக் கூட்டிப் போட்டிருந்த தொகை யிலிருந்து முப்பது முப்பத்தைந்து ரூபாய்க்கு மேல் குறைவாக இருந்தது.

இது எனக்கு இரண்டாவது சங்கடம்.

எனக்கு எதற்காகவோ ஒரு சலுகை கிடைப்பதாக உள்மனம் உறுத் துகிறது.

காசைக் கொடுத்துவிட்டு சாமானை ஏற்க ஒரு சில தோள்களுக்கு மேலாகக் கைகளை உயர்த்தி நீட்டினேன்.

நீண்ட எனது கைகளில் பில்லையும் மீதிப்பணத்தையும் வைத்தவர்

"ஐயா பஸ்ஸுக்குப் போங்கோ சாமான் வருது" என்றார்.

சுற்றி நின்றவர்கள் ஒரு அரசியல்வாதியைப் பார்ப்பதுபோல் என்னைப் பார்ப்பதான ஒரு கூச்சத்தை உணர்கின்றேன்.

"பொடியேன், ஐயா கூடவே போய் இந்த சாமான்களை பஸ்ஸில் வச்சிட்டு ஓடியா! சாமானை வச்சிட்டு கையை ஏதும் நீட்டிறாதே..! ஐயா எனக்கு நல்லா தெரிஞ்சவரு..! கேப்பேன்..!"

திரும்பி நடந்த என் செவி வழி நுழைந்து மனதை குடைகிறது, அவருடைய ஓங்கிய குரல்.

"எனக்கு இத்தனை உபசரணை சலுகை செய்யும் இவர் என்னுடைய சாமான்களைத் தூக்கிவரும் அந்தச் சிறுவனிடம் " ஏதும் எதிர் பார்க்காதே என்று எச்சரித்து அனுப்புவது என்ன நியாயம்" என்று எண்ணியவாறு பஸ்ஸில் அமர்ந்து லிஸ்ட்டை எடுத்துப் பார்க்கின் றேன்.

லக்ஸ்பிறே, சீனி, கிழங்கு, வெங்காயம் போன்ற அன்றாடத் தேவைப் பொருட்களின் விலைகள் நாங்கள் போட்டுக் கொண்டிருந்ததைவிட மிகையாகக் குறைந்திருக்கிறது.

எனக்குத் தெரியும் பால்மா பக்கெட் ஆறோ பன்னிரெண்டோ வாங்கினால், ஒரு பக்கெட்டின் விலை நாலைந்து ரூபாயால் குறையும் என்பதும் மூடை கணக்கில்... அதாவது ஐம்பது கிலோவுக்குமேல் சீனி வாங்கினால், ஒருகிலோவின் விலை இரண்டு இரண்டரை ரூபாயால் குறையும் என்பதும், மற்றப் பொருட்களும் அப்படியே தான். மொத்தமாக வாங்கினால், விலை ஏகமாகக் குறையும்.

மூடை கணக்கில் சீனியும்... டசின் கணக்கில் லக்ஸ்பிறேயும் யாரால் வாங்க முடியும்?

பணக்காரர்களால் தான் முடியும்.

மொத்தமாக வாங்கவும் வைத்துக் கொள்ளவும் வசதி படைத்த வர்களுக்கு ஒரு லக்ஸ்பிறேயின் விலை **54** ரூபாயும் சீனி கிலோவின் விலை **23** ரூபாயாகவும் இருக்கும்போது, எண்ணி எண்ணிக் காசெடுத்து ஒரு பக்கெட் லக்ஸ்பிறேயும் அரை கிலோ சீனியும் மாத்திரமே வாங்க சக்தியுள்ள ஏழைக்கு லக்ஸ்பிறே **59** ரூபாய், சீனி **26** ரூபாய்!

வசதி படைத்த பணக்காரர்களுக்கு குறைந்த விலை. வசதியற்ற ஏழைகளுக்குக் கூடிய விலை.

நமது பொருளாதார அமைப்பு அப்படி!

சீனிக்கும் லக்ஸ்பிறேக்கும் இன்னும் சில பொருட்களுக்கும் அந்தப் பணக்கார விலைதான் எனக்கும் போடப்பட்டிருக்கிறது. இத்தனைக் கும் என்னுடைய ஏழ்மை லிஸ்டில் இருப்பதோ ஒரு பால் பக்கெட் டும் ஒரு கிலோ சீனியும்தான்!

"லாபாய்...லாபாய்" என்று பொருட்களை விற்பதுபோல் ஊர்களை விற்றுக் கொண்டிருக்கின்றான் பஸ் கண்டக்டர்.

"இந்தியா" என்னும் தன்னுடைய பத்திரிகைக்கு "பாரதி" விலை நிர்ணயித்திருந்த விதம் என் நினைவிலோடுகிறது.

அரசாங்க அலுவலகங்களுக்கு ஆண்டு சந்தா ஐம்பது ரூபா. ஜமீன் தார்களுக்கும் ராஜாக்களுக்கும் முப்பது ரூபா. இருநூறு ரூபாய்க்குக் கூடிய மாத வருமானம் உள்ளவர்களுக்கு பதினைந்து ரூபாய். மற்றை யோருக்கு வெறும் மூன்று ரூபாய்.

ஒரே தலைகீழாக இருக்கிறது. எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது.

பாரதி பைத்தியக்காரன்...!

அந்தக் கடைக்காரச் சிப்பந்தி என்னை இன்னார் என்று அறிந்து கொண்டதால் எனக்குக் கிடைத்திருக்கும் லாபம் ஐம்பது ரூபாய்க்கு மேல்..!

இது லாபமா..? லஞ்சமா..? சலுகையா..? தர்மமா..?

லாபம் பெற நான் என்ன வியாபாரியா?

சலுகை என்றால்... நேற்றுவரை இல்லாத சலுகை இன்று ஏன்? எழுத்தாளன் என்பதாலா..? எழுதுகிறவன் என்பதாலா..? என்னில் இவர்களுக்கு ஏதாவது ஒரு பயம் ... ஒரு அந்நியம்... வந்து விடுகிறதா?

சலுகை எந்தவிதத்திலும் மனிதாபிமான உணர்வால் வருவதல்ல!

லஞ்சம் என்றால் பிரதியுபகாரமாக என்ன எதிர்பார்க்கின்றார்?

தன்னுடைய ஒரு மோசமான நடிப்பை அல்லது படைப்பை நல்ல தென்று கூறச் சொல்வாரா?

தர்மம் என்றால்? தர்மம் வறுமையை இல்லாதொழிக்கும் வல்லமை கொண்டதல்ல.

காந்தியிடம் ஒருவன் கேட்டானாம், "நான் உங்களுக்கு ஒரு சட்டை வாங்கித் தருகின்றேன், போட்டுக் கொள்ளுகின்றீர்காளா" என்று.

காந்தி சொன்னாராம், "இந்தியாவில் உள்ள சட்டை இல்லாத அத்தனை கோடி ஏழைகளுக்கும் ஆளுக்கொரு சட்டை தர உன்னால் முடியுமா தம்பி" என்று.

காந்தி ஒரு பைத்தியக்காரன்..!

"பயிண்ட... பயிண்ட..." என்று இறங்குபவர்களை கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக தள்ளிக் கொண்டிருந்தான் பஸ் கண்டக்டர்.

அவனுடைய கீரைக்கடைக்கு எதிர்க்கடை பின்னால் வந்து கொண்டிருக்கிறது.

மன ஓட்டத்தைவிட வேகமாகவா பஸ்காரன் ஓடி வந்திருக்கின்றான்?

மூட்டையுடன் என்னையும் இழுத்து வெளியிலே உதறிவிட்டு ஓடி விட்டது பஸ். பஸ்காரனுக்கு இன்னும் என்னை யார் என்று தெரியவில்லை!

சாமான் மூடை கணக்கிறது! கடையிலிருந்து பஸ்ஸுக்குக் கிடைத்த சலுகை இப்போது என்னவாகிறது? யார் ஒரு பையனை அனுப்புவார்களாம்!

லிஸ்ட் இன்னும் கையில்தான் இருக்கிறது.

தொடர்ந்தும் இதே கடையில் சாமான்களை வாங்கினால்..!

மூடையின் கனம் கழுத்தின் நுகமாய் நெஞ்சை அழுத்துகிறது.

மனைவியைக் கெடுத்துவிட வேண்டாம் என்னும் முன் ஜாக்கிரதையுடன் கையிலிருந்த கடை லிஸ்டை கசக்கிப் பாதையோரத்தில் வீசி விட்டு கனக்கும் மூட்டையுடன் வீட்டை நோக்கி நடந்தேன்.

- ● -

வீரகேசரி - 05.09.1993



# பந்து

## 9

அந்த சின்னஞ் சிறிய சந்துக்குள்தான் இவர்கள் பந்தடிக்கின் றார்கள்.

இந்தப் பக்கம், அந்தப் பக்கம் என்று வாழைச்சீப்புப் போல் வரி வரியாக வீடுகள்.

வீட்டுக்கு முன்னால் வேலியேதும் இல்லாத திறந்த வெளிகள், செடி வளர்த்து மறைப்புக்கள், முட்கம்பி வேலிகள், மூங்கில் பிளாச் சடிப்புகள், காம்பவுண்ட் சுவரும் கேட்டுகளுமாக தரத்திற்கேற்ப பாதுகாப்புகள்.

எல்லா வீட்டுக்காரர்களுமே அந்தச் சந்துக்குள்ளாகத்தான் நடக்க வேண்டும். வெளியே றோட்டுக்குப் போவதென்றாலும்... உள்ளே வீட் டுக்கு வருவதென்றாலும்!

சந்தடிமிக்கதான அந்தச் சந்துக்குள்தான் இவர்கள் பந்தடிக்கின் றார்கள்.

தாங்கள் ஏதோ அர்ஜுனா ரணதுங்க... சனத் ஜெயசூரிய போல வும் இந்தச் சந்து என்னவோ ஈடன் கார்டன் போலவும்... அப்படி ஒரு நினைப்பு!

“ஆட்களைப் பார்... போதை மாத்திரைகள் போட்டவர்கள் மாதிரி... தறுதலைகள் இதுகளுக்கு கிரிக்கட் ஒரு கேடு..!”

இப்படி முணு முணுத்துக் கொள்ளாமல் யாரும் அந்தச் சந்துக்குள் நடப்பதில்லை.

இந்த முணு முணுப்புக்களை அவர்களும் சட்டை செய்ததில்லை. வேக வேகமாகப் பந்தெறிவார்கள். வீசி வீசி அடிப்பார்கள். விரட்டிக் கொண்டோடிப்போய் பிடிப்பார்கள். சந்துக்குள் நடப்பவர்கள் பாடு தர்ம சங்கடம்தான்! போலீசில் புகார் செய்தாவது இதை நிற்பாட்டி யாக வேண்டும் என்று கருவிக் கொள்வார்கள்.

திடீரென்று கள்ளச்சாராயம் பிடிக்க ஓடிவரும் போலீஸ்காரர்களே இவர்களுக்கு பந்தெடுத்துக் கொடுத்து விட்டுப் போகும் சங்கதிகள் எல்லாம் இவர்களுக்கெங்கே தெரியப் போகிறது.

இவர்களில் ஒருவன் நாளைக்கே களுவித்தாறனயாகவோ, சனத்தாகவோ வந்து விடலாம் என்னும் தேசிய எதிர்பார்ப்பு அவர் களுக்கு.

யார் கண்டார்கள்?

வீசிய பந்தை விளாசுகிறான் ஒருவன்.

தண்டவளாத்தில் ரயில் ஓடுவதுபோல் சந்துக்குள் மட்டும் நேராகவா பந்தோடும். எதிர் வீடு பக்கத்து வீடு, மூலை வீடு என்று எல்லா வேலிகளுக்குள்ளும் தான் பாய்ந்தோடும். கதவைத் தட்டும். ஜன்னல்களை ஆட்டும் 'டமடம' வென்று கூரைத்தகரத்தில் கூத்தாடும். ஹாலுக்குள் நுழைந்து சோபாக் களில் பதுங்கிக் கொள்ளும்!

முள்கம்பிகளை நெம்பித்தூக்கிக் கொண்டு நுழைவார்கள். செடி களை நீவி நெரித்துக் கொண்டு பாய்வார்கள். மூங்கில் பிளாச்சின் இடுக்கு வழியே இறங்குவார்கள். சுவரேறிக் குதிப்பார்கள்.

பந்தைத் தேடித்தான்!

உள்ளே இருந்து கத்திக் கொண்டு ஓடிவருவார்கள் வீட்டுப் பெண் கள். இவர்கள் உள்ளே நுழையுமுன் பந்தை தூக்கி வெளியே வீசி விட்டு ஏசித் துரத்துவார்கள்.

உள்ளே நுழைந்துவிட்டால் பந்து மட்டுமா தேடுவார்கள்? கொய்யா மரத்தில் காய் இருக்கிறதா என்று பார்ப்பார்கள். குடாப்புக்களில் கோழி கள் நிற்கின்றதை கவனிப்பார்கள். பாத்திரம் பண்டங்கள் வெளியே கிடக்கின்றதை நோட்டம் இடுவார்கள். ஆகவே கூடுமான வரைக்கும் இவர்களை உள்ளே விடாமல் இருக்கவே வீட்டுக்காரர்கள் விரும்பி செயல்படுவர்.

"எங்காவது கிரவுண்டுல போய் அடிங்களேன். பொழுது விடிஞ்சா உங்க எழவே பெரிய எழவாப் போயிறுது" என்று குமுறுவார்கள்.

இது என்ன அதிசயம்! இவர்கள் பந்தடிக்கும் இந்தச் சின்ன சந்துக்குள் மனித நடமாட்டம் மட்டுமே இருக்கிறது. கார், பஸ், லொறி, என்றோடும் மெயின்றோட்டுச் சந்திகளிலும் பந்தடிக்கின் றார்களே? யார் என்ன செய்தார்கள் எந்தக்காராவது எந்த லொறி

யாவது எந்த பஸ்ஸாவது இவர்களில் ஒருவனை ஏறி நசித்துக்கொண் டோடியது... அல்லது கொன்றது என்று எங்காவது கேள்விப்பட்டிருக் கின்றீர்களா?

சடன் பிறேக்கடித்து வெட்டித் திருப்பி, ஒடித்து மடக்கிக் கொண்டு தான் அவர்களும் ஓடுகின்றார்கள். இவர்களும் ஆடுகின்றார்கள்.

இப்போது இது ஒரு தேசிய வியாதியாகிவிட்டது!

அதுவும் உலகக் கோப்பை இங்கே வந்து விட்ட பிறகு சந்துக்குள் பந்தடிப்பவர்களைக் கூட யாரும் ஒன்றும் சொல்லிவிட முடியாது.

பந்தாடி விடுவார்கள்... சொல்பவர்களை!

ஆபீசுக்குப் போகவென்று வெளியே வந்த அவன் கேட்டடியில் நின்று சந்தை எட்டிப் பார்த்தான்.

அளவாக வெட்டப்பட்ட மூன்று தும்புக்கட்டைக் கம்புகள, அவர்கள் வீட்டுக் கேட்டுக்கு முன்னால் ஊன்றி இருக்கின்றது.

"அங்கிட்டெல்லாம் ஊணிக்கிட்டா என்னவாம்? எங்க வீட்டுக்கு முன்னுக்குத் தானா ஊணணும்? ஊருக்கு எளைச்சவன் பிள்ளையார் கோவில் ஆண்டிங்கிறது மாதிரி இந்த ஊருக்கு எளைச்சவங்க நாங்க தானே..! தமிழன்னா, தமிழ் வீடுன்னா ஒரு எளக்காரம்..!

எரிச்சல் அவனுக்குள் புகை புகையாய் மண்டிக் கிளம்பியது.

சிக்ஸ் என்று கத்தினான் ஒருவன். வீசியவனை வக்கார் யூனிசா கவும் அடித்தவனை சனத்தாகவும் கற்பனை பண்ணிக் கொண்டிருந் திருப்பான் அவன்.

"நாங்களும் ஒரு வகையில் இந்தப் பந்தைப் போலத்தான்! விக்கட் டைக் காப்பாற்றிக் கொள்ளவென்று, ஆட வரும் ஒவ்வொருவருமே ஆள் மாற்றி ஆள் என்று எங்களைத்தான் அடிப்பார்கள்.

ஓடவிடவும் மாட்டார்கள்... எல்லையைத் தாண்டவும் விட மாட்டார்கள்... விரட்டி விரட்டி பிடித்து அமுக்கிக் கொள்வார்கள்... பிறகு அடிப்பார்கள்..!

கேட்டிடம் நின்றவன் தனக்குள் குமுறினான்... எக்கச்சக்கமாக மேலே எழுந்த பந்து எதிர் வீட்டுக் கூரையில் போய் விழுந்தது.

"கண்ட்றோல் கறலா காப்பாங்கோ! உம்பம கணிங்" என்று அலுத்தபடி சுவரோரத்தில் அமர்ந்துக் கொண்டான் பந்து வீசியவன்.

அது சிங்கள வீட்டுக்கூரை. ஆகவே கொஞ்சமாகத் தயக்கம் காட்டு கின்றனர்.

வீட்டுக்குள்ளிருந்து ஆக்ரோஷமான சத்தமோ 'கறேபுறே' என்று கத்திக் கொண்டு பெண்கள் கூட்டமோ இன்னும் வெளியே ஓடிவர வில்லை. ஆட்களும் யாரும் இல்லை போல் இருக்கிறதே என்று யோசித்து முடிப்பதற்குள் "நாசமாய்ப் போக மாட்டீங்களா" என்று கத்திக் கொண்டு ஓடி வருகிறது வீட்டுக்காரக் கிழவி.

கிழவிக்கு ஐம்பது வயது என்று யாரால் கூற முடியும்..! செக்கச் செவேல் என்று கையில்லாத கிமோனாவும் தானுமாக..!

வேலியோரம் வந்து நின்று கேலியாக அவர்களை முறைத்து விட்டு கையைத் தூக்கி ஆட்டிக் கத்துகையில் கெண்டைச் சதைகள் அழகாக ஆடிக் குலுங்குகின்றன.

"ஓடெல்லாம் நகர்கிறது... உடைகிறது... மழை பெய்தால் வீடெல் லாம் ஒழுகிறது..." என்று கிழவி கத்திக் கொண்டிருப்பதை இவர்கள் யாரும் சட்டை செய்ததாகத் தெரியவில்லை.

மற்ற மற்ற வீடுகளின் வேலிச் சந்து... சுவர் இடுக்கு இத்தியா திகளில் எட்டி எட்டிப் பார்த்து, பந்து ஏதோ அங்குதான் விழுந்துவிட் டதைப் போன்ற பாவனையில் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

கிழவியைத் தொடர்ந்து அழகழனாக முகங்களுடனும் உடல்களு டனும் மகள்கள், மருமகள்கள் என்று வரிசையாக வந்து வேலியிடம் நின்று சத்தமிடுகின்றனர்.

அவர்களின் அணிவகுப்பைப் போலவே அவர்களுடைய கோபக் குரல்களும் அழகாக இருக்கின்றன.

சிங்கள மொழிக்கொரு செழுமை இருக்கிறதுதான். ஒருசில வார்த்தை வீச்சுக்கள் இந்த மொழியிலன்றி வேறு எந்த மொழியிலும் இப்படி ஒரு ஜீவனுடன் கிளம்புவதில்லை... வீறுடன் ஒலிப்ப தில்லை..!

கத்தி முடித்து அவர்கள் உள்ளே போய்விட்ட மறுவினாடி, சுவரில் ஏறித் தொத்தி மடமடவென்று வேலியோரப் பலாமரத்தில் ஏறி கிளை வழியே வழித்திறங்கி மெதுவாகக் கூரையில் காலூன்றி பந்து தேடு கின்றான் ஒருவன்.

பழம்தேடிக் கிளைதாவும் அணிலை ஞாபகப்படுத்துகிறது அவனது லாவகமான மரமேற்றம்.

ஆபீஸ் செல்லவென்று கிளம்பி கேட்டடியில் நின்று வெளியே எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தவன் ஏக்கத்துடன் உள்ளே வந்தான்.

அவனை வழியனுப்ப வந்த மனைவியும் மகளும் "என்ன உள்ளே திரும்பி வருகின்றீர்கள்" என்பது போல் ஏறிட்டுப் பார்த்தனர்.

"காலம்பெறவே தொடங்கிட்டாணுக... கவனமாக இருங்க... உள்ளே ஏதும் பந்து விழுச்சுண்ணா பேசாமத் தூங்கி வெளியே வீசிட்டு 'கப்சிப்'புன்னு இருந்துறுங்க... அவனுக்கிட்ட வாய்கீய் குடுத்துடாதீங்க... அதுகளே அந்த பாடுபடுதுக. நாம எந்த மூலை... பந்துல தொடங்கி வேறு எதுல போய் முடியும்ணு சொல்லேலாது... ஏன்னு கேக்க ஒரு நாதி இருக்காது..."

"நீங்க பயமில்லாமப் போங்க.. நாங்க பாத்துகிடறோம்... எந்த நாளுந்தான் அடிக்குறானுக... நாங்க சமாளிக்கலே..."

மனைவியும் மகளும் கையாட்டி விடைதர அரை மனதுடன் அவனும் வெளியேறி நடக்கின்றான்.

வெளியே போகும் ஆண்கள் விக்கினமேதுமின்றி திரும்பி வரும் வரை வீட்டிலிருக்கும் பெண்களும், வீட்டிலிருக்கும் பெண்கள் வில் லங்கம் ஏதுமின்றி இருக்க வேண்டுமே என்று வெளியே போகும் ஆண்களும் 'ஏங்கி...ஏங்கி' மனம் 'குமுறி... குமுறி''

இன்னும் எத்தனை காலத்துக்கு இந்த 'சீ'பட்ட வாழ்வு.

அரசும் புலிகளும் மறுபடியும் அடித்துக்கொள்ளத் தொடங்கிய பிறகு...

"வடக்கின் பெரும் பகுதியை நாங்கள் பிடித்துவிட்டோம் கொடி ஏற்றி விட்டோம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் பலமாக விளம் பரப்படுத்தி பெரும்பான்மை மக்களை உளரீதியாக உற்சாகப் படுத்தத் தொடங்கி விட்டதன் பிறகு...

கொழும்பு, மலையகம் போன்ற மற்றப் பகுதிகளில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களின் பாடுகூட பெரும் சங்கடத்துக்குள்ளாகித்தான் போய் விட்டது.

பஸ்ஸில், பாதையில், கடைத் தெருவில் என்று தமிழர்களை ஒரு ஏளனத்துடன் தான் பார்க்கின்றார்கள்... பேசுகின்றார்கள்... என்ன செய்வது. இத்தனைக்கும் மத்தியில் இவர்களும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றார்கள்.

அந்தம்மாள் சொன்னது போல் ஒவ்வொரு நாளும் சமாளித்துக் கொண்டு.

வேறு என்னதான் செய்யமுடியும்? தமிழ் நாட்டுக்கா ஓடிவிட முடியும்?

இந்திய வம்சாவளித் தமிழர்கள் புகுந்தவீட்டுக் கொடுமைகள் தாங்காது பிறந்த வீடென்று எண்ணி அங்கே ஓடிப்போய் பட்ட அவஸ்த்தைகளையும், கூறும் கதைகளையும் கேட்டால்... அப்பப்பா... அம்மா கொடுமைகளை விட மாமியார் கொடுமையே பரவாயில்லை போலிருக்கிறது.

பந்தடிக்கும் சத்தம் சந்துக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறது.

சமையலைக் கவனிக்க குசினிக்குள் நுழைகின்றார்கள் அம்மா "நீ போய் குளிச்சிறு... வெய்யிலும் உசாராய் இல்லை... ஒனக்கோ ஒவியக் கூந்தல் ஒரு மணிநேரமாவது வேணும்... உலர்த்த! நீ வெய்யில்ல நிற்கயில நான் குளிச்சிறலாம்..." என்று மகளை பாத்ரூமுக்கு விரட்டுகின்றார்.

சமையலறைக்குள்தான் எத்தனை வேலைகள்!

பைலும் கையுமாக ஆபீஸ் போய் அமர்ந்திருக்கும் ஆண்கள் செய்வதைப்போல் ஒரு வேலையா இரு வேலையா. சமையலறை இருப்பது வீட்டின் மூலையில் தான் என்றாலும் முழு வீட்டின் ஜீவனுமே அதற்குள்தான்.

ஒன்றொன்றாய் ஒன்றொன்றாய் வேலையில் ஒன்றிவிட்ட அம்மாவை "அய்யய்யோ அம்மா!" என்று மகள் போட்டக் கூச்சல் பிடரியைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு போய் குளயலறையில் நிறுத்துகிறது.

அம்மா பதறித்தான் போய் விட்டார்கள்.

"மேலே கூரையைப் பார்த்தபடி, பேயைக் கண்டவள் போல் நடுங்கிக் கொண்டு. பாதிக்குளித்த உடலுடன் மகள் நிற்கும் கோலம்... கூரையில் ஓடு நகர்ந்து மூடிக் கொள்கிறது ஓட்டுக்கு மேல் நாலைந்து கால்கள் நடமாடி மறைகின்றன.

"கவுத உட" என்று கத்தியபடி வெளியே ஓடியவள் பேயென எழுந்து நின்றாள்.

கூரைமேல் நாலைந்து பையன்கள் நிற்கின்றனர்.

கேட் மூடியபடியே இருக்கிறது. கேட்திறப்பட்டால், அல்லது ஆடினால், சிணுங்கினால்கூட குசுனியில் இருக்கும் அம்மாவுக்குத் தெரிந்துவிடும். ஆகவே இவன்கள் சுவரேறித்தான் குதித்திருக்க வேண்டும்.

அம்மாவால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

மகளின் அலறலும் அவள் நின்றகோலமும், குளியலறைக் கூரை யில் ஓடு நகர்ந்த விதமும், சூழலை மறக்கடித்து விட்டன.

"எறங்கு கீழே எல்லாரும்..." என்று கத்தினாள் சிங்களத்தில்.

அவளை சட்டை செய்யாமல் ஓட்டுமேல் நடந்த அவர்கள் பந்து தேட இவள் குரலுயர்த்திக் கத்த... அவர்கள் ஏதோ பதில் சொல்ல...

கேட்டைத் திறந்து கொண்டு வாட்டசாட்டமான ஒருவன் எட்டிப் பார்த்தான்... பிறகு உள்ளே நுழைந்தான்... கையில் பேட்டுடன்!

ஏளனமாக அவளை ஒருமுறை ஏறிட்டுப்பார்த்து விட்டு "அகப் பட்டதா" என்று மேலே நிற்பவர்களிடம் கேட்கின்றான்.

"பந்து தேடிக்கிளிச்சது போதும் எறங்கு" என்று அவர்களுக்கும் "நீ வெளியே போ" என்று இவனுக்குமாக சுத்தமான சிங்களத்தில் கத்தினாள் அவள்.

இது தமிழர்களின் வீடு என்பது தெரியும் அவர்களுக்கு. அது தான் அத்தனை தைரியமாக உள்ளே நுழைகின்றனர்.

கைகளை பிசைந்தபடி ஒரு மூலையில் நின்று கொண்டு எட்டி எட்டிப் பார்த்து விழித்துக் கொண்டிருப்பார்கள் அம்மாவும் பெண் ணும் என்பது தான் அவனின் கணிப்பு.

ஆனால் இந்தம்மாள் இப்படி, இத்தனை சரளமாகச் சிங்களத் தில் கத்துவார்கள் என்பதை அவன் எதிர்ப்பாக்கவில்லை.

சற்றே திடுக்கிட்டாலும் தன்னுடைய திகைப்பைக் காட்டிக் கொள்ளாமல் "சும்மா கத்த வேண்டாம்... நாங்கள் வேறு எதற்கும் உள்ளே வரவில்லை பந்து தேடத்தான்..." என்றான்.

"நீ எதுக்கு வந்தாலும் எனக்குத் தேவயில்லை..! மொதல்ல வெளியே போ.... என்னைக் கத்த வேண்டாம் என்று சொல்ல நீ யார..." என்று மறுபடியும் சத்தம் போட்டபடி மேலே பார்த்தாள்.

கூரையில் ஒருவரையும் காணவில்லை. பந்தைத் தூக்கி மெதுவாக

சந்துக்குள் எறிந்துவிட்டு சுவரோடு நடந்து கொண்டிருக்கின்றனர், வெளியே குதித்துக் கொள்ள.

"நான் ஏன் வெளியே போவணும்...? நாங்கள் எங்கே வேண் ணாலும் நிப்போம், உட்காருவோம்... பந்தடிப்போம்... இது எங்கள் நாடு... நீங்கள்ளாம் எங்களுக்கு அடங்கித்தான் இருக்கணும்..." என்றான் அவன்.

அடிமட்டத்தினர் வரையிலும்கூட இந்த பெரும்பான்மை அரசி யல் நினைவுகள் எத்தனை ஆழமாகப் பதியப்படுகின்றன, பதிந்தி ருக்கின்றன.

"நாடு உன்னுதா இருக்கலாம். இந்த வீடு என்னுது. அதுனால மரியாதையா வெளியே போயிடு... என்று பொரிந்து தள்ளினாள் அவள். எல்லாரும் வெளியே போய் விட்டதையும் கவனித்துக் கொண்ட அவன் மெதுவாக கேட்டைத் தாண்டி வெளியேறினான். வெளியேறும் போதும் "பந்தடிச்சா உள்ளே விழும் தான்... எடுக்க வருவோம்தான்" என்றான்.

"இன்னொரு தரம் பந்து விழட்டும் உள்ளே அப்பப்பார்" என்றாள் அவள்.

"விழுந்தா..." என்றபடி வெளியேறினான் அவன் "விழட்டுமே..." என்றபடி கேட்டை மூடினாள் அவள்.

இந்தச் சத்தம் கேட்டு எல்லா வீட்டுப் பெண்களும் வெளியே வந்து நின்று எட்டிப்பார்த்தார்கள்.

"துணிந்து யாராவது இப்படிக் கொடுத்தால்தான் சரிப்பட்டு வரு வார்கள்" என்று மகிழ்ந்து கொண்டார்கள்.

"இனி பந்து விழுந்தா உள்ளே நான் போக மாட்டேன்" என்றான் ஒருவன்.

"மட்டத் பே" என்றான் இன்னொருவன்.

"ஏண்டா பயந்து சாகின்றீர்கள்" என்றான் இன்னொருவன்.

"நீ தைரியசாலி மாதிரி பேசிட்டு வெளியே நின்னுறுவே' இவர் களோ தமிழர்கள... யாருக்குத் தெரியும்..? ஏதாவது வச்சிருந்தா..." என்றான் இன்னொருவன்.

இதொன்றையும் கவனிக்காமல் உள்ளே ஓடி வந்த அம்மா "ஊறா

தேம்மா... சட்டுப்புட்டுன்னு குளிச்சிட்டு வந்துறு..." என்றவாறு கூரையைப் பார்த்தாள்.

ஓடு சரியாகவே இருந்தது.

வெளியே பந்தடிக்கும் சத்தம் வெகுநேரமாய் நின்றுபோய் இருப்பதை அம்மா கவனிக்கவில்லை. சமையலறைக்குள் நுழைகின்றார்கள்.

- ● -

மல்லிகை - 1997



# சுவர்

## 10

இந்த நேரம் யார்? இப்படித் தட்டுவது?

வீட்டில் இருந்த எங்கள் எல்லோரது மனதுக்குள்ளும் தூண்டி லில் செருகிய புழுவாய் துடித்து நெளிந்து கொண்டிருந்தது இந்த ஒரே கேள்விதான்.

இந்த நேரம் யார்... இப்படித் தட்டுவது..!

போலீஸ் ரிப்போர்ட், அடையாள அட்டை இத்தியாதிகளை மனம் நினைவுபடுத்திக் கொள்கின்றது.

இரவு பத்துப் பதினொரு மணிக்கு மேல், இப்படி ஒரு அதிகாரத் துடன் கேட் ஆட்டப்படுகிறது என்றால் யாராக இருக்க முடியும்.

ஆர்மியாக இருக்கும். அல்லது போலீசாக இருக்கும். அல்லது ஆர்மியும் போலீசுமாக இணைந்து வந்திருக்கும்.

நாங்கள் தயாராகவேதான் இருக்கின்றோம்.

இரவு என்றில்லை, பகல் என்றில்லை. இப்படி வந்து வந்து எங்களை சோதனை செய்வோர் அத்தனை பேருக்கும் அடையாள அட்டைகளையும் போலீசில் பதிந்த துண்டுகளையும் காட்டிக் காட் டியே நாங்கள் களைத்துப் போய்விட்டோம். அலுத்தும் போய்விட் டோம்.

பஸ் லேட் அல்லது ட்ரெயின் லேட் என்று யாராவது உறவி னர்கள் அல்லது நண்பர்கள் இப்படி நேரம் கெட்ட நேரத்தில் வந்து கேட்டைத் தட்டினாலும் முதலில் இந்தக் கடுதாசிகளைத் தேடி வைத்துக் கொண்டு பிறகுதான் கதவைத் திறந்து எட்டிப் பார்ப்போம்.

தமிழர் தம் குடும்ப வாழ்வில் இது ஒரு பண்பாட்டு அம்சமாகி விட்டது இன்று.

நட்பென்றும் உறவென்றும் இப்போதெல்லாம் யார் வருகிறார்கள்

நம்மைத் தேடி... அதுவும் இருட்டிவிட்ட பிறகு.

வந்து சேரும்வரை அவர்களுக்குத் தொல்லை... றோட்டில்!

வந்து சேர்ந்தபின் நமக்குத் தொல்லை... வீட்டில்!

தோலிருக்கவே சுளை விழுங்குதல் போல் நாசுக்காக நாங்கள் இப்படித் தனிமைப்படுத்தப்படுவதும் அவர்களுக்கு ஒரு தனியான குஷிதான்.

முன் கதவைத் திறக்கின்றேன்.

வெட்டவெளிபோல் இருக்கின்றது.

பக்கத்து வீட்டுச் சுவர் மூலையில் சாரத்தைச் சுருட்டித் தூக்கிக் கொண்டு இருட்டுக்குள் சிறுநீர் கழித்துக் கொண்டிருந்த பக்கத்து வீட்டுப் பையன் கதவு திறந்த அரவம் கேட்டதும் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டான்.

பூனை கண்ணை மூடிக் கொள்வதைப் போல.

எனக்கு மிகவும் அசௌகர்யமாக இருக்கிறது.

நல்லவேளை எப்போதும் போல், இதுபோன்ற வேளைகளில் நான் முன் கதவைத் திறக்கும்போது எனது தோளுக்கு மேலாக எட்டிப் பார்க்கும் மனைவி என் அருகே இருக்கவில்லை.

இருந்திருந்தால் "இந்த எழவையெல்லாம் பாக்கணும்னு தலை எழுத்து... செவத்தைக் கட்டுங்க... செவத்தைக் கட்டுங்கன்னு எத்தனை வாட்டி தலையால அடிச்சுக்கிட்டேன்... அதுக்குவக்கில்லை..." என்று எனது பொருளாதார பலவீனப் புண்ணை வார்த்தைகளால் கீறிக் கிளறியிருப்பாள்.

முன்பெல்லாம் கதவைத் திறந்ததும் பக்கத்து வீட்டுக் கூரை மாத் திரமே தெரியும். இப்படியான அடி விஷயங்கள் ஒன்றும் கண்ணில் படாது.

இரண்டு வீடுகளுக்கும் மத்தியில் ஆறடி உயரத்தில் கம்பீரமாக எழுந்து சீனப்பெருஞ்சுவர்போல் நின்ற மதில் மூன்று மாதமாகப் பெய்த தொடர் மழையில் போன மாதம் உடைந்து விழுந்துவிட்டது.

யானை இறந்த கதைதான்.

உடைந்து கொட்டிய மதிலை அள்ளிக்குவித்து அப்புறப்படுத்தி இடத்தை துப்பரவு செய்யவே ஆயிரத்துக்கு மேல் போய்விட்டது.

போதாதற்கு பக்கத்து வீட்டுக்காரனின் பைசிக்கிள் சிக்கி வளைந்து கிடந்தது.

வீட்டுப்பெண்களின் எதிர்ப்புகளின் மத்தியில் "இது உங்களுக்குத் தேவையில்லாத வேலை" என்னும் வீட்டுச் சொந்தக்காரரின் கேலிக்கு மத்தியில் சைக்கிளையும் சரிக்கட்டிக் கொடுத்தேன். அதற்கொரு எண் ணூற்றுக்கு மேல் ஆயிற்று... என்ன செய்வது?

தென்னைக்குத் தண்ணீர் ஊற்றியதாக எண்ணிக் கொண்டேன். அதற்குப் பிறகு இப்படித்தான்.

முன்கதவைத் திறந்தால் பக்கத்து வீட்டுச் சில்லறைச் சமாச்சா ரங்கள் ஏதாவதொன்று நேராக முகத்தில் அடிக்கும்.

ஓவென்று திறந்து விடப்பட்ட மைதானம் மாதிரி!

அந்தரங்கம் பறிபோய்விட்ட ஒரு அசெளகரியம் எங்களை உலுப்பி எடுக்கின்றது. ஓட்டுக்குள்ளேயே சுருங்கிவிடும் ஊரிகள் போல் வேலி களுக்குள்ளேயே வாழ்ந்து பழகிவிட்ட அந்தப் பண்பு.

இழக்கக்கூடாத ஏதோவொன்றைப் பெரிதாக இழந்து விட்ட தைப் போல...

றோட்டில் திரியும் நாய் ஒன்று பக்கத்து வீட்டுக்குள்ளாக வந்து உடைந்த மதில் வழியாக எங்கள் தோட்டத்துக்குள் நுழைந்து சமயல றைப் பக்கமாக எதையாவது தேடித்தின்று, கதவு திறபடும் சத்தம் கேட்டதும் காதைத் தூக்கியபடி விறைத்து நின்று பார்த்து உறுமி விட்டுப் பிறகு ஓடிவிடும்.

தெருவில் திரியும் நாய் கூட உள்ளே வந்து உறுமுகிறதே என்னும் தாழ்வுச் சிக்கல்.

எதையும் எதிர்கொள்ள மனமின்றி ஒதுங்கியே இருந்துவிட்ட பழக்கம். பக்கத்துவீடு சிங்களம். அன்றாடம் காய்ச்சிகள் வேறு. எங்கே சுவர் உடைந்துவிட்ட சுகத்தில் அத்துமீறி உள்நுழைந்து உறவு கொண்டாட வந்து விடுவார்களோ என்னும் அச்சம் வேறு. இருந்த மதில் அவர்களை பிரித்தும் வைத்திருந்தது! மறைத்தும் வைத்திருந்தது!

பாஸ் ஒருவனைக் கூட்டிவந்து பார்க்கச் சொன்னேன். அளந்தான், நின்றான், நிமிர்ந்தான். "அடுகான... தாஹட்டக்வத் யய்..!" என்றான். கப்சிப் என்றாகி விட்டது.

பதினெட்டாயிரத்துக்கு நான் எங்கே போக?

வீட்டுக்காரரோ... "இப்போது எங்கே இருக்கிறது அவ்வளவு பெரிய தொகை? நீங்கள் வேண்டுமானால் கட்டிக் கொள்ளுங்கள். வாடகையில் கழித்துக் கொள்ளலாம்!" என்று கூறிவிட்டார்.

பக்கத்துவீட்டுச் சுவர் மூலையில் சாரத்தை உயர்த்தியபடி இருட்டுக்குள் நின்றவனை பார்க்காததுபோல் பாவனை செய்து கொண்டு முன்பக்கம் திரும்பி கேட்டை நோக்கினேன்.

கேட்டுக்கு மேலாக இருட்டுக்குள் ஏழெட்டு இரும்புத் தொப்பிகள் அந்தரத்தில் மிதந்து கொண்டிருந்தன.

எனக்குத் திடீரென்று ஒரு ஞானோதயம் பிறந்தது.

நூல் விற்கவரும் பதுளைக்காரர் முன்தினம் கூடக் கூறினார்.

"ஐயா ஜாக்கிரதையாய் இருங்கள்... யாராவது கதவைத் தட்டினால் தொறந்துறாதீங்க... உள்ளுக்கு வந்தப்பறம் உங்களுக்கே வேலையைக் குடுத்துறுவானுக..! போன கிழமை இப்படித்தான் எங்க வீட்டுப் பக்கம் ஒரு வீட்டில், கேட்டத் தட்டி போலீஸ்ன்னு கூறி உள்ளே நொழைஞ்சிருக்கானுக... வீட்டுல இருந்த அத்தனை பேரையும் கட்டிப் போட்டுட்டு ஒன்னுவிடாம கொள்ளையடிச்சிட்டானுக... வீட்டுக் காரருட்டு வேன்லேயே அத்தனை சாமான்களையும் ஏத்திக்கிட்டு வீட்டுக்காரரையே ஓட்டவும் சொல்லி வசதியான ஒரு இடத்தில் எறங்கிக்கிட்டு வேனைத்திருப்பி அனுப்பி இருக்கானுக. அவராலை என்ன செய்ய முடியும். நம்ம நெலமை அப்படி... அதுனால அய்யாவும் கவனமாக இருங்க..."

கேட்டுக்கு வெளியே இருட்டுக்குள் மிதந்த தொப்பிகள் தாங்கள் பட்டாளத்துக்காரர்கள் தான் என்பதை சத்தியம் செய்து கொண்டிருந்தன.

"நீங்கள்..."

"பார்த்தால் தெரியவில்லை... இன்னும் கொஞ்சம் விட்டால் ஐடென்டிட்டி கார்ட் கேட்பாய் போலிருக்கிறதே... ம்... ம்... கேட்டைத்திற..." என்று தடித்த குரலில் கடித்தான் ஒருவன்.

இவர்களிடம் எப்படி "நீங்கள் நிஜப்போலிஸா இல்லை போலிப் போலிஸா என்று கேட்பது? பார்த்தால் ஆர்மிக்காரர்கள் போலவும் இருக்கிறது. ஜீப் வேறு நிற்கிறது... மிகவும் குழம்பிக் கொள்கிறேன்.

"திறக்கப் போகின்றாயா அல்லது நாங்களே பலவந்தமாக உள்ளே வரவா" என்று அதட்டினான் ஒருவன்.

"உள்ளே ஏதோ நடக்கிறது போல் இருக்கிறது. அதுதான் அவன் நம்மை கேட்டுக்கு வெளியே தாமதப் படுத்துகின்றான்" என்று யூகம் சொன்னான் இன்னொருவன்.

"இருக்கும்... இருக்கும், ஒளித்து வைத்திருக்கும் 'கொட்டி'களை பின் பக்கமாக அப்புறப்படுத்திவிட்டு அப்புறமாகத் திறக்கலாம் என்றிருப்பார்கள்... அப்பி பணிமு..." என்று கூறியபடி சுவரில் தாவ முயல்கின்றான் ஒருவன்.

நானாகவே கேட்டைத் திறக்காவிட்டாலும் அவர்களாகவே சுவறேரிக் குதித்து உள்ளே வந்துவிடுவார்கள் போல் இருந்தது. அப்படி ஏதும் நடக்க விட்டால் உள்ளே வந்ததும் மிகவும் முரட்டுத்தனமாக நடந்து கொள்வார்கள். ஆகவே நானாகவே கேட்டைத் திறந்து அவர்களை உள்ளே எடுப்பதே உசிதமானது என்று எண்ணிய படி...

"நே... நே... ஏம மொக்குத் நே.... கௌத கியல அப்பித் தென கண்ட ஒன நே..." என்று எனக்குச் சிங்களமும் நன்றாகப் பேச வரும் என்பதையும் சுட்டிக் காட்டி கொஞ்சம் போல் அவர்களுடைய அனுதாபத்தைப் பெற்றுக் கொள்ளும் உத்தியுடன் பூட்டைத்திறக்கின்றேன்.

திறந்து முடிப்பதற்குள் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்த அவர்களது காட்டுமிராண்டித்தனம் என்னுடைய சிங்களம் அவர்களுடைய அனுதாபத்தைப் பெறத் தவறிவிட்டது என்பதைக் காட்டியது.

உள்ளே நுழைந்தவர்கள் இரண்டு மூன்றாகப் பிரிந்து வீட்டைச் சுற்றி ஓடினார்கள். பிறகு உள்ளே நுழைந்து ஒவ்வொரு அறையாக நுழைந்து நுழைந்து வெளியே வந்தார்கள்.

"எத்தனைபேர் இருக்கின்றீர்கள்... சொந்த ஊர் எது... அடையாள அட்டை இருக்கிறதா... போலீஸில் பதிந்த துண்டு இருக்கிறதா..." போன்ற வழமையான கேள்விகளைக் காணவில்லை. சாப்பாடு மேசையைச் சுற்றி இருந்த கதிரைகளில் எங்களை ஒவ்வொருவராக வந்து அமரச் சொன்னார்கள்.

நீட்டிய துப்பாக்கிகளுடன் இருவர் மேசையிடம் காவல் நின்றனர். மற்றவர்கள் அறைக்குள் நுழைந்தனர்.

எதையோ தேடினார்கள். பிறகு திரும்பிவந்து "வேறு ஆட்கள் யாரும் இல்லையா... கட்டிலினடியில் அலுமாரிகளுக்குள்...யாரை யாவது ஒளித்து வைத்திருக்கிறீர்களா...?"

"இங்கே புலிகள் வந்திருப்பதாகவும் நீங்கள் அவர்களுக்கு அடைக் களம் கொடுத்து ஏதோ சதித்திட்டம் போடுவதாகவும் எங்களுக்கு கம்பிளேய்ண்ட் வந்திருக்கிறது"

"இரவுகளில் சந்தேகத்துகிடமான விதத்தில் ஏதேதோ நடப்பதாக இங்குள்ள மக்களே எழுதியிருக்கின்றார்கள்"

"கோப்றல் அற சார்ஜ் ஷீட்டெக்க கேண்ட" என்று ஒருவனிடம் பணித்தபடி கேட்டான்.

"நீங்கள் இத்தனை பேர் தானா... வேறு யாரும் இல்லையே..?"

நடு இரவில் இப்படி வந்து தமிழர் வீடுகளை சோதனை இடும் போது எங்கோ ஒரு வீட்டில் வசமாக வாங்கிக் கட்டிக் கொண்ட அச்சம் அவனுடைய வினாவின் உச்சமாக இருந்தது.

"வேறு யாரும் இல்லை. நாங்கள் ஆறுபேர் மட்டும்தான்" என்றேன் எரிச்சலுடன்.

"வெரிகுட்... நீங்களும் ஆறுபேர்... நாங்களும் ஆறுபேர்... ஆனால் ஒரு வித்தியாசம். நாங்கள் எல்லோரும் ஆண்கள்! இங்கே ஐந்து பெண்கள்! ஆறுபேருக்கு ஐந்து பெண்கள் போதாதுதான்..!"

அவனுடைய பேச்சின் திசை என்னைக் கோபம் கொள்ளச் செய்தது.

"நீ என்ன பேசுகின்றாய்..?" என்றபடி கோபமாக எழுந்தேன்.

"ஆணின் பாஷையில்தான் பேசுகின்றேன்! எங்கள் ஆறுபேருக்கு இந்த ஐந்து பெண்கள் போதாது என்று. ஆனால் உன்னைப் பிடித்துக் கொள்ள ஒருவன் வேண்டும் என்பதால் ஐவருக்கு ஐவர்தான்..." என்றபடி கைகளைப் பின்புறமாகத் திருகிப் பிடித்துக் கொண்டான்!

கறுத்த அவனது கைத்துப்பாக்கி எனது கழுத்தில் அழுந்திக் கொண்டிருந்தது.

இதை சற்றும் எதிர்பார்க்காத பெண்கள் விருட் விருட்டென்று எழுந்து நின்றனர்.

மேசையைச் சுற்றி நின்ற இருவரில் ஒருவன் எனது மனைவியின் பின்னால் நின்று கொண்டிருந்தான். விருட்டென எழுந்த அவளது தோளைப் பிடித்து அழுத்தி கதிரையில் அமர்த்தியபடி மற்றப் பெண் களையும் அமரச் சொன்னான்.

அவன் கையிலிருந்த துப்பாக்கிமுனை மனைவியின் மார்பில் தடவிக் கொண்டிருந்தது.

எனது துடிப்பின் ஆக்ரோஷம் அவன் பிடிக்குள் இருந்த எனது கரங்களின் திமிர்ச்சியில் தெரிந்திருக்க வேண்டும். கைத்துப்பாக்கி சற்றே ஆழமாகக் கழுத்தில் அழுத்தியது.

"எல்லோரும் ஜாக்கிரதையாக இருங்கள். யாராவது கத்த முயன்றால் இவன் தொலைந்தான்... தெரிகிறதா..!?" என்றான்.

கம்பிளேய்ண்ட் ரிப்போர்ட் எடுத்து வரச் சென்றவன் ஒரு கயிற்றுக் கட்டுடன் உள்ளே வந்தான்... முன் கதவை மூடிப் பூட்டினான். ஒருவரும் மூச்சுவிடக் கூடாது. அமைதியாக இருந்து ஒத்துழைத்தால் உங்களுக்கும் நல்லது. எங்களுக்கும் நல்லது... என்றபடி நேராக மேசையிடம் வந்து அம்மாவின் பின்னால் நின்று கொண்டான்.

அவன் ஏன் அப்படி அவ்வளவு நெருங்கி நிற்க வேண்டும்.

அம்மாவுக்கு எத்தனை வயதாகிறது! ஐம்பதுக்கும் மேலல்லவா. ஆனால் தோற்றம் அப்படியா தெரிகிறது. இன்னும் ஒரு வாலிபப் பெண்ணைப் போல! எனது மகளுடன் பாதையில் நடக்கும் போது பார்க்கிறவர்கள் பாட்டியும் பேத்தியும் என்றா நினைப்பார்கள். அம்மாவும் பிள்ளையும் என்றுதான் நினைப்பார்கள். அப்படி ஒரு உடல்வாகு, அப்படி ஒரு அழகு.

எங்கள் குடும்பத்துக்கு இது ஒரு கொடையா? அல்லது கொடுமையா? அவன் அம்மாவை உரசியபடி நிற்கின்றான். அம்மா நெளிகின்றார்கள்.

முறுக்கிப் பிடித்துள்ள எனது கைகள் துடிக்கின்றன. கழுத்தில் துப்பாக்கி அழுத்திக் குத்துகிறது.

ஆண்டவனே எங்களைக் காப்பாற்று மனதால் கத்தியதும் புராணங்களில் வருவதுபோல் விரல் நுனியில் சுழலும் தர்மசக்கரத்துடனும் ஓங்கிய வாளுடனும் ஓடிவந்து காப்பாற்ற தேவதூதர்களா இருக்கின்றார்கள்?

நாங்கள்தான் ஆண்டவர்கள்... நாங்களே எங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியதுதான்.

சமையல் அறைக்குள் 'தடாபுடா' என்று ஏதோ உருளும் சத்தம் கேட்கிறது.

அது வானதூதன் அல்ல என்பது எங்களுக்குத் தெரியும்.

புகைபோக்கி வழியாக உள்ளே குதிக்கும் பக்கத்து வீட்டு கொழுத்த பூனை அது! ஆனால் அவர்கள் உசாரானார்கள். உள்ளே யாரோ இருப்பதாகப் பதட்டபடுகின்றார்கள்.

"மியாவ்" என்ற சத்தத்துடன் சமையல் அறையின் உள்ளிருந்து ஓடி வந்த பூனை ஒரு விநாடி திகைத்து நின்றது. மறுவிநாடி கதறிக் கொண்டு எகிறி விழுந்து... ஒருமுறை சுருண்டு விரிந்து...பிறகு செத்து விரைத்தது..!

விலகிய துப்பாக்கியை மறுபடியும் கழுத்தில் அழுத்தியபடி "வெடி சத்தம் ஏதாவது கேட்டதா... பார்த்தீர்கள்தானே. அப்படித்தான் சத்தமே கேட்காது. ஆனால் இவன் சுருண்டு விழுந்து விடுவான் அந்தப் பூனை மாதிரி... ஆகவே ஜாக்கிரதையாக இருங்கள். சத்தம் காட்டாமல் அமர்ந்திருங்கள்..." என்றான் அவன்.

அமர்ந்திருக்கும் அவர்களைப் பார்க்க எனக்கு பரிதாபமாக இருக் கிறது. அம்மா, மனைவி, மகள், தங்கை, மனைவியின் சகோதரி என்று அத்தனை பேரும் பெண்கள். திமிரி நிற்கும் கூந்தலும், சீப்பு மாக, பூத்துக்குலுங்கும் மலர்த்தோட்ட நடுவில் நிற்கும் பெண்களைப் போல துப்பாக்கியும் தாங்களுமாகத் திமிர்விட்டுக் கொண்டு நிற்கும் இத்துட் டர்கள் மத்தியில் இவர்கள் பூந்தோட்டத்து மலர்களைப் போல

எப்போது பறிப்பேன் எப்போது சூடுவேன் என்னும் அதே நினை வுடன் இத்துட்டர்கள்!

எனக்கென்றால் பயமே இல்லை. என்னை என்ன செய்துவிட முடியும் இவர்களால்!

கொன்று விட முடியும்... அவ்வளவு தானே..!

ஆனால் நான் பயப்படுவதெல்லாம் இவர்களுக்காகத்தான். இந்தப் பெண்களுகக்காகத்தான். இழந்துவிட இவர்களிடம் உயிர் மட்டுமா இருக்கிறது!

பேப்பர்களில் தீவிரமாக பெண்ணியம் பேசுகிறவர்கள் வேண்டு மென்றால் "இழப்பதற்கு இவர்களிடமும் உயிர் மட்டும் தான் இருக் கிறது" என்று எண்ணலாம். என்னால் அப்படி எண்ண முடிய வில்லை.

கைகளில், காதுகளில், கழுத்தில் கிடக்கும் நகைகளை வேண்டு மென்றால் இழக்கட்டும்... ஆனால்... "கடவுளே கருணை காட்டு..." என்று மன்றாடுகிறேன்.

நாங்களே ஆண்டவர்கள். நாங்களே எங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று எண்ணியது எத்தனை மடத்தனமானது.

நாங்கள் ஆண்டவர்கள் இல்லை. என்பது மட்டுமல்ல. ஆளுகிற வர்கள் கூட இல்லைத்தான்.

மூக்கை விட்டு, ஐந்து பெண்களின் அதரங்களிலும் வாயை மறைத்து வெள்ளையாகப் பிளாஸ்டர்களை ஒட்டுகிறார்கள். கதிரையுடன் சேர்த்துக் கட்டி வைக்கிறார்கள்.

ஒன்றுமே செய்ய முடியாத ஒரு கொடுமைக்குள் நான் சித்தரவ தைப்படுகின்றேன்.

"ம் ம்... என்னுடன் வா" என்று என்னை உள்ளே அழைத்துப் போகின்றான் அவன்.

அல்மாரியைத் திறக்கச் சொன்னான். கூடவே வந்த இன்னொ ருவன் உள்ளே இருப்பவற்றை இழுத்திழுத்து வீசுகின்றான். கிண்டிக் கிளறி உதறுகின்றான். என்னைப் பிடித்திருப்பவனோ கழுத்தில் அழுத்திய துப்பாக்கியை எடுப்பதாக இல்லை.

"போலீஸ் ரிப்போர்ட் தேடுகின்றேன் என்று நினைத்தாயா? பொக்கிஷத்தைத் தேடுகின்றோம்... பணத்தை... காசை... தங்க நகை களை!" என்றான்.

"காசு இல்லாவிட்டால் என்ன செய்வீர்கள்" என்றேன்.

"அந்தப் பூனையைப் போல்தான் ஆவீர்கள். மரியாதையாக இருப பவற்றைக் கொடுத்துவிட்டால் பேசாமல் போய்விடுவோம். உயிருடன் இருந்தால் மீண்டும் சம்பாதித்துக் கொள்ளலாம்..."

அவன் சொல்வதிலும் ஓரளவு நியாயம் இருக்கவே செய்கிறது!

லொக்கரைத் திறந்தேன். காட்டினேன். எடுத்துக் கொள்ளச் சொன் னேன். அப்படியே வழித்து ஒரு பையில் கொட்டிக் கொண்டான். நூல் விற்க வந்த கிழவரே என் மனக்கண் முன் வந்து வந்து போனார்.

"நகைகள்" என்றான்.

"என்னுடன் வா..." என்றவாறு அம்மாவும் மற்றவர்களும் படுக் கும் அறைக்குச் சென்றேன்.

கூடத்தைக் கடந்து செல்கையில் உட்கார வைத்திருக்கும் பெண் களையும் காவல் நிற்கும் துஷ்டர்களையும் கவனித்துக் கொண்டேன்.

பட்டபகலில்கூட பஸ்களில் நிற்பதுபோல பெண்களை நெருக்கிக் கொண்டு யாரும் நிற்கவில்லை.

கருமமே கண்ணாக நின்ற அவர்களின் நிலை எனக்குத் திருப்தி தந்தது. அல்மாரியைத் திறந்து காட்டினேன். அப்படியே வழித்துப் போட்டுக் கொண்டார்கள்.

கண்களுக்குள் மின்னலடிக்கும் நாலைந்து பட்டுச் சேலைக ளையும் உருவிச் சுருட்டிப் போட்டுக் கொண்டார்கள். சேலைகள் பற்றியும் நன்றாகவே தெரிந்திருக்கிறது அவர்களுக்கு. விலை மதிப் புள்ள வைகளையே சுருட்டி எடுத்துக் கொண்டனர். என்னையும் இழுத்துக் கொண்டு மறுபடியும் ஹோலுக்கு வந்தார்கள்.

ஏதோ கண்ணால் பேசிக் கொண்டார்கள்.

எனக்குப் பயமாக இருந்தது. என் கண் முன்னாலேயே துரியோ தன துச்சாதன செயல்களில் இறங்கி விட்டார்கள் என்றால்... மிகவும் சங்கடப்பட்டேன். ஆனால் அப்படியொன்றும் நடக்கவில்லை. பெண் களின் கழுத்தில், கையில் இருந்தவைகள் பற்றித்தான் அந்தச் சமிஞ் சைகள்.

"நானே கழட்டித் தருகின்றேன்" என்றேன்.

"ஏன் உங்கள் பெண்கள் மேல் எங்கள் கைகள் பட்டுவிடக் கூடாதோ... கழுத்தில் மட்டுமில்லை ஓய்..." என்று பேசத் தொடங்கி யவனை உதட்டின் மேல் விரல் வைத்து "வாயை மூடிக் கொண்டு இரு" என்று சாடை காட்டினான் என்னருகே நின்றவன். என்னைப் பார்த்துத் தலையை ஆட்டினான்.

அம்மாவின் கழுத்திலிருந்து, கையிலிருந்து, காதிலிருந்து கழற் றிக் கழற்றி நீட்டினேன்.

எல்லா நகைகளையும் நான் ஒவ்வொன்றாகக் கழற்றி அவர்க ளிடம் நீட்டியபோது ஒரு கற்சிலைபோல் இருந்தவள் கழுத்தில் கை வைத்ததும் கண்ணீர் நிறைந்த கண்களுடன் என்னைக் கெஞ்சினாள்.

"தாலிக் கொடியை மட்டும் விட்டு விடவா...." என்று வினவினேன்.

"நோ... நோ... அதுதான் முக்கியம்" என்றான்.

"தமிழ்ப் பெண்களிடம் நாங்கள் எதிர்பார்ப்பதே அதைத்தானே" என்றான். எனக்கு வேறு வழி தெரியவில்லை.

"ஐந்து பவுண்... ஏழு பவுண்... ஒன்பது பவுண் என்று கூட்டிக்

கூட்டிக் கட்டிக் கொள்ளும் உங்களுக்கு இது வேண்டும்." என்று எரிச்சல் பட்டுக் கொண்டேன்.

கொடி கைமாறியது!

என்னையும் ஒரு கதிரையில் அமரச் செய்தான். வாயில் பிளாஸ்டரை ஒட்டினான். கைகளைப் பின்புறமாகச் சேர்த்து நாற்காலியுடன் கட்டினான். நாங்கள் போனபிறகு மெதுமெதுவாக் கட்டவிழ்த்துக் கொள்ளுங்கள்..." என்றபடி கிளம்பினார்கள்.

சப்தம் கேட்காத துப்பாக்கியால் முடித்துவிட்டுப் போகாமல் உயிருடன் விட்டுவிட்டுப் போகிறார்களே என்று நான் மகிழ்ந்து கொள்ளும்போது எனது தங்கையை முத்தமிட முயற்சிக்கின்றான் ஒருவன்.

முகத்தை அங்குமிங்கும் திருப்பி அவள் திமிற அவன் முயற்சிகள் அந்தப் போராட்டத்தில் கதிரை புரண்டு கீழே விழ முன்னால் நடந்து கொண்டிருந்தவன் திரும்பிவந்து "வறேம் பாங்..." என்று அவனை இழுத்துக் கொண்டு போனான்.

"மூ கேனு பிஸ்ஸெக்...." என்று கோபப்பட்டான் இன்னொருவன்.

மூட்டையும் முடிச்சுமாக அவர்கள் பூட்டிக் கிடந்த முன் கதவைத் திறந்ததுதான் தாமதம்.... சினிமாத் தியேட்டரில் இருட்டுக்குள் திரைநோக்கி ஒளி வெள்ளம் பாய்வதுபோல் கண்களைக் கூச வைக்கும் வெளிச்சம் 'டக்'கெனப் பாய்ந்தது.

பிரமாண்டமான ஒளிக்கற்றை திடீரெனப் பாய்ந்ததால் திடுக்கிட்டு திக்குமுக்காடிப்போன போலி ஆமிக்காரர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டது போலீஸ் கூட்டம். எங்களை நோக்கி பரிதாபத்துடன் ஓடிவந்த பக்கத்துவீட்டு சுதுமாத்தியா எனது கட்டுக்களை அவிழ்த்து விட்டபடி.

"உள்ளே ஏதோ நடக்கிறது என்பதை உணர்ந்து கொண்ட நான் மெதுவாக இந்தப் பக்கம் வந்தேன். சுவரும் இல்லைத்தானே. தாண்டி வர லேசாக இருந்தது. வந்திருப்பவர்கள் திருடர்கள் என்பது தெரிந்து விட்டது. கதவைத் தட்டினால் உங்கள் உயிர்களுக்கு ஏதும் ஆபத்து வரலாம் என்ற பயத்தில் முன்வீட்டு றோயையும் அடுத்தவீட்டு சுனிலையும் எழுப்பிக் கூட்டிவந்து, எனது மனைவியையும் உசார் படுத்தி இருட்டுக்குள் நிறுத்தி விட்டு போலிசுக்கு ஓடினேன். நல்ல வேளை எனது சைக்கிளையும் சரிபண்ணிக் கொடுத்தீர்கள்..." என்று

பேசியவாறு எனது வாயில் ஒட்டப்பட்டிருந்த பிளாஸ்டரைக் கழற்றி னான்.

இடுப்பில் தொங்கும் குழந்தையுடன் மெதுவாகத் தயங்கித் தயங்கி பெண்களை நோக்கி வருகின்றாள் அவன் மனைவி.

பிளாஸ்டர் கழற்றப்பட்ட பிறகும் எனக்குப் பேச நா எழ வில்லை. பேசுவதற்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை.

**(இனவிவகார நல்லிணக்க அமைச்சு "நிலையான இன ஒற்றுமையை வலியுறுத்தல்" என்னும் தொனியில் நடத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற சிறுகதை. ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு இனவிவகார நல்லிணக்க அமைச்சு வெளியிட்டுள்ள "ஒரு தாய் மக்கள்" என்னும் தொகுதியில் இடம் பெற்றுள்ளது.)**

- ● -

ஞானம் - 2001

# எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்



## 11

"செக் பொயின்டுகளில் மாட்டிக் கொள்ளாமல் போய்விட்டால் நல்லது. நேரத்துக்குப் போய்விடலாம்"

ஆட்டோவின் அலறலொலியுடன் மனைவியின் மெலிதான குரல் காதுவழி புகுந்து மனதைக் குடைந்தது.

இப்போது ஐந்தரை ஆகிறது. ஆறரை மணிக்கு "நொவினா"

வத்தளையிலிருந்து "கும்பனித்தெரு" என்று தமிழால் பிரசித்தம் பெறத் தவறிவிட்ட "ஸ்லேவ் ஐலண்ட்" குழந்தை யேசுவின் கோவிலுக்குப் போக வேண்டும்.

ஒரு மணி நேரம் இருக்கிறது. நல்ல நாட்களில் என்றால் ஒரு மணி நேரம் என்பது மிகத் தாராளம். நாற்பது நிமிடம் இருந்தாலே போதும்.

இன்றைய நாட்களில் எதையும் நிச்சயிக்க முடியாது. இடையில் மாட்டிக் கொண்டோமென்றால் தொலைந்தது.

கோவிலாவது...குழந்தை யேசுவாவது... பிரார்த்தனையாவது...

வெள்ளிக் கிழமை விடாமல் தொடர்ந்து குழந்தை ஏசு கோவிலுக்கு நாங்கள் போகத் தொடங்கிய ஆரம்பத்தில் நண்பர் ஒருவர் எங்களை இப்படிக் கிண்டல் செய்தார்.

"வளர்ந்த ஏசுவாலேயே ஒன்றும் செய்து கொள்ள முடியவில்லை. சிலுவையில் அறையப்பட்டு வருந்தி வருந்திச் செத்தார். குழந்தை ஏசு என்னத்தைச் செய்துவிடுவார்?" என்று.

"ஆண்டவர்களை யார் வேண்டுமானாலும் கிண்டல் செய்யலாம். ஆள்பவர்களைத்தான் ஒன்றும் சொல்ல முடிவதில்லை. காணாமல் போய்விடுவீர்கள்" என்று அவருக்கு நான் கூறினேன்.

ஒவ்வொரு வெள்ளியும் மாலை ஆறரை மணி நவநாள் வழி

பாட்டுக்குத் தவறாமல் செல்வதை ஒரு மரபாகக் கொண்டிருக்கின்றேன். அதுவும் மனைவி மக்களுடன் குடும்பமாக.

இன்று மாதத்தின் முதல் வெள்ளி.

அதுதான் "ஒரு மணி நேரம் போதுமா" என்னும் மனைவியின் ஆதங்கம்.

வத்தளையில் இருந்து எத்தனை செக் பொயின்ற்கள். மனம் கணினியாகிப் படர்கிறது.

ஹெந்தலைச் சந்தியைத் தாண்டியதுமே ஒன்று. ஏழெட்டு பேர் போல் நிற்பார்கள். அதில் மாட்டாமல் தப்பிக்கவே முடியாது. அடுத்தது ஒலியமுல்லை. இதுவரை எங்களை நிறுத்தியதில்லை. இன்றைக்கு எப்படியோ!

பிறகு பேலியகொடையைத் தாண்டி கொழும்புக்குள் பிரவேசிக்கு முன் விக்டோரியா பாலத்திடம் ஒன்று.

பாலத்துறைப் பக்கம் திரும்பாமல் நேராகப் போய் கண்டி றோட் வழியாக கொழும்புக்குள் நுழைந்துவிடலாம் என்றால் புதுப்பாலத்திடமும் பெரியதாக ஒன்று. மணல் மூட்டைகளும் பீப்பாய்களுமாக... கையை நீட்டாமல் விடவே மாட்டார்கள்.

சுகததாச ஸ்டேடியத்தைத் தாண்டியதும் ஸ்போர்ட்ஸ் ஹோட்டலுக்கு முன்பதாக ஆமர் வீதி முகப்பில் ஒன்று. ஆமர் வீதியில் விழுந்து கொச்சிக்கடை வழியாகப் போய்விடலாம் என்றால் மீன் மார்க்கட்டை எட்டுமுன் ஒன்று. துறைமுகவாயில் சுற்றுவட்டத்திடம் ஒன்று. லேக் ஹவுஸ் றவுண்ட் பெண்ட்டிடம், ரீகலுக்கு முன்பாக ஒன்று.

அத்தனையும் தாண்டி அந்தா இந்தா என்று கோவிலை அடையும் போது கொம்பனித்தெரு போலீஸ் ஸ்டேசனிடம் ஒன்று.

கொச்சிக்கடை வழி வேண்டாம். கூடுதலான சோதனைச் சாவடிகள்! மருதானையால் போய்விடலாம் என்றால் கெப்பிடலுக்கும் டவர் மாளிகைக்கும் இடையில் ஒன்று. அதைத்தாண்டி நிம்மதியாக ஓடி அதோ தெரிகிறது கோவில் என்னும் தூரத்துக்கு வந்துவிட்டதும் யூனியன் பிளேசில் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை எட்டுமுன் ஒன்று. பாதையின் குறுக்கே போடப்பட்ட கம்பித் தடைகளும் தாங்களுமாய்.

அப்பாடா..! ஒரு மணி நேரம் எப்படிப் போதும்.

ஆபீஸ் முடிந்ததும் வீட்டுக்கோடி தெரிந்த ஒரு ஆட்டோவைப்

பிடித்து வீட்டுப் பெண்களுடன் கோவிலுக்குப் போவதே வழக்கம்.

ஏதாவது ஒரு காரணத்தின் நிமித்தம் ஒரு வெள்ளிக் கிழமை போக முடியவில்லை என்றால் அதுவே ஒரு பெருங்குறையாக விஸ்வ ரூபம் கொண்டு மனதை அழுத்திக் கொண்டிருக்கும்.

ஆகவே சந்தர்ப்பங்களுக்கு ஏற்றாற்போல் சில மாறுதல்களைச் செய்து கொள்வோம்.

ஒரு தடவை எனக்கு ஆபீஸ் தாமதமாகும் போல் தெரிந்தது. வழமையான ஆட்டோவை ஏற்பாடு செய்து கொண்டு மனைவி யையும் மகளையும் கிளம்பி வரச் சொல்லிவிட்டு நான் ஆபீசடியில் நின்றேன். எங்கள் ஆபீசைத் தாண்டித்தான் கோவிலுக்குப் போக வேண்டும்.

ஐந்துக்கெல்லாம் வெளியேறி வழிமேல் விழி வைத்து ஓடிவரும் ஓட்டோக்களை எல்லாம் உற்று உற்றுக் பார்த்து கண் பூத்துவிட்டது.

“நாலு மணிக்கெல்லாம் கிளம்பி வரச் சொன்னேனே. இன்னும் என்ன... வழியில் ஏதாவது....?” என்று மருகி நிற்கையில் ஆறு மணிப் போல் ஆட்டோ வந்து நின்றது.

“என்னப்பா?” என்றவாறு ஏறிக் கொண்டேன்.

“என்னவா...? அதை ஏன் கேட்கிறீர்கள்...?” என்று ஆரம்பித்தாள் மனைவி.

மகளைப் பார்த்தேன். முகங்கள் பொலிவாக இல்லை இருவருக் கும்.

‘விக்டோரியா’ பாலமுனையில் ஆட்டோ நிறுத்தப்பட்டதாம்! உள்ளே இரண்டு பெண்கள் மட்டுமே! பிறகு கேட்பானேன்.

பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்பது தமிழ்ப் பழமொழி. ஆனால் இவர்களுக்குத் தமிழ்ப் பெண்களைக் கண்டுவிட்டால் பேயைக் கண்டது போலத்தான். “பயின்ட” வைத் தொடர்ந்து இரு வரும் இறங்கிக் கொண்டனர்.

“கோவிலுக்கு” என்னும் பதிலுடன் அடையாள அட்டை நீட்டப்படுகிறது.

“மெயா கவுத” தாயிடம் கேள்வி.

“எனது மகள்” மனைவியின் பதில்.

அடையாள அட்டைகளை நீண்ட நேரம் திருப்பித் திருப்பிப் பார்த்தவன் "எதைக் கொண்டு நான் அதை ஏற்றுக் கொள்ள முடியும்? பிறந்த இடமும் வசிக்கும் இடமும் கொழும்பு என்று உங்களுக்கு... இந்தப் பெண்ணுக்கு தெல்பெத்தை - பதுளை என்றிருக்கிறது. இப்படி ஓரமாக நில்லுங்கள்" என்றவன் பெரியவனிடம் நடந்தான். அவனுடைய கேள்வி மிகவும் அசட்டுத்தனமாகப் பட்டிருக்கிறது மனைவிக்கு.

திரும்பி வந்தவனிடம் "என்னுடைய பெயருடன் இணைந்திருக்கும் பெயர் எனது கணவருடையது. இதில் என் மகளின் பெயருடன் இணைந்திருக்கும் அதே பெயர் அவளது தந்தையினுடையது..."

"அவள் என்னுடைய மகள் என்பதற்கு அதுதான் இப்போதைய அத்தாட்சி..."

"நான் பதுளைக்குப் போயிருந்தபோது இவள் பிறந்தாள். அதனால் தான் பிறந்த இடம் பதுளை என்றிருக்கிறது. இதில் என்ன கேள்வி வேண்டியிருக்கிறது..! அதுவும் போக எனக்கும் அடையாள அட்டை இருக்கிறது..! அவளுக்கும் இருக்கிறது..! பிறகு அவள் எனது மகளாக இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன...?"

மனைவியின் சிங்களம் அவனை மருள வைக்கிறது. இருந்தாலும் சமாளிக்கிறான்.

"நீங்கள்தானே மகள் என்று சொன்னீர்கள். அதனால் தான் உறுதி செய்து கொள்ள, கேட்க வேண்டி வந்தது" என்றவன் மெதுவாகக் கேட்கின்றான் "தெலிபெத்தை, எங்கிருக்கிறது? யாப்பண நெவே நே?

மனைவி விளங்கப்படுத்தி இருக்கின்றாள்.

"பதுளையில் இருந்து பசறை போகும் பாதையில் இரண்டாவது மைலில் இருக்கிறது தெல்பெத்தை என்னும் தேயிலை தோட்டம்" என்று.

தெளிவத்தை என்பதன் ஆங்கிலப் பதம் அது. அதைத்தான் சிங்களத்தில் அப்படியே எழுதி இருக்கின்றார்கள்.

அதைக் கண்டுதான் அவனும் மிரண்டிருக்கின்றான். ஏதோ 'தெல்லிப் பளை' மாதிரி ஒலிக்கிறதே என்று.

"யாழ்ப்பாணப் பக்கம் இல்லையே" என்னும் அவனுடைய வினாவின் தொனியும் அதுதான்.

யாழ்ப்பாணத்தை விடமாட்டோம் என்றவர்களும் இவர்கள்தான். யாழ்ப்பாணம் என்றதும் வெருள்கிறவர்களும் இவர்கள்தான்.

அடையாள அட்டைகளைத் திருப்பித் தந்து "போங்கள்" என்றான்.

கிட்டத்தட்ட ஒன்றரை மணிநேர அலைக்கழிப்பு. தனியாக வெளியே சென்று பழகியிராத இவர்களுக்குப் பயமாகவும் வெறுப்பாகவும் போய்விட்டது.

"வேண்டாம்னு போயிறிச்சீங்க... ஏண்டா கோயிலுக்குக் கௌம்புனோம்னு... நடு றோட்டுல நிப்பாட்டி வச்சுக்கிட்டு... என்னமோ அவனோட சொத்தை கொள்ளையடிக்க வந்த மாதிரி! போறவாறவன்லாம் பாத்துப் பாத்துக்கிட்டு போறானுக... ஊவுல வேடிக்கை பாக்குறாப்புல..." சிறுமைப்படுத்தப்பட்ட சீற்றத்திலிருந்து அவள் இன்னும் மீளவில்லை.

அடையாள அட்டைகள் தமிழில் எழுதப்பட்டிருப்பதால் தான் நடுப்பாதையில் நிறுத்தி வைக்கின்றார்கள்.

அரச அலுவலங்களில் தமிழ் எழுதுகின்றார்களா? இல்லை. ஆஸ்பத்திரிகளில் பொது இடங்களில், போக்குவரத்துச் செய்யும் ரயில்களில்... பஸ்களில்.... இடங்களைக் கூறும் பெயர்பலகைகளில்... இல்லை!

அரசு அனுப்பும் சுற்று நிருபங்கள், படிவங்கள், பத்திரங்கள் அவ்வளவு ஏன் அரசு நடத்தும் தமிழ் விழா போன்றவைகளின் அழைப்பிதழ்களில் இல்லை....

ஆனால் ஆட்களைக் காட்டும் அடையாள அட்டைகளில் தமிழ் இருக்கிறது அது ஏன்?

இது போன்ற செக் பொயின்டுகளில் இருப்பவர்களுக்கு "இவன் தமிழன் சந்தேகமற, பரிபூரணமாகச் சோதனை செய்துக்கொள்" என்று அறிவுறுத்தத்தான். அதைத்தான் இவர்களும் செய்கின்றார்கள். இதில் கொதிக்கவோ கோபிக்கவோ என்ன இருக்கிறது? அவர்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய வேண்டியது நமது பொறுப்பு.

இந்த 'செக்கிங்' நிலைமைகள் வருவதற்கு முன் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் தமிழில் எழுதப்பட்டிருக்கவில்லையே!

காரணத்துடன்தான் காரியங்கள் நடக்கின்றன.

கோவிலுக்குப் போவதற்குக்கூட நாங்கள் அனுபவிக்கும் இன்னல்கள்..! சோதனைகள்..!

யாருக்குப் புரிகின்றன இவைகள்.

இன்னல்களிலிருந்து விடுபடத்தான். கோவிலுக்கே செல்கின்றோம்.

இன்றும் அப்படி யாராவது ஒரு அதிகப் பிரசங்கியிடம் அகப்பட்டுக் கொண்டால் தொலைந்தது. வழிபாடு முடிந்த பிறகுதான் கோவிலை அடைய முடியும்.

"தடங்கல்கள் ஏதுமின்றி நேரத்துடன் கோவிலை அடைய வேண்டும். நவநாள் வழிபாட்டில் முழுதாகப் பங்கேற்க வேண்டும்" என்று மன்றாடியபடியே ஆட்டோ பயணம் தொடர்கிறது.

வத்தளையிலிருந்து லேக்கவுஸ் சுற்றுவட்டம் வரை ஒரு இடத்திலும் சிக்கிக் கொள்ளாமல் அந்த நாள்போல் ஜிவ்வென்று வந்து ரீகலையும் தாண்டியாக விட்டது.

ஒவ்வொரு பொயின்ட்களையும் தாண்டும்போது மனம் லேசாக அடித்துக் கொள்ளும். முன்னால் போன வாகனத்தை நிறுத்திவிட்டார்கள். நம்மை நிறுத்த மாட்டார்கள் என்னும் போலியான மகிழ்ச்சி வேறு.

அந்தா இந்தா என்று கோவிலை அடையும் நேரம் படுபாவி 'ஸ்டொப்'கார்டைத் தூக்கிப் பிடித்தானே!

ஆட்டோக்காரன் ஓரத்திலடித்து நிறுத்தினான். டக்கென இறங்கி நின்று லைசன்ஸ் இத்தியாதிகளை நீட்டினான்.

நானும் இறங்கி, மனைவிக்கு இறங்க வழி விடுகையில் ஆமிக்காரன் அருகே வந்தான்.

தோளில் தட்டி என்னை ஒதுக்கிவிட்டு உள்ளே பார்த்தான் பெண்கள்.

"பயின்ட ஓன நே" என்று மெதுவாகக் கூறியபடி இறங்கத் தேவையில்லை என்று சமிஞ்சை செய்தான்.

அதற்குள்ளாக டிரைவரின் லைசன்ஸ் இத்தியாதிகளையும் எங்களுடைய அடையாள அட்டைகளையும் சோதணையிட்ட மற்றவன் "டமில் கட்டிய நே" என்றவாறு "இவர்களைத் தெரியுமா" என்று சாரதியிடம் வினவினான்.

"நன்றாகத் தெரியும்" என்று சாரதி சட்டிபிக்கேட் வழங்கினான்.

மனைவியின் முகம் திடீரென மாறியது. "நாங்கள் தமிழர்கள் என்ப தால் ஒரு ஆட்டோ சாரதி எங்களுக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்க வேண்டி இருக்கிறது" என்பதே அந்தத் திடீர் முக மாற்றத்துக்கான காரணம்.

இவன் அவனைப் பார்த்தான்.

"ஆட்டோ சாரதியின் விலாசமும் உங்கள் விலாசமும் ஒரே இடத்தைக் குறிப்பதால் தான் கேட்டேன்" என்றான் அவன்.

எங்களின் உணர்வுகளை புரிந்து கொள்கிறவர்களாக அவர்கள் இருந்தது மகிழ்ச்சியைத் தந்தது.

"எங்கே போகின்றீர்கள்?"

"இன்று முதல் வெள்ளி இன்ஃபன்ட் ஜீஸஸ் கோவில் நொவீனா வுக்குப் போகின்றோம். ஆறரை மணிக்கு நொவீனா!" மனைவி கட கடத்தாள்.

"ஓ... இன்று வெள்ளிக் கிழமை! அதுவும் மாதத்தின் முதல் வெள்ளி. எங்களுக்கு அதெல்லாம் ஒன்றும் தெரிவதில்லை. நாள் கிழமை... கோவில்... திருவிழா... எதுவும் தெரிவதில்லை! நேரமும் இல்லை... இரவு... பகல்... வெயில்... மழை என்று இப்படி எங்காவது நிற்போம். டீயூட்டி முடியும் வரை உயிருடனிருந்தால் 'கேம்ப்', பிறகு 'டீயூட்டி' நீங்கள் செல்லுங்கள்."

என்றவன் ஒரு ஏக்கத்துடன் கூறினான்.

"கோவிலில் பூசையின்போது எங்கள் நினைவும் வருமானால் எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்."

"பாவமா இருக்குங்க" என்றாள் மனைவி.

நொவினா தொடங்க இன்னும் நேரமிருக்கின்றது. ஆலயத்தில் பிரார்த்தனை நடைபெறுகின்றது. தேவ அன்னை மரியாளையும் சகல புனிதர்களையும் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் என்னும் மன் றாட்டுப் பிரார்த்தனை.

"எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்" என்னும் அவர்க ளின் குரல் எங்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

இன்றைய நவநாள் பிரார்த்தனையை அவர்களுக்கு ஒப்பு கொடுத்து

அவர்களுக்காக வேண்டிக் கொள்வோம் என்று தீர்மானித்துக் கொண் டோம்.

மணி ஆறரை.

THERE SHALL BE SHOWERS OF BLESSINGS
THIS IS THE PROMISE OF LOVE

என்னும் ஆரம்ப கீதத்துடன் வழிபாடு தொடங்குகிறது. குருவா னவர் சீடர்களுடன் பீடத்தில் ஏறுகின்றார்.

கோவில் கொள்ளாத சனம். தங்களைச் சுற்றி நடக்கின்ற சகல விதமான புற நிகழ்வுகளையும் மறந்து இறைவனுடன் ஒரு மணிநேரம் ஒன்றிவிடும் அற்புதம் ஒரு சிலருக்கு எப்படியோ சித்தித்து விடுகிறது.

நவநாள் வழிபாடு நடந்து முடிவதற்கடையாளமாக இறுதி கீதம் ஒலிக்கத் தொடங்குகின்றது.

கோவிலில் அத்தனை கூட்டமும் ஒன்றித்து அக்கீதத்தில் இணை கிறது.

இசையும் கீதமும் உச்சத்தில் ஒலித்துக் கொண்டிருக்கையில் திடீரென ஆலயம் அதிர்கிறது. பூகம்பம் வந்தது போல் அமர்ந்திருந் தவர்கள் ஆடி விழுந்து எழுகின்றனர்.

அத்தனை பெரிய சத்தத்தை இதற்கு முன் நாங்கள் கேட்டதே இல்லை.

ஒரு வினாடி ஆலயம் ஸ்தம்பித்துவிட்டது.

குண்டுதான் வெடித்திருக்கிறது

கோவிலுக்குள்ளா..? தெரியவில்லை!. அத்தனை கூட்டமும் விதிர் விதிர்த்துப் போய் நிற்கின்றது.

குண்டு கோவிலுக்குள் வெடிக்கவில்லை என்பதை உணர்ந்து கொள்ள ஒரு சில வினாடிகள் பிடித்தன.

அமைதியாக இருங்கள்... சிரம் தாழ்த்தி மன்றாடுங்கள... பீடத் தில் இருந்து குருவானவரின் நம்பிக்கைக் குரலுடன் இறுதி கீதம் தொடர் கிறது.

நாவுலர்ந்து போன வாய்களில் இருந்து கீதம் எழ மறுக்கிறது.

ஒரு வினாடிதான்... பிறகு தொடர்கிறது...

WHEN MY LIFE IS ALMOST GONE
HEAR MY CRY HEAR MY CALL
HOLD MY HAND LEST I FALL

நொவினா முடிந்து விட்டது.

பாதைக்கிறங்கப் பயந்து போய் கோயிலில் நின்ற கூட்டம் வெளியேற வெகு நேரம் பிடித்தது.

மெது மெதுவாகச் செய்தி வருகிறது.

சோதனைச் சாவடியில்தான் வெடித்திருக்கிறது குண்டு. சோதனையில் ஈடுபட்டிருந்த இரண்டு ஆமிக்காரர்களும் உடல் சிதறி..!

"டியூட்டி முடியும் வரை உயிருடன் இருந்தால்..." என்ற அந்த இரட்டை முகங்கள் எங்கள் இதயத்தின் ஆழத்தில்.

- ● -

மல்லிகை 36 வது ஆண்டு மலர்
ஜனவரி 2001



# 12 உயிர்

நாங்கள் யாரும் அதை ஒரு நாயாகவே நினைக்கவில்லை! எங்களில் ஒருவராகவே, குடும்பத்தின் ஒருவராகவே 'அதை'யும் நினைத்துக் கொண்டிருந்தோம்!

சமையலறை முன் ஹால், படுக்கையறை நடுத்துண்டு, சாப்பாட்டு அறை என்று நாங்கள் எங்கிருந்தாலும், அதுவும் அங்கிங்கெனாதபடி எங்களுடன் இருக்கும்.

நாற்காலியில் உட்கார்ந்திருந்தால், கழுத்தை முழங்காலில் வைத்து தலையை மடியில் சாய்த்தவாறு நின்று கொண்டிருக்கும். பஞ்சு போன்ற அதன் கழுத்தின் வெள்ளையை எங்களையறியாமலே கைதடவிக் கொடுக்கும். தட்டிக் கொடுக்கும். தடவலின் சுகம் தலையை மேலும் மடிமீது அழுத்திக் கொள்ள கண்களை உருட்டி மேல் நோக்கிக் கூர்மையாகப் பார்க்கும். அந்தப் பார்வையில் பாசமும், நன்றியுணர்வும் கரைந்தொழுகும். முதுகின்மேல் வளைந்து நிற்கும் வால் தன்பாட்டில் ஆடிக்களிக்கும். அரசவைப் பெண்கள் ஆட்டும் சாமரம் போல்.

"எங்கோ புழுதி மண்ணில் கிடந்து வந்துவிட்டு இப்போது மடி கேட்கிறதோ" என்று செல்லமான கோபத்துடன் தலையைத் தள்ளி விட்டால் முன்கால் இரண்டையும் தூக்கி ஒரு உரிமையுடன் மடி மேல் இருத்திக் கொண்டு சில்லென்றிருக்கும் முகத்தின் கறுப்பு நுனியை காதடியிலும், கழுத்தடியிலும், கன்னத்திலும் வைத்து வைத்து எடுக்கும். ஏதோ ரகசியம் கூறுவதைப்போல.

எங்கள் அத்தனை பேருடனும் எப்படி ஒட்டிக் கொண்டுவிட்டது. அதுவும் வந்து சேர்ந்த ஒரு ஆறேழு மாதங்களில்.

வந்த புதிதில் ஏதாவதொரு கதிரைக்கடியில் அல்லது எங்காவது ஒரு மூலையில் பதுங்கி நின்றபடி மெதுவாகத் தலையை நீட்டி பயம் நிறைந்த கண்களால் எங்களை ஒரு பரபரப்புடன் பார்ப்பதும் முகத்தைத் திருப்பிக் கொள்வதுமாக.... கொஞ்சமாக பால் கரைத்து ஒரு

சிரட்டையில் ஊற்றி வைத்துவிட்டு ஆளுக்கொரு பக்கம் மறைந்து கொள்வோம்.

பயந்த பார்வையுடன் மெதுவாக வெளியே வரும். சிரட்டைக்குள் வாயும், சிரட்டைக்கு வெளியே பரபரத்த கண்களுமாய் நின்றபோது எங்களில் யாரோ ஒருவர் கண்ணில் பட்டுவிட்டோம் போலிருக் கிறது. மிரண்டு திரும்பிய வேகத்தில் சிரட்டை பிரண்டு சிமிந்தித் தரை முழுக்கப்பால்... பாலைத் துடைத்து விட்ட பிறகும் பிசுபிசுப்புப் போகவில்லை. ஈ மொய்ப்பும் போகவில்லை. முழு ஹாலையுமே தண்ணீரூற்றிக் கழுவ வேண்டியதாயிற்று.

பிறகு பிறகு மலமள்ளி, ஜலம் துடைத்து நீரூற்றிக் கழுவிய அத்த னையத்தனை பொறுமைகளுக்கும் அன்றைய அந்தப்பால் துடைப்பே கன்னி ஆரம்பமாகிவிட்டிருந்தது.

ஒரு வாரமான பின் மெது மெதுவாக வெளியே வந்து காலைச் சுற்றிச் சுற்றித் திரிய ஆரம்பித்தது. காலோ, வாலோ லேசாக மிதிப் பட்டு விட்டால் போதும், ஏதோ கொலை விழுந்து விட்டதைப்போல் கத்திக்கொண்டு ஓடிப் பதுங்கிக் கொள்ளும். பிறகு மெதுவாக எட்டிப் பார்க்கும். மெல்லமாக வந்து ஒட்டிக் கொள்ளும். இப்படிப் பழகத் தொடங்கியதுதான். இப்போது எப்படி லயித்துக் கிடக்கிறது... எங்க ளில் ஒருவராக.

எங்களுக்கு, ஒரு நாய் வளர்க்க வேண்டும் என்னும் நினைவு எப்போதுமே இருந்ததில்லை.

“பட்டப் பகலில் வீட்டுக்குள் புகுந்து தனியாக இருந்த பெண் களை மிரட்டி...” போன்ற கதைகள் காதுகளுக்கெட்டும் நேரங்களில் கூட இந்த நாய் வளர்க்கும் எண்ணம் எங்களுக்கு ஏற்படவில்லை

எப்படி ஏற்படும்...? நாங்கள் ஒரு நாயை வளர்க்க, அது றோட்டில் போகும் யாராவது ஒரு சிங்கள மனிதனைக் கடிக்க, அவன் ஊரைக் கூட்ட “தமிழனின் நாய் சிங்களவனைக் கடித்து விட்டது” என்னும் இன அடையாளத்துடனும் “நாய்தானா அல்லது நாயுருவில் வந்திருக் கும் புலியா” என்னும் அரசியல் அலங்காரங்களுடனும் தேரோட்டப் படும் சூழ்நிலையில்... “நாய் கடிக்கும்” என்கின்ற ஒரு இயல்பான நிகழ்வுகூட அரசியலாக்கப்பட்டுவிடும் ஒரு ஆபத்தான சூழல் எங்க ளுக்கு இந்த நாய் வளர்க்கும் எண்ணம் எழவிடாமல் எங்களைத் தடுத்துக் கொண்டிருந்தது!

- ● -

"உங்களுக்கு ஒரு விஷயம் சொல்லணும்ங்க" என்று ஆபீசில் இருந்த எனக்கு வீட்டை நினைவுப்படுத்திய எனது இல்லதரசி என்னு டைய ம்...ம்...ம்... களுக்கிடையே கூறி முடித்த செய்தி இதுதான்.

"சுதா ஒரு நாய்க்குட்டியை கொண்டு வந்து விட்டு விட்டுப் போயி ருக்கிறது. ஆபீசில் யாரோ கொடுத்தார்கள் என்று நேற்று வீட்டுக்குக் கொண்டு சென்றதாம்... இப்ப எதுக்கு நாய்குட்டியும் பேய்குட்டியும்... என்று வீட்டில் ஒரே ரகளையாம்... விடிந்தும் விடியாததுமாக வேலை க்குப் போகும் வழியில் தூக்கிக் கொண்டு வந்திருக்கிறது... அத்தான் வந்ததும் கேட்டுப்பார். வேண்டாம் என்றால் நாளைக்கு வந்து கொண்டு போய்விடுகின்றேன், என்றது... அழகா இருக்குப்பா... இதோ கதிரைக் கடியில் பயந்து போய்..."

'சுதா' என்பது 'சுதாகரன்' என்பதன் செல்லச் சுருக்கம். மனைவி யின் அண்ணன்! 'வீட்டில்' என்பது அவருடைய மனைவி. மூத்த சகோதரனை அண்ணன் என்று கூறி உறவுடன் விளிக்கும் மரபுகள் யாப்புகள் எல்லாம் பட்டினங்களில் உடைந்துபோய் வெகுகாலமாகி விட்டது.

போனில் மனைவி என்றதும் கொஞ்சம் பயந்துதான் போனேன். "லேசாகத் தலை சுற்றுகிறது. வியர்த்துக் கொண்டு வருகிறது. கொஞ்சம் நேரத்துடன் வருகின்றீர்களா" என்பதற்கு மட்டுமே போன் வரும்.

"பிரஷர்..."

ஏன் எப்படி என்பதற்கெல்லாம் விடை தெரியாது. டொக்டரிடம் கூட்டிப்போனால் "ஓட்டோவிலா வந்தாய்?"என்று என்னிடம் கேட்டு விட்டு, "அம்மா நிற்காதீர்கள் உட்காருங்கள்... நர்ஸ்..." என்று பரபரத்தவர் 'புஷ் புஷ் என்று காற்றடித்து பிரஷரைப் பார்த்துவிட்டு "மைகோட்" என்று முனகியபடி சக்கர நாற்காலியில் அமர்த்தி... எனக் குப் பயமாகப் போய்விட்டது. போதும் போதும் என்றும் ஆகிவிட் டது. 'அட்மிட்' செய்து இரண்டு நாள் வைத்திருந்து பிரஷரை வழமைக்குத் திருப்பி, சின்னதாக என்னை ஒரு கடன்காரனாக்கி கூட்டிப் போகச் சொன்னார்கள்.

"வாரத்துக்கொரு தடவை கூட்டிவர வேண்டும். இந்த மருந்து மாத்தி ரைகளை வாங்கி ஒழுங்காகக் குடிக்க வேண்டும். கட்டிலை விட்டு அனாவசியமாக இறங்கக் கூடாது. குனிந்து எதையும் தேடவோ எடுக்கவோ கூடாது..." என்ற கட்டளைகளுடன்!

"ஷீ இஸ் வொரிட்... திங்கிங் டூ மச்... ட்றைடு கீப் ஹர் நோர்மல்...

கூட யோசிக்கக்கூடாது தெரியுமா யோசிச்சு யோசிச்சு மண்டையைக் குழப்பிக்கிட்டா பிரஷர் எறங்காது..." என்று உபதேசங்களும் கூறி அனுப்பினார். அன்றைய பிரஷர் நிலை அடுத்து வர வேண்டிய திகதி ஆகியவற்றை அடையாளமிட்டு ஒரு அட்டையும் கொடுத்திருந்தார். அன்றிலிருந்து ஆஸ்பத்திரியும் வீடுமாக அலைச்சல்தான்.

"சதா எதையாவது நெனச்சி நெனச்சி மனதை பாரமாக்கிக்கிடா தீங்க... உங்களுக்கும் வருத்தம் எங்களுக்கும் எடஞ்சல்... நான் இல் லையா... அந்த மாதிரி மனசை பக்குவப்படுத்திக்கிடணும்..." டொக்ட ரின் உபதேசங்களை மனைவியிடம் நினைவுபடுத்தினேன்.

"உங்களுக்கென்ன..?காலையில கௌம்பிப் போயிருவீங்க... எனக்கு அப்படியா? நாள் முழுக்க இந்த வீட்டைத்தான் சுற்றிச் சுற்றி வரவே ண்டும். ஒரே நினைப்புத்தான் வரும். வேறு என்ன செய்ய முடியும், என்னால்... வலிய நோயை இழுத்துக்கொள்ள எனக்கு மட்டும் ஆசையா..." மனைவியின் கூற்று எனக்கு நியாயமாகவே படுகிறது.

மனைவியிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்ததும்தான் எனக்கு வீட்டு நினைவே வருகிறது. அலுவலகச் சுமை வீட்டை மறக்கடித்து விடுகிறது. அவளுக்கு அப்படியா? இருபத்து நாலு மணித்தியாலமும் வீட்டையே சுற்றிச்சுற்றி வலம் வருகையில் வேறு வேறு நினைவுகள் எப்படி வரும்..? எங்கிருந்து வரும்..?

- ● -

இன்றைய தொலைபேசியில் அதொன்றும் இல்லை என்பதே எனக்கு திருப்தியாக இருந்தது. மகிழ்ச்சியாகவும் இருந்தது.

என்ன செய்கிறது? என்று கேட்டேன்.

"வேர்த்துக் கொட்டுகிறது 'பட பட' வென்று வருகிறது!"

என்பதற்குப் பதிலாக "இதோ படுத்திருக்கிறது... அதே இடம்தான் செவுத்துப் பக்கம் மூஞ்சை வைத்துக் கொண்டு... அசையுதே இல்லைப்பா... கண்கள் மட்டும் வீடு முழுக்க அலைகிறது... உங்க ளுக்கு தெரியுமா நாலு கண்கள் இதுக்கு..!

"என்ன நாலு கண்களா..?"

"ம்ம்... ரெண்டு கண்களுக்கும் மேலாக வட்டமான கறுப்புக் கோடுகளுக்கு நடுவில் இரண்டு வெள்ளைப் புள்ளிகள்..."

மனைவியை அது ஆக்கிரமித்திருக்கிறது என்பதை அறிந்து

கொண்டேன். "ஆண் குட்டியா பெட்டையா?" என்று கேட்டேன்.

"ஐயய்யோ அதைக் கேட்க மறந்துட்டேனே!"

"கேக்குறது என்னத்தை... தூக்கி வயித்தடியைப் பாருங்களேன்..."

"ஐயோ எனக்குப் பார்க்கத் தெரியாது நீங்க வந்து பாத்துக்கங்க... ஒன்னுக்கிருக்க போச்சுன்னா பார்த்துச் சொல்லிருவேன்..."

"பைத்தியம் உங்களுக்கு... ஆண் குட்டின்னா காலைத் தூக்கிக்கிட்டிருக்கும்னு நெனைக்கிறீங்களா... இது குட்டிப்பா... அதுக்கெல்லாம் வயசுக்கு வரணும்... ஆளாகணும்..."

இன்று ஒரு இயற்கை வைத்தியம் வந்திருப்பதாகவே எனது உள்ளுணர்வு கூறிற்று.

"வேர்த்துக் கொட்டுகிறது. 'படபடப்பாக' இருக்கிறது" என்பதற்கு பதிலாக அதன் கண்கள், கண்களுக்கு மேலிருக்கும் வெள்ளைப் புள்ளிகள் ஆணா பெண்ணா என்று அறிந்து கொள்வதில் உள்ள ஆர்வம்...

- ● -

"காலையில் இருந்து சனாவைக் காணலை. தேடித் தேடிக் களைச்சுப்போயிட்டேன்... அவளும் தோட்டம் முழுக்க தேடிட்டா... ரெண்டு பேரும் தேடாத எடம் இல்லை. நான் பயந்தே போயிட்டேன். பிறகு ரொம்ப நேரம் கழிச்சு எங்கேயோ இருந்து வந்துச்சுங்க..."

மனைவியின் பரபரப்பு எனக்கு வித்தியாசமாகத் தெரிந்தது. தொழிலுக்கு நான், மகள், மகன் எல்லோரும் அதிகாலையில் கிளம்பிப் போய்விட்ட பிறகு மனைவியும் மனைவிக்குத் துணையாக மூத்த மகளும் மொட்டு மொட்டென்று ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு.... அசைபோட்டு அசைபோட்டு மனதைக் குழப்பிக் கொண்டு கிடந்த நிலைமைகள் மாறி...

இந்தப் புதிய ஜீவனின் பின்னால் திரிந்து கொண்டு, அதற்கு ஊட்டவும், அதன் செய்கைகளை வேடிக்கை பார்க்கவும், ரசிக்கவும், காணாமல் போய்விட்டதோ என்று தேடி அலையவும்...

எனக்கு ஒரு யோசனை தோன்றியது. சின்னதாக ஒரு மணி வாங்கி அதன் சின்னக்கழுத்துக்கு ஒரு பெல்ட் போட்டு பெல்டில் மணியைத் கோர்த்து விட்டேன். இப்போது பார்க்க வேண்டும். சிலிங்.. சிலிங்..

என்று சின்ன மணி ஓசையுடன் உள்ளேயும் வெளியேயும், வெளியேயும், உள்ளேயுமாக அது ஓடித்திரியும் அழகு... மெட்டி போட்டுக் கொண்ட சின்னப் பெண்போல...

ஒரு நாள் உள்ளைறையிலிருந்து நானும், வெவ்வேறு இடங்களில் இருந்து மனைவியும் மகளும், மகனும் ஓடிவந்தோம். நல்லவேளை ஒருவர் மேல் ஒருவர் மோதிக் கொள்ளவில்லை.

மணியோசை கேட்க வில்லை! சதா எங்களில் யாராவது ஒருவரின் காலடியில்தான் 'சனா' சுற்றிச் சுற்றி நிற்கும். எல்லோரும் இருக்கின்றோம். அதைக் காண வில்லை. அதைக் காணவில்லை என்னும் உணர்வு எங்கள் அனைவ ருக்கும் எப்படி ஒரே நேரத்தில் பொறி தட்டியது. டெலிபதிபோல்.

"தோட்டத்துக்குள் எங்காவது இருக்கும்..." நான் சமாதானம் கூறினேன். "தவளை ஒன்றைக் கண்டிருக்கும். அதன் வினோதமான தாவலும் தத்தலும் இதை அதைப் பின்னால் சுற்றப் பண்ணியிருக்கும். முன்னங்கால்களால் அதை அமுக்கிப் பிடிக்கும் பிரயாசையில் அதன் பின்னால் ஓடிக் கொண்டிருக்கும்"

"மணிச் சப்தம் ஏன் கேட்கவில்லை?"

"அது என்ன மனுசோழனின் ஆராய்ச்சி மணியா. இம்புட்டுக் காணும் ஒரு சின்ன மணி... வளையமும் சரியில்லே, கொக்கியும் சரியில்லே எங்கேயாவது விழுந்திருக்கும்"

இப்போது நாங்கள் எல்லோரும் தோட்டத்தில், நாலா புறமும் நயனங்களால் துழாவிக் கொண்டும் நாசிகளால் மோப்பம் பிடித்துக் கொண்டும்... தமிழ் வீடுகளில் இரவில் நுழையும் ஆமிக்காரர் போலீஸ்காரர் போல்... உற்று உற்றுத் தேடிக்கொண்டு...

எங்கள் வீட்டைச் சுற்றி சின்னதாக ஒரு தோட்டம். மூன்று பக்கம் சுவர் எழுப்பிய வீட்டுக்காரன் ஒரு பக்கத்தை மொட்டையாக விட்டு விட்டான். சுவர் எழும்பாத அந்த பக்கத்தில் வரிசை வரிசையாக முட்கம்பியும் சுவர்போல் வளர்ந்து கிடக்கும் சப்பாத்துச் செடி மற்றும் பல்வகை செடி கொடிகளும், பூச்சி பொட்டுக்களுடன் கூடிய சூரிய ஒளிபடாத அடி மண்ணுமாக... முட்கம்பி வேலி முடிகின்ற இடத்தில் ஒரு முதிர்ந்த பலாமரம். வானளாவி என்பதைப்போல. அடியிலிருந்து நுனிவரை காய்த்துக் கொண்டு.

பலாமரத்தடியில் சேறும் சகதியுமாக ஒரு குட்டை. குட்டை

என்றால் சிறுகுளம் என்கிறது அகராதி. நகரத்துக் குடியிருப்புக்கள், வீடுகள் போல் நீர் வடிகால்கள் அமைக்கப்படாத சூழலில் குளிக்கும் கழுவும் தண்ணீருக்கான தஞ்சம் இந்தப் பலா மரத்தடிதான்.

குழியாக வெட்டி வெட்டி, தண்ணீர் நிறைந்து நிறைந்து, பலா இலை களும் பழுத்துவிடும் பலாப்பழச் சிதறல்களுமாக இது ஒரு விலக்கப்பட்ட பிரதேசமாகிவிட்டது.

ஆள் நடமாட்டம் தெரிந்தால் ஈ அளவு கொழுத்த கொசுக்கள் கூட்டம் கூட்டமாக படை எடுத்து வரும்.

இந்த குட்டையில் விழுந்திருக்கலாமோ என்னும் ஐயம் எனக்கு ஏற்பட்டது. கொஞ்சம் அவதானித்தேன். இல்லை என்பதில் ஒரு திருப்தி என்றாலும், எங்கே என்கின்றதில் ஒரு ஏக்கம். சப்பாத்துச் செடி வேலியின் இருண்ட அடியில் ஏதோ முனகுவதுபோல் ஒரு ஒலி கேட்கிறது.

குனிந்து பார்க்கின்றேன். இலைகளுக்கிடையில் தரையில் நிறைந்து கிடக்கும் சருகுகளை மேலுயர்த்திக் கொண்டு ஏதோ நெளிகிறது. பாம்பாகவும் இருக்கலாம். அரனை என்றால் இவ்வளவு நீளமாக சருகுகள் மேலெழுந்து விலக நியாயமில்லை.

பாம்புதான்..!

பாம்பு என்கின்ற நினைவின் பய உணர்வுடன் என்னை மீண்டும் குனியச் செய்கிறது அதே முனகல்.

மனைவியும் மற்றவர்களும் இப்போது என் பின்னால் நிற்கின்றனர். வளர்ந்து கிடக்கும் வாதுகளை ஒதுக்கிக் கொண்டு செடிகளுக்கிடையில் கழுத்தை நுழைத்து, கண்ணைக் குத்துவதுபோல் சிவப்பாகப் பூத்து மஞ்சள் மஞ்சளாக மகரந்தம் ஏந்தி நிற்கும் சப்பாத்து மலரை விரலால் விலத்திக் கொண்டு பார்வையை வீசினேன்.

வீசிய பார்வை எதிரில் மோதி மீண்டும் வந்து என் விழிகளுக்குள் பாய்ந்து பதுங்கியது.

பாம்பென்ற நினைவின் பயத்தைவிடவும் கூடுதல் பயத்துடன் விருட்டென்று வேகமாக எழுந்து நின்றேன். என்னைப்போலவே செடிகளுக்குள் குனிந்து கழுத்தை நுழைத்துக் கொண்டு பக்கத்து வீட்டுப் பெண். முகமும், முகத்துக்கடியில் சட்டை மூடாத கழுத்தும், தோள்களும் கழுத்துக்கடியில் பிதுங்கும் மார்புகளுமாய்..!

மனைவியைப் பார்க்கச் சொல்லலாமா என்று ஒரு கணம்

எண்ணினேன். குனிந்து எதையும் பார்க்கக்கூடாது என்னும் வைத்தியரின் கட்டளை அந்த நினைவைத் தடுத்து வைத்தது. "என்னப்பா என்ன... திடீர்னு எழுந்திருச்சீங்க... பாம்பா..." என் பயமும் படபடப்பும் மனை வியைப் பதற்றமடையச் செய்திருப்பதை கேள்வியின் அவசரம் தெளி வாகக் காட்டியது.

பாம்பபைக் கண்டபோதுகூட இப்படி அச்சம் கொள்ள வில்லையே நான்!

பெண்கள் மீதான இந்த ஆண் மன அச்சத்தின் உக்கிரம்தான் பஸ ஸின் இருக்கையில்கூட மஞ்சளுடை மதகுருவின் அருகில் ஒரு பெண் ணின் அமர்தலை மூர்க்கமாக மறுக்கிறதோ?

"பாம்பு இல்லையப்பா... பக்கத்து வீட்டு பெண்களில் ஒன்று... வேலிக்கடியில் நுழைந்துக் கொண்டு..."

என்னன்னு கேளுங்களேன். இப்படிப் பதறிப்போய் எழுந்து நின்றுக் கொண்டு. சிங்களப் பொம்பளைன்னதும் பயந்துட்டீங்களா?"

எனக்கு வேடிக்கையாகவும் இருந்தது. சிங்களப் பொம்பளை என்னும் அந்த அடைமொழி வேதனையாகவும் இருந்தது. சிங்களத்துக்கும் எங்களுக்கும் என்ன அப்படி ஒரு பகை. என்ன ஒரு பயம். என்ன ஒரு இடைவெளி. பாம்புக்கும் மனிதனுக்கும் மாதிரி. எங்களுக்கு அவர்க ளும், அவர்களுக்கு நாங்களும்... பாம்பு பாம்புகளாய்!

"குனிஞ்சு பாருங்கப்பா... இன்னமும் அப்படியே இருக்குதான்னு பாருங்க... இருந்தா என்னன்னு கேளுங்க..." மனைவி அவசரப்படுத் தினாள்.

குனிந்தேன். செடிகளின் அடி இருட்டுக்குள் அதே 'பளீர்' என்னும் மின்னல்.

முகமும் முகத்துக்கடியில் ரவிக்கை மூடாத முன் கழுத்தும், கழுத்துக் கடியில் தோள்களும்... முன் நீளும் கறுப்பு றபர் வளை யல்கள் மலிந்த கைகளும் கைகளின் பிடியில் எங்கள் நாய்குட்டியும்! நாய்க் குட்டி கைமாறியதும் உதட்டைப் பிதுக்கிச் சிரித்து விட்டு தலையை இழுத்துக் கொண்டாள்.

அழகை அழகென்பதற்கும் ரசிப்பதற்கும் காரணங்கள் தேவை இல்லை தான்! ரோஜாவை அழகென்பதற்கும் ரசிப்பதற்கும் அதிலி ருந்து பெறப்படும் அத்தர் காரணமாகாததைப் போல்... நாய்குட்டி யுடன் நிமிர்கின்றேன். எல்லார் முகங்களிலும் பரவசம்.

நாய்க்குட்டி தவளையைத் தொடர... பாம்பு தவளையைக் கவ்வ... பயந்துபோன நாய்குட்டியின் கழுத்துப்பட்டி முட்கம்பியில் மாட்டிக் கொள்ள... கழுத்து நெரிபட்ட குட்டி கதறி ஊளையிட்டு முனக... அழுகுரல் கேட்டு ஓடி வந்த பெண், குனிந்து நாய்க்குட்டியை விடு விக்க... அதேநேரம் நானும் வேலிக்கடியில் குனிய... மயக்கத்தில் நான் இருந்த அந்த இரண்டொரு வினாடிகளில் அந்தப் பெண் சிங்களத்தில் கூறியதை சற்றே விபரங்களுடன் மனைவியிடம் ஒப்புவித்தேன்.

"நல்ல பெண்கள் தாங்க... அந்த மனுஷன் தான்..." என்றவாறு நாய் குட்டியை அணைத்துத் தடவிவிட்டபடி மனைவி உள்ளே செல்கிறாள்.

-●-

ஆரம்பத்தில் நானிருக்கும் வீட்டுச் சாவியை கொடுக்கும்போது வீட்டுக்காரர் என்னிடம் பயம் காட்டியதே இந்த பெண்களைப்பற் றித்தான்.

"நாலைந்து கிடக்கிறது. கிழவன் கிழவிக்கு அடங்காததுகள்... ஆட்கொல்லிகள்... அடங்காப்பிடாரிகள்.... எல்லையில் பிழை என்று என்னை இந்தப் பக்கச் சுவரை எழுப்பவிடமாட்டேன் என்றதுகள்! அராஜகிகள்! தப்பித்தவறி பேச்சுவார்த்தை வைத்துக்கொள்ளாதீர்கள்... வைத்துக் கொண்டிடீர்களோ தொலைந்தீர்கள்..." சுற்றியும் சிங்களவர் மத்தியில் புதிதான இடத்தில் புதிதாக குடிவந்த நாங்களும் அந்த அறிவுரைகளுக்கிணங்கவே ஜாக்கிரதையாக இருந்திருக்கின்றோம். இந்தப் பக்கத்து வீட்டைப்பற்றி, அதன் அராஜகிகள் பற்றி.

இந்த புதிய உயிர் இன்று அந்த முட்கம்பி வேலிகளை உடைத்தி ருக்கிறது..

ஒரு நாள் ஆபீசில் இருந்து வந்து கேட்டைத் திறந்தேன். வேலி யின் செடிகளுக்கிடையில் குத்தி குத்தி வைத்தாற்போல் பூப் பூவாய் முகங்கள். அடுத்த வீட்டு ஆட்கொல்லிகள்... மனைவியுடன் சிரித்துச் சிரித்துப் பேசியபடி. மனைவி பேசும் சிங்களத்தில் மயங்கி இருக்கலாம்.

அடுத்து வந்த சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று அடுத்த வீட்டி லிருந்து, வேலிக்கு மேலாக இரண்டு ஈயத்தட்டுக்கள் வந்தன. பழைய சிலுமின பேப்பர் மூடிப்போட்டுக் கொண்டு. ஒன்று நிறைய பலகா ரங்கள். கொக்கீஸ், கொண்டைப் பணியாரம் இத்தியாதிகளுடன். மற்றது நிறைய மஞ்சற் சாதம். சுற்றி சுற்றி இறைச்சி மற்றும் காய்கறி வகைகளுடன்.

தட்டுக்களைத் திருப்பிக் கொடுக்கும்போது ஒரு சீப்புப்பழத்

துடன் கொடுத்தோம். நத்தாருக்கு நாமும் சாப்பாடு அனுப்ப வேண்டும் என்னும் நினைவுகளுடன்.

இது இப்போது நன்றாக வளர்ந்து ஒரு மினி ஜெர்மன் ஷெப்பர்ட் மாதிரித் திரிகிறது. சாப்பாடும், சவரட்ணையும், அன்பும் ஆதரவும் அதை அப்படி வளர்த்தெடுத்திருக்கிறது.

ஆளுயர முன்கேட்டின் அரைவாசி உயரத்துக்கு நிற்கிறது. என்றாவது ஒரு நாள் கேட்டைப்பாய்ந்து வெளியே போகும் என்று நாங்கள் விளையாட்டாகவும் பெருமையாகவும் பேசிக் கொள்வோம்.

வாழ்க்கை என்னும் விளையாட்டின் பெரும்பகுதி பெருமை கூறுதல் தானே.

இப்போதெல்லாம் வீட்டை மூடிவிட்டு எங்களால் வெளியே எங்கும் போக முடிவதில்லை. யாராவது ஒருவர் வீட்டில் இருந்தேயாக வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் பூஜைக்கென்று கிளம்பத்தொடங்கினால் போதும். செருப்பைக் கவ்விக் கொண்டு ஓடிவிடும். கையிலிருக்கும் சீப்பைப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிடும். முன்கால்களால் இடுப்பைச் சுற்றிப் பிடித்துக்கொண்டு நிற்கும்.

"உடுக்க விடமாட்டேங்குதுப்பா. கொஞ்சம் வெளிய கொண்டு போங்களேன்" என்னும் குரல்களைத் தொடர்ந்து வெளியேவிட்டு முன் கதவின் கீழ்பாதியை மூடிவிட்டால் காலைத்தூக்கிப் பாதிக் கதவில் வைத்துக் கொண்டு திறந்த வாயும் வாயின் ஒரு பக்கமாக நீண்டு தொங்கும் நாவுமாக ஒரு ஏக்கத்துடன் பார்க்கும்.

கேட்டுக்கு வெளியே ஓட்டோ சத்தம் கேட்டதும் விழுந்தெழுந்து ஓடி கேட்டிடம் நிற்கும். சூலக்கம்பிகளில் குத்தி வைத்ததுபோல் கேட்டுக்கு மேலாகத் தெரியும் ஓட்டோ 'பிரியந்த' வின் முகம் நோக்கி கேட்டின் உச்சி வரை பாயும். "அப்போய் மாவ கேவா" என்றபடி அவன் ஓடி ஆட்டோவுக்குள் அமர்ந்து கொள்வான்.

ஒரு விதமாக வீட்டைப் பூட்டி தோட்டத்துக்குள் அவனைவிட்டு கேட்டையும் பூட்டிக் கொண்டு நாங்கள் கோவிலுக்குப் போய்த் திரும்புகையில் பக்கத்து வீட்டுக்காரர்கள் கூறுவார்கள் "நாய் கேட்டிடமே நின்று அழுது கொண்டிருந்தது" என்று. எங்களுக்கும் பரிதாமாகத்தான் இருக்கும். அவசர அவசரமாகப் பூட்டைத் திறந்து கேட்டைத் திறந்து உள் நுழைந்தால் ஓடுவதுமாக பாய்வதுமாக களேபரப்படுத்தி விடும். அதன் மகிழ்ச்சிக்கோர் எல்லை இருப்பதில்லை.

இறைச்சியும் கறியுமாகப் பிசைந்து வைத்த சாதம் பிளேட்டுடன் அப்படியே கிடக்கும்.

"நாய் கேட்டிடமே நின்று கொண்டிருந்தது" என்னும் பக்கத்து வீட்டுக்காரர்களின் கூற்றை மெய்ப்பிப்பதுபோல. எங்கள் மேல் பாய்ந்து முடித்துத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டதன் பிறகே சாப்பிடத் தொடங்கும்.

பக்கத்து வீட்டில் ஒரு பெண் நாய் இருக்கிற சங்கதி எங்களுக்கே தெரியாது. இதற்குத் தெரிந்திருக்கிறது. பக்கத்து வீடு என்றால் ஆட் கொல்லிகள் வீடல்ல. அடுத்த பக்கம்... சுவரெழுப்பியுள்ள பக்கம்!

சதா வீட்டுக்குள்ளேயும் கேட்டுக்குள்ளேயும் தானே கிடக்கின் றான். சற்றே காலாற உலவவிட்டு வரட்டுமே என்று சங்கிலியுடன் வெளியே கூட்டிப்போனேன். கையில் ஒரு கம்புடன், அந்த சந்துப் பாதைக்குள் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் உறுமிக் கொண்டு நிற்கும் நாய்களுக்குப் பத்திரம் காட்டுவதற்குத்தான் இந்தக் கம்பு.

வாசலிலிருந்து பாதிப் பாதைவரை ஏதோ கடித்துக் குதறி விடுவ தைப்போல் குரைத்துக் கொண்டு ஓடிவருவதும் பிறகு ஓடிப்போய் உள்ளே நுழைந்து கொள்வதுமாக "வரெங் பலன்ன, காப்பாங் பலன்ன" என்று வாய் வீச்சு காட்டும் சண்டியர்களைப்போல... அருகரு கேதான் இருப்பார்கள் ஆனாலும் அடித்துக்கொள்ள மாட்டார்கள்.

"வா பார்ப்போம் கையை வை பார்ப்போம்?" என்று முறைத்துக் கொண்டு கூறுவார்கள். பிறகு கலைந்துபோய் விடுவார்கள். இவை களும் அவர்களைப் போலத்தான்..!

இப்படி உலாவரும் போதுதான் ஒரு நாள் சங்கிலியுடன் பரபர வென்று என்னையும் இழுத்துக் கொண்டு போய் பக்கத்து வீட்டுக்கு கேட்டிடம் நின்றது. இது கேட்டிடம் சென்றதும் அதுவும் ஓடிவந்து கேட்டிடம் நின்றது. உள்ளேயும் வெளியேயுமாக ஒரே குசுகுசுப்பு! ஒரே போராட்டம். தொலையட்டும் என்று நானும் நிற்கிறேன். உள்ளே சத்தமிட்டு யாரோ அதை துரத்துகின்றனர். நானும் இதை இழுத்துக் கொண்டு வந்துவிடுகின்றேன்.

அடுத்த நாள் நான் ஏதோ வேலையாக இருக்கின்றேன். சங்கி லியை வாயில் கவ்வி இழுத்தபடி... இது வந்து என் காலடியில் நிற்கின் றது. "பாருங்கள் அதன் அறிவை. வெளியே கூட்டிப் போகச் சொல் கின்றது" என்கின்றாள் மனைவி. கேட்டைத் திறந்ததுதான் தாமதம். என்னையும் சேர்த்திழுத்துக் கொண்டுபோய் பக்கத்து வீட்டு கேட்டி டம் நிற்கின்றது.

உள்ளேயும் வெளியேயுமாக அதே குசுகுசுப்பு! கேட்டுக்குள் மீண்டும் அதே சத்தம். அதே விரட்டல்.

பிறகொரு நாள், வெளியே ஏதோ சத்தம் கேட்கிறதே என்று முன் கதவைத் திறந்தேன். இது கேட்டிடம். 'பூஸ் பூஸ்'என்று மூச்சு விட்டபடி, முன்கால்களால் பூமியைத் தோண்டிக் கொண்டு.

கேட்டிடம் சென்றால் வெளியே அது. எப்படியோ காவல் மீறி ஓடி வந்திருக்கிறது. ஏதேதோ ரகசியப் பரிமாற்றங்கள். மெதுவாக உள்ளே சென்று மனைவியைக் கூட்டி வந்தேன். சிரித்துக் கொண்டோம். இன விருத்தி இரகசியங்கள், அஃறிணை முதல் உயர்திணை வரை அதே தான் போலிருக்கிறது.

கதவை மூடிக்கொண்டு நாங்கள் உள் நுழைந்த அதேவேளை கேட் உடைவது போன்தொரு ஓசை. வெளியே ஓடினோம். கேட்டுக்கு மேல் எங்கள் நாய், வெளியேயும் பாய முடியாமல் உள்ளேயும் விழ முடியா மல்... கேட் நுனியில் தொங்கிக்கொண்டு... மனைவி பதறிப் போனாள். பதற்றம் ஒரு காரிய நாசம் மாத்திரமே.

உள்ளே ஓடி ஒரு சிறிய மேசையுடன் ஓடி வந்து மேலேறி கேட்டின் இரும்பு கூர்களில் இருந்து அதை உயர்த்தி உருவி எடுத்தேன். மெது வாக இறக்கினேன்.

தரையில் மல்லாத்தி படுக்கவைத்து அமுக்கிக் கொண்டேன். அடி வயிற்றின் உள் மூலையிலிருந்து, இலேசாக இரத்தம் கசிந்தொழுகு கிறது. மனைவியின் பதற்றம் நீடிக்கிறது. சமாதானப்படுத்தியபடி ஓட் டோவை வரவழைத்து விலங்கு சிகிச்சை நிலையத்துக்கு ஓடினேன். "அனிமெல் கிளினிக்" என்னும் ஆங்கிலப் பெயரினடியில் ஆறேழு நாய்கள் வரிசையில் காத்திருந்தன. எஜமானர்களுடன்.

நிலைமையுணர்ந்து சட்ட வரிசை வழிவிட்டது. நாயின் வாய்க்கு பின்னல் மூடிப்போட்டு கட்டிவிட்டான் பணியாள். இனி வாயைத் திறக்கவும் இயலாது கடிக்கவும் இயலாது. பரிசோதித்த டொக்டர் ஏதேதோ கூறினார். ஏதேதோ செய்தார். ஊசியடித்தார். தையல் போட் டார். மாத்திரைகள் கொடுத்தார்.

கேட்டின் இரும்புக் கூரில் குஞ்சைக் கிழித்துக் கொண்டான் என்பது சாராம்சம். எனக்குத் தமிழ்ச் சினிமா பாண்டியராஜனின் நினைவு வந்தது... சிரிப்பும் வந்தது.

"நனைக்கக் கூடாது. தையலை கடித்திழுக்க விடக்கூடாது. சாப்பி டும் நேரம் தவிர்ந்து வாய் மூடி போட்டுக் கொள்ளவும். ஒரு வாரத்தில்

ஆறிவிடும். ஏழாவது நாள் கூட்டி வரவும்” டொக்டரின் கட்டளைகள். ஊசி, தையல், புதிதாக ஒரு வாய் மூடி, மருந்து, ஓட்டோ என்று ஐநூறைத் தாண்டிவிட்டது. ஓட்டோவுடன் திரும்புகையில் வீட்டு வாச லில் ஒரு கூட்டமே நின்றது.

முதலில் மனைவி, பிறகு தலைகள், தலைகள், தலைகள். கடைசியாக ஒரு குற்ற உணர்வுடன் பக்கத்து வீட்டுக் கதாநாயகி. வாலையாட்டியபடி. திணை, இனம், மதம் மறந்த உறவுக்கூட்டம்.

- ● -

நாட்கள் நகர்ந்தன...நத்தார் வந்தது..!

“இவுங்களுக்கு நான் வேலிக்கு மேலாக குடுத்திடுவேன். நீங்க இதைப் பக்கத்து வீட்டுக்குக் குடுத்துடுறீங்களா..! பழைய வீரகேசரியால் மூடி போட்டுக் கொண்ட தட்டுடன் மனைவி. பக்கத்து வீட்டுக் கேட்டைத் தட்டினேன். சிறிது நேரம் கழித்தே எட்டிப்பார்த்தவர்கள் என்னைக் கண்டதும் “வாருங்கள் வாருங்கள் என்று தென் பகுதிச் சிங்களத்தில் வரவேற்றார். திறந்த கேட்டின் வழியாக ஓடி வந்தது அவரின் புன்னகைக் குரல்! இதை வீணடிக்க இன்னும் நிறைய ‘வீரவங்சக்கள்’ வேண்டியிருக்கலாம்.

“நாய் குட்டிப் போட்டிருக்கிறது. அதனிடம் தான் இருந்தேன். அது தான் கொஞ்சம் தாமதமாயிற்று கேட்டைத்திறக்க” என்றவர் சிரித்த படியே கூறினார். “வந்து பாருங்கள்... ஒன்று அச்சாக உங்கள் சனாவே தான” என்றார். அவரைத் தொடர்ந்து பின் சென்றேன். பஞ்சில் செய்த பொம்மைகள்போல் நாலைந்து குட்டிகள். ஒன்றை ஒன்று தள்ளியப் படி பாலுறிஞ்சிக் கொண்டு.

ஒன்றை மெதுவாகக் திருப்பிக் காட்டினார். கண்களும் கண்களுக்கு மேலே கறுப்புக் கோடுகளுடன் இரண்டு வெள்ளைப் புள்ளிகளுமாக... மெத்தென்று அழகியதோரு பூவைப்போல. குஞ்சுச் சனாவேதான்! சிருஷ்டி ரகசியமும் விநோதமும் வியப்பளிக்கிறது.

பெண் என்றார் அவர்.

- ● -

மூன்றாவது மனிதன்
செப் - ஒக். 2006

# செத்துப் போகும் தெய்வங்கள்



13

அவசரமாகப் போக வேண்டும் என்பதனால் தான் பஸ்ஸில் ஏறி னேன். ஏறினேன் என்பது தவறு. திணிந்தேன். என்னை நானே திணித் துக் கொண்டேன். திணிந்த பின் தான் காலூன்ற இடம் தேடுகின்றேன்

காலூன்றும் இடம் எல்லாம் கால்கள்.

ஒற்றைக் காலின் விரல் நுனியில் சற்று நேரம் நிற்கின்றேன். ஏதோ ஒரு கால் அகஸ்மாத்தாக உயர்ந்த போது அந்த இடத்தில் ஊன்றிக் கொண்டேன்.

இந்த ஆக்கிரமிப்பு இன்னொருவனை ஒற்றைக்காலில் நிற்கப் பண் ணியிருக்கும். என் மேல் எரிச்சல் கொள்ளச் செய்திருக்கும்.

ஒடித்தலும் வெட்டலுமாக ஓடிக் கொண்டிருக்கிறது பஸ். பொடி யாகிக் கொண்டிருக்கிறது உடல்.

இத்தனை பெரிய பஸ்ஸை இவ்வளவு சனத்துடன் என்னமாய் விரட்டுகின்றான்.

கெட்டிக்காரன் தான்... எதிலாவது முட்டிக் கொள்ளாத வரை..! கொண்டு போய் சேர்த்துவிடுவான் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

வேகமாய் வந்து கொண்டிருந்தவன் வந்த வேகத்தில் ஒடித்துத் திருப்பி திடீரென பிறேக்கடித்து நிறுத்தியதும் அத்தனை சனக்கூட்டமும் ஒரு வினாடி ஆடித்தான் போய்விட்டது.

"என்ன ஆயிற்று?" என்று அவரவரும் எட்டி, எட்டிப் பார்க்கின் றனர். எக்கி எக்கிப் பார்க்கின்றனர்.

ஒழுங்காய் இருந்த பாதையில் சிவப்புச் சிவப்பாய் கம்பிகள் முளைத் திருந்தன.

கலர் கலராய் சட்டையும் கையில் துப்பாக்கியுமாக ஒரு ஏழெட் டுப் பத்துப்பேர்.

“இறங்கி எல்லோரும் வரிசையாக நில்லுங்கள்” சிங்களத்தில் ஆணை யிட்டான் ஒரு மிலிட்ரி.

“இன்றைக்குப் போனாற் போலத்தான்... இதில் போய் ஏறி னோமே..!”

முனகியபடி ஒவ்வொருவராக இறங்கத் தொடங்குகின்றனர். பஸ் ஸைச் சுற்றி வலம் வருகிறது நாலைந்து கலர்ச்சட்டைகள். ஜன்ன லோரமாக உட்கார்ந்திருந்த ஒருவனைப் பார்த்து உயரமாக நின்றுக் கொண்டிருந்தவன் உறுமுகின்றான்.

“உனக்குத் தனியாகச் சொல்ல வேண்டுமோ?”

உட்கார்ந்திருந்தவனுடைய முகத்தில் எதுவிதமான கவலையோ, கலவரமோ இல்லை. மிகச் சாவதானமாக அமர்ந்திருந்தான். அது தான் இவனுக்குப் பிடிக்கவில்லை.

ஆமி செக்கிங் என்றால் அரண்டு போக வேண்டாமா..? முகத்தில் ஒரு கலவரம் வேண்டாமா..? பயம்தெரிய வேண்டாமா..?

நிற்பவர்கள் எல்லாம் இறங்கி முடித்து இவனுக்கு அருகே அமர்ந் திருப்பவனும் எழும்பிய பிறகே இவனால் அசைய முடியும். ஆகவே தான் சிவனே என்று உட்கார்ந்திருக்கின்றான்.

இது அவனுக்குப் பிடிக்கவில்லை.

ஜன்னலண்டை தெரியும் முகத்தை சப்பி விழுங்கிவிடுவதைப் போல் முறைத்துக் கொண்டு நிற்கின்றான்.

இரண்டு முகங்களும் மிகவும் அருகருகே இருப்பது ஒரு அசௌகரியத்தை ஏற்படுத்துகிறது.

உட்கார்ந்திருப்பவன் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொள்ளுகின் றான்.

இறங்குகிறார்கள்... இறங்குகிறார்கள்... இறங்குகிறார்கள்... இன்னும் இறங்குகின்றார்கள்..!

இறங்கியவர்களை றோட்டோர வெய்யிலில் வரிசைப்படுத்துகின் றனர் ஓரிருவர். அடேயப்பா எத்தனை நீளமான வரிசை. இத்தனை பேரா இந்த பஸ்ஸுக்குள். கோச்சியிலேறும் ஒரு கூட்டத்தை பஸ்ஸி லேற்றிக் கொள்ளும் வித்தை இலங்கையின் தனியார் பஸ்காரர் களுக்கு மட்டும் தெரிந்திருக்கிறது.

படம் முடிந்த தியேட்டர் போல் பஸ் காலியாக இருக்கிறது.

வெறிச்சோடிக் கிடக்கும் காலியான பஸ்ஸுக்குள் ஏறிய நாலைந்து கலர் சட்டைகள் சீட்டுக்கடிகளில் காலோட்டிப் பார்த்து விட்டு கீழே குதிக்கின்றனர்.

"பார்த்தோமா அனுப்பினோமா" என்றில்லாமல் வரிசையை ஒழுங்கு படுத்துகின்றான் ஒருவன் பாடசாலை ட்றில் மாஸ்டர் மாதிரி.

வரிசையில் இருப்பவர்களுக்குத் தெரியும்!

செக்கர் ஏறியதும் டிக்கட் தேடுவதைப் போல் சட்டைப் பைகளைத் துழாவுகின்றனர்.

தேசிய அடையாள அட்டையை எடுத்துத் தயாராய் வைத்துக் கொள்ளுகின்றனர்.

டக்கென்று காட்டிவிட்டு டக்கென்று ஏறி டக்கென்று ஓடிப்போய் சேரும் அவசரம் ... அத்தனை பேருக்கும்!

கொழும்புக்காரர்களுக்கு எல்லாமே "டக் டக்" கென்று நடக்க வேண்டும். தீ மிதிப்பவர்கள் போல் ஓடி ஓடியே வாழ்க்கை முழுவ தையும் கழித்துப் பழக்கப்பட்டு விட்டவர்கள் இவர்கள்.

கூட்டத்துக்கே தலைவனைப் போலிருந்தவன், முகத்தில் ஒரு வித்தி யாசமான முறைப்பும் முன் தள்ளிய நெஞ்சுமாக வரிசையில் நிற்பவர் களைப் பயம் காட்டிக் கொண்டு நடை பயிலுகின்றான். அவனைத் தவிர்ந்த மற்றவர்கள் விசாரிப்பதும் அடையாள அட்டை பார்ப்பதுமாக!

அடையாள அட்டை காட்டி "ஆம்" என்றோ "இல்லை" என்றோ தலையாட்டி விட்டு, அவர்கள் அமுக்கிப் பார்ப்பதற்கேற்றாற் போல் கால்களை நொடித்து பக்கெட்டுக்களைக் காட்டி விட்டு ஒவ்வொரு வராய் நடந்து போய் பஸ்ஸில் ஏறுகின்றனர்.

விடுபட்டு பஸ் ஏற விரைபவர்களின் நடையிலே ஒரு மிடுக்கு. பார்வையிலே ஒரு கம்பீரம். இன்னும் வரிசையிலே நிற்பவர்களைப் பார்ப்பதிலே ஒரு அசட்டை'

பாம்பாய் நெளிந்த கியூ பாதியாய்க் குறைகிறது.

"எங்கிருந்து வருகின்றாய்?" கேள்வி பிறந்தது சிங்களத்தில்.

இளைஞனிடமிருந்து பதில் இல்லை. திருதிருவென்று விழிக்கின் றான். பாஷை புரியாத பரிதாபம் கண்களில் மிரள்கிறது.

இவன் என்ன போர்த்துக்கலில் இருந்தோ ஒல்லாந்திலிருந்

தோவா வருகின்றான். கொழும்பைத் தூக்கிக் கொண்டு போய்விட அல்லது இலங்கைகையைப் பிடித்துக் கொள்ள! அவன் பரபரவென்று விழிப்பதைப் பார்க்கையிலேயே தெரிகிறது சிங்களம் சொட்டுக்கூட தெரியவில்லை என்று. அப்படி என்றால் ஒன்று யாழ்ப்பாணத்திலிருந்து அல்லது மட்டக்களப்பிலிருந்து தான்!

அதுதான் இவர்களும் மிரள்கின்றார்கள். கருடனைக் கண்ட நாகம் போல்.

"ஏன் கொழும்புக்கு வந்தாய்?"

"எங்கே போகிறாய்...?"

"எங்கே தங்கி இருக்கின்றாய்...?"

"எப்போது வந்தாய், எதற்காக வந்தாய்...?."

அலை அலையாய் எழுந்த கேள்விக் கடல் அவனை மூழ்கடித்துக் கொண்டிருந்தது.

மூச்சு விட முடியாமல் திணறினான்.

ஒரு கேள்விக்கே பதில் சொல்லத் தெரியாதவன் இத்தனை கேள்வி களுக்கு எப்படி பதில் சொல்லப் போகின்றான்.

யாழ்ப்பாண ஐடென்டிட்டி கார்ட் என்றதுமே அவனை ஒரு ஓரத்தில் நிறுத்திக் கொண்டு மற்றவர்களை "டக் டக்" கென்று பார்வையிட்டு பஸ்ஸுக்கு அனுப்புகின்றார்கள்.

யாழ்ப்பாண அடையாள அட்டை ஒன்று கிடைத்து விட்ட மகிழ்வில் மற்றவைகளைத் தட்டி விடுகின்றனர்.

பாஷை விளங்காத பையனை ஜீப்பில் ஏற்றிக் கொள்ளுகின்றான் ஒருவன்.

பஸ்ஸிலிருந்து இறங்கியவர்கள் அனைவரும் ஏறியாகி விட்டது.

பஸ்ஸை போகச் சொல்லி ஆமிக்காரர்களிடமிருந்து சமிஞ்சையும் கிடைத்து விட்டது.

டிரைவரும் கண்டக்டரும் பஸ்ஸை நோக்கி நடந்து ஏறியும் விட்டனர்.

அப்போதுதான் அது நடந்தது...

பஸ்ஸுக்குள்ளிருந்து விழுந்தடித்துக் கொண்டு இறங்கிய ஒரு பெண் "பஸ்ஸிலிருந்து இறக்கிய அந்த பையனை ஏன் ஜீப்புக்குள்

ஏற்றி வைத்திருக்கின்றீர்கள்?" என்று கேட்டாள்!

எரிமலையாய்க் குமறினான் அந்தத் தலைவன் போன்றவன்.

"என்னிடம் யார் கேள்வி கேட்க முடியும்? எத்தனை எத்தனை பேர் கைகட்டி, வாய்பொத்தி ஏறு, என்றால் ஏறியும்... இறங்கு, என்றால் இறங்கியும்...!"

"இவள் என்ன சாதாரணம். கேவலம் ஒரு பெண்"

பெண் என்றதுமே எழுந்து நிற்கும் அந்த ஆணாதிக்கத் திமிர்.

மற்றவர்கள் அனைவருமே தனது அடிமைகள் என்று நிற்கும் அந்தப் பட்டாளத்துத் திமிர்!

ஒன்றுடன் ஒன்று இணைந்து முறுக்கி எழுந்து நின்று குமுறிக் கிடக்கிறது அந்த முரட்டு முகத்தில்.

அவன் இறங்கிய வேகம்... ஜீப்பின் முன் கதவை விசிறியடித்த வேகம்...தடித்தடியான சப்பாத்துக்கால்கள் தரையைக் கிழிக்க அவளை நோக்கி நடந்து வந்த வேகம்...

அவளை விரட்டி விடும் என்று அவன் எதிர்பார்த்தான்.

ஆனால் அவளோ ஆர்ப்பாட்டங்கள், ஆரவாரங்கள் அனைத்தையும் அசட்டை செய்கின்றவள் போல் நின்றாள்.

ஒரு அழகிய பூவைப் போல் தான் அவன் முன்னே நிற்கின்றாள்.

யாராவது ஒரு ஆணின் பின்னே, அவனின் துணையுடன் தலைகுனிந்து நடந்து போகும் ஒரு பெண்ணின் தோற்றம்.

அழகான முகம். மென்மையான உடல். ரம்யமான உடை.

அவளுடைய தோற்றமும் அவனைக் கூடுதல் ஆத்திரமடையச் செய்திருக்கும்.

"அதைக் கேட்க நீ யார்..? ஆமியா..? போலீஸா..? சிங்களத்தில் கர்ச்சிக்கின்றான்.

"அதையே நானும் கேட்கலாமில்லையா?"

அதே சிங்களத்தில் அவள் திருப்பிக் கேட்டாள். ஆனால் கர்ச்சிக்க வில்லை.

அவளுடைய சிங்களத்தில் ஒரு இனிமை இருந்தது அவனுடையதைப் போல் மற்றவர்கள் வெறுத்தொதுக்கும் தடித்தனம் இல்லை.

ஒரு மொழியின் இனிமையும் செழுமையும் அதை மக்கள் பயன் படுத்தும் விதத்திலேயும் இருக்கின்றது தான்!

"நீ, யார் என்று என்னையா கேட்கின்றாய்..? காட்டுகின்றேன்... காட்டுகின்றேன்..." என்று கோபத்தால் குமுறியபடி அவள் கழுத்தைப் பிடித்து நெரித்து குரல்வளையைக் கடித்துக் குதறி விடுபவனைப் போல் அவளை நெருங்குகின்றான்.

ஆனால் ஒன்றும் செய்து விடவில்லை.

அவள் ஒரு பெண்... வசீகரமானவள். மென்மையின் இருப்பிடமா னவள் என்பதுவும் அவனைக் கட்டிப் போட்டு வைக்கிறது.

அவளுக்கும் அது தெரிந்திருக்கிறது. அதுதான் அத்தனை தைரிய மாக நிற்கின்றாள். முகத்தில் பயமோ கலவரமோ இல்லாமல்.

"புரிந்து கொண்டால் சரி..! ஓடிக் கொண்டிருக்கும் ஒரு பஸ்ஸை இது போன்றதொரு வளைவில் மறித்து நிறுத்தி அத்தனை பேரையும் இறக்கி... ஆமிதான்... போலீஸ்... தான் என்று எங்களுக்கெப்படித் தெரியும்? உங்களில் யாராவது "நாங்கள் இன்னார்" என்று அடையா ளப்படுத்திக் கொண்டீர்களா? இப்போது தான் ஆமி ட்ரஸ் போலீஸ் டீரஸ்ஸில் ஏதேதோ நடக்கிறதே! "கவனமாக இருங்கள்" என்று பாது காப்பு வட்டாரமே மக்களை உஷார் படுத்துகிறதே!"

"ஆகவே நீங்கள் சட்டப்படியானவர்கள் தானா என்பது எங்க ளுக்கும் தெரிய வேண்டும்" என்றாள் அமைதியாக.

ஏதோ நடக்கிறது..!' அதுவும் ஆமிக்கும் ஒரு பெண்ணுக்கும் என் பது தெரிந்ததும் பஸ்ஸுக்குள் ஏறியவர்கள் ஒவ்வொருவராய் இறங்கி அவர்களைச் சூழ்ந்து கொண்டனர்.

மற்றவர்கள் முன் தன் மரியாதை குறைவதை விரும்பாத அவன் அந்தப் பெண்ணைப் பார்த்து "உங்களுக்கு இப்போது என்ன தெரிய வேண்டும்?" என்றான்.

"நீ யார்?" என்னும் அதட்டலில் இருந்து, "உங்களுக்கு என்ன தெரிய வேண்டும்?" என்பதில் தொனித்த மாற்றம் அவனின் இறக்கத் தைக் காட்டுகிறது.

"நீங்கள் எல்லாம் யார் என்பது தெரிய வேண்டும்?"

அவள் அதே இடத்தில் நின்றாள்.

தன்னை நிரூபித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் அவன் தள்ளப்பட்டான்.

"பஸ் போய்விடும். தான் எங்காவது கொண்டு செல்லபட்டு அடைக்கப்படப் போகின்றேன்..! என்னுடைய இத்தனை நாள் முயற்சிகளும் பலனளிக்கப் போகும் தறுவாயில் தட்டிப் பறிக்கப்பட்டு விட்டது..! என்று விழி பிதுங்க கலங்கிப் போய் ஜீப்பில் அமர்ந்திருக்கும் அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"ஏதோ நடக்கிறது. அது தான் இன்னும் பஸ் கிளம்பவில்லை" என்பதை மட்டும் உணர்கின்றான்.

"என்னுடைய அடையாள அட்டையை நீங்கள் ஏற்கனவே பார்த்து விட்டீர்கள்!" அவள் தான் பேசினாள்.

"நான் இந்த நாட்டின் சட்ட ரீதியான ஒரு பிரஜை. அவனை ஏன் தடுத்து வைத்திருக்கின்றீர்கள்?"என்று வினவினாள்.

"அவன் உங்களுக்கு வேண்டியவனா?"

"வேண்டியவர்களுக்கு மட்டுமே உதவி செய்ய வேண்டிய நிலை எனக்கு இல்லை" நான் அரசியல்வாதியில்லை!" அவன் யாராக இருந் தாலும் சரி ஏன் பிடித்து வைத்திருக்கின்றீர்கள் என்பது தெரிய வேண் டும்.

"அவனிடம் இருப்பது யாழ்ப்பாண ஐடென்டிட்டி கார்ட்..! அவனும் ஒரு..."

அவன் முடிக்கு முன்னரே அவள் பேசத் தொடங்கினாள்.

"யாழ்ப்பாணம் இந்த நாட்டுக்குச் சொந்தமானது இல்லையா? யாழ்ப்பாண ஐடென்டிட்டி கார்ட் இந்த அரசாங்கம் அவனுக்கு வழங் கிய அடையாளமில்லையா? அவன் யாழப்பாணத்தில் பிறந்தவன் என்பதற்காக இந்த நாட்டின் பிரஜை இல்லையா? என்னைப் போல்... உங்களைப் போல்... போகும்படி அனுப்பினீர்களே இவர்களைப் போல்...

பிறகு ஏன் அரசாங்கம் கொடுத்துள்ள அடையாள அட்டை இருந் தும் அவனை மட்டும் பிடித்து வைத்துக் கொண்டீர்கள்'.

அவன் கொலைகாரனா? கொள்ளைக்காரனா? வேண்டப்படுகிற வர்கள் என்னும் உங்களது பட்டியலில் அவனது படம் ஏதும் பிரசுர மாகி இருக்கிறதா?

மூச்சு விடாமல் பேசிக் கொண்டு போனாள் அவள்.

நீங்கள் எதற்காக அவனைப் பிடித்துக் கொண்டு போகின்றீர்கள்

என்பது எனக்குத் தெரிய வேண்டும். எங்கே வைத்திருப்பீர்கள் என்பதும் தெரிய வேண்டும். அவனுடைய பெற்றோருக்கோ உறவினருக்கோ நான் அறிவிப்பேன்...”

“நீங்கள் அதை எல்லாம் செய்ய மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்..!”

இந்த நிலைமையை நீடிக்க விட அவனுக்கு விருப்பமில்லை.

ஆட்கள் வேறு சூழ்ந்து கொண்டு வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டனர்.

இவ்வளவு தூரம் விட்டதே தப்பு என்பதை உணர்கின்றான். இதை இத்துடன் முடித்துக் கொள்வதே புத்திசாலித்தனம் என்றும் எண்ணு கின்றான்... அதையே விரும்புகின்றான்.

தன்னுடைய பெயர் பதவி, விலாசம் ஆகியவைகளை இந்நேரம் அவள் மனப்பாடம் செய்து கொண்டிருக்கலாம். பிறகு ஏதாவது ஒரு சிக்கலில் மாட்டி விடவும் கூடும்.

ஜீப்பைப் பார்க்கின்றான். உள்ளே அமர்ந்திருக்கும் ஆபீசரைப் பார்க்கின்றான். தலையை அசைத்து ஏதோ ஒரு சமிக்ஞை செய்கின்றான்.

ஜீப்பின் கதவு திறக்கிறது. அவனை இறக்கி விட்டார்கள். “நீ போகலாம்” என்றார்கள்.

பயந்து பயந்து நடந்து வந்த அவன் அந்தப் பெண்ணிடம் சென்று “யூ ஆர் மை கோட்... நீங்கள் என் தெய்வம்.. நான் நேரில் கண்ட தெய்வம்...” என்று முனகினான்.

அனைவரும் மீண்டும் பஸ்ஸுக்குள் திணிந்து கொண்ட பின் நடந்து வந்தாள்.

ஆமிக்காரர்கள் அவளையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஒரு வினாடி நின்றவள் ஆமிப் பெரியவனைப் பார்த்துக் கூறினாள். ”நீங்கள் உங்கள் கடமையைச் சரியாகச் செய்யவில்லை. பஸ்ஸின் டிரைவரையும் கண்டக்டரையும் செக் பண்ணினீர்களா? இல்லையே ஏன்? அவர்கள் மேல் மட்டும் என்ன அப்படி ஒரு நம்பிக்கை? நீங்கள் என்ன செக் பண்ணுகின்றீர்கள் எதைத் தேடுகின்றீர்கள் என்பது உங்களுக்காவது புரிகிறதா?” என்றபடி பஸ்ஸில் ஏறிக் கொண்டாள்.

பஸ்ஸில் இப்போது அவளுக்காக ஒரு சீட் காலியாக இருந்தது.

எல்லோரும் அவள் முகத்தையே ஆர்வத்துடன் பார்க்கின்றனர்.

அத்தனை பேரும் பயந்து நடுங்கிப் பார்த்துக் கொண்டிருந்த பட்டாளத்துக்காரர்களை என்னமாய்க் கலக்கிவிட்டு வந்திருக்கின் றாள் அவள். தெய்வத்தின் முன் நிற்கும் பக்தன் போல் கைகட்டி உடல்கூனி நன்றியுணர்வுடன் நின்றான் அவன்.

"நீங்கள் மட்டும் இல்லை என்றால் என் வாழ்வே இருண்டு போயிருக்கும்..! இந்த நாட்களிலும் கூட கடவுள் தோன்றுவார் என்பதை நான் இன்று தான் உணர்கின்றேன்..! நீங்கள் யார் என்பதை நான் அறிந்துக் கொள்ளலாமா?"

அவள் மிகவும் அமைதியாகத் தன்னுடைய கைப்பையைத் திறந்து ஒரு விசிட்டிங்கார்டை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

மனித உரிமைகளை மதிக்கும் அந்தப் பெண்ணிடம் "நீங்கள் எப்படி இந்த பஸ்ஸுக்குள்? அதுவும் இத்தனைக் கூட்டத்துக்குள்?"

"கார் பழுதாய்ப் போய் பாதையில் கிடக்குது. டிரைவர் அதனுடன் போராடிக் கொண்டிருக்கின்றான். மூன்று பஸ் ஸ்டாண்டுக்கு முந்தியதில் தான் இந்த பஸ்ஸில் ஏறினேன். ஒரு அவசர வேலை இருக்கிறது" என்றாள்.

நல்ல தமிழ் கலந்த ஆங்கிலத்தில் பேசினாள்.

"கார் பழுதாய்ப் போயிருக்காவிட்டால் நீங்க இந்த பஸ்ஸில் ஏறி இருக்க மாட்டீர்கள் இல்லையா...?என் கதி என்னவாகி இருக்கும்..?

அவன் கண்களே கலங்கின. "இதைத் தானா தெய்வச் செயல் என்கின்றோம்..!

அவனை அந்த உணர்ச்சிச் சிக்கலில் இருந்து விடுவிக்கும் எண் ணத்தில் "உன்னைப் பற்றி ஒன்றுமே கூறவில்லையே?" என்கின் றாள்.

"என்ன இருக்கிறது கூற? எத்தனையோ பாடுபட்டு எவ்வளவோ செலவழித்து ஒரு மாதிரியாக எல்லாம் சரியாகி இருக்கின்றது. இன் னும் இரண்டே வாரத்தில் ப்ளைட் ஓ.கே. ஆகி இருக்கிறது. அப்பாவும் அம்மாவும் வழியனுப்ப வந்து அன்ரியுடன் நிற்கின்றார்கள்!"

"இன்று மட்டும் நீங்கள் இந்த பஸ்ஸுக்குள் இல்லை என்றால்"

"கமான்..! கமான்..! கூல்டவுன். என்னுடைய விசிட்டிங் கார்டை

வைத்துக் கொள். எப்போதாவது ஏதாவது வேண்டுமானால் கோல் எடு... அல்லது வந்து பார்... விஷ்யூ ஆல் லக் இன் அட்வான்ஸ்" என்று அழகாகச் சிரித்தாள்.

நாளைக்கு ஃப்ளைட்.

அம்மாவிடம் ஆயிரம் தடவைக்கு மேல் கூறிவிட்டான் அந்தத் தெய்வம் பற்றி. அவனைப் பொறுத்தவரை அந்தம்மா தெய்வம் தான்.

அந்த விசிட்டிங் கார்ட்டில் ஒரு போட்டோ கொப்பி எடுத்து அப்பாவிடம் கொடுத்துள்ளான். ஏதாவது அவசரம் என்றால் அவர்களைப் போய்ப் பார்க்கும்படி.

நாளைக்கு பிளைட் என்பதால் இன்று போய் அந்தம்மாவைப் பார்த்து வரும்படி அம்மா கூறினாள். அப்பாவும் கூறினார். அவனும் அதையே எண்ணியிருந்தான். காலையில் பேப்பரைக் கையில் எடுத்ததும் மரண அறிவித்தல்களைத் தான் அவன் முதலில் பார்ப்பது வழக்கம். நம்மவர்கள் எத்தனைப் பேர்... எங்கெங்கே... எப்படி... எப்படி... என்று!

திடகாத்திரமாக இருந்தவர்கள் கூட திடீர் திடீரென மரணித்திருப்பார்கள். சாவு நிச்சயம் தான். சொல்லிக் கொண்டு வருவதில்லை தான் மரணம் கள்வனைப் போல்தான் வரும்.

ஆனால் இப்போதெல்லாம் சொல்லிக் கொண்டு வருகிறது கள்வனைப்போல் அல்லாமல் காப்பானைப் போலவும் வருகிறது!

பேப்பரைக் கையில் எடுத்தவன் பேயடித்தவன் போலானான். பிரமித்துப் போய்விட்டான்.

"எப்படி? இது எப்படி?"

அவன் கண்ணுக்குள் நெஞ்சுக்குள்... இதயத்துக்குள் பதிந்து விட்ட அந்த முகம்.... இந்த பேப்பருக்குள்..! எப்படி? மரண அறிவித்தல்களுக்குள் எப்படி?

அகால மரணமென்றால் எப்படி?

அவனால் ஒன்றையுமே நிதானித்துக் கொள்ள முடியவில்லை.

முன்கூட்டியே எனது வாழ்த்துக்கள் என்று கூறிய அந்த நினைவு முகம்...

- ● -

தினக்குரல் 04.07.1999



# இறுமாப்பு

## 14

பூந்தோட்டத்தில் நிற்கின்றேன். பூஞ்செடிகளுக்கு நீரூற்றிக் கொண்டு. இதைப் பூந்தோட்டம் என்று குறிக்கலாமா? என்னும் நினைவு என் மனதில் அடிக்கடி எழுவதுண்டு.

றோட்டுக்கும் வீட்டுக்கும் இடையிலான இந்தச் சிறிய நிலப் பரப்பில், வீட்டுச் சுவரோரங்களைச் சுற்றி, கிளை பரப்பி நிற்கும் ஒரு மாமரம், வேப்பமரத்தினடிகளில் வகை வகையான பூஞ்செடிகள்... பூஞ்செடிகள்... பூஞ்செடிகள்..!

சின்னதான இந்த நிலத்துண்டில் பூஞ்செடிகள் வளர்க்கின்றோம் என்பதற்காக, இதைப் பூந்தோட்டம் என்று கூறலாமா என்னும் சந்தேகம் என்னுள் அடிக்கடி எழுகின்றது.

மாதத்துக்கு இவ்வளவு என்று வாடகையை வாங்கிக் கொண்டு வீட்டுச் சொந்தக்காரன் எங்கோ இருக்கின்றான்.

நானோ இது என் வீடு என்று சொந்தம் கொண்டுகின்றேன்.

இது சிங்களவர்களின் நாடு, பௌத்தர்களின் நாடு என்று முழங்குகின்றனர் அரசியல் பிழைப்போர்.

ஒரு சிங்களப் பௌத்தன் இல்லாத, நானும் இது எங்கள் நாடு என்னும் உணர்வுடனேயே உலா வருகின்றேன்.

என் பெயர் சுந்தரம், எனக்கும் இந்தப் பெயருக்கும் என்ன தொடர்பு இருக்கிறது. சௌந்தர்யத்துக்கும் எனக்கும் தொடர்பு இல்லை என்பது ஒரு புறமிருக்க, என் பெயருக்கும் எனக்குமே தொடர்பு என்ன இருக்கிறது! என் பெற்றோர் இட்ட பெயர் இது. நான் கருவில் இருக்கும் போதே, ஆணாகப் பிறந்தால் அழகன் என்று வைப்போம் என்று அவர்கள் தீர்மானித்துக்கொண்டது. மண்ணில் பிறந்த பின் அழகனைச் சுந்தரமாக்கிக் கொண்டதும் அவர்களே.

ஆனால், நானோ இதுதான் என் பெயர் என்று எத்தனை வித்தைகளைப் புரிகின்றேன்!

இப்படியெல்லாம் இருக்கையில் பூஞ்செடிகள் வளரும் இந்தச் சின்ன நிலத்தை ஏன் பூந்தோட்டம் என்று அழைக்கக்கூடாது என்னும் நினைவுகளும் என்னுள் மேலெழுதுவதுண்டு.

விரலழுத்தத்தால் ஹோஸ்பைப்பின் நுனியிலிருந்து விசிறியடிக்கும் நீர்த்திவலைகள் ஒவ்வொரு செடியையும் குதூகலிக்கச் செய்கின்றது.

குனிந்து நிமிர்ந்தும், வளைந்து நெளிந்தும், சிலிர்த்து சிலிர்த்துச் நெகிழ்ந்து மகிழ்கின்றன... நீராடிக் களிக்கின்றன..!

சிரித்துச் சிரித்து தங்கள் மத்தியிலான எனது இருப்பை, எனது உறவை வரவேற்கின்றன... ஸ்திரப்படுத்திக் கொள்ளுகின்றன..!

வேலை முடித்து வீடு திரும்பியதும் எழுத்து, வாசிப்பு என்பவை களுக்குமப்பால் என்னுடைய பெரும் பொழுது கழிவது இவைகளுடன் தான்.

மண்ணைக் கிளறி விடுதல், செடிகளுக்கு மண் அணைத்தல், உரமி டுதல், நீருற்றுதல், மேல்விழுந்து கிடக்கும் மாவிலை, வேப்பிலைகளை அகற்றி விடுதல் போன்ற உடல் வருத்தம் தராத சின்னச் சின்னச் செயற்பாடுகள். ஒன்றுமே செய்யாமலும் இவைகளுடன் நிற்றல், பேசு தல், சுற்றிவரல், சுகம் கேட்டல் என்று பொழுது போவதே தெரிவ தில்லை எனக்கு.

இந்த எழுபத்தைந்து வயதிலும், ஒரு இளைஞனின் மன உணர் வுடன், உற்சாகத்துடன் என்னை உலா வரச்செய்யும் இந்தப் பூஞ் செடிகளின் அன்பு, செவிகளை விரித்து விரித்து என் குரல் கேட்கும் அந்த ரசனை!

இவைகளுக்குக் காதுகள் உண்டா? காதுகள் இருந்தும் கேளாதோர் எத்தனை பேர். கேட்பதற்கு காது என்ற ஒன்று அவசியமா என்ன?

வெடித்துச் சிரிக்கும் வெள்ளை வெள்ளைப் பூக்களுடன் பந்தல் கொள்ளாமல் படர்ந்து கிடக்கும் மல்லிகை.

அழகழகான வண்ண வண்ண இலைகளுடன் பலவிதமான குறோட்டன் செடிகள், ஸீனியாஸ், பாபடன்டேசீஸ், டேலியா, சிவப்பு வெள்ளை ரோஜாக்கள், வாடாமல்லிகை!

எஸ்.பொ.வை நினைவு படுத்தும் ஆண்மை வெடிக்கும் அந்தூரியம். அரிசியை அள்ளிக் கொட்டியது போல் சின்னச் சின்னதாய் வெள்ளை வெள்ளையாய் இலை தெரியாமல் பூத்துக் குலுங்கும் பெயர் தெரியாத இந்தப் பூஞ்செடி!

பெயரில் என்ன இருக்கிறது. அழைப்பதற்காக மனிதர்கள் இட்டுக் கொள்வதுதானே பெயர்! பெயர் தெரியவில்லை என்பதற்காக அவை களின் அழகும், அந்தரங்க அன்பும், உறவும் ஊனமுற்றா போய்விடு கின்றது?

அப்படியே பார்த்தாலும் இங்குள்ள செடிகளில் முக்கால்வாசிச் செடிகள் பெயர் தெரியாதவைதான்.

அதோ சுற்றுச் சுவர் ஓரத்தில் பூந்தொட்டியில் அரளிச் செடிப் போல் கம்பு கம்பாய் வளர்ந்து சிறு சிறு கைகள் நீட்டி விரல் நுனிகளில் மாத்திரம் சுண்டினால் பால் வடியும் நாலைந்து நீண்டு தடித்த இலைகளும், இலைகளின் கக்கத்தில் மெல்லிய இளஞ்சிவப்பில் ஆறேழு பெரிய பெரிய பூக்களுமாய் மதிலுயரத்துக்கு மேல் வளர்ந்து றோட்டை எட்டிப்பார்த்துக் கொண்டு'

கண்ணைப் பறிப்பது போல் மலர்ந்து காற்றிலாடிக் கொண்டி ருக்கும் அந்த அழகான பூஞ்செடிக்கு என்ன பெயர்?

இலைகளுக்கும் பூக்களுக்கும் இடையே கொத்தாய் விழுந்தி ருக்கும் வேப்பிலைச் சருகுகளை விரலால் பவ்வியமாக அப்புறப்படுத் திவிட்டு செடியின் அடியிலிருந்து வளர்நுனி வரை நீரடித்துக் கழுவி விடுகின்றேன்.

இலைகளும் பூக்களும் நீரின் வேகத்துக்கேற்ப ஆடி மகிழ்கின்றன. கட்டை விரல் உயர்த்திக் களிப்பைக் காட்டுகின்றன.

வேப்பிலைச் சருகுகள் இப்போது என் சிரசில் உதிர்கின்றன. தலையை உதறியபடி அண்ணாந்து பார்க்கின்றேன்.

வேப்பமர உச்சியில் இரண்டு அணில்கள் வாலுயர்த்தி... வாலு யர்த்தி ஓடிப்பிடிக்கின்றன.தார் றோட்டில் கார் ஓடுவது போல், அவைகள் மரத்தில் ஓடும் அழகே அலாதி.

வேப்பமரத்திலோடி மாமரத்துக்குத் தாவி கிளை வழி இறங்கி சுற்றுச்சுவர் மேல் ஓடிப் பக்கத்து வீட்டுப் பப்பாளி மரத்தில் மஞ்சளிட் டுக் கொண்டிருக்கும் காய்களை முன் பற்களால் 'நய்நய்'யென்று குதறிவிட்டுக் குதித்தோடி மறைகின்றன.

சுறுசுறுப்பான அந்த அணிலோட்டதின் பின் ஒரு வினாடி எனது பார்வை ஓடியதால் நீரோட்டம் செடியிலிருந்து விலகி வெறுந்தரையில் ஓடுகிறது.

செடியின் ஏக்கம் தெரிகிறது. 'சொறி' என்று மன்னிப்புக் கேட்ட படி இலை இலையாகக் குளிப்பாட்டி எடுத்தேன்.

பரவாயில்லைப் பரவாயில்லை என்று தலையாட்டி தலையாட்டி மகிழ்கிறது செடி.

தோட்டத்தின் ஒரு ஓரத்தில் வீட்டுச் சுவரை அணைத்தபடி எங்கள் 'சனா'வின் கூட்டருகே, சுற்றி செங்கல் பதிக்கப்பட்ட குட்டை போன்ற தொரு வட்டமான இடம் இருக்கிறது.

வட்டமாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த இடத்தின் தாற்பரியம் ஒன்றும் எனக்குத் தெரியாது. இந்த வீட்டுக்கு நாங்கள் புதிதாகக் குடிவந்த போதே, இது இப்படியே தான் இருந்தது. உள்ளே புல்மண்டிக் கொண்டு.

இப்போது அந்த வட்டத்துக்குள்ளேயும் நிறையப் பூஞ்செடிகள் வைத்திருக்கின்றேன். சுமார் ஒரு எட்டடி குறுக்களவு கொண்ட இந்த வட்டத்தினுள் பூந்தோட்டத்தில் உள்ள அனைத்துப் பூஞ்செடிகளி னதும் ஒவ்வொரு செடி இருக்கின்றது.

நினைத்துச் செய்த காரியம் இல்லை இது என்றாலும், அது அப்ப டித்தான் நடைபெற்றிருக்கிறது.

ஒரு புத்தகத்தின் பொருளடக்கம் போல், அமைந்துள்ள அந்த வட்டத்துச் செடிகளுக்கு நான் நீரூற்றும்போது, கூட்டுக்குள் அமர்ந்த படி வாலாட்டி ரசித்துக் கொண்டிருக்கும் எங்கள் 'சனா'.

பெண் வளர்ச்சி போல், அவசர அவசரமாக வளர்ந்து கொத்துக் கொத்தாய் குருதி நிறத்தில் பூப்பூத்துக் குதூகலித்துக் கிடக்கும் அந்தச் செடிக்கும் பெயர் தெரியவில்லைதான்.

அதன் அழகு உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது உண்மைதான் என்றாலும், அதன் முரட்டு வளர்ச்சியும், பலாத்காரப் படர்வும் என்னை மிகவும் நோகச் செய்ததுண்டு.

சற்றே அவைகளுடன் பேசிச் சிரித்து உரையாடி வலம் வரும் போது தான், ஒரு பொழுது அதைக் கண்ணுற்றேன்.

முரட்டுத்தனமாகத் தனது கரங்களை நாலாப்பக்கமும் நீட்டி நீட்டி விரல்களை விரித்து விரித்து பரப்பிப் படர்ந்து சுற்றியுள்ள மற்றவை களை அமுக்கி, அழுத்தி, வெய்யில் படாவிட்டால் தடுத்து வெளுக்கச் செய்து அழித்து விடும் நோக்கில் வியூகம் அமைத்துக் கொண்டு'. எனக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.

சூழ உள்ள மற்றவைகளை அமுக்கிவிடாமல் சுற்றிப் படர்ந்துள்ள அனைத்துக் கரங்களையும் உயர்த்திப் பிடித்துக் கயிறு கொண்டு விலங்கிட்டு வைத்தேன். அடிக்கடி கவனித்து கொண்டேன்.

உரிய நேரத்தில் நான் எச்சரிக்கை அடைந்திராவிட்டால்!

- ● -

ஜாஎலை பஸ்ஸில் பேலியகொடைக்கருகே நிற்கின்றேன். வத்தளை தபாற்கந்தோரடியில் இறங்கி இன்னொரு பஸ் பிடிக்க வேண்டும்.

கால்சட்டைப் பைக்குள் கிடக்கும் கைத்தொலைபேசி கிச்சுக்கிச்சு மூட்டுகிறது.

அலுவலகங்கள் மூடுகின்ற ஐந்து மணிக்குப் பிந்திய மாலைகளில் பஸ்களுக்குள் ஒரே திருவிழாக் கூட்டம் தான். ஒருவர் மேல் ஒருவ ராகத்தான் நிற்பார்கள். பின்னிக் கிடக்கும் கால்களினிடையே இடம் தேடி இடம் தேடிக் காலூன்றுவார்கள்.

விரல் நுழைக்க முடியாமல் கைகளால் மறைந்து கிடக்கும் கைப் பிடிக் கம்பிகளில் கைநுழைத்து கைநுழைத்துப் பற்றிக் கொள்வார்கள்.

வேலைத் தளங்களில் இருந்து விடுதலை பெற்ற மத்தியதர மற்றும் அதற்கும் அடித்தரவர்க்க மக்களனைவரும் தத்தமது வீடு போய் சேர வேண்டுமே.

என்ன செய்வார்கள் பாவம்! எப்படியாவது போயும் ஆக வேண் டும்!

வர்க்க பேதம் மறந்து, பால் பேதம் மறந்து ஒருவருடன் ஒருவராக ஏறி மிதித்துக் கொண்டு!

எனக்கு முன்னால் நிற்கும் பெண்ணின் கூந்தலில் குமிழ்நுனிப் பேனை ஒன்று ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறது. குனிந்து சட்டைப் பையைப் பார்த்துக் கொள்கின்றேன். என்னுடையதல்ல.

இந்த அலங்கோலத்தில் கால்சட்டைப் பைக்குள் தொலைபேசி ஒருபுறம் உயிர் கொண்டசைகின்றது.

ஒரு கையில் கைப்பை. மக்கள் கூட்டத்துக்குள் மாட்டிக் கொண்டி ருக்கிறது. அசைக்கவோ, உயர்த்தவோ முடியாது! மறுகை கைப்பிடிக்குள். ஏழெட்டுக்கைகள் அசைந்தால்தான் என் கை அசையும் என்ன செய்யலாம்?

கை என்னுடையது காற்சட்டைப் பைக்குள் கிடக்கும் தொலை பேசி என்னுடையது! ஆனாலும் எடுத்துப் பேச முடியவில்லை.

சூழலால் பாதிப்படையும் மனித சுதந்திரம் என்னைக் கோபமுறச் செய்கிறது.

கொழும்பு போன்ற பெரு நகருக்கு, எங்கெங்கோ தொலைதூரங்களிலிருந்தெல்லாம் தொழில் நிமித்தம் வந்து போகும் ஆயிரக்கணக்கான மனித ஜீவன்களின் பிரயாண வசதிகளை அரசு கவனிக்கும் லட்சணம் இது.

சுகமாகப் பயணியுங்கள் என்று பஸ்களில் சிங்களத்தில் எழுதி வைத்துக் கொண்டால் மட்டும் போதுமா? இதையெல்லாம் கவனிக்க யாரிருக்கிறார்கள்? யாருக்கு நேரமிருக்கிறது?

பேயோட்டும் வீடு மாதிரித் தான்.

உடுக்கும் கையுமாகப் பூசாரி ஆட, தலைவிரி கோலமாகப் பேய் பிடித்த பெண் ஆட, உடுக்கோசைக்கும், நெருப்புக்கும், புகைக்கும் மத்தியில் கூடி இருக்கும் அனைவரும் ஆட..!

இதொன்றும் விளங்காமல் அழுகின்ற குழந்தை அனாதையாகி விடுகின்ற நிலமைதான் எங்களுக்கும்.

வத்தளையில் பஸ் நிற்கிறது.

இறங்கினால் ஒரே இருள். மின்சாரம் இல்லாமல் போயிருப்பதை உணர்கின்றேன். பாதை மாற வேண்டும். இன்னொரு பஸ் ஏற வேண்டும். கால்சட்டைப் பைக்குள் கை நுழைத்து தொலைபேசியை எடுத்துப் பார்க்கின்றேன். விரலழுத்த வெளிச்சம் காட்டும் தொலைபேசி 'மூன்று மிஸ்கால்' என்கிறது.

வந்து நின்றுபோன அழைப்பு யாருடையது என்று அறிந்து கொள்ளும் சூட்சுமம் எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

இந்தச் சிறிய தொலைபேசிக்குள் ஏதேதோவெல்லாம் இருக்கின்றன என்பது மட்டுமே எனக்குத் தெரியும். ஒரு தொலைபேசியை வைத்துக் கொண்டு இந்த வையத்தின் வித்தைகளனைத்தையும் செய்து காட்டும் விண்ணர்களும் இருக்கின்றார்கள் தான்.

ஆனால், எனக்குத் தெரிந்ததெல்லாம் வந்த அழைப்புடன் பேசுவது, அழைப்பை ஏற்படுத்திக் கொள்வது போன்ற ஒரு சில செயற்பாடுகள் மட்டுமே.

நான் மட்டுமல்ல தொலைபேசியும் கையுமாகத் திரியும் பெரும்பாலானோரும் அப்படியேதான்.

தொலைபேசி மீண்டும் உயிர்க்கிறது. வீட்டிலிருந்துதான்.

"எங்கே இருக்கின்றீர்கள்? இது நான்காவது கால், ஏன் பேசவில்லை? இருளுக்குள் இருக்கின்றேன். திடீரென்று லைட் போய் விட்டது.

எப்போது வருமோ தெரியவில்லை. இவனுகளுக்கு இதே வேலையாகப் போய்விட்டது."

மறுமுனையில் மனைவியின் அதிகாரப் புலம்பல்.

"நீங்கள் மட்டுமல்ல..! நானும் இருட்டுக்குள் தான்..! நீங்களும் நானும் மட்டுமல்ல.. எல்லாருமே இருட்டுக்குள் தான்..! யாருக்குத் தெரிகிறது என்ன நடக்கிறதென்று? ஏன் போன் போட்டீங்க..?

"மெழுகுதிரியும், மொஸ்கிட்டோ கொயிலும் வேண்டும். பக்கத் துக் கடையை லைட் போனதுமே மூடிட்டானுக..! பயந்தான்..! பேன் இல்லாட்டி படுக்கவும் ஏலாது... கொசு புடுங்கித் தின்னுறும்..."

எங்களுக்கென்றே எப்படி எல்லாம் செலவுகள் வருகின்றன.

இருளை விரட்டுவதற்கும் காசு! கொசுவை விரட்டுவதற்கும் காசு! மீண்டும் காற்சட்டைப் பைக்குள் கை நுழைக்கின்றேன், என்னுடைய பொருளாதாரப் பலம் பார்க்க. அதை வைத்துதான் எத்தனை மெழுகு திரி, எத்தனை நுளம்புச்சுருள் என்பதை நிர்ணயிக்க முடியும்!'.

என்னை இருளுக்குள் இறக்கி விட்டு விட்டு பாதைக்கு மட்டும் லைட் அடித்துக் கொண்டு பஸ் போய் விட்டது.

முன் வீட்டில், பக்கத்து விட்டில் கிளை பரப்பி நிற்கும் மரங்கள் இருளை மேலும் கடினமாக்குகின்றன. எங்கள் வீட்டு மாமரமும் வேப் பமரமும் கூடத்தான்.

ஒரு நிதானத்துடன் இருட்டுக்குள் நடந்து கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்தேன். பூந்தோட்டம் இருளுக்குள் சங்கமமா கிவிட்டிருக்கின்றது. எனது பிரசன்னத்தின் வாசம் அவைகளிடையே சிறு சலசலப்பை ஏற்படுத்துகின்றது.

ஒளியின் மகத்துவமும், மகிமையும் இருளுக்குள் தான் புரிகின்றது.

திடீரென்று ஒரு ஒளிக்கீற்று பாதையில் வீசி உள்ளேயும் சிதறுகின்றது.

பூஞ்செடிகள் சிலிர்த்து நிற்கின்றன. கேட்டுக்கு அருகில் நடந்து எட்டிப் பார்த்தேன்.

மின்சாரப் பகுதி வாகனம் ஒன்று ஏணியும் தானுமாக விசிறிய டிக்கும் ஒளியுடன் மின்சாரத் தூணிற்கு அருகில் நிற்கின்றது.

லைட் வந்துவிடும் என்ற நம்பிக்கையுடன் வீட்டுக்குள் நுழைந்து, வாசலில் காத்து நின்ற மனைவியிடம் அந்த நம்பிக்கையை ஒரு மகிழ் வுடன் பகிர்ந்து கொண்டேன்.

“எத்தனை மணிக்கு லைட் போச்சி... எத்தனை வாட்டி நானே போன் போட்டேன். எடுக்குறானுகளே இல்லை. இப்பத்தான் வந்தி ருக்காணுக!”

மனைவியின் குரலில் ஒரு எரிச்சலுடனான அவதானம் வெளிவ ருகின்றது.

“இந்தப் பகுதிக்கே மின்சாரம் இல்லாமல் போயிருக்கிறது! உங்க ளைப் போல் எத்தனை வீட்டிலிருந்து எத்தனை டெலிபோன் போயி ருக்கும்... எதெதுக்குத்தான் பதில் சொல்வார்கள்... அதான் வந்திருக் கிறார்களே சரி பார்க்க... இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடும்.”

“பார்த்துக்கிட்டே இருங்க பளீருன்னு ஒளி வெள்ளம் பாயப் போகுது. சமாதானம் வந்த மாதிரித்தான் இதுவும். இந்த ஜென்மத்துல வராது” என்றவாறு மெழுகுதிரியை ஏற்றி வைக்கின்றாள்.

வாலிப இருளின் வலிய இருளுக்குள் போராட முனைகின்றது மெழுகுதிரி.

இரவு பத்தாகி விட்டது. லைட்டையும் காணவில்லை. சரிகட்ட வந்த வாகனத்தையும் காணவில்லை.

மனைவியின் வாக்குப் பலிதமாகிக் கொண்டிருக்கிறது.

தூண் தூணாக ஏறிப் பார்க்கின்றார்களோ என்னவோ. தோட் டத்து லயங்களைப் போலத்தான் இந்த மின்சாரம் ஓடும் கம்பிகளும். நூற்றாண்டு பழமை மிக்கவை. எங்காவது ஓரிடத்தில் இற்று அறுந் திருக்கும்! அசைந்து விலகியிருக்கும். அதைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

காற்றடித்தால், வளர்ந்து கிடக்கும் மரங்களின் கிளை நுனிகள் லைட்கம்பிகளில் உரசினால் கூட சில வேளைகளில் லைட் இல்லாமல் போய்விடும். அத்தனை பழையவை இந்தக் கம்பிகள்.

மெழுகுத்திரியின் மெல்லிய ஒளியில் இரவின் கடமைகள் நிறை வேறுகின்றன. மின்விசிறியை மட்டும் இயக்கத்தில் விட்டு மற்ற ஸ்விட்சு களை அழுத்திவிட்டு மொஸ்கிட்டோ கோயிலைப் பற்றவைத்து விட்டுப் படுக்கத் தயாராகின்றோம்.

இன்னும் லைட்டைக் காணவில்லை. எப்படியோ மனைவியின் வாக்குப்படிதான் நடக்கிறது. ஊர் உலகம் என்று சுற்றி வரும் என்னை விடவும், வீடே உலகமென்று கிடக்கும் மனைவியின் அனுபவசாலித் தனம் என்னை ஆச்சர்யம் கொள்ளச் செய்கின்றது.

"நாளைக்கும் வராது! அயர்ன் பண்ண முடியாது. இருக்குறத மாட்டிக்கிட்டுக் கெளம்பிறுங்க"

நாளைய காலைப் பிரச்சினை பற்றியதான மனைவியின் தீர்க்க தரிசனம்! பாதிக் கண்மூடிய தூக்கத்துடன் வெளி வருகின்றது.

- ● -

பூந்தோட்டத்தில் நிற்கின்றேன். விடிந்து கொண்டிருக்கின்றது.

பறவைகள் ஒலி எழுப்ப, மாந்தளிர்களைக் குளிர்த்தென்றல் ஊஞ் சலாட்ட, அணிற்கூட்டம் அங்குமிங்கும் ஓடித்திரிய வண்ண வண்ண நிறம் காட்டி மலர்கள் சிரசசைக்க இருள் மெல்ல மெல்ல கலைகிறது.

வழமையாக இதுபோன்ற அதிகாலையில் கூட, கார், பஸ், பாட சாலை வேன் என்று அல்லோல கல்லோலப்படும் பாதை இன்று ஊரடங்குச் சட்டம் இடப்பட்டுள்ளதுபோல், வெறிச்சோடிக் கிடக் கிறது. இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள தன் எதிரொலி.

மாவிலை வேப்பிலைச் சருகுகள் தரையிலும் செடிகள் மீதும் தாறு மாறாகச் சிதறிக் கிடக்கின்றன. கைகளுக்கெட்டாத உயரத்தின் செடிக ளில் இலைக் கக்கங்களில் கொத்துக் கொத்தாய் தொற்றிக் கிடக்கும் சருகுகளை குழாய் நீரைப் பீய்ச்சியடித்து வெளியேற்றுகின்றேன்.

நுகம் இறங்கிய சுகம் தென்றலிட தலையாட்டிக் களிக்கின்றது செடி.

எண்பத்து மூன்றின் இனக்கலவரம் போல் பாதையில் திடீரென பலமான பலகுரல்கள்... கூக்குரல்களாக..!

எட்டிப்பார்க்கின்றேன்...

இடிதடியர்கள் போல் ஒரு ஏழெட்டுப் பேர் கைகளில் கத்திகளுடன் மேலும் கீழுமாக நடக்கின்றனர். வளர்ந்தும் படர்ந்து சடைத்தும் கிடக்கும் பாதையோர மரங்களை முறைத்து முறைத்துப் பார்க்கின்றனர்.

ஏணிகள், தன்னியக்க உயர்த்திகள் சகிதம் இரண்டு மூன்று மின் சாரசபை வாகனங்கள்.

பாதையோர வீடுகளின் பாதுகாப்புக்காக உயர்த்திக் கட்டப்பட்டி ருக்கும் மதில்களின் மேல் தாவி ஏறுகின்றனர். கீழிருக்கும் மற்றவர்கள் ஏணிகளை மரங்களில் சாய்க்கின்றனர். மதிலிலிருந்து ஏணிக்குத்தாவி ஏணியிலிருந்து மரத்துக் தாவி ஏறிய ஒருவன் றோட்டுப் பக்கமாக வளர்ந்து வளைந்திருக்கும் கிளையை படார் படாரென வெட்டுகின் றான்.

வீட்டுக்காரர்களுக்கு எதுவிதமான அறிவுறுத்தலோ அறிவிப்போ

இல்லை. அவர்களுடைய மரங்கள் போல் ஏறுகின்றார்கள் வெட்டுகின் றார்கள். அரசாங்கக் கோழி முட்டை ஊர் மக்களின் அம்மிக்கல் லையும் உடைக்கும் என்பது சரியாகத்தான் இருக்கின்றது.

கிளையின் மேல் விழுந்த வெட்டும், கிளை நுனியின் பாரமும் கிளையை உலுப்ப ஒரு ஓங்காரக் கூச்சலுடன் கிளை பிளந்து மரத்தில் பட்டையை உரித்துக் கொண்டு, தலை கீழாகத் தொங்குகிறது. கீழ் நோக்கி விழுந்த மற்றொரு வெட்டுடன் பெரிதாக ஓலமிட்டபடி தரை நோக்கி விரைகின்றது.

கிளை எழுப்பிய ஓசையாலும், "ஓவ்... ஓவ்" என்று அவர்கள் போட்ட கூச்சலாலும், பாதையில் ஓடிய கார் மருண்டு தடுமாறி மறு பக்கமாக ஓடி விரைகின்றது.

றோட்டோரத்து வீட்டு மரங்களின் கிளைகள், தென்னோலைகள், ஓரிரு திப்பிலி ஓலைகள் என்று பாதையிலும் பாதை ஓர இரு மருங்கு கான்களிலும் சரமாரியாக, தாறுமாறாக விழுகின்றன.

சடசடவென்று சப்தமெழ அமுக்கிக் கொண்டும் நசுக்கிக் கொண் டும் பஸ் ஓடுகின்றன.

கிளைகள் முறிந்து விழும் ஒலியும் வெட்டித் தள்ளுகின்றவர்கள் எழுப்பும் கூச்சலும் தொடர்ந்தும் கேட்கின்றன... போர்க்களம் போல்.

மரம் வளர்ப்பதில் நாமும் எந்தவிதமான ஒழுங்கையும் கடைப் பிடிப்பதில்லை.

நம்முடைய குழந்தை வளர்ப்புப் போலத்தான். கண்டபடி அதன தன் போக்கில் வளர விட்டு விடுகின்றோம். ஒழுங்கு படுத்துதல் கிடை யாது. பிறகு இப்படித்தான்.

வீட்டுக்கு அடங்காதது றோட்டுக்கு அடங்கும் என்பது போல.

முன் வீட்டுக்காரர் மதில் ஓரத்தில் வரிசையாக ஒரு ஆறேழு மரங்கள் வளர்த்துள்ளார். பிரமிட் மாதிரி அடியிலிருந்து நுனிவரை அழ காக வாயூறச் செய்யும் வகையில் வானுயர வளர்ந்து நிற்கும் அவை களின் பாதி உயரத்தை ஒரு பச்சாதாபமின்றிக் கொத்தித் தள்ளுகின் றனர்.

ஏணியும் தானுமாக ஒரு நாலைந்து பேர் எங்கள் வீட்டு மரங்களை நோட்டமிடுகின்றனர். எங்கள் வீட்டுக்கு வெளியே மதிலை ஒட்டியபடி ஒரு பெரிய ஜேம் மரம் வளர்ந்து நிற்கின்றது. பிசுபிசுப்பான இலை களும் பச்சை முந்திரி போல் கொத்துக் கொத்தாய் தொங்கும் கனிகளு மாய்! வீட்டு மரமல்ல. றோட்டு மரம்தான்.

சுவையான கனிகளைத் தருவதால் 'ஜேம் மரம்' என்னும் பெயர்

நிலைத்திருக்கிறது. அதற்கென்று ஒரு பெயர் இருக்குமே! அது தெரிய வில்லை.

மரத்தடியில் நிற்கும் முச்சக்கர வண்டிகளின் சாரதிகள் தொத்தித் தொத்திக் கனி பறித்துச் சுவைப்பார்கள்.

ஒரு காட்டு மரம் போல் கண்டபடி வளர்ந்திருக்கும் இந்த ஜேம் மரத்தை ஒரு குழு நோட்டம் விடுகின்றது.

தன்னியக்க உயர்த்தியுடன் ஊர்ந்து வரும் வாகனம் எங்கள் வீட்டின் முன் நிற்கின்றது.

வீட்டுக்காரன் நான் கேட்டுக்கருகில் நிற்பது அவர்களுக்கு ஒரு பொருட்டாகவே படவில்லை. மடமடவென்று மதில் மேல் ஏறுகின் றனர். கைக்கெட்டிய வாதுகளை இழுத்து வெட்டுகின்றனர். ஜேம்மரத் தில் ஏறியவன் அரை வாசி மரத்தை வெட்டி வீழ்த்துகின்றான்.

ஆளுயரத்தில் ஏறி நின்று உயரப்போனவன் வேப்பமரத்தின் உச்சிக் கிளைகளை வெட்டுகின்றான்.

மாமரக்கிளை 'ஓஸ்' என்ற ஒலியுடன் எனது பூஞ்செடி மீது விழு கிறது.

சுண்டினால் பால்வடியும் அந்த இலைகளும், இளஞ்சிவப்புப் பூக் களும் செய்வதறியாது திகைத்துப் போய்ச் சுருண்டு கிடக்கின்றன.

வெள்ளை வெள்ளையாய் வழிந்தோடும் குருதியுடன் ஒடிந்து கிடக்கும் அந்த அபாக்கிய ஜீவனை அமுக்கிக் கொண்டு கிடக்கிறது மரக் கிளை.

வானத்திலிருந்து குண்டு மாரி பொழிவது போல், ஜேம்மரக் கிளைகள் பெரும் ஓங்கார ஓசையுடன் தோட்டத்து அப்பாவிச் செடிகளின் மீது விழுந்து விழுந்து துவம்சம் செய்கின்றன.

உச்சியிலிருந்து ஒடிந்து விழுந்த வேகத்தில் வேப்ப மரக்கிளையால் தூக்கி வீசப்பட்ட அந்தூரியம் பூவும் தானுமாய் மாமரத்தின் அடிக்கி ளையில் தொங்கி ஆடிக் கொண்டிருக்கிறது.

அரைவாசி மரத்துடன் வெட்டப்பட்ட ஜேம்மரம் மல்லிகைக் கொடிமேல் விழுந்து கிடக்கிறது. மல்லிகைப் பந்தலையே காண வில்லை.

எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நெஞ்சை அடைக் கிறது. திக்பிரமை பிடித்தது போல் விக்கித்து நிற்கின்றேன். தலைசுற்று கிறது.

ஒரு சொற்ப வேளையில் எல்லாமே நடந்து முடிந்து விட்டது. அப்பாவிகள் மேல் நடத்தப்படும் அராஜகம் போல்!

வாகனங்கள் கிளம்புகின்றன.

"கொஞ்சம் பொறுங்கள் கொஞ்சம் பொறுங்கள்" என்று சிங்களத்தில் கூறியபடி, தென்னை மர உச்சியில் ஒருவன் இளநீர் சுவைத்துக் கொண்டிருக்கின்றான்.

ஊரார் வீட்டு இளநீர் தானே!

- ● -

மல்லிகை மலர் - 2008



# சாம்பல்

## 15

"பச்சைக் கொச்சிக்காய் என்ன விலை?" சிங்களத்தில்தான் கேட்டேன்.

"அமு மிரிஸ் கீயத?" என்று.

எந்தக் கடைக்காரனிடம் "பச்சை மிளகாய் என்ன விலை?" என்று தமிழில் கேட்க முடியும்.

அதுவும் இன்றைய சூழ்நிலையில்.

தமிழில் கேட்டேன் என்பதற்குத் தண்டனையாக விலையைக் கூட்டிச் சொல்வான். அல்லது தமிழில் கேட்பவர்களுக்கெல்லாம் காய்கறி விற்பதில்லை என்றும் கூறிவிடலாம்.

என் மொழி, எனது உரிமை என்று ஞாயம் கேட்டு இதற்கெல்லாம் கோர்ட்டுக்கா போகமுடியும்.

"நூறு கிராம் 32 ரூபாய்."

சிங்களத்தில் பதில் வந்தது.

50 கிராம் வாங்கிக் கொண்டேன்.

"பீட் என்ன விலை?" ஒரு அறிதலுக்காகத்தான் கேட்டேன். வாங்கு வதற்கல்ல.

"40 ரூபாய்."

"ஐநூறா" என்று கேட்ட என்னை ஒரு எரிச்சலுடன் முறைத்தான். இப்போதெல்லாம் 500க்கு அவர்கள் விலை சொல்வதுமில்லை. நாம் வாங்குவதுமில்லை. 250 கிராம் தான்!

நீலமாய் நஞ்சேறுவது போல் வாழ்க்கைச் செலவு ஏறிக் கொண்டி ருக்கும்போது கூடுமானவரை செலவுகளைக் குறைக்கத்தானே வேண்டும்.

வாழ்க்கைச் செலவு பெருஞ்சுமையாக மக்களை இப்படி அழுத்து வது பற்றி ஆட்சிப் பொறுப்பாளர்களிடம் கேட்டுப் பாருங்கள்'.

"சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்!" என்று மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவார்கள். மைக்கின் முன் நின்றுக் கொண்டு.

"பெல்ட்டை இறுக்கிக் கொள்ளுங்கள்" என்று முன்னொரு காலத்தில் என்.எம். கூறினார்.

இப்போதெல்லாம் யாரும் அப்படிச் சொல்லுவதில்லை. "சொல்லாதீர்கள். செயலில் காட்டுங்கள்" என்னும் உயர் சிந்தனையின் விளைவுகள்.

"வெள்ளவத்தை வெலை சொல்லுறானுகளே பாவிகள்" என்று முனகியபடி சுற்றிய பச்சைமிளகாய் பார்சலுடன் பாதையில் இறங்கினேன்.

"என்ன வத்தளையில் நின்றுகொண்டு வெள்ளவத்தை என்கின்றீர்கள்?" என்றபடி ஒரு நண்பர் குறுக்கிட்டார்.

பலமாக முனகி விட்டேன் போலிருக்கிறது

காய்கறி விலைகள் பற்றி ஆதங்கத்துடன் கூறினேன்.

"அதுவா..!" என்று இழுத்தவர், "வெள்ளவத்தைக்கு ஏன் அப்படி ஒரு விலை. அப்படி ஒரு மவுசு! " என்று என்னை நோக்கினார். பிறகு தொடர்ந்தார்.

"வெள்ளவத்தைக்கு இன்னொரு பெயர் இருக்கிறது தெரியும் தானே! குட்டி யாழ்ப்பாணம் என்று. அதுதான் அந்த விலை. யாழ்ப்பாணத்து ஆக்கள் என்றால் வெளிநாட்டுக் காசு விளையாடும் என்கின்ற ஒரு பொது நினைப்பு!"

"வத்தளை மட்டும் சும்மாவா? அதற்கும் ஒரு தனி மவுசு இருக்கிறது. குட்டி வெள்ளவத்தை என்று! அதுதான் நீங்கள் ஆச்சர்யப்பட்ட வெள்ளவத்தை விலை" என்றார்.

தமிழர்களுக்கு வீடு கொடுக்கக்கூடாது என்று போஸ்டர்கள் ஒட்டிக் கட்டுப்படுத்தும் அளவுக்கு வத்தளை நிரம்பி வழிகிறது நம்மவர்களால்.

எங்காவது ஒரு குண்டு வெடிப்பென்றால் சுற்றி வளைக்கப்படும் முக்கிய இடமாக வத்தளையும் மாறியுள்ளமை இதற்கோர் உதாரணம்.

இந்த மனமே இப்படித்தான். ஒன்றைத் தொட்டு ஒன்றைத் தொட்டு ஓடிக் கொண்டே இருக்கும்.

கடிவாளமிட்டு இழுத்து வந்தால்தான் கதையிடம் வரும். கதையும் வரும்.

கேட்டைத் திறந்தேன்.

உள்ளே இருப்பவர்களை "ஓடிவா... ஓடிவா..." என்று குரல் கொடுத்துக் கூப்பிடுகிறது. கேட்டமகள் ஓடிவந்தாள். பச்சை மிளகாய் பார்சலை டக்கென்று இழுத்தெடுத்துக் கொண்டு உள்ளே ஓடினாள்.

அது ஒரு குடும்ப ரகசியம்!

தாச்சியை அடுப்பில் வைத்து எண்ணைய் கொதிக்கையில்தான் கறிவேப்பிலை தேடுவார்கள். வெங்காயம் தேடுவார்கள். அடுப்பைக் குறைத்து விட்டு வெங்காயம் உரிப்பார்கள். நறுக்குவார்கள். கறிவேப் பிலை உறுவுவார்கள்!. அப்படி ஒரு தாளிப்பு.

அடுப்பு என்ன கேஸ் அடுப்புதானே! விறகா, சாம்பலா, புகையா, முன்சிகையில் சாம்பல் பொட்டுப் பொட்டாய்ப் பூச்சிட 'பூஸ் பூஸ்' சென்று அடுப்பூதலா? கண் கசக்கலா ? கண் எரிவா?

டிக்கென்று இந்தப் பக்கம் திருப்பினால் எரியும். அந்தப் பக்கம் திருப்பினால் அணையும். இரண்டுக்கும் இடையில் திருப்பி வைத்தால் குறைந்தெரியும் ... பிறகென்ன..?

காலையில் தொடங்கி, ஒன்பதரைக்கொன்று, பத்துக்கொன்று, பத்தரைக்கொன்று, பதினொன்றுக்கொன்று என்று மெகா சீரியல் களும், தொல்லைக்காட்சிகளும் குடும்பச் செயற்பாடுகளை எப்படி சீர்குலைக்கின்றன.

இந்த லட்சணத்தில் குடும்பம் என்ற அமைப்பே கூடாது, அதை இல்லாமல் செய்துவிட வேண்டும் என்னும் பிரசாரக் குரல்கள் வேறு.

முன்பெல்லாம் விருப்பத்துடன் சென்று ஒரு படம் பார்ப்போம். சில வேளைகளில் குடும்பத்துடன் சென்று பார்த்து மகிழ்வோம்.

இப்போது!

யார் விரும்பினால் என்ன, விரும்பாவிட்டால் என்ன? வீட்டின் நடுவே படம் ஓடுகிறது.

கண்றாவிக் கண்றாவிக் காட்சிகளுடன். இரவு பன்னிரண்டு, ஒன்றுக்கு மேல் ஏதோ ஒரு சனலில் பேஷன் காட்டுகின்றார்கள். அரை நிர்வாண... முழு நிர்வாணங்களுடன்..!

இல்லம் எங்கும் அசுத்தக்காற்று ஒரு இங்கிதமின்றி ஊடாடி நிற்கின்றது.

உலகின் எல்லா மூலைகளிலிருந்தும், அது ஓடி வருகின்றது எனது இல்லம் நாடி.

யாதும் ஊரே! என்பது ஏன் இப்படி அர்த்தம் கெட்டுப்போய் இருக்கிறது.

மனம் மீண்டும் அலையத் தொடங்கிவிட்டது.

அலையாமல் என்ன செய்யும்?

வீடே உலகமாயிருந்த நிலைமைகள் மாறி உலகமே வீடாகிப் போகின்ற ஒவ்வாமைகள் மேலெழுகின்றபோது மனம் அலையத்தான் செய்யும்.

பச்சைமிளகாய்ப் பார்சலை மகள் பிடுங்கிக் கொண்டு போய் விட்டதும், மாமரத்தடியில் நின்றேன்.

ஆளுயரத்துக்கு மேலிருந்து பாதி மரம் பச்சையாய் நிற்கிறது. வர்ணம் தீட்டியது போல் பொசுபொசுவென்று பாசி படர்ந்து கிடக்கிறது. மேற்கிளைகளில் புல்லுருவி வளர்ந்து தண்ணீர்க் கொடி போல் தலையாட்டிக் கொண்டிருக்கிறது.

மாமரத்தைப் பார்க்கையில் பாவமாக இருக்கிறது.

யாரையாவது பிடித்து பாசி துடைத்து புல்லுருவிகளை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும்.

மரநிழல் படாத ஒரு சின்ன வாலோடியான இடத்தில் மூன்று பாத்தி மிளகாய்ச்செடி வைத்திருக்கின்றேன்.

மரத்தடியில் தானாய் முளைத்து ஒன்றன்மேல் ஒன்றாகப் பின்னிக் கிடந்த கன்றுகள்தான்.

திரி திரிபோல் இருந்தவைகளை வேரறுக்காமல் பிடுங்கி எடுத்து நட்டு வைத்தேன்.

கொழும்பில் காயும் நேரடி வெய்யிலிலிருந்து காப்பாற்ற நிழலூன்றி நீர் தெளித்து காபந்து செய்தேன்.

லேசாக வாடித் தொங்கி பிறகு மெதுவாகத் தலை நிமிர்த்தி இரண்டிலை, மூன்றிலை, நாலிலை என்று வளர்ந்து கரும்பச்சையும் கத்தரிப்பூ நிறமும் கலந்த ஒரு வண்ணத்தில் தள தளத்து நிற்கும் இலைக்

கவடுகளில் இருந்து சின்னச் சின்னதாக கிளை வெடித்துக் கொண்டு'.

மெலிதாக மேலுதட்டில் மீசை அரும்ப மினுமினுக்கும் உதடு களுடன் துறுதுறுக்கும் ஒரு வாலிபனின் எழிலுடன்..!

முன்பொரு தடவை இப்படித்தான். இதே மரத்தடியில் தானாய் முளைத்த கன்று ஒன்று தளதளவென்று நின்றது... இரண்டிலைகளுடன்.

புதிதாக முளைத்த கன்று என்றதும் வீட்டின் அனைவரும் கூடி நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

நாலாவது இலை விரிந்தபோது கத்தரிக்கன்றென்றார்கள்... ஒரே குரலில் அத்தனை பேரும்.

கத்தரிக் கன்றென்றால் எப்படி வானத்திலிருந்தா வந்து நிற்கும். பறவைகளின் எச்சம் மூலமாகத்தான் இருக்க வேண்டும்.

சுண்டைச் செடியாக இருக்கலாம் என்பதே எனது கணிப்பு! இலையை வைத்து எழுந்ததுதான் இந்தக் குரல்கள். சிலவேளை முட் கத்தரியாகவும் இருக்கலாம். காறைக்கத்திரி என்போமே சிங்களத்தில் "தளனபட்டு" என்பார்களே..! அதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறை வானதுதான்.

"கத்தரிக்கன்று இல்லை" என்றேன் நான்

என் குரல் எடுபடவில்லை.

கத்தரிக்கன்றுதான் என்று எழும்பிய எல்லாக்குரல்களின் பொய்க் கோஷத்தில் "இல்லை" என்ற எனது உண்மைக்குரல் இல்லாமல் கரைந்து போயிற்று.

பெரும்பான்மை கூறுவதே சரி! என்றாகி விடுவதுதானே ஜனநா யகம்.

நானும் விவாதம் செய்யவில்லை. எனக்கு அது பிடிப்பதுமில்லை.

வாதிட்டு என் குரலை நியாயப்படுத்திக் கொள்வதென்பது எனக் குப் பிடிக்காத ஒன்று.

நிஜமற்ற ஒன்றை நிஜம் என்று நிலைநாட்ட ஏகோபித்த சத்தங்கள் - குரல்கள் மூலம் எத்தனிப்பவர்களுக்கு காலம் பதில் சொல்லும்.

மேலெல்லாம் முள் முள்ளாக நீட்டிக் கொண்டு, காட்டுத்தனமாக வளர்ந்து மாமரத்தின் பாதிவரை வந்துவிட்ட கண்டைச் செடியை வெட்டி, வீசுவதற்கு இடமில்லாமல் நான் பட்டபாடு!

தோட்டத்தில் நான் வாழ்ந்த அந்த நாட்களில் நான் போடாத காய்கறித் தோட்டமா, நான் பார்க்காத கத்தரிச் செடியா?

சம்பளத்துக்கான வேலை முடிந்த பிறகு முழு நேரமும் காய்கறித் தோட்டத்துக்குள்தான்.

பூவாளியும் நானுமாக, கை முள்ளும் கரண்டியுமாக, கையும் மண் ணுமாக..!

"ஐயாவுவை லயத்துல தேடுனேன். தோட்டத்துலேன்னாங்க..! தந்தி ஒன்னைக் குடுத்திட்டுப் போனான் பங்களாப் பொடியன்" என்றபடி வருபவர்களைக் கூட கை மண்ணை உதறிவிட்டு விரல் நுனியால் பிடித் துப் பிரித்து படித்துக் கூறி அனுப்புவேன்.

கத்தரி, வெண்டி, போஞ்சி, நோக்கல், பீட் ரூட், கேரட் என்று பாத்தி கொள்ளாமல் விளைந்து!' பாத்தி ஓரங்களில் வெள்ளை நரம்புகள் ஓட இளமஞ்சள் நிறத்தில் சலாத்துச் செடிகள்!.

அந்த நினைவுகள் எத்தனை அற்புதமானவை!

இவர்கள் இப்போது எனக்கு கத்தரிச் செடி சொல்லித் தருகின் றார்கள். மாஞ்சருகுகள் காலடியில் கவியிசைக்க மெலிதாகக் காலூன்றி நடந்து மிளகாய்ச் செடிகளிடம் வந்து நின்றேன்.

கட்டிளம் காளையர் போல் தளதளத்து நின்ற செடிகளில் நான் கைந்து சோகம் கப்பிய முகங்களுடன் சோர்வுற்று தலை கவிழ்ந்து...

நேற்று ஊற்றிய தண்ணீரில் தரை ஈரளித்துக் கிடக்கின்றது.

செடியருகே அமர்ந்து உற்று நோக்குகின்றேன்.

மண்ணுக்கு மேலாக சுண்டுவிரல் பருமனில் நிற்கின்ற தண்டுகளில் பட்டை உரிக்கப்பட்டிருக்கின்றது. தேமல் விழுந்த தோல் போல், பழுப்பும் வெள்ளையுமாக தண்டின் இரண்டொரு இடங்கள் காயப் பட்டுப்போய்.

"இந்த காயங்கள் எப்படி..?"

தலை தொங்கும் இலைகளை லேசாக நிமிர்த்துகின்றேன். பிடி விட்டதும் மீண்டும் சரிந்து கொள்ளுகின்றன.

உள்ளங்காலடியில் ஏதோ முணுமுணுக்கிறது. முன் சரிந்து அடிபாதத்தை உயர்த்தி விரலால் தடவிப் பார்த்தேன்.

சிலு சிலுவென்று எச்சில் ஒழுகும் நீண்ட உடலுடன் நெளிகின்றது,

நாக்கட்டான் பூச்சி, மெதுமெதுவாக மண்ணில் இருந்து முண்டி முண்டி மேலெழும் அதன் முயற்சியின் முணுமுணுப்பேயது. சற்றே நகர்ந்தமர்ந்து கொண்டேன்.

லேசாகக் கொஞ்சம் ஈரமண்ணை தெள்ளி எடுத்து காயம் பட்டிருக்கும் இடங்களில் பூசினேன். மனம் முழுக்க ஒரு வேதனையின் கனம்.

எஸ்.எஸ்.எல்.சி.யில் 'பொட்டனி' தான் படித்தேன். எனது பேவரிட் சப்ஜெக்ட்டும் அதுதான். இந்த பட்டையுரிப்புக்கான சிகிச்சை பற்றி, பரிகாரம் பற்றி ஏதும் தெரிந்திருக்கவில்லை எனக்கு.

"ஏட்டுச் சுரைக்காய்..."என்பது இதுதானோ?

அடுத்தநாள் பின் இரவில், அவைகளின் பிரச்சினைக்கான காரணம் தேடி டோர்ச்லைட்டும் நானுமாக மிளகாய்ச் செடியிடம் வந்தமர்ந்தேன்.

'நொய்ங் நொய்'கென்று கொசுக்கள் முகத்தில் மோதி, காதுகளில் நுழைந்து வெளியேறுகின்றன. இந்த அகால வேளையில் இங்கு உனக்கென்ன வேலை என்னும் எரிச்சலுடன் 'சுள் சுள்'ளென்று கடிக்கின்றன.

செடி செடியாய் டோர்ச் அடித்துப் பார்க்கின்றேன்.

ஒவ்வொரு செடியிலும் பெரிது பெரிதாய் இரண்டு மூன்று ஊரிகள் உட்கார்ந்திருக்கின்றன.

ஓட்டை நெளித்து, நெளித்து ஓட்டுக்கு வெளியே கொல்லன் பட்டரைத் துருத்தி போல் கருமஞ்சள் நிறத்தில் சதையைப் பிதுக்கிக் கொண்டு, பிசுபிசுவென்று உமிழ்நீர் ஒழுகிக் கொண்டு...

துருப்பிடித்த குண்டூசிகள்போல் மண் நிறத்தில் நாலைந்து கொம்புகளை நீட்டுவதும் 'டக்டக்'கென சுருக்கிக் கொள்வதுமாக..!. செடியில் தண்டுகளுடன் கழுத்தை நீட்டி, நீட்டி, வளைத்து வளைத்துக் கவ்விபிடித்துக் கொண்டு, செடிகளின் இளம்பச்சைத் தோலை உரித்துச் சுவைத்தபடி.

கொசுக்கடியையும் தாங்கிக் கொண்டு டோர்ச்சொளியில் ஒவ்வொன்று ஒவ்வொன்றாக ஓட்டை பிடித்துப் பிடுங்கி உருவி எடுத்து உருவி எடுத்து குப்பையள்ளியில் குவிக்கின்றேன்.

ஒரு பத்துப் பதினைந்துக்கு மேலான ஊரிகள். கொம்பு நீளும் தலை, முகம், தசை அனைத்தையும் உள்ளிழுத்து ஓட்டுக்குள் மறைத்துக் கொண்டு..!

உப்பு நீரைக் கரைத்தூற்றி வெளிக் கானில் வீசி எறிந்தேன்.

அவைகள் வெளியேற்றிய மெலிதான துர்மணம் தலையைச் சுற்ற செய்கிறது.

தனக்குப் பலனளிப்பவற்றைப் பாதுகாப்பதிலும், அல்லாதவற்றை அழிப்பதிலும் மனிதனுக்கு நிகர் மனிதன் தான்

மறுநாள் இரவு, மறுநாள் இரவு என்று கொசுக்கடி, டோர்ச்சொளி, ஊரி அழிப்பு தொடர்ந்தது.

செடிகள் திமிர் விட்டுத் தளதளத்துக் கிடந்தன.

இலைக் கக்கங்களில் இருந்து வெள்ளை வெள்ளையாகப் பூக்கள் அரும்பி நின்றன. பூப்பூக்கும் பருவத்தின் தேன் மணம் தென்றலில் இழைந்தது.

நாள்தோறும் அவைகளின் வளர்ச்சி கண்டு மகிழ்ச்சி கொண்டேன்.

மீண்டும் ஒரு நாள் அதிகாலையில் செடிகள் வாடி நிற்கின்றன.

தளதளத்து நிற்கும் குருத்திலைகள் சோர்ந்து சுருட்டிக் கொண்டு கிடக்கின்றன.

குனிந்து உற்றுப் பார்க்கின்றேன்.

துள்ளிக் கிளம்பிய வெள்ளை வெள்ளைப் பூக்களின் குதூகலங் களை அள்ளிக் கொண்டு போனவர் யார்...?

ஒரு மாதிரியான, ஆனால் மகிழ்விற்குரியதல்லாத மணம் ஒன்று செடி நுனிகளிலிருந்து வீசுகின்றது.

குருத்துக்களும், மொட்டுக்களும், பூக்களும் சோடைபட்டுப்போய், மண்நிறமாகி, சுருண்டு சுருண்டு படுத்தபடி..!

சின்னச் சின்னதான சிவப்பெறும்புகள் சாரி சாரியாக, செடிக ளிலும் கூட்டம் கூட்டமாக மொட்டுகளிலும், பூக்களிலும், நுனிக்குருத் துக்களிலும்! மேலேபோவதும், கீழே வருவதுமாக! சிற்றெறும்பின் சுறுசுறுப்புடன், படைநடை பயில்கின்றன.

பச்சைச் செடிகளில் மின்னல் மின்னலாய் செங்கோடிழுத்துக் கொண்டு!

இலைகளை லேசாகத் தொட்டுப் பார்த்த எனது விரல்களில் ஏழெட்டுப் பத்தாக ஊர்ந்தேறி குண்டி உயர்த்திக் குண்டி உயர்த்தி

கடிக்கின்றன. ஊசியால் குத்துவது போன்ற அவைகளின் கெடுபடிகள் என்னைக் கோபமடையச் செய்கின்றன.

கோபம் வந்து என்ன செய்ய?

எறும்பு சின்னதுதான்...! அற்பமானதுதான்..! எந்த ரீதியிலும் சிரேஸ் டனான, பெரியவனான, என்னுடன் ஒப்பிட்டு நோக்கத் தகுதியற்றது தான்..

ஆனாலும் அதை ஒன்றும் செய்ய முடியாத ஏக்கம் என்னை வதைக்கிறது. மனம் வீங்கி வெடிக்கிறது.

"அழித்துவிடு" என்று ஆக்ஞை இடுகின்றது. நினைத்தால் அழித்து விடுவேன் தான்..!

மண்ணெண்ணெய்யும், தீப்பெட்டியும், பந்தமுமாய் கிளம்பினேன் என்றால் எரித்துப் பொசுக்கி விடுவேன்தான்..!

ஆனால் எனது செடிகள்..?

எதிரியை அழிப்பதை விடவும், எனக்குச் செடிகள் முக்கியம்.

என்னுடைய சகலவிதமான செயற்பாடுகளும், போராட்டங்களும் அதன் வளர்ச்சிக்காகத்தான்... செழுமைக்காகத்தான்... அழிவிற்கா கவல்ல.

எனது தோட்டத்துச் செடிகளை நேசிக்கும், விசுவசிக்கும், மகிழ்ச்சி கண்டு பூரிக்கும், வேதனை கண்டு பொருமும் கோபப்படும் நல்ல தோட்டக்காரன் நான்.

பைபிள் கூறும் கிடைப்பதற்கரிய நல்ல மேய்ப்பன்.

அந்தஸ்துகளுக்காகத் தோட்டக்காரன் ஆனவனல்ல.

ஆடுகளை பலியிட்டாவது தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுகின்ற வர்களே மேய்ப்பர்களாக கொடியுயர்த்தும் காலம் இது. மனம் மீண்டும் அலைகிறது.

"என்ன கொச்சிக்காய்த் தூரடியில் ஆராய்ச்சி..? தேங்காய் தேடியா? மாசி தேடியா?"

சிரித்தபடி ஓடிவந்த அண்ணாச்சியின் குரல், அலைந்த மனதை ஆசுவாசப்படுத்தியது.

இந்த அண்ணாச்சி எனது அந்த நாளைய பள்ளிக்கூட நண்பன்.

இப்போது பஸ் சந்திப்பு மட்டுந்தான். இடைக்கிடை இப்படிச் சந்தித்துக் கொள்வதுண்டு.

எல்லா விதமான கேள்விகள், பிரச்சினைகளுக்கும் ஏதாவதொரு ரெடிமேட் பதில் வைத்திருப்பான். சரியா? பிழையா? என்பது வேறு விஷயம் .

"வந்து பார், இந்த அநியாயத்தை" என்கின்றேன். அருகே வந்து உற்றுப் பார்த்து, குனிந்து அவதானித்துவிட்டுக் கூறுகின்றான், "இதில் என்னப்பா அநியாயம் இருக்கிறது? நீ செடியை மட்டுமே பார்க்கின்றாய். எறும்புகளைப் பார்க்காமல்..!"

எறும்புகளைப் பார் எப்படிக் குதூகலமாய் ஓடித்திரிகின்றன, மேலும் கீழும், கீழும் மேலுமாக.. அத்தனை மகிழ்ச்சி! ஒன்றின் மனக் கஷ்டத்தில்தான் இன்னொன்றின் மகிழ்ச்சி இருக்கிறது.

ஒன்றை ஒன்று ஆக்கிரமிப்பதும்... ஒன்றை ஒன்று அழிப்பதும்... ஒன்றை ஒன்று தின்று பசியாறுவதும்... ஒன்றை வருத்தி ஒன்று மகிழ்வதும் தான் இயற்கையின் நியதி... இதில் நியாயம் ஏது? அநியாயம் ஏது?"

"நீ அநியாயம்... அநியாயம் என்று கூக்குரலிடுவதை, அதுவே நியாயம்... அதுவே நியாயம்... என்று கொக்கரிப்போர் இல்லையா?"

இவனே இப்படித்தான்.

"என்னப்பா மௌனமாகிட்டே..! எறும்பையும் பார் என்றதும் குழப்பமாயிடுச்சா! சரிவிடு அடுப்புச் சாம்பலை அள்ளி செடிகளின் மீது தூவி விடு. பிறகு பார் எண்பத்து மூன்றில் நீயும் நானும் ஓடியது மாதிரி, எறும்புகள் தறிகெட்டு ஓடும்... கலவரமடைந்து.

"செடிகளை விட்டிறங்கி உடும்பு போனாலும் பரவாயில்லை கையை விட்டால் போதும் என்பது மாதிரி ஓடும். செய்து பார்! செடிகளைச் சுற்றி வட்டம் வட்டமாகச் சாம்பலைத் தூவி வை. அதைத் தாண்டி வந்து மீண்டும் எறும்புகள் செடிகளில் ஏறாது! என்ன தோட்டத்தில் குந்தி இருக்கின்றாய் என்று பார்க்கத்தான் உள்ளே வந்தேன். நெறைய வேலை கெடக்கு... பேரனை வேனுக்கனுப்ப வேண்டும்! கிம்புளா பனிஸ் தேடித்தான் வந்தேன்! நான் வர்றேன்..." என்றபடி நடந்துவிட்டான்.

சாம்பல்..!

எத்தனை முக்கியமானது. எனக்கும் தெரிந்ததுதான்.

சூழலால் மறக்கடிக்கப்பட்டு விட்ட ஒன்றை நினைவு கொள்ளச் செய்தது அந்தப் பழைய நட்பு.

இப்போதே சாம்பலை அள்ளித் தூவி எறும்புகளை கலைந்தோடச் செய்து' செடிகளைக் காப்பாற்றி'.

சமையலறையை நோக்கி விரைகின்றேன்.

'டிக்'கென்ற சத்தத்துடன் அடுப்பைப் பற்ற வைக்கின்றாள் மனைவி.

- ● -

மல்லிகை - 2009

# மந்திரகோல்

## 16



"சீட் இருக்குதா...?"

பஸ் நிற்கும் முன்பே அடித்துப் பிடித்துக் கொண்டு ஏறும் கூட்டத் திலிருந்து சற்றே விலகி நின்றபடி சிங்களத்தில் வினவுகின்றாள் அவள்.

கேட்ட மொழி சிங்களம் என்றாலும் கேட்டவர் சிங்களம் இல்லை என்பது ஒன்றும் பெரிய ரகசியம் அல்ல.

அது கண்டக்ரருக்கும் விளங்கும்.

ஆடையால் கூற முடியாவிட்டாலும் உரையாடலால் கூறிவிட லாம். தமிழா? முஸ்லிமா?என்று.

ஒடிந்து தொங்கும் மரக்கிளை போல் பஸ் வாசலில் உள்ளேயும் வெளியேயுமாக ஊஞ்சலாடிக் கொண்டிருந்த பஸ் கண்டக்டர் "எய் நெத்தே ஓணதரங் சீட் தியனவா!. நகிண்ட நகிண்ட" என்று கூறியபடி இடைகளை அணைத்து அணைத்து ஆட்களை ஏற்றிக் கொண்டிருக் கின்றான். அதுவும் அழுத்தமாகப் பெண் பயணிகளை.

அவனது இடையணைவை மீறி ஏறிவிடும் யுக்தியை எவராலும் கடைப்பிடிக்க முடிவதில்லை. எப்படித்தான் வளைந்து நெளிந்து ஏறி னாலும் ஒதுங்கி ஏறிவிட இடமும் வேண்டுமே! வாசலும் படியும் அவ்வளவுதான். அதில் கண்டக்ரரின் ஊஞ்சலாட்டம் வேறு.

"சீட் தியனவாத" என்று கேட்ட பெண்ணும் இறுதியாகப் படியேறு கின்றாள்.

இடை என்பதே கிடையாத நேர்கோட்டுருவம் தான் என்றாலும் இடை நோக்கி நீண்ட அவனது கரத்தினை கைப் பையால் ஒதுக்கித் தள்ளிவிட்டபடி ஒரு வெறுப்பான முறைப்புடன் உள் நுழைகின்றாள் அவள்.

"ஹறி யங்" என்று குரல் கொடுத்தபடி பஸ்ஸின் இழுப்புக்கேற்ப உடலை வளைத்தொடித்து சமன் செய்து கொண்டு உள் நுழையத் தொடங்கினான்.

கடைசியாக ஏறி முன்னால் நிற்கும் தடித்த பெண்ணின் பின் பக்கம், கைப்பிடியை எட்டிப் பிடிக்க உயரத் தூக்கிய கையுடன் அவனைச் சீண்டி விடுகின்றது.

கையடியில் கறை மினுங்கும் அக்குளை, டிக்கட் மட்டையால் அழுத்தி அவளை ஒதுக்கியபடி உள் நுழைகின்றான்.

பருவங்கள் கடந்தும் பூக்கும் இயல்பு கொண்ட பெண்ணுடலின் விசித்திரம் அவளைத் தொட்டொதுக்க அவனைத் தூண்டினாலும் "உனக்கு அவ்வளவிருந்தால் எனக்கு எவ்வளவிருக்கும்" என்னும் ஆணாதிக்க எரிச்சல் அந்த டிக்கெட் மட்டை விலக்கலில் விளங்குகிறது.

அந்தத் தீண்டலால் திடுக்கிட்டுத் திரும்பியவள் "கை" அல்ல டிக்கட் மட்டைதான் என்பதால் சற்றே சுதாகரித்துக் கொண்டாலும் ஒரு கோபத்துடன் அவனை நோக்கி "சீட்" தியனவா கிவ்வா நே! கோ" என்று சீறினாள்.

அவளுடைய கோபத்தையோ சீற்றத்தையோ அவன் ஒரு பொருட்டாகவே கொள்ளவில்லை.

"சீட் ஏன் இல்லை? இதோ இவைகள் எல்லாம் என்ன? சீட் இல்லாமல! நாற்பது சீட்டுக்கு மேல் இருக்கிறது!" என்று எகத் தாளத்துடன் கூறியபடி முன் கதவு நோக்கி முண்டி நகர்ந்தான். அந்தப் பதிலால் மேலும் சினமடைந்தவள் உயர்ந்த குரலெடுத்து "பொய்க்காரன், புளுகன், சங்கை கெட்ட ஏமாத்துக்காரன்" என்று ஏதேதோ கூறிச் சத்தமிட்டாள்.

அவைகள் எதனையுமே அவன் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

ஒரு அசட்டையுடன் தனது வேலையில் ஐக்கியமானான்.

பஸ் நடத்துனர்கள் மட்டுமல்ல, எல்லா நடத்துனர்களிடமுமே அநீதிக்கெதிராகக் குரல் கொடுப்பவர்கள் பற்றிய ஒரு அசட்டை இருக்கவே செய்கிறது! இருக்கவே செய்யும்!

இந்த நடத்துனர்கள் அனைவருமே ஒரு விதத்தில் மந்திரவாதிகள் போலத்தான். மந்திரக்கோலைத் தூக்கி ஆட்டி ஏகப்பட்ட பூதங்களை ஏற்படுத்திக் கொள்வார்கள். அவைகளும் தங்களை உருவாக்கியவனுக்குச் சாதகமான முறையில் கூத்தடிக்கும்.

நாட்டின் அதியுயர் மன்றமான நாடாளுமன்றக் கூத்தாட்டங்களும் கேள்வி நேர அசட்டைகளும் கண்டக்டரினதை விட எத்தனை விரசமானவை.

இருந்தும் அவள் கோபத்தால் குமுறினாள்!

விம்மி விம்மித் தணியும் அந்தப் பெரிய நெஞ்சு அந்தக் குமுறலை அடக்கிக் கொள்ள அவள் முயல்வதைத் துல்லியமாக உணர்த்துகிறது.

இன்னும் அவள் டிக்கட் வாங்கவில்லை. கண்டக்டர் மிகவும் முன்னால் தெரிகின்றான். பதினேழு ரூபாய் பயணத்துக்கு ஐம்பது ரூபாவை நீட்டிய பெண்ணிடம் சில்லறை கேட்டு கத்திக் கொண்டிருந்தான். அவளும் விட்டபாடில்லை.

ஐம்பது ரூபாய்த் தாளை விரலிடுக்கில் திணித்தபடி அவளுடைய கத்தலை ஒரு அசட்டையுடன் புறமொதுக்கி விட்டு இன்னொருவருக்கு டிக்கட் கொடுக்கின்றான் அவன்.

மீதிக் காசை அவனிடமிருந்து பெற்றுக் கொள்ள அவன் பின்னால் திரிய வேண்டும். ஏதோ சலுகைக்காகத் திரிவது மாதிரி. இறங்கும் இடம் வருகின்றபோது சிலவேளைகளில் கண்டக்டர் முன் வாசலிடம் நிற்பான். பின்னால் இருந்து சனத்தை நீவி நெரித்துக் கொண்டு அவனிடம் வருவதற்குள் இறங்கும் இடம் தாண்டி அடுத்த நிறுத்தம் வந்துவிடும்.

பஸ் பயணமே ஒரு யுத்தமென்றால் இந்தக் கண்டக்டர்மார்களிடம் மீதிக்காசு வாங்குவது அதில் ஒரு தனி வியூகம்.

அந்தப் பெண்ணும் எப்படியோ கைப்பையைக் குடைந்து சில்லறை தேடிக் கொடுத்து மீதிப் பணத்தை வாங்கிக் கொண்டாள்.

இந்தக் கண்டக்டர்மார்களின் அடாவடித்தனங்கள், வம்புத்தனங்கள், கத்தல்கள் எல்லாம் பெண்களிடமும், தமிழர்களிமும் தான். அதிலும் குறிப்பாகத் தமிழ்ப் பெண்களிடம்.

இந்த நாட்டின் சனநாயகக் கோட்பாடுகளுக்கு பஸ் கண்டக்டர் மட்டும் விதிவிலக்கா என்ன?

ஐந்து பேர் அமரும் கடைசிச் சீட்டில் நைந்து நசுங்கியபடி ஆறுபேர் அமர்ந்திருக்கின்றார்கள்.

ஜன்னலருகே ஓரத்தில் அமர்ந்திருப்பது ஒரு தமிழ்ப் பெண். நெற்றியில் பொட்டும் கொண்டையில் பூவுமாக.

அவளருகே அமர்ந்திருந்தவர் இருபக்க நசுக்கலிலிருந்து உந்தி நகர்ந்து உயரத்தில் இருக்கும் கம்பியை எட்டிப்பிடித்து எழுந்து இறங்க ஆயத்தமானார்.

காலியாகும் அந்த இடத்தை நோக்கி நாலைந்து பேர் படை எடுத்தனர். "சீட் இருக்கா" என்று கேட்ட பெண் உட்பட.

ஒரு பெண்ணும் முயற்சிக்கின்றதைக் கண்ட மற்றவர்கள் ஒதுங்கிக் கொண்டனர்; அவள் அமர்ந்து கொண்டாள். அசைந்து அசைந்து பின் நகர்ந்து இருக்கையை வசதிப்படுத்திக் கொண்டாள்.

சுற்றி நிற்பவர்களையும் தன்னருகே அமர்ந்திருப்பவர்களையும் ஒரு கணம் நோட்டமிட்டாள்.

தான் வசதியாக அமர்ந்த பிறகே சுற்றியுள்ளவர்கள் பற்றிய நினைவுகள் எழுவது இயற்கைதான்!

அருகில் அமர்ந்திருக்கும் பெண்ணை ஏறிட்டுப் பார்க்கின்றாள்.

எண்ணைத் தேய்ப்பில் பளபளத்து மின்னும் கரிய கூந்தலின் மறைவில் இருந்து எட்டிப் பார்க்கிறது ஒரு வெள்ளை நிறப்பூ.

அவள் மிகவும் ஒடுங்கிப் போய் அசௌகரியப்படுவதை உணர்கின்றாள்.

ஒடுங்க மறுக்கும் தனது தடித்த கால்களை ஒடுக்கி சற்றே ஒதுங்கி அவளுக்குக் கொஞ்சமாக வசதி செய்து கொடுக்கின்றாள்.

ஒரு திருப்தியுடன் அவளும் திரும்ப இருவரும் புன்னகைத்துக் கொள்கின்றனர்.

சுற்றியுள்ள எதிரணி ஆண்பாலர் மத்தியில் தாங்கள் பெண்கள் என்னும் இன உணர்வு தந்த ஒற்றுமையின் வெளிப்பாடே அந்தப் புன்னகை.

நின்று கொண்டிருப்பவர்களின் இடைவெளியில் கண்டக்டர் தூரத்தில் தெரிகின்றான். அவனுடைய நினைவே அவளுக்குள் காய்கிறது.

நிற்கச் சங்கடப்படும் வாதக்காரியான தன்னை சீட் இருப்பதாகக் கூறி ஏமாற்றிய பொய்யன் அவன். ஏறிய பிறகும் இதோ இவைகள் எல்லாம் சீட் இல்லையா என்று நக்கலடித்த ஹறாமி அவன்.

அகத்துள் அவனை வைது வசைபாடி, நிமிர்கையில் "கொய்த?"என்றவாறு நீட்டிய கையுடன் நின்றான் கண்டக்டர்.

இறங்கும் இடத்தையும் கூறி காசையும் நீட்டியவள் "சீட் தியனவா கிவ்வா நே, கோ? எய் மினிஸு றவட்டான்னே?" என்று பொரிந்தாள்.

அவள் இறங்குவதாகக் கூறிய இடம் கொழும்பில் முஸ்லீம்கள் செறிந்து வாழும் ஒரு பகுதி.

"ஹப்போய்..!" என்று ஒரு எள்ளலுடன் அவளை ஏறிட்டுப் பார்த்தவன்... "ஹித்துவா..! மங் ஹித்துவா... ஏக்காய் மெச்சற கட்ட" என்றபடி

நீட்டிய நூறு ரூபாவை விரலிடுக்கில் செருகிக் கொண்டு "பொடி சல்லி துனக் ஹரி ஹத்தரக் ஹரி தென்ன..!" என்றான்.

"வாயில்லாட்டிதான் துன்ருவீங்களே" என்று முனகியபடி கைப் பையைத் துழாவினாள். சில்லறை இருக்கவில்லை. கண்டக்டரோ இன்னும் கை ஏந்தியபடியே நிற்கின்றான்.

அவனைப் பார்க்கையில் அவளுக்குள் ஒரு சினம். சட்டையில் ஊரும் கம்பளிப்பூச்சி தோல் நோக்கி நகர்வது போன்ற வெறுப்பு'. அவளது கக்கத்தில் இடித்து அழுத்திய டிக்கட் மட்டை அவனது கக்கத்தில்.

"காலைல இருந்து எத்தனை ட்றிப் அடிச்சிருப்பே! வாங்குன ஒரு ரூபா ரெண்டு ரூபாவெல்லாம் எங்க போச்சி? கைக்குள்ள தான் வரு சையா சில்லறை அடுக்கி வச்சிருக்கியே!" என்று சிங்களத்தில் பரபரத் தாள்.

அவளுடைய சிங்கள மொழியாடலில் ஒரு கனத்துடன் கூடிய சரளம் இருந்தது.

தமிழில் நினைத்து அதை மௌனமாக உள் மனதில் மொழி மாற்றி சிங்களமாய்க் கூறும் அந்நியத் தன்மையற்ற சுயம் இருந்தது.

நினைத்ததை நினைத்தபடியே கூறிவிடும் வல்லமை இருந்தது.

அந்த வல்லமை தான் அவனுக்குள் ஒரு எரிச்சலை ஏற்படுத்தியது.

அவனது எதிர்பார்ப்பு மொழி தெரியாத ஒரு அச்சம். அதனால் மேற்கிளம்பும் அடங்கிப் போகும் தன்மை! இவளிடம் அது இல் லாமை அவனை எரிச்சலுறச் செய்கிறது.

"வேண்டாத பெண்டாட்டி கைபட்டால் குற்றம், கால்பட்டால் குற்றம்" என்றொரு வாய்மொழிச் சொல்லடை தமிழில் உண்டு.

இந்த நாட்டின் சிறுபான்மை இனத்தின் நிலையும் அதுதான்.

ஆதிக்க மனம் கொண்ட ஆண்களும் அடங்கிப் போக மறுக்கும் மனைவிகளுமாய்!

மீதிக்காசை மிகக் கவனமாக எண்ணி நீட்டியபடி "அய்யோ நவத்த கண்ட ஓயாகே பறபறய! சக்கிலி வாகே..!" என்றான்.

"சக்கிலி..! சக்கிலி..! ஓயா ஹித்துவாத மம தெமல கியலா?" நரம் புகள் வெடித்து வெளியே வந்துவிடும் வண்ணம் புடைத்து நின்றது கழுத்து.

அவளால் எழ முடியவில்லை. என்றாலும் உணர்வுகள் எழுந்து நின்றன.

"தெமளு கியலா ஹித்துவாத?" என்னும் அவளது உச்சக்குரல் ஓரத்தில் உட்கார்ந்திருந்த தமிழ்ப் பெண்ணின் செவிகளுக்குள் பழுக் கக் காய்ச்சிய ஈயக் கோலாய் இறங்கியது. வலி தாங்கா வேதனை!

கண்டக்டருக்கு மகிழ்வாக இருக்கிறது.

பூவும் பொட்டுமாய் உட்கார்ந்திருந்த தமிழ்ப் பெண்ணை ஒரு கணம் உற்று நோக்கினான்.

"ஒன்ன நங்கி ஒயாட்ட தெமளு கிவ்வா! சக்கிலித் கிவ்வா!" என்று அவளை உசுப்பி விட்டான்.

நெற்றிக் கண்ணுடன் திரும்பியவள் தீக்கங்குகள் தழல் பறக்க முஸ்லிம் பெண்ணை முறைத்தாள்.

'தெமளு' என்ற வார்த்தை 'பர' என்னும் ரீங்காரத்துடனேயே அவள் செவிப்பறையில் படர்ந்தது. 'சக்கிலி' என்ற கோபக் குரலும் இணை ந்தே இறங்கியது.

எண்பதுகளுக்குப் பிறகு தமிழினத்தை இழிவுபடுத்துவதற்காகவே உபயோகிக்கப்படும் ஒரு சொற்பதமாக அடையாளம் கொண்ட சொல் இந்தப் 'பர தெமளு' என்பது.

"யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்பது போல் தெமளு என்னும் சொல்லுடன் 'பர'வும் ரீங்காரமிட்டபடி முன்னோடி வரும்.

சாதீய தாக்கங்கள் வேரோடி வேரோடி தழைத்தும் தடித்தும் நிற்கின்ற தமிழ்ச் சமூகத்தில் 'பர தெமுளு' என்றதும் கீழ்சாதிக்காரன் என்று தங்களை இழிவுப்படுத்துவதாக எண்ணிக் குமைகிறது. குமுறிக் கிளம்புகிறது மனம்.

உண்மையில் தெமளுவுடனான 'பர' என்னும் சொல்லின் இணைவு அந்நியன் அல்லது இந்த நாட்டைச் சேராதவன் என்பதையே குறிக் கின்றது.

"பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே..." என்று இறைவனைக் குறிப்பதைப் போல

அப்படியே பார்த்தாலும் ஆளில்லாத இந்த ஊரில் அனைவருமே 'பர' தான்! கூறுபவர்கள் முந்திய பர கூறப்படுபவர்கள் பிந்திய 'பர' என்பதுதான் நிஜம்.

பொய்களே நிஜங்களாகிப் போய்விட்டதொரு சூழலில் நிஜங்கள் எல்லாம் பொய்யாகித்தான் போகின்றன.

இதையெல்லாம் பகுத்தாய்ந்தொழுகும் மனப்பக்குவம் யாருக்கிருக்கிறது...! இவளுக்கிருக்க...

இவளை உசுப்பி விட்ட கண்டக்டர், காசுக்காகக் கை ஏந்திய வண்ணம் கூட்டத்துடன் கலந்து ஒதுங்கிக் கொண்டான்.

பெண்கள் இருவரும் மல்லுக்கு நிற்கின்றனர். இவள் குமுறிக் கிளம்பியது போலவே அவளும் குமுறிக் கிளம்பினாள்.

இவளைப் பற்றிய குறைகளை அவளும் அவளைப் பற்றிய குறைகளை இவளுமாக ஏலமிட்டனர். விற்றனர். கொட்டித் தீர்த்தனர், கத்தித் தீர்த்தனர்.

கொதித்துக் கிளம்பிய இரு பெண்கள் வாயிலாகப் பெண்ணுடல் ரகசியங்கள், பெண்ணுடல் மொழியாகப் பீறிட்டுக் கிளம்பின.

ஆண்களுக்குத் தெரியாத சங்கதிகள் அகோரமாக வந்து விழுகின்றன. மொழி புரிந்தவர்கள் குதூகலம் கொண்டார்கள். மற்றவர்கள் குளிர் காய்ந்தார்கள்.

"ஆட்டத்தைப் பார்த்திடாமல் ஆளை ஆளைப் பார்க்கிறார்..." என்று ஒரு பழைய சினிமாப் பாடல் இருக்கின்றது.

ஆண் மனங்கள் அப்படித்தான்!

பெண்கள் சண்டை போட்டாலும் ரசிப்பார்கள். ஆட்டாம் போட்டாலும் ரசிப்பார்கள். விம்பிள்டன் டென்னிஸ் என்றதும் விழுந்து விழுந்து பார்க்கின்றார்களே ஏன்?

ஆட்டத்துக்காகவா? அல்லது ஆட்ட நுணுக்கங்களுக்காகவா?

பெண்கள் அடித்துக் கொள்ளும் மல் யுத்தம்... சி.டி. வி.சி.டி என்று எப்படி விற்பனையாகின்றது.

கை தூக்கும்போது... கழுத்தாடும்போது... இடை நெளியும்போது... உடலாடும்போது... ஆடை விலகும் இடங்கள்... ஆடை மூடா இடங்கள்... ஆடை மூடியும் திமிர் விடும் இடங்கள்...என்று இரை தேடும் வக்கிரப் பார்வைக் கூட்டங்கள்!

பஸ்ஸுக்குள் அதே நிலைதான்.

பெண் குறைகள் பாடி முடித்த பெண்கள் இரு பக்க ஆண் குறைகளுக்கத் தாவி அதிலிருந்து இனக்குறை வரை எழுந்து விட்டனர்.

வெறும் வாய்ச் சண்டையாகத் தொடங்கியது கை கலப்பாக மாறும் நிலைக்கு விரைகின்றது.

பருவங்கள் கடந்தும் பசுமை பூக்கும் பெண்ணுடலின் புன்னகை திடீரென கோரப் பற்களையும் பல் நுனியின் ரத்தத்தையும் கண்டு பதை பதைத்துப் பார்வைகளைத் திருப்பிக் கொண்டனர்.

சண்டையில் குளிர் காய்ந்தவர்கள் கொழுத்தத் தொடங்கிய அத் தீச் சுவாலையில் பொசுங்கிப் போய் விடும் அச்சத்தில் தூரமாகத் தொடங் கினர்.

பொது மக்கள் பயணம் செய்யும் பஸ்ஸுக்குள் நடக்கும் தமிழ் முஸ்லீம் பெண்களின் சண்டை பயணிகளை அசௌகரியத்துக்குள் ளாக்கும் நிலைமை பற்றி இப்போது தான் உணர்வு பெற்றவர்கள் போல் சிலிர்த்துக் கொண்டார்கள்.

நடத்துனரைப் பார்த்துக் கத்தினார்கள்! "என்ன நடத்துனர் நீ பயணிகளின் சௌகரியம் பார்க்கத் தெரியாமல்..."என்று கோஷமிட் டார்கள்.

ஒதுங்கிப் போன கண்டக்டர் ஓடி வந்தான். சண்டையிடுபவர்களை நிறுத்தச் சொன்னான். ஒன்றும் நடக்கவில்லை. கெஞ்சினான். பிறகு கத்தினான். ஒன்றும் நடக்கவில்லை.

கிளப்பி விடப்பட்ட பூதம் மந்திரவாதிக்கும் மசியவில்லை! மந்திரக் கோலிற்கும் மசியவில்லை.

வந்த வேகத்துடனேயே டிரைவரிடம் ஓடினான்.

பஸ் அருகிலிருந்த பொலிஸ் ஸ்ரேசனை நோக்கி ஓடியது.

இரண்டு பெண்களையும் பொலிஸில் ஒப்படைத்துவிட்டு, "ஹரி யங்" என்றான் கண்டக்டர்.

பஸ் ஓடத் தொடங்கியது.

- ● -

தாயகம் - ஜனவரி - மார்ச் 2009



# வேடிக்கை மனிதர்கள் அல்லர்

## 17

ஆஸ்பத்திரிச் சந்தியில் பஸ் வேகம் குறைத்து திரும்பியபோது 'டக்' கென்று குதித்திறங்கி பஸ்ஸுடன் சற்றே முன்னாலோடி நிதானித்து நின்று கொண்டேன்.

ஓடும் பஸ்ஸிலிருந்து குதித்திறங்குவது கூடாது தான். அபாயகர மானது தான். என்றாலும் எனது அவசரம் அந்த அபாயத்தை ஏற்றுக் கொள்ள நிர்பந்திக்கிறது.

மணி அந்தா இந்தா என்று ஐந்து ஆகிக் கொண்டிருக்கிறது.

கேட்டை மூடிக் கொண்டான் என்றால் அவனிடம் தலை சொரிய வேண்டும். மூடிய கைக்குள் குறைந்த பட்சம் நூறு ரூபாய் தாளாவது நீட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

இரண்டுமே எனக்குப் பிடிக்காதவை!

ஆஸ்பத்திரியைத்தாண்டி கொஞ்ச தூரத்தில் இருக்கும் பஸ் தரிப்பில் பஸ் நின்றதும் சாவதானமாக இறங்கி நடந்து கேட்டிடம் வந்தால் தலை சொரிய நேரிடும் என்பதால் தான் இந்த ஆபத்தான குதிப்பு.

ஆங்கிலத்தில் அழகாகச் சொல்வார்கள். 'றிஸ்க்' கான வேலை என்று. சூழ்நிலையைப் பொறுத்து சில 'றிஸ்க்'குகளும் வாழ்க்கையின் அத்தி யாவசியத் தேவைகள் தான்.

ஆஸ்பத்திரியில் இருப்பவர் எனது நண்பர்.

எழுத்து, இலக்கியம், நாடகம், சினிமா என்று ஓடித்திரிபவர்... ஓடித் திரிந்தவர். குடும்ப மற்றும் உறவினர்களிடம் 'உருப்படாதவன்' 'பிழைக்கத் தெரியாதவன்' என்ற புகழாரங்களும், விருதுகளும் நிறைய வாங்கியவர்.

திடீரென ஒரு நாள் ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பதாகத் தகவல் கிடைத்தது.

தொலைபேசியின் மறுமுனையில் ஒரு பெண்ணின் குரல்...

"நீங்கள்!" என்று இழுத்தது.

பெயரைச் சொன்னேன்.

நண்பரின் பெயரைச் சொல்லி "நான் அவருடைய மனைவி!" என்றார்.

"உங்களுக்கு நினைவிருக்கிறதோ தெரியவில்லை!. எத்தனையோ தடவை இரவின் அகால வேளையில் ஆட்டோ பிடித்துக் கொண்டு வந்து இறக்கி விட்டிருக்கின்றேன் அவரை!" என்றேன்.

"ஓ..." என்றார்

அந்த "ஓ..."வில் நீயும் ஒரு உருப்படாதவன் தானே என்னும் தொனி இருந்தது. பிறகு தொடர்ந்தார் "இந்த நம்பரைக் கொடுத்து உங்கள் பெயரைத்தான் கூறினார்...! ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்திருக்கின் றோம்'

"ஏன் என்ன நடந்தது?"

"நெஞ்சில் நோகுதென்றார். மூச்சு விட சிரமப்பட்டார். வயிறும் ஊதி இருந்தது. அட்மிட் செய்யச் சொல்லி விட்டார்கள்..!" என்று தகவல் தந்தவர்... ஆஸ்பத்திரி, வார்ட் நம்பர், கட்டில் எண் சகலதையும் கூறினார்.

"நன்கு பிடித்தமான ஒரு வேலை கிடைத்திருப்பதாகக் கூறினாரே!" என்றேன்.

"பிடித்து என்ன செய்ய..! கிடைத்ததைப் பிடித்து வைத்துக் கொள் ளவும் தெரிய வேண்டுமே..! எத்தனையாவது வேலை இது..?" என்றவர் ஒரு எரிச்சலுடன் போனை வைத்து விட்டார்.

முன்பொரு தடவை என்னுடைய நூல் வெளியீடு பற்றி நண்பருடன் பேசிக் கொண்டிருந்ததேன்.

அவரைத்தான் முதற் பிரதி வாங்க போட்டிருந்தேன்.

"என்னையா உங்களுடைய நூலையா" என்றார் ஒரு வியப்புடன்.

"உங்களைத்தான்... என்னுடைய நூலைத் தான்..." என்றேன்.

"நீங்கள் ஒன்றும் என்விலப்புடன் வரத்தேவையில்லை!' ஒரு இலக் கியக்காரன் இன்னொரு இலக்கியக்காரனுக்குத் தரும் கனம் அது கௌர வம் அது" என்றேன்.

"அழைப்பிதழைத் தர வேண்டும் ஆபீஸ் வரவா" என்றேன்.

"வரலாம்... ஆனால் பழைய ஆபீஸ் இல்லை..." என்று ஒரு புது

விலாசம் கொடுத்தார். எனக்குத் திகைப்பாக இருந்தது. பெயர் சொன்னால் இடம் தெரியும் பெரிய கம்பனி அது. அதற்குள் நுழையும் சகல தகுதிகளும் எனது நண்பருக்கு உண்டு என்பதும் நான் அறிந்ததே.

வரவேற்பறைப் பெண்ணிடம் பெயர் சொல்லி விசாரித்தேன். உள்ளே போனேன். தனியானதொரு பெரிய அறையில் அமர்ந்திருந்தார். கண்ணாடி பதித்த மேசையில் மூன்று தொலைபேசிகள் என்று ஆள் மிகவும் கலாதியாக இருந்தார்.

"என்விலப் கொடுத்தே வாங்கலாம் போல் இருக்கிறதே...?" என்று சிரித்தபடி விடைபெற்றேன்.

இரண்டு மூன்று மாதங்களின் பின் ஒரு நாள் ஆமர் வீதியில் சந்தித்தேன்.

"இந்த நேரத்தில் இங்கே எப்படி... லீவா?" என்றேன்.

முதலில் ஒரு அசட்டையான சிரிப்பு பிறகு கூறினார் "வேலையில் இருந்தால்தானே லீவு போடனும்?"

"என்ன மாதிரி இடம்..? என்ன மாதிரி உத்தியோகம்? கிடைக்குமா?" என்றேன்.

"கெடைக்காது தான்... அதுக்காக, மனுசனுக்கு சுதந்திரம் வேண்டாம்? ஒத்திகைக்கு நாலு நாள் லீவு போட்டேன். இல்லைய்னுட்டானுக. அவுட்ஸ்டேசன்ல றிகர்சல்! போகாட்டி ஆர்ட்டிஸ்டெல்லாம் அல்லாடிப் போயிறுவாங்க ஒத்திகை ஒழுங்கா நடக்காட்டி ஆற்றுகை என்னவாகும்! லீவு குடுக்காட்டி போங்கடான்னுட்டுப் போயிட்டேன். அஞ்சாறு நாள் கழித்து ஆபீஸ் போனேன். வேலை இல்லைன்னுட்டானுக. வச்சிக்கோன்னுட்டு வந்துட்டேன்!" என்று கூறினார்.

குரலில் ஒரு வருத்தம் தெரியவில்லை. "அப்பத்தினால் மட்டுமே மனிதன் உயிர் வாழ்வதில்லை" என்னும் இயேசு மொழி என் நினைவிலோடியது.

தகவல் கிடைத்ததும் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன்.

அரசாங்க ஆஸ்பத்திரியின் நோயாளர்களைப் பார்க்கும் நேரம் என்பதால் வார்ட் கட்டில்களைச் சுற்றிக் கூட்டம் கூட்டமாகச் சனங்கள். உறவினர்கள்... நண்பர்கள்... ஈக்கள் போல!

கட்டில் இலக்கத்தைக் கருத்தில் சுமந்தபடி உள் நுழைந்தேன்.

சுவரோரத்தில் கிடந்த கட்டிலில் சவர்க்காரம் போட்டு ஊற வைத்த

அழுக்குத் துணிபோல் தனியாக கிடக்கின்றார் நண்பர். ஒரு கறுப்புப் புழுவைப் போல் சுருண்டபடி!

ஈக்கள் மாத்திரமே கட்டிலைச் சுற்றிப் பறந்து கொண்டிருக்கின்றன.

வீட்டில் இருந்து கூட யாரும் வரவில்லையோ என்னும் நினைவு "வந்து விட்டுப் போயிருக்கிறார்கள்" என்று தீர்மானித்துக் கொண்டது.

தலைமாட்டில் இருக்கும் சின்ன மேசையின் மேல் தெரிந்த நீலக் கலர் பிளாஸ்க், லேசாகத் திறந்திருக்கும் மேசை லாச்சியில் எட்டிப் பார்க்கும் சில பழ வகைகள்! சாப்பாட்டுப் பொருட்கள்!

கட்டிலை நெருங்கினேன். லேசாக தொட்டேன். கண்கள் விரிந்தன. இடுப்பு, கை, கால் என்று ஒவ்வொன்றாக விரிந்தன. உடல் நீண்டது. குழிகளுக்குள் பதுங்கி இருக்கும் கண்கள் ஒளி வீசின. முகம் மலர் கின்றது.

நான் வந்திருக்கின்றேன் என்பதை விடவும் ஒரு இலக்கியக்காரன் வந்திருக்கின்றான் என்னும் பூரிப்பு கண்களில் ஒளி பாய்ச்சி ஒளி பாய்ச் சிப் பரவுகின்றது. மூக்கையும் வாயையும் சுற்றிப் போட்டிருந்த இலாஸ் டிக் வளையம் வைத்த துணி மூடியைக் காட்டி ஏதோ சைகை காட்டி னார். எனக்குப் புரியவில்லை. அருகிலிருந்த மேசையின் டிராயரைக் காட்டினார். திறந்தேன் அவர் முகத்தில் போட்டிருந்தது போல் இர ண்டு மூன்று துணி மூடிகள் இருந்தன.

ஒன்றை எடுத்து வாயையும் மூக்கையும் சுற்றிக் காதில் மாட்டிக் கொண்டேன்.

அருகே சென்று ஆதரவாகக் கையைப் பிடித்தேன். அவருடைய கண்களில் நீர் முட்டி நின்றது. கால்கள் வீக்கம் கண்டிருந்தன. வயிறு ஊதிப் போயிருந்தது.

துணி மூடியை மூக்குப் பக்கம் தள்ளி வாய்க்கு இடம் ஒதுக்கிப் பேசினார்.

"நான் திரும்பி வீடு வருவேன் என்று நினைக்கவில்லை" என்றார். கண்கள் கலங்கி கிடந்தன. உதட்டின் மேல் விரலை வைத்து உஷ் என்று தடுத்தேன். "ஒன்றும் ஆகாது" என்று தைரியம் கூறியபடி என்ன சொல் கிறார்கள் என்று கேட்டேன்.

"நிறைய தகறாறுகள்...! கால் வீங்குகிறது; திடீர் திடீரென வயிறு ஊதிக் கொள்ளுகிறது; கிட்னியைக் காணவில்லை என்கின்றார்கள்; வயிற்றில் கேன்சர் என்கின்றார்கள். எக்கச்சக்கமான கொம்பிளிக்கேஷன்ஸ் என்றார்.

"அளவுக்கு மீறிக் குடித்தால் கிட்னி காணாமல் போகாமல் என்ன செய்யும்" என்றேன்.

நண்பர்களுடன் சேர்ந்தும், தனியாகவும் நிறையக் குடிக்கத் தொடங்கி இருந்தார்.

சில நாட்களில் ஜிவ் ஜிவ்வென்று சிவந்த கண்களுடன் நேராக நிற்க மறுக்கும் கால்களுடன் பஸ் ஸ்டாண்டில் நிற்பார்.

பஸ் வந்த பிறகு இவன் பஸ்ஸில் ஏறுவானா? அல்லது இவன் மேல் பஸ் ஏறுமா? என்று எரிச்சல் வரும்.

ஆட்டோ ஒன்றைப் பிடித்து வீட்டில் கொண்டு போய் விட்டு விடுவேன்.

என்னுடைய கதை ஒன்றை நாடகமாக்கும் முயல்வில் நண்பர் ஈடுபட்டிருந்தார். ஆகவே, ஒரு சில நாடக நண்பர்களுடன் நானும் கொஞ்சக் காலம் அவர்களுடன் சுற்றினேன் மாலை வேளைகளில்.

ஸ்டோரி டிஸ்கஸன் என்று ஏதாவது ஒரு பாருக்குள் நுழைவார்கள். பார் மூடும்வரை குடிப்பார்கள். நானும் ஒரு கிளாஸ் கொக்காகோலா வுடன் அவர்களது பேச்சுக்களை ரசித்தபடி குந்தியிருப்பேன்.

பார்காரன் மூடப்போகும்போது இன்னொரு குவாட்டர் கேட்டு அடம் பிடிப்பார்கள். பார்காரன் கால் கொண்டு வரமாட்டான் முன் கதவுக்குப் போடும் இரும்புபாருடன் வருவான். கழுத்தை பிடித்துத் தள்ளாத குறையாக வெளியே தள்ளிக் கதவை மூடிக்கொள்வான்.

கதவு மூடிக் கொண்ட பிறகும் தெருவில் கதை டிஸ்கெஸன்ஸ் தொடரும் கொஞ்ச நேரத்தில் பாதையில் ஏதோ நாணயத்தை தவறவிட் டவர்கள் போல் குனிந்து குனிந்து தேடுவார்கள். பிறகு தவழத் தொடங் குவார்கள்.

மற்றவர்கள் எப்படியாவது போய் விடுவார்கள்.

நண்பரை நான் தான் ஆட்டோவில் போட்டு வீட்டில் சேர்ப்பேன். இறங்கி நிற்க முடியாமல் தடுமாறுகையில் உள்ளே கொண்டு போய் கதிரையில் போட்டு விட்டுத் திரும்புவேன்.

அப்போதெல்லாம் குடித்து விட்டுக் கிடக்கும் தன் கணவனை கொண்டு வந்து பத்திரமாக வீட்டில் சேர்க்கின்றாரே என்னும் நன்றி யுணர்வு நண்பரின் மனைவியிடம் இருக்கும் என்று தான் எண்ணி யிருந்தேன்.

ஆனால், நானும் அவருடன் அமர்ந்து குடித்து கூத்தடித்துவிட்டு

போதை மீறியதும் கொண்டு வந்து வீட்டில் தள்ளிவிட்டுப் போவதா கவே அந்தம்மாள் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பது நேற்றைய டெலிபோன் 'ஓ...'வில் விளங்கியது.

தானே பாதுகாத்துப் பராமரித்து கொள்ள வேண்டிய தன் உடலை இப்படித் தானே குடித்துக் குடித்து சீரழித்துவிட்டு இப்போது கை வீக்கம், கால் வீக்கம் கிட்னியைக் காணோம்... குடலைக் காணோம் என்று அழுது அங்கலாய்த்து என்ன செய்ய, தன்னைத் தானே நோய் களற்றும், ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ளல் என்பதுவும் ஒரு சமுதாயப் பணிதான்.

நண்பரைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருக்கிறது. அவரோ கலங்கிய கண்களுடன் எனது கரம் பற்றிக் கூறினார்.

"நீங்கள் ஆயிரம் சமாதானம் கூறினாலும் எனது அந்தராத்மா கூறுகிறது ஆட்டம் முடிந்துவிட்டது என்று! பந்தயம் ஓடி முடிந்தாகி விட்டது என்று! நான் திரும்பி வரப் போவதில்லையே அதற்காக அழுது அரற்றப் போவதுமில்லை! உங்களால் எனக்கு சில காரியங்கள் ஆக வேண்டும்! காரியங்கள் என்ன காரியங்கள் உதவிகள்"என்றார்.

பேசுவதற்கு அவர் படுகின்ற சிரமம் உயர்ந்து மடியும் நெஞ்சிலும் தெரிகிறது. அவரையே உற்று நோக்கினேன்.

"என்னுடைய அரங்கியல் கலை இலக்கிய செயற்பாடுகள் பற்றி என் வீட்டாருக்கு ஏதும் தெரியாது! அவை பற்றிய அக்கறையுமில்லை! நான் ஏதோ பிழைக்கத் தெரியாதவன் என்னும் நினைவுகளுடனேயே இன் னும் இருக்கின்றனர்... நீங்கள் தான் அவை பற்றிப் பேச வேண்டும். நாலு பேருக்குத் தெரியுமாப் போல் செய்ய வேண்டும்... குறிப்பாக எனது குடும்பத்தினர் எனது உறவினர்கள்... என்னுடைய ஆளுமை களை உணர வேண்டும். நாளைக்கு செத்தா நாளன்னிக்கு மூணாவது நாளுன்னு பாலூத்தி, அஸ்தி கரைச்சி அன்னதானம் கொடுத்து முடித்து விடுவார்கள்!"

"நான் அதற்காகப் பிறக்கவில்லை! பிறந்தேன்... வளர்ந்தேன்... படித்தேன்... உத்தியோகம் பார்த்தேன்... சம்பாதித்தேன்... கல்யாணம் கட்டினேன்... வாழ்ந்தேன்... செத்துப் போனேன்... என்று 'னேன்... னேன்...' கொண்டு ஒருமையிலும், சோறு நிதம் தின்று வீண் கதைகள் பல பேசித்திரிந்த வெறும் மனிதனாகவும் மரித்து விட மனம் ஒப்ப வில்லை..."

குரல் கனத்துத் தழுதழுக்கக் கூறிக் கொண்டிருந்தார்.

நண்பரை சமாதானப்படுத்தி ஆசுவாசப்படுத்தி படுக்க வைத்தேன்.

நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் முடிவுக்கு வருவதாகக் காவற் காரர்கள் வேகம் காட்டினர். மனம் முழுக்க அவரது செயற்பாடுகள் பற்றிய தேடலுக்கான ஆவல் நிரம்பி இருந்தது. விடைபெற்று வெளியே றினேன். ஒரு கலைஞனின் முடிவு அவனது மரணமாக இருந்துவிடக் கூடாது.

அவனை வாழ வைக்க வேண்டும். அது உயிரோடிக்கும் நம் அனை வரதும் கடமையாகும். ஒரு ஆரோக்கியமான சமூகப் பணியாகும். அந்தப் பணிக்கான பக்குவம் நம்மில் ஒரு சிலருக்காவது வரவேண்டும்.

ஒரு சிட்டியும், செல்லப்பாவும், க.நா.சுவும், ஜானகிராமனும் பேசத் தொடங்கி இராவிட்டால் கு.ப.ரா.நாற்பதுகளிலேயே செத்துப் போயி ருப்பாரே.

மனம் அலை மோதுகிறது குழம்பித் தவிக்கிறது. மறுநாள் ஆஸ்பத்தி ரிருக்குப் போக வாய்க்கவில்லை. ஆனாலும் கூடுமானவரை கலை இலக்கிய நண்பர்களுக்கெல்லாம் கூறினேன். ஆஸ்பத்திரியில் போய் பார்க்கும்படி. நெருக்கமான பத்திரிகை ஆசிரியர் நண்பர்களுக்கு செய்தி கூறினேன். இன்னார் நோயுற்று மருத்துவமனையில் என்று படத்துடன் செய்தி போடும்படி.

கலாசார அமைச்சுக்குப் போன் செய்தேன். தமிழ் மொழி இணைப் பாளர் எனது நண்பர்.

நண்பர் பற்றி கூறினேன். தேசிய நாடக விழாவில் பங்குபற்றி இரண்டு முறை பரிசு பெற்றவர் என்று விபரம் கூறினேன்.

"என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்

"அமைச்சரை ஆஸ்பத்திரிக்குப் போய் பார்க்கச் செய்ய வேண்டும்" என்றேன்.

"சிரமம் தான் ஆனாலும் சொல்வேன்" என்றவர், சிங்களக் கலைஞர் என்றால் கதையே வேறு!" என்று முடித்தார்.

"அமைச்சரின் வெற்றியில் நண்பருடைய வாக்கும் இருக்கிறது. பங்களிப்பும் இருக்கிறது என்பதையும் சொல்லுங்கள்" என்றேன்.

"குறைந்த பட்சம் அவருடைய வீட்டுக்குப் போன் செய்து மனைவி யிடம் நண்பரின் சுகம் விசாரிக்கச் சொல்லுங்கள்" என்று முடித்தேன்.

"அதைக் கட்டாயம் செய்யலாம் நம்பரைத் தாருங்கள்" என்றவரிடம் நாளைய பேப்பர்களில் படத்துடன் செய்தி வருகிறது. அதையும் அவரி டம் காட்டுங்கள்" என்றேன்.

அடுத்த நாளும் ஆஸ்பத்திரிக்குப் போகக் கிடைக்கவில்லை. தனி மனிதப் பிரச்சினைகள் குரூரமானவைகள் தான்.

நண்பரின் மனைவிக்கு போன் போட்டுப் பேசினேன்...

"முன்னேற்றம் எதுவுமில்லை. அப்படியே தான் ஏதோ அவசர சிகிச்சையென்று முந்தநாள் இரவே பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போயிருக்கின்றார்கள். எனக்கே நேற்றுக்காலை ஆஸ்பத்திரிக்குப் போய் அல்லோலகல்லோலப்பட்ட பிறகு தான் ஓபீசில் கூறினார்கள்! நாளைக்கு தான் கொண்டு வருவார்களாம்"

"நல்ல வேளை எனக்கு ஆஸ்பத்திரிக்குப் போக கிடைக்கவில்லை... போயிருந்தால் எனக்கும் அலைச்சல் மட்டும் தான்" என்று எண்ணிக் கொண்டேன்.

நண்பரின் மனைவி தொடர்ந்தார்... "மந்திரி ஒருவர் பேசினார். அவர் எப்படி இருக்கிறார் என்று விசாரித்தார். ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்திருப்பதாகப் பேப்பரில் பார்த்தாராம் பேப்பரை நான் பார்க்கவில்லை" என்றார்.

குரலில் கடுமை இல்லை. மாறாக ஒரு குளுமை இழைத்தது.

அவருக்குச் சுகமில்லையாமே என்று ஒரு அமைச்சரே விசாரிப்பதென்றால் பெருமையாகத்தான் இருந்திருக்கும்.

அவரைப் பற்றிய ஒரு கட்டுரை எழுத ஆரம்பித்தேன் இன்றும் நாளையும் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியதில்லை என்பதால் ஓபீசில் இருந்து வந்தவுடனேயே எழுதத்தொடங்கினால் முடித்துவிடலாம் என்ற நம்பிக்கை இருந்தது.

ஆனாலும், நம்பிக்கை கை கொடுக்கவில்லை.

நண்பரின் கலை உலக ஆரம்பம் எப்படி நிகழ்ந்தது என்பதற்கான குறிப்புகளைத் தேடத் தொடங்கினேன்.

அவருடன் இத்தனை நெருக்கமாகவும் இத்தனை காலமாகவும் பழகி இருந்தும்கூட அவைகள் பற்றி தெரிந்து கொள்ளாத ஏக்கம் இப்போது புரிகிறது.

கட்டுக்கட்டாகவும் இங்கு... அங்கு... என்று சிதறியும் கிடக்கின்ற பத்திரிகைக் கட்டுக்கள் சிறு சஞ்சிகைகள் என்று தேடினேன். எழுதுவதற்கும் நேரமற்று தேடுதலே முக்கியமாகிவிட்டது.

நண்பர் பற்றிய கட்டுரைக்கான நிர்பந்தம் அவரை பற்றிய தேடுதல்களை வரவேற்றுக் கொண்டது.

கட்டுரைக்கான குறிப்புகள் தயார்! இனி எழுதிவிடலாம் ஒரு சில சந்தேகங்களை நாளை மாலை ஆஸ்பத்திரியில் கேட்டுக் கொள்வோம் என்று எண்ணிக் கொண்டேன். இவைகள் அனைத்தும் அவருக்கான ஒரு சமூக அங்கீகாரத்தைத் தேடித்தரும் முயல்வுகளே.

இலக்கிய அங்கீகாரத்தை அல்ல. இலக்கிய அங்கீகாரம் காலத்தால் நிர்ணயிக்கப்படுவது. காலமே மதியினுக்கோர் கருவி என்பதைப் போல்.

ஐம்பது நூறென்று ஆண்டுகளின் பின் காலவோட்டம் கண்டெடுத்துக் கொண்டுள்ள ஒரு சிலரைப் போல், காலம் தரும் அங்கீகாரம். அது நானோ நீங்களோ தருவதல்ல.

இன்று மாலை சென்று பார்க்க வேண்டும். நண்பர்கள் யார் யார் வந்தார்கள் என்று விசாரிக்க வேண்டும். பத்திரிகைச் செய்திகளைக் காட்ட வேண்டும். என்னும் நினைவுகளுடன் நேரத்துடனேயே கிளம்பினேன் றிஸ்க் எடுக்க விரும்பாததால்.

பஸ் தரிப்பில் இறங்கி பாதை கடந்து கேட்டைத் தாண்டி ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டேன். பூந்தோட்டம், நாய்கள் கூட்டம் என்று கடந்து வார்ட்டுக்குள் நுழைந்தேன்.

கட்டில் காலியாகக் கிடந்தது.

மருத்துவமனைச் சிப்பந்திகள் கட்டிலைச் சுற்றி மருந்தடித்துக் கொண்டிருந்தார்கள்.

வார்ட் ஒபீசை நோக்கி விரைகிறேன் நண்பர் பற்றிய தேடலுக்கான வேர்கள் மனதுக்குள் ஆழமாக இறங்கிப் படர்ந்தன.

நண்பரே வேராகி நிற்பது போன்ற நினைவு வாழ்வும் செழுமையும் தரும் நினைவு...!

- ● -

வீரகேசரி 07.10.2012

"...இலக்கியத்துக்கு கோபம் கூடாது.
இயல்பு மனிதர்களின் சித்திரமாக இருக்க
வேண்டும். அது தெளிவத்தை ஜோசப்பின்
படைப்புக்களில் காணப்படுகிறது.

'கூனல்' என்று ஒரு சிறுகதை.
உலகப் பெருமைமிக்க சிறுகதையாகவே
அதை உணர்ந்தேன்.
ஏழையைக் கண்டு வருந்துவதைவிட
ஏழ்மை குறித்து வருந்துவது கூடுதல்
சுமை ஏற்றக்கூடியது.
அதுபோன்று சிறுகதைகளை, நாவல்களை
கவனிக்காமல் விட்டது நமது பிழையா?
விரும்பியோ விரும்பாமலோ சிலரது
படைப்புகள் அறியப்படாமலும்
அறிமுகப்படுத்தப்படாமலேயும்
போய்விடுகிறது."

- இந்திரா பார்த்தசாரதி -

(22-12-2013 - 'விஷ்ணுபுரம்' விருது விழாவில்
தலைமைவகித்து ஆற்றிய உரையிலிருந்து...)

நன்றி: www.jeyamohan.in

# தெளிவத்தை ஜோசப் என்னும் படைப்பாளி

இலங்கையின் தமிழிலக்கியம் தமிழக நிலைப்பட நோக்கும்போது ஈழத்திலக்கியம் என்ற பொதுப்படையான தொகுதிப் பெயரைப் பெற்றுக் கொண்டாலும் இலங்கை நிலையிலே இவ்விலக்கியத் தொகுதி பிரதேசவாரியாகவோ அல்லது சித்திரிக்கும் மக்கள் தொகையினரின் அடிப்படையிலோ குறிப்பிடப் பெறுவது வழக்கமாகிவிட்டது. யாழ்ப்பாணத்து தமிழிலக்கிய வரலாறு, கிழக்கிலங்கை இலக்கிய வரலாறு, இலங்கை முஸ்லிம்களின் இலக்கிய பங்களிப்பு என பல்வேறு நிலையிலே இவை ஆராய்ப்படுகின்றன. அத்தகைய தொகுதிகளிலொன்றாக மலையக இலக்கியம் இன்று போற்றப் பெறுகிறது.

“தெளிவத்தை ஜோசப்பின்” எழுத்துக்கள் இல்லையேல் மலையகத்து மக்களின் வாழ்க்கைப் பற்றிய எமது அறிவு குறைவுற்றதாகவே இருக்கும். உண்மையில் தெளிவத்தை ஜோசப்பின் மிக முக்கியமான சாதனை, சராசரி மலையகத் தமிழன் ஒருவரின் உளப்பாங்கையும் கண்ணோட்டத்தையும் சித்திரிப்பதாகும். தோட்ட கல்வி முறைப்பற்றி அவரது அவதானிப்புகள் இதற்கு நல்ல உதாரணமாக விளங்குகின்றன. சக மனிதர்களை அவர்களின் இயல்பு நிலையில் சித்திரிப்பவன் மறக்கப்பட முடியாத எழுத்தாளன் ஆகின்றான்.

பேராசிரியர். கார்த்திகேசு சிவத்தம்பி
( “ஞானம்” தெளிவத்தை ஜோசப் பவள விழா சிறப்பிதழ் 2010)

ISBN978-955-1805-06-7
9 789551 805067

பாக்யா பதிப்பகம்